

# விடுதலை

தந்தை பெரியார் [illegible] ஆவது பிறந்தநாள் விழா மலர்

ny1:39.

# மலைபோல் வரும் பிரச்சினைகள்
# பனிபோல் மறையும் விந்தை காணீர்

கலப்பு மணத்திற்கு சட்டப் பாதுகாப்பு அளித்தது

சென்னை ராஜ்யம் - 'தமிழ்நாடு' என்றாகியது.

குடும்பக் கட்டுப்பாட்டில் தமிழகத்திற்கு முதலிடம்

அரிசன விவசாயிகளுக்கு ரூ. 2000 இலவசம்

பின்தங்கியோர் நலம் பேணிக் காக்கிறது

அபரிமித உற்பத்தியால் அரிசி ஏலம் போகிறது

விவசாயப் பல்கலைக் கழகம் விரைவாய் அமைகிறது

சேலம் இரும்பாலை - செயல்பட முனைகிறது

என்.ஜி.ஓ.வினர் மகிழும்படி இரகசியக் குறிப்பேடு ஒழிகிறது

நிலமற்றோருக்கு நிலம் வழங்கவே - நிலப்பறி தோற்றது


★

**மலைபோல் வந்த பிரச்சினைகளை**
**பனிபோல் மறையச் செய்தது !**
**சட்டம் ஒழுங்கைக் காப்பது**
**தமிழ்நாடு அரசே - தனி வழி அரசு**

வெளியீடு : இயக்குநர், செய்தி, விளம்பரத் துறை,
சென்னை-9.

தந்தை பெரியாரவர்களின் 92-வது ஆண்டு
பிறந்த நாளன்று எங்களது உளங்கனிந்த
நல்வாழ்த்துக்கள்.

★



# சு. ஆ. மு. முத்துமுருகன்

நிர்வாக இயக்குநர்,

# தமிழ்மணி டாக்கீஸ் லிட்.,

47, விருதுநகர் ரோடு,

அருப்புக்கோட்டை.

# விடுதலை

## ந்தை பெரியார் பிறந்தநாள் மலர்



# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பிறந்தநாள் செய்தி-தந்தை பெரியார் | ... |
| 2. | வாழ்த்திடுக-வாழ்ந்திடுக! - முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி | ... |
| 3. | பெரியாரும்-பகுத்தறிவும்-அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் | ... 1 |
| 4. | மெய்ப்பொருள் காணும் மேன்மையர்-அமைச்சர் மாதவன் | ... 2 |
| 5. | மனிதன் அயோக்கியனாவது ஏன்? - தந்தை பெரியார் | ... |
| 6. | இனமானம் காத்த ஏந்தல்-தவத்திரு குன்றக்குடி அடிகளார் | ... 2 |
| 7. | தென்னாட்டின் சாக்ரட்டீஸ்-அமைச்சர் சத்தியவாணிமுத்து | ... 25 |
| 8 | அறிவுப்புரட்சி கண்டார்-அமைச்சர்என். வி. நடராசன் | ... 27 |
| 9. | தமிழர்களின் தலையாய கடமை-தந்தை பெரியார் | ... 30 |
| 10. | எனது நிலை - தந்தை பெரியார் | ... 33 |
| 11. | ஏன்-எதற்காக-எங்கே? - சி.பி. சிற்றரசு | ... 3 |
| 12. | யாருக்கு விரோதி?-அமைச்சர் கே. வி. சுப்பையா | ... |
| 13. | பகுத்தறிவுப் பகலவன்-கா. வேழவேந்தன் | ... |
| 14. | பெரியார் பெருந்தொண்டு-பாவலர் முத்துசாமி | ... |
| 15. | உலக வரலாற்றில் பெரியார்-ஏ. பி. சனார்த்தனம் | ... |
| 16. | குருகுலவாசம்-கவிஞர் கருணாநந்தம் | ... |
| 17 | பெரியார் உருவாக்கிய சமுதாயப்புரட்சி-ஏ.என். சட்டநாதன் | ... |
| 18. | கருத்துக்கலை வளர்க! -ப. கண்ணன் | ... |
| 19. | சரிதையிலோர் புதுமனிதர்-பேராசிரியர் வி.சி. குழந்தைசாமி | ... |
| 20. | தமிழகத் தலைவர்க்குத் தலைவர்-கா. அப்பாதுரையார் | ... |
| 21. | ஏ, இந்திய மனிதா! - பேராசிரியர் சாலை இளந்திரையன் | ... |
| 22. | நான் காணும் பெரியார் - டாக்டர் எச். எஸ். பட் | ... |
| 23. | கோயில்கள் ஏற்பட்டது எப்படி?-தந்தை பெரியார் | ... |
| 24. | உழைப்பின் உயர்விடம்-டாக்டர் சி இலக்குவனார் | ... |
| 25. | 91க்கும் 92க்கும் இடையில் தந்தை பெரியார் சுற்றுப்பயணம் | ... |
| 26. | வரலாற்றில் தசரதர்கள் - புலவர் கோ. இமயவரம்பன் | ... |
| 27. | கடந்த ஆண்டில் கழக டைரி | ... 10 |
| 28. | பெரியார் பெருந்தொண்டு-தஞ்சை கவியரங்கம் | ... 113 |
| 29. | பழைய வரலாறு-ஆனால் புதிய செய்தி - தந்தை பெரியார் | ... 142 |
| 30. | இராவண காவியம் - பெரியார்தாசன் | ... 147 |
| 31. | பாருக்குள்ளே நல்ல நாடு! - திருவாரூர் கே. தங்கராசு | ... 15 |
| 32. | பெரியாருக்குப்பின் யார்? - பெ. எதிராஜ் | ... 159 |
| 33. | பெரியாரின் புலிவேட்டை - கி. வீரமணி | ... 169 |
| 34. | உலகெங்கும் நாத்திகம் - க. அ. நடராசன் | ... 17 |
| 35. | தமிழகத்தின் பொற்காலம் | ... |
| 36. | பெரியார் செய்த புரட்சி-உலகத்தமிழ் மாநாடு பாராட்டு | ... 21 |
| 37. | பெரியார் பிறவாதிருந்திருந்தால்? - புலவர் குழந்தை | ... 2 |
| 38. | The Non-Brahman Awakening-S. Singarajan | ... 2 |


---

ஓவியங்கள் : அரசு, குருசாமி, சிபி, பாலன், பதி, நடராசன்.
புகைப்படங்கள் : சுந்தரம், டாக்டர் ஜான்சன், கதிரவன்.

# காணிக்கை

சாதிமத பேதங்கள் மூட வழக்கங்கள் தாங்கி
நடைபெற்றுவரும் சண்டை உலகுதனை
ஊதையினில் துரும்புபோல் அலக்கழித்துப்
பின்னர் ஒழித்து, புதியதோர் உலகு செய்து,
பேதமிலா அவ்வுலகிற்குப் பேசு 'சுயமரியாதை
உல'கெனப் பேர் வைத்த பெருந்தகையாம்
அய்யாவுக்கு
இன்று 92ம் ஆண்டு பிறந்தநாள் !
தமிழர் வீடெல்லாம்—நாடெல்லாம் விழாக்
கோலம் காண்கிறோம் !
நடுங்கும் வயது —நடுங்காத உள்ளம்
ஓயாத சிந்தனை—ஒழியாத தொண்டு
மாளாத எதிர்ப்பு—மடியாத கொள்கைகள்
—இவை அவர்தம் மகத்தான சாதனைகள் !

வயது வளர்வதுபோல் அவர் பறித்துச் சூடும் வாகை மலர்களும் பெருகுகின்றன! அதனால் அன்றோ வைக்கம் வீரர், வரலாற்று நாயகரானார்!!

பேரறிஞர் அண்ணா ஒருமுறை குறிப்பிட்டது போல், தமிழகத்தின் தலைவர்களும், கட்சிகளும் அவரது புகழின் சிதறல்களே யாகும்!

அள்ளும் வறுமை அகற்றாமல்
அம்புவிக்குக் கொள்ளைநோய் போல்
கூட்டிவரும் வைதிகத்தைப் போராடிப்
போராடி பூக்காமல் காய்க்காமல்
வேரோடு பெயர்க்க வந்த
ஈரோடு தந்த வள்ளல்

இணையற்ற எம் தலைவருக்கு ஊரோடு உலகோடு சேர்ந்து வாழ்த்த நாம் விழைந்து அடக்கத்துடன் காணிக்கையாக்குகிறோம் இந்த எளிய மலரை!

பகுத்தறிவுமணம் திக்கெட்டும் பரவட்டும்.
வாழ்க நம் தந்தை!
வளர்க அவரது வாகை மலர்கள் !!

சென்னை
17—9—70

ஆசிரியர்
**''விடுதலை''**

---

மலருக்கு கட்டுரைகள் செய்திகள் விளம்பரங்கள் தந்துதவி, மலரை மணமிக்கதாக்க உழைத்த—அனைவருக்கும் நம் நன்றி—வணக்கம்.



# பிறந்தநாள் செய்தி

எனக்கு வயது 91.

ஆண்டுகள் 91 முடிந்துவிட்டது.

17—9—70வது நாள் முதல் 92வது ஆண்டு துவங்குகிறது.

91வது ஆண்டு எனக்கு உற்சாகமாகவே கழிந்ததுடன், மனச் சலிப்பு அடைய வேண்டிய அவசியமில்லாமல் இருப்பது மாத்திரமல்லாமல் இருப்பதுடன், வாழ்நாள் நீண்டால் மேலும் பல முன்னேற்றகரமான காரியம் செய்ய வாய்ப்பு ஏற்படலாம்போல எனக்குத் தோன்றுகிறது

மக்களிடையில் ஒரு மாறுதலைக் காண்கிறேன். அதுவும் தீவிரமான மாறுதல்களுக்கு இணங்குபவர்கள் போல் மக்களைக் காண்கிறேன்.

### மேலும் மாறுதலடையுங்கள்

அதாவது,

கடவுள், மதம், ஜாதி முதலிய விஷயத்தில் மக்கள் எந்த அளவுக்கு வேண்டுமானாலும் மாறுதலடைய பக்குவமாய் இருக்கிறார்கள் என்றே காணுகிறேன். இந்த நிலைதான் எனது உற்சாகத்திற்கும், மேலும் இருந்து தொண்டு செய்யலாம் என்ற நம்பிக்கைக்கும், அவாவுக்கும் காரணமாகும்.

இந்த நிலையில் நான் எனது 92வது பிறந்த நாள் சார்பாக மக்களுக்கு தெரிவித்துக்கொள்வதெல்லாம் மனம் துணிந்து மேலும் மாறுதலடையுங்கள் என்பதேயாகும்.

நான் இந்த நிலை அடைந்ததற்கும், மக்களை இந்த அளவுக்கு நான் வேண்டுவதற்கும் முக்கியமான காரணம் இந்த இரண்டு மூன்றாண்டுகளாக நமது நாட்டில் நடந்து வந்த ஆட்சியேயாகும்.

### பார்ப்பனர் சூழ்ச்சிகள் தவிடுபொடி ஆயின

நமது நாட்டு ஆட்சியானது பகுத்தறிவு ஆட்சி என்பதோடு, எந்தவித மாறுதலுக்கும், எவ்வளவு தூரம் துணிந்து செயலாற்றுவதற்கும் துணிவுள்ள ஆட்சியே யாகும். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு பொதுவாகவே மக்கள் வாழ்வில் சுபிட்சம் ஏற்பட்டிருக்கிறது. இது இயற்கையின் காரணம் என்றாலும் மக்கள் இன்ப வாழ்வு வாழ்கிறார்கள் என்று திருப்தியடையத் தக்கதாகவே இருந்து வருகிறது. எண்ணத்தில்

பெருத்த முன்னேற்றத்தையும் அடைந்து வருகிறார்கள்.

இவற்றை ஏன் பெருமையாக குறிப்பிடுகிறேனென்றால் பதவி வெறியால் தூண்டப்பட்ட எதிரிகள், எதிர்க்கட்சிகள் "தங்கள் சமுதாயத்திற்கு ஆபத்து வந்துவிட்டது" என்று கருதி பயந்து கிடக்கும் நம் பிறவி எதிரிகளாகிய பார்ப்பனர்கள் இந்த ஆட்சியை அழிக்கச் செய்த, செய்து வருகிற இமாலயப் பிரயத்தனங்கள் தவிடு பொடியாகி வருவதுடன் எவ்விதத் தடையுமின்றி ஆட்சியின் காரியம் வெற்றிப் பாதையில் சென்றுகொண்டிருப்பதுதான்.

### பத்தாண்டுகளுக்கு இதே ஆட்சி


இந்த நிலையில் நான் எனது 92வது ஆண்டு செய்தியாக மக்களுக்கு தெரிவித்துக்கொள்வது என்னவென்றால் **இந்த ஆட்சியை இன்னும் ஒரு பத்தாண்டுக்கு பாதுகாத்து வரவேண்டுமென்பதே ஆகும்.**

தேசம் மிருகப்பிராயத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறது. யாரும், எப்படிப்பட்டவரும் எந்த இழிவான காரியத்தைச் செய்யவும் பயப்படுவதில்லை. ஒழுக்கம், நேர்மை, நாணயம், அமைதி என்பது பெரும்பாலோரிடம் காணமுடிவதில்லை. பொதுவில் பார்த்தால் நமது நாடுதான் இந்தியாவிலேயே பாதுகாப்பான நாடு என்று கருதத் தக்கதாய் இருந்துவருகிறது.

இதற்கு காரணம் தி.மு.க. ஆட்சிதான் என்று உறுதியாய்க் கூறுகிறேன். எனவே இதற்கு ஏதாவது மாற்றம் ஏற்படுமானால் அதை வேறு எந்த ஆட்சி வந்து மக்களை இன்றைய நிலைக்கு கேடில்லாமல் ஆளமுடியும்?

### காமராஜர் மாறி வருகிறார்

சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், இந்த ஆட்சிக்கு மாற்றம் ஏற்படுமானால் அடுத்துவர இருப்பது பார்ப்பன ஆட்சிதான் அதாவது வர்ணாசிரமத்தை நிலை நிறுத்தும் ஆட்சிதான். இது உறுதி; உறுதியேயாகும். ஏனிப்படிச் சொல்லுகிறேன் என்றால் இந்தியா முழுவதற்குமே இன்று வர்ணாசிரம பாதுகாப்பு ஆட்சி, கட்சி, மக்கள் என்பவர்கள் அல்லாமல் வேறுகட்சியும் இல்லை, மக்களும் இல்லை, கொள்கையும் இல்லை, காமராஜர் பல மாற்றுப் போய்விட்டார். அவரது எண்ணங்களும் மாற்றமடைந்து வருகிறது; பார்ப்பனரைத் தஞ்சமடைய வேண்டிய நிலைமைக்குப் போய்க் கொண்டிருக்கிறார். அவரது கட்சியும்



(காங்கிரசும்) உருக்குலைந்துவிட்டது. அவருக்கு உதவியாளரும் யாரும் தகுதியான வரில்லை. இவை மாத்திரமா நமது பொது எதிரியான பார்ப்பனத் தலைவர் நம் சமுதாயத்தை அழித்து, ஒழித்துக் கட்ட கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் இராஜாஜி, பலம் பெற்று வருகிறார். இதற்குக் காரணம் காங்கிரசு பிளவு பட்டதேயாகும்.

### ஆட்சி மாறினால் பலாத்கார தாண்டவம்

இந்த நிலையில் இன்றைய நமது நாட்டு ஆட்சிக்கு ஏதாவது மாறுதல் ஏற்படுமானால் காமராஜர் ஆட்சி ஒரு நாளும் அந்த இடத்திற்கு வராது: மற்றெது வருமென்றால் பார்ப்பனராட்சி. இராஜாஜி ஆதிக்க ஆட்சி தான் வரும். அதுவோ வேறு எதுவோ வந்தாலும் பழிவாங்கும் ஆட்சியாய்த் தானிருக்கும் அல்லது அசல் காலித்தன - பலாத்காரத்தாண்டவ ஆட்சியாகத்தானிருக்கும். இதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம்.

ஆகவே எனது 92-ம் ஆண்டு செய்தி என்பதாக எனது 91 ஆண்டு அனுபவ அறிவைக்கொண்டு சொல்லுகிறேன்:

மக்கள் எல்லோரும் பகுத்தறிவுவாதிகளாக மாறுங்கள்!


எப்பாடு பட்டாவது இன்றைய நம் தி. மு. க. ஆட்சியை இனியும் ஒரு பத்தாண்டுக்கு நல்ல பலம் பொருந்திய ஆட்சியாக இருக்கப் பாடுபடுங்கள் என்பதுதான்,


**தாழ்ந்த தமிழினத்தின் தன்மான மீட்டுத் தந்த**
**தந்தை பெரியார் வாழிய வாழியவே!**

★

**விஜயா சுரேஷ் கம்பைன்ஸ்,**
**2 & 3, ஆற்காடு ரோடு,**
**சென்னை-26.**

**எமது அய்ந்தாவது தயாரிப்பு**
**"துரோகி"**




# வாழ்த்திடுக - வாழ்ந்திடுக!

"பாராட்டிப் போற்றிவந்த பழமை 'லோகம்'
ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார்!"
என்று நான் எழுதினேன் இருபத்தைந் தாண்டுகள்முன்!
இன்றந்தப் பழமை யெலாம் இடிந்ததா, இல்லையா?
புதுமையாய் மறுமலர்ச்சி பூத்ததா, இல்லையா?
முதுமையாய்ப் போனாலும் மூடநம்பிக்கை எனும
ஆமைதன் ஓட்டுக்குள் தலை மறைத்து அடங்கிடினும்
தீமைபோல் யாருமற்ற நேரத்தில் திடுமென்று
தலை நீட்டுந் தன்மைபோல், நிலை மாற்றும் அறியாமை
வலைபோட்டு வாரிவிடும்; சிந்தனையை மடித்துவிடும்!
இப்போது கொஞ்சம்—எதனாலோ தெரியவில்லை?
தப்பான பழங்கருத்தும் தாவிடுது தைரியமாய்!
அவ்வாறு பகுத்தறிவு அவதியுறும் வேளையிலே
செவ்வானப் பகலவன்போல் அய்யாவின் நினைவுவரும்!
சம்மட்டி அடிபோலச் சரியாய் விழுவதனால்
அம்மட்டில் கொடுமை அகன்றிடுமே முழுவதுமாய்!
குட்டை மனித இனம் நெட்டையாய் நிமிர்வதற்குப்
பட்டையிடா வைரமாய்ப் பளபளப்புக் குறைந்தாலும்
கொள்கை ஒளி வீசும் அந்தக் குன்றனையார் என்றுமே
வள்ளலாய்த் தருவார் வரையாது அறிவு நிதி!
வீதி ஓரத்தில் வீணாக்கப் பட்ட வனைச்
சாதியிலே தாழ்வென்று சாத்திரத்தால் அழிந்தவனைத்
தலையெழுத்தை நம்பித் தரித்திரமாய் நின்றவனை—
மலையொத்த தோளிருந்தும் வாளா யிருந்தவனைப்
"பாரடா இவ்வுலகைப் பளிச்சென்று கண்திறந்து!
யாரடா உழைப்பவனை இகழ்ந்துரைப்போன் இங்கே?
உன்னையே நீ அறிவாய்! உன் நாடிது உணர்வாய்!
தன்மானமும் மறவாய்! தாய்மொழி மேன்மையும் புரிவாய்!"

முதலமைச்சர்
கலைஞர் திரு கருணாநிதி

என்று நம் காதில் இடித்திடித்துக் கூறி —
இன்றிந்த நிலையுயர்த்தும் ஏணியினை நான்மறவேன் !
தந்தை மகற்காற்றும் நன்றிதன் மக்களை
அவையத்து முந்தி அமர்ந்திடச் செய்வதன்றோ ?
செய்தாரா இல்லையா ? சீர்திருத்தத் தேன்மழை
பெய்தாரா இல்லையா பெரியார் ; உரைத்திடுக !
தத்துவமாய்ப் பொதுவுடைமை தழைத்துச் செயலாகிப்
புத்துலகாய்ப் பூத்த பூமியாம் ரஷ்யாவில்
முதன்முதலாய்ச் சென்று, முற்றுமே கண்டறிந்து,
அதன்வழியே தமிழகத்தில் ஆரம்பம் செய்தனரே !
சமுதாய விடுதலையும், சார்ந்திருக்கும் தாயகத்தின்
அமுதான விடுதலையும் அடைந்திடுதல் குறிக்கோளாய்த்
தொண்ணூற் றிரண்டாண்டில் துவளாத பேரிளைஞர் !
என்நோற்றோம் கொல்லோ இவருக்குத் தொண்டராக?
இன்னும் பல்லாண்டு இணையற்ற துடிதுடிப்பும்,
முன்னேற்ற நோக்கும், முதிரா இளமுறுக்கும்,
வாய்த்துச் சிறப்பாக வாழ்ந்திடுக, வாழ்ந்திடுக !
காய்த்துக் கனியான கண்ணான நும்புதல்வர் -
முத்த மகனின்று முடியுள்ளார் கண்ணெனினும்...
யாத்தளித்த செய்யுள் இருக்கின்ற தென்புடனே
கூட்டுக் குரலெழுப்பிக் கொள்கைப்பா பாடுகின்றோம் !
பாட்டுக்குப் பண்ணுய்ப் பக்கத் துணையிருப்பீர்!
ஆள்கின்ற வாய்ப்பில் அருமைத் தமிழ்மக்கள்
வாழ்வே எம் மூச்சாகும் வாழ்த்திடுக ! வாழ்ந்திடுக !!

★





நௌரோஜி ரோடு,
சேத்துப்பட்டு,
சென்னை-31.
18-8-70

**சி. ராஜகோபாலாச்சாரி**

நண்பர் பெரியாரின் 92-ம் ஆண்டு பிறக்கும் நாளில் 'விடுதலை' சிறப்பு மலர் வெளியிடுவதை அறிந்தேன். பத்திரிகை ஆரம்பித்த போது பத்திரிகைக்கு வைக்கவேண்டிய பெயரைப் பற்றி என்னுடைய யோசனையைக் கேட்டபோது "விடுதலை" என்ற பெயரை வைக்கும்படி பெரியாருக்கு நான் சொன்னேன். அவர்கள் நினைவில் இது இருக்கிறதோ இல்லையோ தெரியவில்லை. நான் மறக்கவில்லை.

நாயக்கர் அவர்களுக்கு என்னுடைய ஆசீர்வாதம்.

**சி. ராஜகோபாலாச்சாரி.**

போன்: 441373
8, திருமலை பிள்ளை ரோடு,
தி. நகர், சென்னை-17.
27-8-70

**கு. காமராஜ்**



அன்புள்ள நண்பருக்கு,

தங்கள் கடிதம் கிடைத்தது. பெரியார் அவர்களுக்கு 91 வயது முடிந்து 92வது வயது துவங்குவது அறிய பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அவர்களின் பிறந்த நாள் விழாவினையொட்டி "விடுதலை" நாள் இதழ் சிறப்பு மலர் வெளியிடுவது குறித்து மகிழ்ச்சி.

பெரியார் அவர்கள் சமூகத்திற்கும், தேசத்திற்கும் தொண்டாற்றி வருவது பாராட்டுதற்குரியது. பெரியார் அவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து சேவை செய்துவர என் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.

தங்களன்புள்ள

**கு. காமராஜ்**

"பல்லாண்டு வாழ்க
தந்தை பெரியார்"

★

# கரூர் மில்ஸ் லிமிடெட்

தாந்தோனி மலை(P.o)
கரூர்.

**ஷெர்சிங்,**

மத்திய அரசு தகவல்-ஒலிபரப்புத்துறை,
ராஜாங்க அமைச்சர்

புது டில்லி
17-8-70

திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களின் 92வது பிறந்த தினத்தின்போது சிறப்பு மலர் ஒன்றை 'விடுதலை' வெளியிடுவது அறிந்து நான் பெரிதும் மகிழ்கிறேன்.

தேச மக்களில் பல லட்சம் பேருக்கு, குறிப்பாக தமிழ் நாட்டில் அன்புடன் 'பெரியார்' என்று அறியப்பட்டிருக்கும் அவர் இப்போது அரை நூற்றாண்டுக்கு மேலாக சமூக சீர்திருத் தங்களுடன் தொடர்புகொள்ள அனைத்து நடவடிக்கைகளிலும் முன்னணியில் நின்றார். சமூகத்தின் பலவீனமான, உரிய அளவு உரிமைகள் பெறாத, பொருளாதார அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட பகுதியினர்மீது அவர் காட்டிய அக்கறை நாடறிந்த ஒன்று; அவர்களுக்கு உரிய அங்கீகாரம் பெற்றுத் தருவதற்கு கடந்த பல ஆண்டுகளாக அவர் மேற்கொள்ளாத முயற்சிகளே இல்லை.

ஒரு மாபெரும் தலைவரைக் கவுரவிக்க வெளியிடப்படும் இந்த மலருடன் என்னையும் நான் இணைத்துக்கொள்வதில மகிழ்ச்சியடைகிறேன்.

**ஷெர்சிங்**

**திரிகுணசென்,**

மத்திய அரசு
பெட்ரோலியம் மற்றும்
சுரங்கத்துறை அமைச்சர்

புது டில்லி
17-8-70

பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களின் 92வது பிறந்த தினத்தை வாழ்த்தும் வகையில் ஒரு சிறப்பு மலரை 'விடுதலை' வெளியிட இருப்பது அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். மீண்டும் தொகுத்துரைப்பது தேவையில்லை என்னும் அளவுக்கு எல்லா தமிழர்களுக்கும் பிரபலமானவை பெரியார் ஈ. வெ. ராமசாமி ஆற்றியுள்ள தொண்டுகள். மக்களுக்கு பயன்படும் வண்ணம் மேலும் பல ஆண்டுகள் பொது சேவை செய்யவேண்டும் என்று ஈ.வெ.ரா.வை வாழ்த்துவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**திரிகுணசென்.**

# தந்தை பெரியார் அவர்களுக்கு வாழ்த்து

★

நேரிசை யாசிரியப்பா

தந்தை பெரியார் தமிழின் அரியார்
உள்ள மார்ந்த உண்மையை யெடுத்தே
அஞ்சா துரைக்கும் ஆற்றல் கொண்டோன்
வெண்தாடி வேந்தன் வெள்ளைக்
குணத்தோன்
சாதிக் கொடுமையைச் சாடப் பிறந்தோன்
மூடப் பழக்க வழக்க மொழிக்கும்
மூதறி வாளன் முழுமையும் எண்ணி
ஆவ தறிந்தே அருஞ்சில சொல்லால்
உரைக்குமிவ் வறிஞன் வாழ்க!
உடல்நலத் தோடே உளம்போல் வாழ்க!

என். கே. சிதம்பரம்
Contractor P.W.D. (Civil, Sanitary and Painting)
3/5, Dr. Beasant Road,
Ice House, Madras-4.

**எஸ். ஜே. சாதிக்பாட்சா**

பொதுப்பணி அமைச்சர்

செயின்ட்ஜார்ஜ் கோட்டை
சென்னை-9
17-8-1970

'தென்னகத்தின் அரியேறு' என விளங்கும் தந்தை பெரியார் அவர்கள் 91 வயதைக் கடந்த பின்பும் இன்றும் அலுப்பு சலிப்பு இல்லாமல் உழைக்கிறார். முன்னேற்றப்பாதையில் பெரும் இடையூறாக இருந்த முட்புதர்களை அகற்றி, காடு திருத்தி கழனியாக்கி, தமிழகம் அறிவியக்கப் பூங்காவாக எழில் வண்ணம் பெறும் வகையில் மாநிலத்தைப் பண்படுத்தி வைத்த மாவீரர் அவர். நாட்டில் வறுமையைக் களைந்து அறிவியல் கலைகளை வளர்த்து சமத்துவமும் சமநீதியும் காணும்பணியில் தமிழக அரசுக்கு அருந்துணையாகச் செயல்பட்டு வருகிறார்.

அவரது வாழ்வு, வரலாற்றிலேயே பயன் மிகுத்த வாழ்வு மட்டுமல்ல; படிப்பினை நிறைந்த வாழ்வும் ஆகும்.

தமிழகம் மேலும் மேன்மை பெற அறிவியக்கத் தந்தை பெரியார் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து வழி காட்டவேண்டும் என்பதே தமிழக மக்களின் பெரு விருப்பம் ஆகும்.

92 வயதைக் காணும் தந்தை பெரியாருக்கு, நெஞ்சு நிறைவுடன் பிறந்த நாள் வாழ்த்துக்கூறி, என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**எஸ். ஜே. சாதிக்பாட்சா**

**சி. பா. ஆதித்தனார்** எம்.ஏ., பார்-அட்-லா
**கூட்டுறவுத்துறை அமைச்சர்**

தமிழக அரசு
தலைமைச்செயலகம்
சென்னை-9
5-9-70

தந்தை பெரியார் அவர்களின் 92வது பிறந்தநாளையொட்டி மலர் வெளியிடுவதுகண்டு மகிழ்ச்சி யடைகிறேன்.

அவர் கொண்டுள்ள முற்போக்குக் கருத்துக்களை, இளமைத்துடிப்பு உள்ளவர்களிடம் மட்டுமே காணமுடியும். அவர் உள்ளத்தில் எழுகின்ற உணர்ச்சி வேகத்தால், அவர் என்றென்றும் இளைஞரே!

அறிவாற்றலால் அவர் தோற்றுவித்த கருத்துக்கள் காலத்தை வெல்லத் தக்கவை. கன்னித்தமிழ் போல சந்ததமும் இளமையொடு இருக்கப்பட்டவை.

தமிழகமெங்கும் அயராது சுற்றிச்சென்று தாழ்வுற்றுக்கிடந்த மக்களின் வாழ்க்கையில் சுடர்விளக்கு ஏற்றிவைத்தவர் பெரியார். மக்களுக்குப் பகுத்தறியும் பாதையை வகுத்துக்கொடுத்தவர். புதிய எண்ணங்களைக்கொடுத்து "சிந்தித்துப்பார்" என்று தூண்டியவர்,

பெரியார் அவர்களின் கொள்கைகளுக்கு செயல்வடிவம் கொடுத்தவர் அறிஞர் அண்ணா; சுயமரியாதைத் திருமணங்களை செல்லுபடியாகும் திட்டம்—கலப்புத் திருமணத்திற்குப் பரிசு—இவைபோன்று இன்னும்பல அறிஞர் அண்ணாவின் ஆட்சியில் நடந்தேறின.

பல நூறு ஆண்டுகளுக்குப் பிறகும், நன்றியுள்ள தமிழ்மக்கள் "வாழ்க பெரியாரின் புகழ்" என்று வாழ்த்துவார்கள்.

**சி. பா. ஆதித்தனார்**

தோற்றம்: 1940

தொலைபேசி:
தலைமை அலுவலகம்: 164. காவேரி: 691.
தொலைவரவு: WHOLE STORE

# தஞ்சாவூர் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்டோர்ஸ் லிட், T 878.

## தஞ்சாவூர்

★

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் | : | ரூ. 5,00,000 |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | : | ரூ. 3,83,800 |
| காப்பு நிதி | : | ரூ. 1,25,000 |
| செயற்படும் மூலதனம் | : | ரூ. 17,49,300 |
| ஆண்டுவிற்பனை | : | ரூ. 1,00,00,000க்குமேல் |

**கிளைகள்:** "காவேரி" சிறப்பு அங்காடி, மளிகை 25, ஜவுளி3,
காய்கனி 2, லீகோ 1.

**S. அற்புதசாமி**
Managing Director

**I. K. துரைராஜுப்பிள்ளை**
President-in-Charge

T.C W.S. Thanjavur



**சோவியத் நாடு**
கான்சல் ஜெனரல்
சென்னை

12, கஸ்தூரி ரெங்க
அய்யங்கார் சாலை
சென்னை-18.

திரு. ஈ. வெ. ராமசாமி அவர்களின் 92வது பிறந்த தினத்தின்போது எனது அன்பார்ந்த, இதயங்கனிந்த வாழ்த்துக்களை அனுப்புகிறேன்; அவர் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.

**ஜி. அய். கவேரின்**
(சென்னையிலுள்ள சோவியத் கான்சல் ஜெனரல்)

செட்டிநாடு அவுஸ், அடையார்,
இராஜா அண்ணாமலைபுரம்
சென்னை-28.



செட்டி நாட்டரசர், டாக்டர்
**ராஜாசர் முத்தையா செட்டியார்**

அய்யா,

தந்தை பெரியார் அவர்கள் 91 ஆண்டு நிறைவுப் பெற்று 92—வது வயது எய்துவதைக்கேட்டு அகமகிழ்கிறேன். பிறந்தது முதல் இன்று வரை தம் நாட்டிற்கும், மக்களுக்கும் தொண்டாற்றுவதே தம் கடமை என்று அவர்கள் தம் வாழ்க்கையையே அரை நூற்றாண்டுகள் மேலாக சுமார் 70 ஆண்டுகளாக அர்ப்பணித்து வருவது உலகம் அறிந்த விஷயம். அவர்களின் 92—வது ஆண்டு பிறந்த நாள் விழாவையொட்டி "விடுதலை" மலர் ஒன்று வெளியிட ஏற்பாடு செய்துவருவதைப் பற்றி மகிழ்ச்சியடைகின்றேன். பெரியார் அவர்களின் பெருமுயற்சியால் நடந்து வரும் "விடுதலை" நாள் இதழ் நாட்டின் முன்னேற்றத்திற்காகவும், சீர்திருத்தம், கலை, கல்வி இவைகளுக்காக அரும்பாடுபட்டு வருகிறது. இவ்விதழ ஆசிரியரையும் இதரர்களையும் மகிழ்ச்சியுடன் பாராட்டு கிறேன்.

தந்தை பெரியார் அவர்கள் இன்னும் பல்லாண்டுகாலம் நாட்டிற் காகத் தொண்டாற்றி வரவும், நாட்டு மக்களுக்கோர் சிறந்த தலைவ ராகவும் விளங்கும் அவர்கள் எல்லா நலன்களும் நிறைவுபெற்று திட காத்திரத்துடன் வாழ்க ,வாழ்க எனக்கூற ஆசைப்படுகிறேன்.

தங்கள் அன்புள்ள
**முத்தையாசெட்டியார்**

எதிர்கால நல்வாழ்வுக்கு இதோ - ஒரு வழி :

# அஞ்சலக தொடர் வைப்புத் தொகை திட்டம்

- மாதச் சம்பளம் வாங்குவோர் - சொந்த மாகத் தொழில்புரிவோர் இருவருக்கும் ஏற்றது.
- சிறு தொகை சேமிக்க வாய்ப்புள்ளோருக்கு சிறந்த வழி.
- மாதந்தோறும் தொகை கட்டி - அய்ந்து ஆண்டுகளுக்குப் பின்னர் மொத்த மாகப் பெறலாம்.
- வட்டி ஆண்டொன்றுக்கு ஆறேகால் சதவிகிதம் - மாத மொன்றுக்கு ரூ. 10 செலுத்தினால் அய்ந்து ஆண்டு முடிவில் ரூ. 700 பெறலாம்.
- முதலீட்டில் கிடைக்கும் வட்டிக்கு ரூ. 3,000 வரையில் வருமான வரி நீக்கம் உண்டு.

முழு விபரங்களுக்கு அருகிலுள்ள அஞ்சலகத்துடன் தொடர்புகொள்ளுங்கள் :

(தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத் துறை இயக்குனரால் வெளியிடப்பட்டது)

# பெரியாரும் பகுத்தறிவும்

## அமைச்சர் :: நாவலர் :: திரு நெடுஞ்செழியன் ::

கடந்த அய்ம்பது ஆண்டு காலமாக ஏளனம்—இழிச் சொற்கள் இத்தனைக்கும் அஞ்சாமல், இன்னல்—இழப்புகளை எல்லாம் தாங்கி தமிழகத்தின் பட்டி தொட்டி எல்லாம் தமிழர் தலைவர் தந்தை பெரியார் அவர்கள் பகுத்தறிவுப் பிரசாரத்தை தொடர்ந்து நடத்தி வருகிறார்கள்.

தந்தை பெரியார் அவர்களின் தொண்டு வீண் போக வில்லை. குமரி முதல் இமயம் வரை இந்நாட்டைச் சுற்றி வந்தால் ஓரளவு அறிவு வகையில் வாழ்வை அமைத்துக் கொண்டு இருப்பவர்களைத் தமிழ் நாட்டில் தான் காண முடியும்—வேறு எந்த மாநிலத்திலும் காண முடியாது.

அறிந்தோ அறியாமலோ தெரிந்தோ தெரியாமலோ ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொருவரது உள்ளத்திலும் பெரியாரின் கருத்து ஊடுருவிப் பதிந்து கிடக்கிறது.

அறிஞர் அண்ணா அவர்களும் என்னைப் போன்றவர்களும் கல்லூரி படிப்பை முடித்தவுடன் பெரியார் அவர்களின் பெரும்படை வரிசையில் அணி வகுத்து நின்றோம் என்றால் அதற்குக் காரணம் என்ன? பெரியார் அவர்கள் எங்களைவிட அதிகம் படித்தவர் என்பதாலா? அவரோ அய்ந்தாம் வகுப்பைக் கூட சரியாக முடிக்காதவர். இருந்தாலும் அவரையே தான் எங்கள் தலைவராக—தந்தையாக ஏற்றுக் கொண்டோம். ஏன்?

சாத்திர சம்பிரதாயங்களைக்கரைத்துக் குடித்த ஒருவரைத்தான் தலைவராக ஏற்க வேண்டும் என்றால் காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரியாரை அல்லவா தலைவராகக் கொண்டு இருப்போம்? படித்த மேதைகள் என்று சொன்னால் மேநாடுகள் சென்று பட்டம் பெற்ற எத்தனையோ பேர்களுண்டு—அவர்களை அல்லவா தலைவராக ஏற்றிருப்போம்?

மற்றவர் எவரிடமும் இல்லாத பகுத்தறிவுக்கருத்துக்கள் தேவையான கருத்துக்கள் தந்தை பெரியார் அவர்களிடமே இருந்தன. பெரியார் அவர்களின் பகுத்தறிவுக் கொள்கை எங்களை அவர்பால் ஈர்த்தது. அதனால் அவருடைய தொண்டரானோம்.

மூட நம்பிக்கையிலிருந்தும் குருட்டு நம்பிக்கையிலிருந்தும் இன்னும் நாம் விடுபடாமல் இருக்கிறோம். நமது நாட்டில் எல்லா வளங்களும் செல்வங்களும் இருக்கின்றன. அத்தோடு இல்லாமையும்—போதாமையும் இருக்கின்றன. இல்லாமை—போதாமைக்குக் காரணம் நமது அறியாமை. அறியாமைக்குக் காரணம் கல்லாமை.

கல்லாமை காரணத்தால் அறியாமை; அறியாமை காரணத்தால் போதாமை இல்லாமை எல்லாம் இருக்கின்றன. இவ்வளவிற்கும் மேலாகபொறாமைநம் உள்ளங்களில்.

இவ்வளவு "ஆமைகள்" நம்மைச் சுற்றி இருக்கும்போது நாம் எப்படி உருப்பட முடியும்? நாம்இன்னமும் நல்லகாலம் கெட்ட காலம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். இராகு காலம் பார்ப்பதால் எவ்வளவுநேரம் காலம் வீணடைகிறது. ஒரு மணி நேரம் தவறுவதால் உலகில் எவ்வளவோபொருளா தார மாற்றங்கள் நிகழ்ந்து விடுகின்றன. பூனையைக் கண்டால் அச்சம் ஒன்னரைக் கண்ணன் எதிரே வந்துவிட்டால் காரியமே கெட்டுப்போச்சு—விதவை எதிரே வரக் கூடாது. சகுனத்தடை—இப்படி தொட்ட தற்கெல்லாம் அஞ்சியஞ்சி வாழ்ந்தால் வாழ்க்கை என்னாவது?

பல ஆண்டுகளுக்கு முன்பு ஊரிலே பெரிதாகப்பேசப்பட்டபேய்—பூதம்—பிசாசு கள் எல்லாம் இப்போது எங்கே ஓடிப்போய் விட்டன? அறிவியல் உலகம் அவற்றை எல்லாம் பொய் என்று உறுதிப் படுத்தி விட்டது.

வெளிநாடுகளில் வளர்ந்திருக்கிற அறி வியல் பலநூற்றுக்கணக்கான கடவுள்களை எல்லாம் மாஜிக் கடவுளாக ஆக்கிவிட்டன. அந்தநிலைமை இன்னும் இங்கு உருவாக வில்லையே.

தேங்காய் உடைப்பது — சூடம் கொளுத்துவது வாழைப்பழம் வைப்பது போன்ற மூடப் பழக்கங்கள் இன்னும் இருந்து வருகின்றன. இவற்றைத் திருடன் முதல் யோக்கியன் வரை செய்துகொண்டு தான் இருக்கிறான்.

"கண்டவர் விண்டதில்லை விண்டவர் கண்டதில்லை" என்கிறான். கண்டவன் சொன்னதும் இல்லை சொன்னவன் கண்டதும் இல்லை என்றால் என்ன பொருள்? அப்படி ஒரு பொருள் இல்லை என்பது தானே அர்த்தம்? கடவுள் என் றால் மெய், வாய் சிந்தை அத்தனைக் குள்ளும் அகப்படாதது என்கிறான். அகப்பட்டுக் கொண்டால் கடவுள் என்பது இல்லை என்றாகிவிடுமா? ஒப்புக் கொள் கிறானா கடவுள் பத்தன்?



ஆண்டவன் பத்து அவதாரம் எடுத்திருக்கிறான். அவற்றுள் ஒரு அவதாரம் கூட வெளிநாட்டில் கிடையாது. ஒரு ஆப்பிரிக்கக் கண்டத்திலோ ஒரு அய்ரோப்பா கண்டத்திலோ கூட ஒரு அவதாரமும் அவதரிக்க வில்லையே! அத்தனை அவதாரங்களும் நமது பாரத புண்ணிய மண்ணில் தானே?

முப்பத்து முக்கோடி தேவர்கள், கின்னரர், கிம்புருடர், அட்டதிக்குப் பாலர்கள் அத்தனை பேரும் நம் உயிரை எடுக்க இங்கு தானா அவதரிக்க வேண்டும்?

“பாலும் தெளி தேனும் பாகும் பருப்பு மிவை நாலும் கலந்துனக்கு நான் தருவேன் —கோலத்திருமுகத்துத்தூமணியேநீஎனக்கு சங்கத்தமிழ் மூன்றும்தா” என்று இன்றைக்கும் நாம் பாடிக்கொண்டுதானே இருக்கிறோம். இவ்வளவிற்கும் நம் நாட்டில் எழுத படிக்கத் தெரியாத கைநாட்டுப் பேர்வழி 100க்கு 58 பேர். இவ்வளவு கடவுளர்கள் இருந்து என்ன பயன்?

‘கங்காரு’ என்ற மிருகம் நல்ல வேளையாக நம் நாட்டில் இல்லை. அது ஆஸ்திரேலியாவிலேயே தங்கி விட்டது. கங்காரு இங்கு இருந்திருந்தால் அதற்கு ‘பங்காரு’ என்று பெயர் வைத்து அதையும் சாமி ஆக்கியிருப்பானே!

எவ்வளவு பெரிய மூடநம்பிக்கை இன்னும் நம் நேரத்தையும் உழைப்பையும் பொருளையும் வீணடித்துக் கொண்டு இருக்கிறது.

பெரியார் அவர்கள் ‘குடியரசு’ துவங்கி இது நாள்வரை பகுத்தறிவு அடைமழை பொழிந்து கொண்டுதான் இருக்கிறார்.

பீரங்கி வைத்துப் பாறைகளைத் தூள் தூளாக ஆக்குவது போல மூடப்பழக்க வழக்கங்களைப் பெரியார் அவர்கள் உடைத்து வருகிறார். உடைக்கப்படும் அந்தக் கற்களைச் செதுக்கி மக்களிடம் பரப்பும் பணியினைப்படித்தவர்கள்—பட்டம் பெற்றவர்கள் கண்டிப்பாக செய்தல் வேண்டும். அப்பொழுதுதான் நாடும் நாமும் வாழ்வோம்—வளர்வோம்!


With Best Wishes From:

**Teachers' Publishing House**

Educational Publishers

53/56, Coral Merchants St.,
MADRAS-1.

# மெய்ப்பொருள் காணும் மேன்மையர்

## தொழில் அமைச்சர் திரு. S. மாதவன்

தந்தை பெரியார் அவர்களின் 92 ஆம் ஆண்டு பிறந்த நாளை நாம் கொண்டாடுகிறோம்.

'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'' என்ற மூதுரைப்படி மெய்ப்பொருள்காணும் மேன்மையரான பெரியார் அவர்களின் பெற்றிமையை இன்று உலகம் உணர்ந்து போற்றுகிறது. பெரியார் அவர்களின் அறிவொளியால் குருட்டு நம்பிக்கைகள் என்ற இருட்டு மறைந்தது, தாழ்த்தப்பட்டோர் தம் நிலை உணர்ந்தனர்; தாழ்ந்து கிடந்தோர் தலை நிமிர்ந்தனர். ''பிறப்பு ஒக்கும் எல்லாஉயிர்க்கும்'' என்றஉண்மையை மக்கள் நன்கு புரிந்து கொண்டதால் பிறப்பிலே ஏற்றத்தாழ்வு கற்பித்த ஏமாற்றுக் கொள்கை மாய்ந்து மறைந்தது.

உள்ளத்திலுள்ளதை ஒளியாது பேசுவதற்கு நெஞ்சில் உரமும் நேர்மைத்திறமும் வேண்டும். நாம் உணர்ந்த உண்மைகளை ஒளியாமல் கூறும் நெஞ்சுரம் நம்மில் எத்தனை பேருக்கு இருக்கிறது? ''இதைச் சொன்னால் இவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்களோ,'' ''அதைக் கூறினால் அவர்கள் எவ்வாறு எடுத்துக்கொள்வார்களோ''—என்ற அச்சத்தால் பலர்—மக்களின் தலைவர்கள் என்பவர்களில் பலர்—உணர்ந்த உண்மைகளை உரைப்பதற்கு அஞ்சி நிற்கிறார்கள். ஆனால், நம்உள்ளங்களில் உறைந்து கிடக்கும் உண்மைகளை எல்லாம் நமக்காக நம் பெரியார் அவர்கள் உலகுக்கு எடுத்துக் கூறுகிறார்கள்; அவ்வாறு அவர் கூறும் கொள்கைகளை நாமும் மனமார ஏற்கிறோம்; ஆனால் அவைகளே நம் கொள்கைகள் என்று வெளிப்படையாக சொல்வதற்குக்கூட நாம் சில வேளைகளில் தயங்குகிறோம்! ஏன் இந்த நிலை?

அநீதி இழைப்பது கொடுமையானது. அநீதியையே நீதி என்று கூறிக்கொண்டு அந்த அநீதியை வளர்ப்பது இன்னும் கொடுமையானது! அநீதியை நீதியாகக் காட்டும் இரண்டாவது நிலையிலே, அநீதியை எடுத்துக் கூறுபவன் நீதிக்கு எதிரானவனாகக் கருதப்படுகிறான். நம் சமுதாயம் இந்த இரண்டாவது நிலையிலே உள்ளது. சமுதாய அநீதிகள் ''தர்மம்'' அல்லது ''நீதி'' என்ற பெயரால் பேணப்படுகின்றன: 'மதம்' அதற்குத் துணை புரிகிறது. இங்நிலையிலே, சமுதாய அநீதிகளைக் கண்டு கொதிப்படைபவன் 'சமயத்தின் விரோதி' என்றும், ''தருமத்தின் பகைவன்'' என்றும் குற்றம் சாட்டப்படுகிறான். அநீதியை எதிர்ப்பவன் நீதிக்கு மாறுபட்டவனாகக் குறை கூறப்படுகிறான். இந்த நிலையால் தான், சமுதாய அநீதிகளை எடுத்துக்கூறப் பலரும் தயங்குகின்றனர்.

அஞ்சாத நெஞ்சம் படைத்த பெரியார் ஒருவர் தாம் இந்தச் சூழ்ச்சிகளை எடுத்துக் காட்டும் ஏற்றம் பெற்றுள்ளார். அந்த ஏற்றத்திலிருந்து ஊற்றெடுத்துப் பாயும்

அவர் கொள்கைகள் குற்றாலத்து அருவி யாய்ப் பெருகுகின்றன. உடலில் உரமுள் ளோரால் தான் குற்றாலத்து அருவியில் நின்று குளிக்க முடியும்; உள்ளத்தில் உர முடையோரால் தான் பெரியர்ர் கொள்கை கள் என்ற அருவியிலே நேரடியாக நின்று முழுக முடியும். உடலில் உரமில்லாதவர்கள் குற்றாலத்து அருவியின் நீரை அவரவர் வீட்டிலுள்ள குழாய்கள் வழியே பெற்றுக் குளிக்கின்றனர். அது போல உள்ளத்தில் உரமில்லாதவர்கள் பெரியார் அவர்களின் கொள்கைகளின் பயனைத் தனிப்பட்ட முறையிலே பெற்றுத்துய்க்கின்றனர்:

தந்தை பெரியார் அவர்களது கருத்துக் கள் நாட்டுக்குத்தேவைஎன்பதை இன்றைய நாட்டின் நிலை தெளிவாக்குகின்றது: மத வெறியும், சாதி வெறியும் அரசியல் கட்சி களுக்குத் துணைநிற்கும் துர்பாக்கியம் நமது நாட்டில் நிலவுகின்றது. தந்தை பெரியார் அவர்களது தொண்டின் விளை வாக தமிழ் நாட்டில் மத உணர்ச்சிகள் அழிந்து பட்டிருந்தன: இப்போது அத் தகைய உணர்ச்சிகளுக்கு அரசியல்வர்ணம் கொடுத்து ஊக்குவிக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன. இந்தச் சூழ்நிலையில் இன்னும் நூறு ஆண்டுகள் பெரியார் அவர் கள் வாழ்ந்து நமக்கு தொண்டாற்ற வேண்டும்:

சமுதாயத் தீமைகளைப் போக்கித் தூய்மைப்படுத்தும் தொண்டிலே இமயத் தின் சிகரமாய் ஏற்றம் பெற்றுள்ள பெரி யார் அவர்கள் நமக்கு என்றும் வழிகாட்டி இலங்க வேண்டுமெனப் பணிவுடன் விழைந்து எனது அஞ்சலியைச் செலுத்து கிறேன்.

---

## முடியுமா ?

கடவுளையும் மதத்தையும் காப்பாற்ற பாதிரி, முல்லா, சங்கராச்சாரி, பண்டார சன்னதி, பார்ப்பான் முதலியவர்கள் இல்லா மல் இருந்தால் அவை உலகில் இதுவரை இருந்திருக்க முடியுமா?

—**தந்தை பெரியார்**


தந்தை பெரியார் 92-வது பிறந்தநாள் வாழ்த்துக்கள்!

# A. D. GOPAL

Mfrs. of Hospital Equipments, Surgical Instruments, Household Utensils, Steel Trunks, Agricultural Implements, Commercial and Utility Articles

SSI REGD. NO, SSI PR 504 005 07

Works:
32, Ragava Mudali Street,
TIRUPATTUR

Phone No. 138

Office:
19, Big Bazaar Street,
TIRUPATTUR (N A.Dt)

# மனிதன் அயோக்கியனாவது ஏன்?

## தந்தை பெரியார்

மனித சமுதாயத்தினிடம் ஒழுக்கம் நாணயம் குறைந்து போய்விட்டது. பலாத்கார உணர்ச்சியும் கெடுதல் புத்தியும் வளர்ந்து விட்டது. இதற்கு நமது மதம், ஜாதி என்பனவாகிய இரண்டும்தான் காரணம்.

கடவுளைப்பற்றி எனக்கு கவலை இல்லை. ஏனென்றால் கடவுள் என்றால் என்ன என்பது உலகில் யாருக்குமே தெரியாது. அது வெறும் வேஷம்தான்.

**மதமும் ஜாதியும் ஏன்?**

மதம், ஜாதி என்பது யாவருக்குமே தெரியும். மதம் என்பது மற்ற மதக்காரனிடம் துவேஷம், வெறுப்பு, இழிவுப்படும் தன்மை என்பவையாகும்.

''எந்தவிதமான கூடாத, கேடான காரியத்தை செய்தாவது மதத்தைக் காப்பாற்றலாம்—காப்பாற்ற வேண்டும். அது போலவே தானும் வாழ வேண்டும்'' என்பதாகும். ஜாதியும் அதுபோன்றதே.

இந்து மதம்—பார்ப்பன ஜாதி என்பவை எந்தவிதமான அதர்மத்தை செய்தாவது தர்மத்தைக் காப்பாற்று என்பதோடு, பிராமணன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள எந்த அதர்மத்தையும் செய்யலாம் என்பதாகும்.

அது போல கிருஸ்த்தவர், மகமது (இஸ்லாம்) மதங்கள் மனிதன் என்ன பாவத்தை செய்தாலும் சடங்கு, பிரார்த்தனை, தொழுகை மூலம் பாவமன்னிப்புப் பெறலாம் என்பது.

இந்த விதிகளுக்குக் கட்டுப்பட்ட மக்களிடம் ஒழுக்கம், நாணயம், யோக்கியம் முதலியவைகளை எதிர்பார்க்க முடியுமா? எந்த மனிதனாலாவது ஒழுக்கம் நாணயம், நேர்மை, யோக்கியம் ஆகியவைகள் உடையவனாக இருக்க முடியுமா?

**எங்கும் வேஷமே!**

பாவத்திற்கு (கேடு செய்ததற்கு) பிரார்த்தனையால்,வேண்டுதலால் மன்னிப்பு கிடைக்கும் என்ற கடவுளை மதத்தை வணங்குகின்ற கொள்கை கொண்ட எவனால்தான் உலகில் யோக்கியனாக இருக்க முடியும்? அதனால்தானே கடவுள் பக்தர்களிடம் வேஷத்தை தவிர ஒழுக்கத்தையோ யோக்கியத்தையோ காண முடிவதில்லை.

இப்பொழுது தெரிகிறதா? மனிதன் ஏன் அயோக்கியனாய் இருக்கிறான் என்பதற்குக் காரணம்?

ஆகவேகடவுள், மதம், ஜாதி ஆகியவை உலகில் இருக்கும் வரை எவரும் யோக்கியமாய் இருக்க முடியாது.

மனிதனுக்கு ஆசை இயற்கை; அதோடு அதற்காக எது செய்தாலும் மன்னிப்பு உண்டு என்றால் என்ன ஆகும் என்பதை நீங்களே சிந்தித்தும் அனுபவத்தைக் கொண்டும் தெரிந்து கொள்ளுங்கள்.

★

# இனமானம் காத்த ஏந்தல்!

தவத்திரு. குன்றக்குடி அடிகளார் — எம்.எல்.சி


மக்கட் சமுதாயம் மிகவும் பிரிந்து கிடக்கும் ஒன்று. நாடு—மொழி—இனம்—சமயம் ஆகிய பல்வேறு காரணங்களால் மக்கட்சமுதாயம் பிரிந்தே கிடக்கிறது. இந்த வேறுபாடுகள் இன்றியமையாதன என்று கூறமுடியாது வேறுபாடற்ற உலகப் பொதுச் சமுதாயத்தையே அறிஞருலகம் விரும்பு கிறது. அதனாலன்றோ, "யாவரும் கேளிர்" என்றும், "ஒன்றே குலம்" என்றும் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்றும் அறிஞர் பெருமக்கள் வற்புறுத்தி வந்துள்ளனர். அந்த வாழையடி வாழை வரிசையில் வந்தவர் தலைவர் பெரியார்

மனித குலத்தில் மொழியின் பெயராலும் சாதியின் பெயராலும் ஏற்படுத்தப் பட்டுள்ள பிரிவுகளைக் கண்டு பெரியார் கொதிப்படைகின்றார். சாதிப்புன்மையை ஒழித்துச் சமநிலைச்சமுதாயத்தை அமைப்பதையே பெரியார் தமது வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டு தொடர்ந்து போராடி வருகிறார். ஆயினும், தமிழினம் என்ற பற்றில் பெரியார் குறைந்தவரல்லர். பொதுச்சமுதாய அமைப்புக்கு நியாயமான இனப்பற்று தடையாக இருக்க முடியாது. மனித சமுதாயத்தைப் பகுதிப்படுத்திப் படுத்திப் பண்பாட்டுடன் வளர்க்கவே, மொழி வழிப்பட்ட இன அமைப்புகள்தோன் றின. ஆனால், காலப்போக்கில் இனப் பற்று, பண்புக்குப் பதிலாகப் பகையை வளர்த்தது. ஓர் இனம் பிறிதோரினத்தின் நலத்தைச் சூறையாடிற்று. சுரண்டலும், சூறையாடலும், அவமதிப்பும் நிலவும் சமுதாயத்தில் பொதுமைச் சமுதாயம் தோன்ற முடியாது. இங்ஙனம், வரலாற்று ரீதியில் புகழ்பட வாழ்ந்த தமிழினத்தின் நலத்தை—மரியாதையை மற்றவர்களிட மிருந்து அரண்செய்துகாப்பாற்றவே காலம் தந்த பரிசாகத் தோன்றியவர் பெரியார்.

தன்மானம் எவ்வளவு இன்றியமை யாததோ அவ்வளவு இன்றியமையாதது இனமானம். தமிழரில் பலருக்குத் தன்மானம் உண்டு. ஆனால் அவர்களுக்கு இனமானம் இருப்பதில்லை. அதாவது ஒருதமிழனை இன்னொருவன் தனிப்பட்ட முறையில் இழித்துப் பேசினால் ஆத்திரப்படுவான். ஆனால் அதேபோழ்து அவனுடைய இனத்தையும், மொழியையும் மரபுகளையும் இழித்துப் பேசினால் கேட்டும் கேளாது போய்விடுவான். இடைக்காலத்தில் தோன்றிய இந்த இழி மனப்பான்மையைத் தமிழினத்திலிருந்து அகற்றித் தமிழர்களைத் தன்மானமும் இனமானமும் உடையவர்களாக வளர்த்த பெருமை பெரியாருக்கு உண்டு.

இன நலத்தைப் பேணிக்காப்பதன் மூலம் எல்லாச் சிறப்பினையும் அடையலாம் என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவம் கூறிற்று. அந்த வள்ளுவர் நெறியைச் செயற்படுத்தி வெற்றி கண்ட பெரியார், தமிழின வரலாற்றின் சிற்பியாவார். அவர்தம் வாழ்நாள் வளர்வது, தமிழினத்திற்கு வைப்பாகும். பெரியார்தம் புகழ் தமிழினத்தின் புகழ்!

⁂



தந்தை பெரியார் பிறந்த 92-வது
பொன்னாளில் எங்கள்
நெஞ்சங்கனிந்த வாழ்த்துக்கள்

ஸ்ரீ
நரசிம்மவிலாஸ்
காப்பி & சாப்பாடு ஹோட்டல்

G. S. T. ரோடு
மாமண்டூர் P. O.

ஆற்றங்கரை
செங்கற்பட்டு

போன்: 302

சுவைமிக்க சிற்றுண்டிக்கும். அறுசுவை நிறைந்த
சாப்பாட்டிற்கும் சிறந்த இடம்

சென்னையிலிருந்து தென்மாவட்டங்கட்குச் செல்லும் பஸ், கார், லாரி, அரசினர் நெடுந்தூர துரிதபஸ்கள் (Express Buses) முதலியவற்றில் பயணம் செய்யும் பிரயாணிகளின் சவுகரியத்தை முன்னிட்டு எல்லா வசதிகளோடும் அமைக்கப்பட்டுள்ளது.

K. தங்கபாண்டி & பிரதர்ஸ்
உரிமையாளர்கள்.

# தென்னாட்டின் சாக்ரடீஸ்

அமைச்சர் — திருமதி சத்தியவாணிமுத்து

இந்தியத் துணைக் கண்டத்தின் தலைசிறந்த மக்கள் தலைவர்களுள் தலையாயவர் நம் தந்தை பெரியார் அவர்கள். இந்நாட்டில் 'ஜாதிதான் மக்களுக்குள் பேதத்தை ஏற்படுத்தும் முதல் சாதனம்—மக்களின் இரத்தத்திலே கலக்கப்பட்டிருக்கும் கடும் விஷம்—மனதிலே இடக்கு நோயைப் புகுத்திவிட்ட முறை—எனவேதான், பேதமற்ற சமுதாயத்தை—சமத்துவத்தை—சமதர்மத்தை நாம் காணவேண்டுமானால் முதலில் ஜாதி தொலைந்தாக வேண்டுமென்று உறுதியெடுத்து ஓயாது உழைத்துவரும் ஓரியக்கம்—பகுத்தறிவு இயக்கமான திராவிடர் கழகமேயாகும். இதை உருவாக்கிய மூல கர்த்தா தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாள்; தன்மானமிக்க ஒவ்வொரு தமிழரும் தன் பிறந்த நாளாகக் கருதி பெருமகிழ்ச்சியும்—பேருவகையும்—பெருமிதமும் பெறற்கரிய பேறு பெற்ற தன்மையும் அடையவேண்டிய திருநாள்—பெருநாள். வாழப் பிறந்த ஒரு பகுதியினர் வாழத்தகுதியற்றவர் என்றும்; உயிரும்—உருவமுமற்ற உணர்வற்ற சில பொருள்களை "உயிருள்ளது"—"எங்களைக் காப்பாற்றவல்லது என்றும்; அத்தகைய காப்பாற்றும் சக்தியை காண்பவர்க்குரியவர் ஒருசிலர்தான் என்றும் மற்றவர் பார்ப்பதுபாவம், அநியாயம் என்றும்; நியாயம் பேசிய மூடப்பழக்க வழக்க எத்தர்களையும—இனப் பித்தர்களையும்—பதறுகளையும்—பேடிகளையும் தலைகாட்டாமல் செய்த தலைவர் தந்தை பெரியார் அவர்களேயாகும். சூழ்ச்சியால், வஞ்சகத்தால், பிற்பட்டோர்—ஒதுக்கப்பட்டோராய் வாழும் சந்ததியினரை தறுதலைகள் என்றும்; உயர்ந்தோர் என்போர்க்கு உரிய அடிமைப் பணி செய்யும் விலைபோகும் தறுதலைகள் என்றும்; கருதப்பட்ட மரபினரை, காப்பாற்ற தலை கொடுக்கவும் தயாராய் நின்ற ஒரு தலைவர்—விடுதலை இயக்க மாவீரர் 'தந்தை பெரியார் அவர்களேயாகும்.

தந்தை பெரியார் அவர்களின் பகுத்தறிவு இயக்கம் என்கின்ற ஊருணியால், பழமரம் போன்ற பல தலைவர்கள், பல கவிஞர்கள், பல எழுத்தாளர்கள், பல சொல்வல்லார்கள் உருவாக்கப்பட்டுள்ளனர். அப்படி உருவாக்கப்பட்ட பலர் பல்வேறு இயக்கங்களிலே சார்ந்திருந்தாலும், அவரெல்லாரும் பெரியார் தம் கொள்கையை பேணிக்காத்திடவே—சீரிய முறையில் செயல்படவே கண்ணுங்கருத்துமாய் உள்ளனர் என்பது தெளிவு. எல்லாத் தலைவர்கட்கும், தந்தை பெரியார் அவர்கட்கும் இருக்கிற பெரிய வேறுபாடு என்னவெனில், "அந்த இயக்கத்தின் தலைவரை அந்த இயக்கத் தொண்டரே தலைவராய் ஏற்றுக் கொள்வர். ஆனால் தந்தை பெரியாரை எல்லா அரசியல் இயக்கத்தின் தொண்டர்களும்—தலைவர்களுமே தலைவராய் ஏற்றுக் கொள்வர்" இதுதான் பெரியார் அவர்களிடமுள்ள தனியான—தலைசிறந்த—மகத்தான சக்தியாகும்.

ஜாதியால், மதத்தால், குலத்தால், அரசியல் நிலையால், பொருளாதாரத்தால் பேதம் ஏற்படுகிறது. இவையனைத்தையும் அகற்றியாகவேண்டும் என்ற கொள்கை வெற்றிபெற தந்தை பெரியார் நடத்திய போராட்டங்கள்—மறியல்கள் கணக்கற்றவை. அதனால் அவர் பெற்ற தாங்கொணாத் துயரங்கள் நினைத்தால் மெய்சிலிர்க்கும் தன்மை வாய்ந்தவை. அத்தகைய போராட்டங்களால் தமிழர் அடைந்த உயர்நிலை எண்ணி எண்ணி மகிழத்தக்கவை. திராவிடப் பெருங்குடி மக்கட்கு ஓர் புத்தராக, சாக்கரட்டீஸாக நமது தந்தை வாழுகிறார். உலகத்தில் ஓங்கு புகழ் பெற்ற ஆபிரகாம்லிங்கனுக்கும்-கென்னடிக்கும்—மார்டின் லூதர்கிங்குக்கும் ஒரு வகையில் வழிகாட்டியாயும் நின்று தந்தை பெரியார் தொடர்ந்து சமூகப் பணியாற்று கிறார். சமுதாயப் பணியில் உள்ள அக்கரையின் காரணமாக 92 வயதிலும் ஓயாது உழைத்து, உருக்குலைந்த சமுதாயத்திற்கு உரிமைதரப் பாடுபடுகிறார்—உணர்வற்றோரை தட்டி எழுப்பி உணர்ச்சி பொங்கச் செய்கின்றார். தமிழ் நாட்டிற்கு ஓர் பகுத்தறிவு நிலவாக—விடிவெள்ளியாக தந்தை பெரியார் வாழ்கின்றார்.

யேல் பல்கலைக் கழகம் கண்ட பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களை உருவாக்கியவர் தந்தை பெரியார். அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தலைவனை உருவாக்கியதால்—அரசியலுக்குக் கொணர்ந்ததால், அண்ணா ஆட்சியில் அமர்ந்த பிறகு பெரியாரின் கொள்கைகளை சட்டம் மூலம் அதிகார பூர்வமாக நிறைவேற்றினார். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு விழாவிலே குறிப்பிட்டதுபோல தமிழக அரசு பெரியாருக்கு கொடுத்த "கனி—பரிசு" சுயமரியாதைத் திருமணச் சட்டமாகும். சுயமரியாதைச் சட்டம் மட்டுமின்றி—கலப்புத் திருமணத்திற்குத் தங்கப் பதக்கம், புகுமுக இலவசக் கல்வி போன்றவைகளும்;—எதையும் சாதிக்கவல்ல முதல்வர் கலைஞர் ஆட்சி அளித்த "பிற்பட்ட நல தனி அமைச்சர்—தனித் துறையும்" தாழ்த்தப்பட்டவர்க்கு தொழிற் கடனும் பெரியார் இயக்கத்திற்கு கிடைத்த பெரும் வெற்றியாகும். இன்னும் பல்வேறு சிறப்பு மிகு செயல்களை பெரியார் வழியில் நின்று செய்துகொண்டிருக்கிறது—செய்ய காத்திருக்கிறது. தமிழக அரசு பெரியாருடைய ஆட்சியே என்பதில் பகுத்தறிவாளர்க்கு வேறுபாடு இருக்க முடியாது.

அவர் உருவாக்கிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசனால் இந்நாட்டில் பகுத்தறிவாளராய் மாறிய கோடானு கோடி இளைஞர்கள் உண்டு. புரட்சிக் கவிஞர் பாடியது போல்,

"இருட்டறையில் உள்ளதடா உலகம்
சாதி இருக்கின்றதென்பானும் இருக்கின்றானே
மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின்றாரே
வாயடியும் கையடியும் மறைவதெந்நாள்?
சுருட்டுகின்றார் தம்கையில் கிடைத்தவற்றைச்
சொத்தெல்லாம் தமக்கென்று சொல்வார் தம்மை
வெருட்டுவது பகுத்தறிவே இல்லையாயின்
விடுதலையும்—கெடுதலையும் ஒன்றேயாகும்."

விடுதலையின் உரிமைகள் உண்மையில் வெற்றிபெற வேண்டுமெனில் தென்னாட்டின் சாக்ரட்டீஸ் பல்லாண்டு வாழ வேண்டும். அவர் வாழ்ந்தால் தமிழ்நாடு வாழுகிறது என்று பொருள். அவர் உயர்ந்தால் தமிழ்நாடு உயர்கிறது என்று பொருள். தந்தை பெரியார் இன்னும் பல்லாண்டு வாழ்ந்தால் எண்ணற்ற தமிழர் உயரிய பதவிகள் பெறுவர் என்பது திண்ணம். ஆதிக்க சக்திகள் அழிவுறும் என்பது தெளிவு—மூடப்பழக்க வழக்கங்கள் முடிவுறும் என்பது உறுதி. தந்தை பெரியார் பல்லாண்டு வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டுவது மட்டுமின்றி—அவர் தம் கொள்கைக்கு—உறுதுணையாக நிற்க, இந்த 92ஆம் பிறந்தநாள் விழாவில் நாம் அனைவரும் உறுதி எடுத்துக்கொள்வோமாக. வாழ்க தந்தை பெரியார்! வளர்க பகுத்தறிவு இயக்கம்!!

★

# அறிவுப் புரட்சி கண்டார்! அடக்கு முறைகளை வென்றார்!

**அமைச்சர் - திரு. என். வி. நடராசன்.**

இந்தியத் துணைக் கண்டத்தின் தற்போதைய அரசியல் சூழ்நிலையைப் பற்றி நேர்மை நிலையிலிருந்து ஆராய்ந்து பார்க்கும் எவரும் வருந்தாமல் இருக்க முடியாது. அந்நிய ஆதிக்கத்தின் பிடிப்பிலிருந்து விடுபடுவதற்கு முன்னர் இந்தியாவுக் கிருந்த மதிப்பும், இந்திய மக்களுக்கிருந்த மரியாதையும் சிறுகச் சிறுக கடந்த 20 ஆண்டுகளாக சீர்குலைந்து வந்திருக்கின்றன என்றே கூறலாம். நாடு விடுதலை பெற்றால், மக்கள் தங்கள் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் நிறைவு காண முடியும் என்று அன்றைய மிகப்பெரிய தலைவர்களாலும், குறிப்பாக காங்கிரஸ் இயக்கத்தாலும் அளிக்கப்பட்ட உறுதிமொழிகள் அனைத்தும் பொய்த்துப் போய்விட்டன. நாட்டின் விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவராய் விளங்கிவரும் மதிப்பிற்குரிய இராஜாஜி போன்றவர்களே, "நாடு விடுதலை பெற்ற பிறகு இந்திய அரசியலில் ஏற்பட்டுள்ள போக்கினை நோக்கும்போது அன்றைய பிரிட்டிஷ் ஆட்சி முறையே கூடுமான வரை சிறந்தது என்று துணிந்து கூறலாம்" என்று குறிப்பிட்டு வருகிறார்.

தங்களின் சொந்த நலத்திற்காக..... ஆசாபாசங்களுக்காக கட்சிவிட்டு கட்சி மாறுதல் என்பது இன்று சர்வசாதரணமாகி விட்டது. இவ்விதம் அரசியல் பச்சோந்திகளாக இருப்பவர்கள்தான் அரசியலில் தன்மானமோ ஒழுங்கு முறையோ அறவேயில்லாத மனித உருவில் நடமாடும் பேர்வழிகளாக இருக்கிறார்கள் என்றால், இவர்களுக்கு ஆதரவு தந்து தங்கள் தங்கள் கட்சியினை வலுப்பெற்றதாக ஆக்கிவிட்டோம் என்று பறை சாற்றிவரும் கட்சிகளின் கர்த்தாக்கள் என்பவர்களிடமும் அரசியல் துறையில் இருக்க வேண்டிய நேர்மை—நாணயம், சுயமரியாதை என்பது அறவே அற்றுப் போய்விட்டதோ என்று அய்யப்படவேண்டியிருக்கிறது.

சாதி-மத-வகுப்புவெறி-இனறைய அரசியல் ஆதிக்கத்திற்கு அஸ்திவாரமாகப் பயன்படுத்தப்பட்டுவருகிறது. அதுபோலவே சமத்துவம் - சகோதரத்துவம் - சமதர்மம் என்ற முழக்கங்களும் போலி அரசியல் வாதிகளின் ஆயுதங்களாகப் பயன் படுத்தப்பட்டு வருகின்றன. இவைகளையெல்லாம் பகுத்து அறிந்து பார்க்கும் பொதுவான நோக்கும் தன்மையானது ஏழை எளிய மக்களிடையே குறைந்து வருவதை மிக மிக வேதனையுடன் குறிப்பிட விரும்புகிறேன்,

தாம் ஈடுபாடு கொண்டுள்ள ஒரு இயக்கமோ—அல்லது கட்சியோ அதன் கொள்கைகளிலிருந்து நழுவும் போது அதை எடுத்துக்காட்டி திருத்த முனைந்து—திருந்தா விடில் அந்தக்கட்சியை விட்டு வெளியேறுவது என்பது நேர்மையான அரசியலாகும். ஆனால் தனது சொந்த ஆசாபாசத்திற்கு கட்சியில் இடமில்லை யென்றதும் உடனே வேறு கட்சிக்குத் தாவும் பேர் வழிகள் யாராயிருப்பினும் அவர்கள் இன்றைய அரசியல் சீர்கேட்டுக்குக் காரணமாயிருப்பவர்கள் என்பது மட்டுமல்லாமல் எதிர்கால சந்ததிக்கும் துரோகம் விளைவிப்பவர்களாவர்.

மதிப்பிற்குரிய தந்தை பெரியார் அவர்கள் காங்கிரஸ் இயக்கத்தின் முன்னோடிகளில் சிறந்தவராய் விளங்கி வந்தார்கள். ஆனால் அந்த இயக்கத்தில் உள்ளூரப்புரையோடுவதைப்போல, வகுப்பு வெறி தலைகாட்ட ஆரம்பித்ததும் அதை வெளிப்படையாகக் கண்டித்து திருத்த முற்பட்டு, பயனில்லாது போகவே காங்கிரசை விட்டு வெளியேறி பகுத்தறிவு இயக்கத்தை— திராவிட இயக்கத்தைத் தோற்றுவித்தார்கள். ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு மேலாக அந்த இயக்கம் பல்வேறு கட்டங்களில் விரிவடைந்து, பெயர் மாற்றமும் பெற்று அடிப்படை கொள்கையிலிருந்து சிறிதும் தளராமல், அக்கொள்கைளை வெற்றி பெறச் செய்யும் வழி வகைகளில் மட்டும் சில மாற்றங்களைக் கையாண்டு வெற்றி பல கண்டு வருகிறார்கள் அய்யா அவர்கள் என்று கூறினால் மிகையாகாது.

தந்தை பெரியார் அவர்கள், ஆட்சியை எந்தக்கட்சி நடத்துகிறதோ அந்தக் கட்சியை அவ்வப்போது ஆதரிப்பவர் என்று சிலர் கூறலாம். அவ்வாறு கூறுவோர், அய்யா அவர்களின் பொது வாழ்வின் தூய்மையான தன்மையை இன்னும் சரிவர கூர்ந்து கவனித்துப்பார்ப்பார்களானால் தங்களின் கருத்தை திட்டவட்டமாக மாற்றிக் கொள்ளக்கூடும்.

மதிப்பிற்குரிய பெரியார் அவர்களின் கொள்கை வெற்றி பெற்றால், எந்த மக்கள் சமுதாயம் தலை நிமிர்ந்து வாழப் போகிறதோ அதே மக்களால் கடுமையாக எதிர்க்கப்பட்டது ஒரு அணியில்! மற்றொரு அணியில் பழமையாளர்களின் கட்டுக்கோப்பான ஆதிக்கத்திற்கு அஞ்சி நடக்கவேண்டிய சூழ்நிலைக்கு உட்பட்டிருந்த அன்றைய மாநில அரசின் அடக்குமுறைப் பிரயோகம்!

இந்த இடுக்கித் தாக்குதலுக்கிடையே பெரியார் அவர்கள், தான் கண்ட பகுத்தறிவு இயக்கத்தின் கருத்துக்களை பரப்ப எண்ணிய உறுதியின் அடிப்படையிலே ஆட்சியிலிருப்பவர்களை தீவிரத் தன்மை என்ற பேரால் கண்டபடி தாக்குவதற்குப் பதிலாக அறிவுடைமையால் அரசுகளின் அடக்குமுறைகளை கடந்து அரசியல் ஆர்பாட்டங்கள் போன்ற நடவடிக்கைகளிறங்காமல், கூடுமானவரை அமைதியாக- அடையாளம் என்ற தன்மை கொண்ட எதிர்ப்புகளை மட்டுமே தெரிவித்து இயக்கத்தை வளர்த்து வந்திருக்கிறார்கள் என்பதை நாம் உணர முடியும். இல்லையெனில் தன்மான இயக்கம் என்றோ அழிந்து பட்டிருக்கும். இன்று தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப் பட்ட மக்கள் பெற்றுள்ள உயர்வு கனவு போல கலைந்திருக்கும்.

பெரியார் அவர்கள் தமது சொந்த லாபத்திற்காக, வாழ்வுக்காக எந்த அரசையும் ஆதரித்ததில்லை. இந்த உண்மையை மற்றவர்களை விட மதிப்பிற்குரிய இராஜாஜி அவர்கள் நன்கு உணருவார்கள். ஆதலாலே தான் பெரியாருக்கும் இராஜாஜிக்கும் கொள்கை வேறுபாடுகள் என்பது வடதுருவம் தென் துருவம் போன்றதாக இருப்பினும், அவர்களிருவரும் ஒருவரையொருவர் தனிப்பட்ட முறையில் மதித்துவரும் பண்பு இன்றளவும் தரம் குறையாமல் இருந்து வருகிறது.

இந்தியத்துணைக் கண்டத்தில் பல்வேறு மாநிலங்களில் குழப்பநிலையும் ஆட்சி முறையில் உறுதியற்ற போக்கும் காணப்படும் இன்றைய நிலையில் தமிழ் நாட்டில் மட்டும் நிலையான - அமைதியான - மக்கள் ஆட்சி நடைபெறுவதற்குக் காரணம் என்ன என்பதை அரசியலில் ஆழ்ந்த அக்கரை கொண்டவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பெருவாரியான எண்ணிக்கை பலம் சட்டமன்றத்திலிருப்பதால் தான் நிலையான ஆட்சி நடைபெறுகிறது என்று கூறிடலாம். ஆனால் எண்ணிக்கை பலமும் ஒரு காரணம் என்று கூறலாமே தவிர, அதுமட்டுமே தான் தமிழகத்தின் சிறந்த ஆட்சிக்கு காரணம் என்று கூறிட முடியாது.

மற்றொரு காரணம் என்னவென்று ஆராய்வோமானால் கடந்த 40 ஆண்டுகளாக தந்தை பெரியார் அவர்களாலும் திராவிட இயக்கத்தாலும், பகுத்தறிவுப் பணியாலும் தமிழ நாட்டில் மலிந்திருந்த பழமை வெறியைக் களைந்து அறிவுடமை வளர்ந்து வருவதேயாகும் என்பதை எவரும் மறுக்கத் துணியமாட்டார்கள் என்றே நம்புகிறேன்.

தமிழ் நாட்டிற்குரிய தமிழ் மக்களும் பிற பகுதிகளிலிருந்து தமிழ் நாட்டுக்குக் குடி

யேறிய மக்களுங்கூட அவரவர்களின் விகிதாசாரத்திற்குட்பட்ட முறையில் உரிமைகளைப் பெற்று வாழ்வதற்கான மகத்தான கொள்கையினை வித்திட்டு வளர்த்தவர் மதிப்பிற்குரிய பெரியாரவர்களாவார். அரசியல் பணி என்பது சாதாரணமல்ல எவ்வளவோ அடக்குமுறை வெறியாட்டங்களையெல்லாம் தாங்கிக்கொண்டு அல்லது பலியாகிப் பெறவேண்டிய உரிமைதான் என்பதை நான் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால் அரசியல் பணியில் முழுக்க முழுக்க ஈடுபாடுகொண்டவர்களை மக்கள் சமுதாயம் போற்றும், புகழும், பாராட்டுகளை வழங்கும். ஆனால் சமுதாயச்சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர்கள்மீது அரசாங்கம் தொடுக்கும் அடக்குமுறை மட்டுமல்ல, பழமையில் ஊறிப் போன மக்கள் பிரயோகிககும் கொடுமைகள் ஏராளம்! ஏராளம்!!

மதிப்பிற்குரிய காந்தியார் அரசியல் விடுதலைக்காக போராடியபோது அவரை சமுதாயத்தின் எல்லாத் தரப்பினரும் மகாத்மா என்று போற்றினர். அரசாங்கத்தின் அடக்குமுறை மட்டுமே அவரையும் மற்ற தலைவர்கள்-தொண்டர்களை எதிர் நோக்கி மிரட்டிற்று. ஆனால் அதே காந்தி அடிகள் சமுதாயச் சீர்திருத்தப் பணியில் தீவிரமாகக்கூட அல்ல ஓரளவு ஈடுபாடு கொண்டவுடனே, பழமைவெறி அவரது உயிரையே குடித்துவிட்டது. இந்தியாவில் மட்டுமல்ல உலகின் பல்வேறு நாடுகளில் சீர்திருத்த செம்மல்களுக்கு இந்த 'பரிசு' தான் கிடைத்திருக்கிறது.

அவ்வித சீர்திருத்தப் பணியினை—அறிவுத்தொண்டினை பழமையில் இரண்டறக் கலந்திருந்த தமிழ் நாட்டில்—யாதொருவன்சொல்லோ—வன்செயலோ உள்ளத்தில்கூட எண்ணிப் பார்க்காமல் அறிவுடமை அடிப்படையாகக்கொண்ட மறுமலர்ச்சியை உண்டாக்கியிருக்கிறதென்றால் இதற்காக தமிழகத்திற்குரிய மக்கள் மட்டுமல்ல, குறிப்பாக தமிழகத்திற்கு குடியேறிய மக்களும், ஏன் பழமைவாதிகள் எனப்படுவோரும் தந்தை பெரியார் அவர்கள் இன்னும் நீண்ட காலம் வாழவேண்டும் என்று வாழ்த்துவது எவ்வளவு நன்றியும் கடமையும் கொண்ட செயலாகும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

நமது வழிகாட்டி பேரறிஞர் அண்ணா அவர்கள் நம் தமிழ் நாட்டில் மக்கள் ஆட்சியை அமைத்ததற்கும் தொடர்ந்து நமது மாண்புமிகு கலைஞர் அவர்கள் அந்த ஆட்சியினை இனிதே நடத்தி வருவது மட்டுமல்லாமல், பிற நாட்டினரும் பாராட்டத்தக்க அளவுக்கு ஆட்சிமுறை சிறந்து விளங்குவதற்கும் தந்தை பெரியார் அவர்கள் வகுத்துத் தந்த அறிவுப்பாதையும் முதற் காரணம் என்பதைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

பெரியார் அவர்கள் அரசியல் துறையில் தீவிரமாக இல்லை என்று சிலர் குறை கூறலாம். ஆனால் நிலையான அரசியலுக்கும் ஆட்சி முறைக்கும் அஸ்திவாரமாக விளங்கும் சமுதாய மறுமலர்ச்சித் துறையில் அவர்கள் உடல் தளர்ந்த இன்றைய நிலையிலும் உள்ள உறுதி குலையாது ஆற்றும் அரும் பணிக்கு, பழமைவாதிகள் உட்பட அனைவரும் ஏன்—மனித சமுதாயமே நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறது. **அத்தகு ஆக்கப்பணியில் ஈடுபாடு கொண்டுள்ள தந்தை பெரியார் அவர்களின் தலைமையில் பணியாற்றும் வாய்ப்பினை எங்கள் வாழ்வில் கிடைப்பதற்கரிய பெருமையாகவும் அழியாத செல்வமாகவும் இதயபூர்வமாக எண்ணியெண்ணி பெருமைப்படுகிறோம் என்பதை வெளிப்படையாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.** அய்யா அவர்களின் தலைமையில் பணியாற்றிய என் போன்றவர்கள் பெற்ற பாடமும், பொது அனுபவமும், அவரால் பெறப்பட்ட சிக்கனம்—எளிய வாழ்க்கை, கொள்கை உறுதி ஆகியவைகள் எங்களுக்கு சிறந்த வழிகாட்டியாக அமையப் பெற்றிருக்கின்றன.

தந்தை பெரியார் அவர்கள் நீண்ட காலம் உடல் நலத்துடன் வாழ்ந்து அண்ணா கண்ட கழகத்திற்கும்—கழக அரசுக்கும் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

வாழ்க தந்தை பெரியார்!

வெல்க அவர்தம் சீரிய கொள்கை.

# தமிழர்களின் தலையாய கடமை

## தந்தை பெரியார்

இன்றைய நிலையில் தமிழர்கள் (திராவிடர்கள்) ஒரு அளவு முன்னேற்றப்பாதையில் செல்லுகிறார்கள். அவர்கள் அடைய உரிமையுள்ள இடத்திற்கு சென்றுவிட்டதாகக்கூற முடியாது. சமுதாயத்துறையில் ஒரு அளவுக்கு பார்ப்பனரை பகிஷ்கரித்திருக்கிறார்கள். என்றாலும் அந்த அளவு பகுதிக்கும் குறைவான அளவு என்றுதான் சொல்ல வேண்டும். கல்வித்துறையில் பார்ப்பனர்களுக்கு ஏகபோகம் இல்லையென்றுதான் சொல்லலாமே தவிர அவர்கள் தங்கள் விகிதாசார அளவுக்கு 100க்கு 500 பங்கு முதல் 1000 பங்கு வரை அதிகமாக அனுபவித்து வருகிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அந்த விகிதம் ஒழிந்து அவர்கள் தங்களுக்குள்ள உரிமையுடன் இருக்க வேண்டுமானால் டில்லி ஆதிக்கம் ஒழிந்தேயாக வேண்டும். டில்லி ஆதிக்கம் ஒழியும் வரை திராவிடர்கள் 4-ம் சாதி—இழிசாதி என்கிற இழிவும் நீங்காது என்பது உறுதி. அரசியல் தலைமைத்துறை, அமைச்சர் துறை ஆகியவற்றில் அவர்களுக்கு இடமில்லாமல் ஆகிவிட்டது என்றாலும் அவர்கள் அவற்றில் இல்லாமலே அவர்களுக்கு வேண்டிய காரியங்களும், நாம் வளர்ச்சி அடைய முடியாமல் இருக்கும்படியான காரியங்களும் தாராளமாய் அவர்களால் செய்ய முடிந்து தான் வருகிறது.

**எதிரிகளின் சஞ்சீவி மருந்து**

இவற்றிற்கெல்லாம் அவர்களுக்கு ஆதாரமாக "சஞ்சீவி" மருந்தாக இருந்து வரும் சாதனம் பத்திரிகை உலகம் 100க்கு 100 அவர்களுடையதாகவும்,

அவர்களுடைய அடிமைகளுடையதாகவும் இருந்து வருவதேதான். இந்தத் துறையில் தமிழர் சிறிதுகூட சிந்தனை செய்ததாகவே காணமுடியவில்லை. அந்த ஒரு காரியத்தில் நாம் முயற்சி எடுத்து நமது மானாபிமானத்தைக் காட்டாத வரையில் வேறு எந்தக் காரியத்தில் நாம் வெற்றி பெற்றபோதிலும் அதன் பயனை நாம் அனுபவிக்கவே முடியாது என்பது மாத்திரமல்லாமல் நம்முடைய நாட்டிலே, அதிலும் மொத்த ஜனத் தொகையில் 100க்கு 90க்கு மேற்பட்டவர்களாக இருக்கும் நமது நாட்டிலே 100க்கு மூன்றுபேராய் இருப்பவரும், நமது பிறவி எதிரியும், நமது கேட்டிற்கும், அழிவிற்கும், இழிவிற்குமாகவே உழைத்து வரும் வெகு, வெகு சிறு சாதியாரான இனத்தாரிடம் நமது நாட்டுப் பத்திரிகைகளும், பத்திரிகைகளின் ஆதிக்கமும் இருந்து வருவது என்றால்இதுநமது சமுதாயத்திற்கு எவ்வளவு இழிவான நிலை என்பதும் யோசிக்கத் தக்கதாகும்— என்பதோடு இது(நம்) போன்ற இழிவான மானங்கெட்ட சமுதாயம் போன்ற வேறு ஒரு சமுதாயம் நானறிந்த வரை உலகத்தில் வேறு எங்குமே இருப்பதாகத் தெரியவே இல்லை!



**நம் மக்கள் ஈனர்களாவதற்குக் காரணம்**

அதுமாத்திரமா? நமது பத்திரிகை என்பவைகளை நமது மக்கள் ஆயிரக்கணக்கில் வாங்கி படிக்கிறார்கள் என்றால், நமது எதிரிகளான பார்ப்பனருடையவும், அவர்கள் அடிமைகளுடையவும், அவர்கள் ஆதரவால்தான், அவர்களுக்கு நல்ல பிள்ளைகளாய் இருந்தால்தான் வாழமுடியும் என்று கருதுபவர்களுமானவர்களுடையவுமான பத்திரிகைகளை லட்சக் (1,00,000) கணக்கில் நமது மக்கள் வாங்கிப் படித்து ஈன மக்களாக ஆகி வருகிறார்கள்.

சாதாரணமாக சொல்லுவோமானால் தமிழர் நல்வாழ்வுக்காகவே, மான வாழ்வுக்காகவே, வளர்ச்சிக்காகவேயென்று 45 ஆண்டுகளுக்கு முன்பு நம் நாட்டில் சுயமரியாதை

(சமூக முன்னேற்ற) இயக்கம் என்பது ஆரம்பிக்கப்பட்டு, மூலை முடுக்குகளெல்லாம் பிரச்சாரம் செய்யப்பட்டு வந்தும், நம் எதிரிகளை "பிராமணாள்" "சாமி" என்றழைப்பது 1,000க்கு பத்து வீதமான மக்களால்கூட நிறுத்தப்படவில்லை என்பதோடு, பத்திரிகை படிப்பவர்களில் 1000க்கு ஒருவரால்கூட நம் எதிரிகளது பத்திரிகைளை வாங்கி படிப்பது நிறுத்தப்படவில்லையென்றால் நம் மக்கள் தன்மைக்கு எந்த குணத்தை உதாரணமாகக் கூறுவது என்பது நமக்குப் புரியவில்லை.

## எதிரிகளுக்குப் பொருள் லாபமும்கூட

அதுமாத்திரமா? நமது கேட்டிற்கும், இழிவிற்கும், வளர்ச்சித் தடைக்கும் என்பதற்காகவே நடத்தப்படும் நம் எதிரிகளுடைய பத்திரிகைகளால் எதிரிகள் ஆண்டு ஒன்றுக்கு ஒன்று, இரண்டு, மூன்று ஏன் அய்ந்து லட்ச ரூபாய்கள் வரை இலாப வருவாய் சம்பாதித்துக் கொள்கிறார்கள்.

ஆகவே நமது இழிநிலையானது நமது எதிரிகள் மேல்சாதியார், பிராமணாள், சாமி என்று நம்மாலேயே அழைப்பவர்களாகவும், நமது செல்வத்தையே ஆண்டு ஒன்றுக்கு, ஒன்று முதல் அய்ந்து லட்ச ரூபாய் வரை இலாப வருவாய் உள்ளவர்களாக இருப்பதற்கு நாம் இடம் கொடுத்து வருகிறோம்; நாம் ஆளாக இருந்து வருகிறோம் என்றால் மறுபடியும் நமது நிலை எவ்வளவு இழிவானது என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டுகிறேன்.

## இவ்வாண்டின் வேலைத் திட்டம்

எனவே நான் எனது 92வது ஆண்டின் வேலைத்திட்டமாக இந்த பார்ப்பன பத்திரிகைகளை நம் மக்கள் பகிஷ்கரிக்கும் படி செய்யும்படியான ஒருஇயக்கத்தைத்துவக்கி நடத்தலாமென்று ஆசைப்படுகிறேன். ஆத்திரப்படுகிறேன்.

இதற்காக மாநாடுகள், பொதுக்கூட்டங்கள் நடத்தி பிரச்சாரம் செய்யச் செய்வது, கூடுமானவரை ஒவ்வொரு கிராமங்களிலும் "நம் எதிரிகளின் பத்திரிகை பகிஷ்கார சங்கம்" என்பதாக ஸ்தாபனம் ஏற்பாடு செய்வதும், இந்த காரியத்திற்காக ஒரு லட்ச ரூபாய் நிதி திரட்டி பல தொண்டர்களை முழு நேர வேலைக்காரர்களாக ஏற்படுத்தி நாடெல்லாம் தொண்டாற்றச்செய்யவும் செய்ய வேண்டும் என்று திட்டமிட முடிவு செய்திருக்கிறேன்.

## ஆதரவு பெருகவேண்டும்

நன்கொடையாளர்கள் பெயர்கள் தெரிவிக்கப்பட மாட்டாது. கண்டிப்பாய் ஒவ்வொருவரும் இதற்கு நன்கொடை அளித்தாகவேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

அதிகாரிகளும் அமைச்சர்களும் உதவ வேண்டும். அவர்களுக்கு இதனால் ஏராளமான பலனுண்டு. மற்ற தலைவர்களும், வியாபாரிகளும் அவசியம் உதவ வேண்டும் என்றும் வேண்டிக்கொள்கிறேன். பொது மக்களும் இதற்கு நல்ல வண்ணம் ஆதரவளிக்க வேண்டும்.

இந்தப் பணியானது கடவுளை, மதத்தை ஒழிக்கும் பணியை விட, கோவில்களை இடிக்கும் பணியைவிட முக்கியமானதும், பயன் அளிக்கத்தக்கதுமான பணி என்பது எனது உறுதியான எண்ணமாகும்.

## என் வாழ்வின் பயனுள்ள காரியம்

எனவே மள, மளவென்று நன்கொடை வரவேண்டுமென்று—என்றும் உறுதியும், தகுதியும் உள்ளவர்கள் முன்வர வேண்டும் என்று வேண்டிக்கொள்வதோடு, நன்கொடை அளிப்பவர்களை நண்பர் வீரமணி அவர்களிடம் கொடுத்தருள வேண்டும் என்றும் வேண்டிக்கொள்கிறேன். விஷயம் மிக முக்கியமானதும், செய்து தரப்படவேண்டியதுமான இன்றியமையாத பணி என்றும் விண்ணப்பித்துக்கொள்கிறேன்.

இந்த காரியத்தை நான் செய்வதால் எனது வாழ்நாளில் ஒரு பயனுள்ள காரியத்தைச் செய்ததாக நான் கருதிக்கொண்டு முடிவடைவேன்.

★



# எனது நிலை

**தந்தை பெரியார்**

சென்ற ஆண்டுக்கு முன் வரையில் எனது நிலை எனக்கே பெரும் வெறுப்புக் கொடுப்பதாகவே இருந்து வந்தது. ''உலகத்தை வெறுத்து துறவியாய் விடுவேனோ'' என்றுகூட, எனது வாழ்வு, நாட்டுக்கு, மனித சமுதாயத்திற்குப் பயன்படவில்லையே என்ற கவலையுடன்-மக்களிடம் வெறுப்பு இருப்பதுபோலவே எனக்குக் காணப்பட்டது. எனது வாழ்க்கைச் சலிப்பைப் பற்றி என்னிடம் அன்பு கொண்ட உயர்திரு. காமராசர் அவர்களும், அறிஞர் அண்ணா அவர்களும், குன்றக்குடி அடிகளாரும் நான் சலிப்படைய வேண்டியதில்லை என்றும், என் உழைப்பு வீணாகவில்லை என்றும், நல்ல அளவுக்கு சமுதாயம் திருந்தி வருகிறதென்றும் கூறி எனக்கு உற்சாகமளித்தார்கள். என்றாலும் நான் ஒரு நல்ல அளவுக்கு சலிப்படைந்து தான் இருந்தேன்.

### வாழ ஆசை

அறிஞர் அண்ணா மறைந்தவுடன் தி. மு. க. ஆட்சி என்ன ஆகுமோ என்று பயந்து, கோபுரம் தாங்கும் பொம்மைபோல் எல்லாப் பொறுப்பும் என்மேலேயே இருப்பது போல் நானே நினைத்துக் கொண்டு எப்படியோ என்று நாம் போய்விடக் கூடாதே; இந்த ஆட்சி நிலைக்க வேண்டுமே என்று கவலைப்பட்டுக் கொண்டு துறவற ஆசையை மறந்து பெரிய குடும்பஸ்தனைப்போல் கவலை கொண்டு வாழ ஆசைப்பட்டுவிட்டேன்; ஆசைப்பட்டாலும் முடிவு சமீபித்துக்கொண்டு வருகிறது. அதற்குள் ஏதாவது செய்தாக வேண்டுமே என்ற பேராசையோடு சற்று தீவிரமான சொற்களை, கருத்துக்களை துணிவாக பேசவும் எழுதவும் துவக்கினேன்.

அப்போது தான் பொது மக்கள் நிலையும், நமது கழகத் தோழர்கள் நிலையும் எனக்கு நல்ல வண்ணம் துலங்கியது. அதாவது தீவிரமான கருத்து வெளியீட்டிற்கு நல்ல வரவேற்பு இருந்ததோடு மாறுபாடு கருத்துக்கொண்டவர்களாக இருந்த பொது மக்கள் இடையிலும் எளிதில் மாற்றம் ஏற்பட்டு வருவதையும் அறிய முடிந்தது.

### வெண்ணைத்திரளும் பருவம்

அதுமாத்திரமல்லாமல் பல காரணங்களால் விரிந்துகிடந்த தமிழ் மக்கள், தங்களது பிரிவை உணர்ந்து ஒன்று சேர வேண்டுமே என்ற உணர்ச்சி கொண்டு, ஊடலில் வேறுபட்டவர்கள் உணர்ச்சி வசத்தால் ''யார் முதலில் நெருங்குவது'' என்ற ''மானத்தன்மை'' பாராமல் ஆளுக்கு ஆள் முந்தி ஒருவரை ஒருவர் அணைத்துக் கொள்ள முயற்சிப்பவர் போல் நம் மக்கள் ஒன்று சேர ஆர்வம் கொள்வது எனக்கு நன்றாய்த் தெரிந்தது.

இதிலிருந்து நம் மக்களில் ஒன்று சேர ஒற்றுமைப்பட ஆசைப்பட்ட மக்கள் அத்தனை பேருக்கும் என்றில்லாவிட்டாலும் பெரும்பாலோருக்கு ''பகுத்தறிவு உணர்ச்சியும் தாராள நோக்கமும் இல்லாததால் தான் நாம் இன உணர்ச்சி அற்று பிரிந்து இருக்க நேர்ந்தது'' என்று கருதவும் முடிந்தது. இந்த முடிவை நான் கலந்துகொண்ட அதிகாரிகள் கூட்டம், படித்தவர்கள் கூட்டம்,

பெரிய செல்வவான்கள் கூட்டம், பலப்பல பாமர மக்கள் கூட்டம் முதலியவைகளில் பல பெண்களிடத்தில் உள்பட அறிந்தேன்.

இந்த நிலை எனக்குப் பெரிய தெம்பை யும் ஊக்கத்தையும் கொடுத்ததோடு, இன்னும் கொஞ்ச காலத்திற்கு, நாம் வாழ்ந்திருக்க வேண்டும். இது, ''வெண்ணைதிரளுகின்ற'' பருவமாயிருக்கிறது என்ற பேராசை ஏற்பட ஏதுவாயிருக்கிறது.

அய்க்கோர்ட் நீதிபதிகள் பலர் உட்பட பெரிய அய்.ஏ.எஸ். அதிகாரிகள் உட்பட, மற்ற பெரிய அதிகாரிகள் என்பவர்களும், என். ஜி. ஓக்கள் என்பவர்களும் 100க்கு 75 பேர்களுக்கு மேல் பகுத்தறிவு வாதிகள் என்று சொல்லத் தக்க நிலைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள்.

### உற்சாகத்துக்குக் காரணம்

ஒவ்வொரு பெரிய நகரங்களிலும் பொது மக்களும், மாணவர்களும், அதிகாரிகளும் பெரிய மனிதர்கள் என்பவர்களும் முன்வந்து ''பகுத்தறிவு சங்கம்'' என்றும் ''சிந்தனையாளர் கழகம்'' என்றும் மற்றும் பல பெயர்களால் அரசியல் சம்பந்த மற்ற சங்கங்களை ஏற்படுத்திக்கொண்டு மாதந்தோறும் கூட்டுவதும், சிலர் வாரந்தோறும் சொற்பயிற்சி நடத்துவதுமாய் இருப்பதோடு இயக்கத்தோழர்கள் ஒவ்வொருவரும் குடும்பத்தோடுஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வந்து ''சுயமரியாதைக் குடும்ப விருந்து'' என்னும் பேரால் விருந்து நடத்தி, விருந்துண்டு பகுத்தறிவு சொற்பொழிவு நடத்தி மகிழ்வதுமாக இருக்கிறார்கள். இவை எல்லாம் எனது சலிப்பு, வெறுப்பு உணர்ச்சியை பெரும் அளவுக்கு மாற்றி விட்டதோடு மேலும் மேலும் உழைக்க வேண்டுமென்கிற உற்சாகத்தை உண்டாக்கி விட்டது என்று திரும்பத் திரும்பக் கூறுகிறேன்.

மேலும் இந்த நிலையில் நான் நமது தமிழர் சமுதாய மக்களிடம் காணுவது என்னவென்றால் அரசியலில் போதியஅளவு இல்லாவிட்டாலும் நல்ல அளவுக்கு நம் மக்கள் அதிகாரிகளாகவும் நல்ல பதவிகளில் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். நம் பிள்ளைகள் தாராளமான அளவுக்கு படிக்கிறார்கள். படித்தவர்களாகவும் இருக்கிறார்கள். பெண்களும் ஒரு அளவுக்கு மனித உணர்ச்சி பெற்றவர்களாக இருக்கிறார்கள். அரசாங்கமும் துணிந்து, பல முற்போக்கான காரியங்களைச் செய்பவர்களாக இருக்கிறார்கள்.

### சுயநலத்தை விடுக

எனவே, மேலும் நமக்கு வேண்டியதெல்லாம் மேலும் பகுத்தறிவும்—ஒற்றுமையும் இன உணர்ச்சியும், என்பதோடு அதிகாரிகளும் ஆட்சி சிப்பந்திகளும் பொது மக்களும் தங்கள் சுயநலங்களில் சிறிது விட்டுக் கொடுத்தாவது ஆட்சிக்கு நிர்வாகிகளாக இருந்து தமிழர்க்கான பொதுவான நல்வாழ்வுக்கு ஆக ஆட்சியை ஆதரிக்கவேண்டியது என்பது எனது தாழ்மையான வேண்டுகோளாகும்.

நாடு முற்றும் ஒவ்வொரு நகரத்திலும் கிராமத்திலும் தமிழர்களில் ஒற்றுமை ஏற்படுத்துவது என்பதாக பகுத்தறிவு சங்கம் ஏற்படுத்தி மூடக்கொள்கைகளை ஒழிக்கவும் இனஉணர்ச்சி ஏற்படவும் பாடுபட வேண்டும்.

இயக்கத் தோழர்கள் இவை ஏற்பட முயற்சி செய்ய வேண்டும்.

---


**சிந்தனைச் சிற்பி**
**தந்தை பெரியார் வாழ்க பல்லாண்டு!**
**சமதர்மம் வளர்க!**



**கு. ச. த. சங்கரசதாசிவம்,**
லெனின் ஸ்டோர்ஸ் &
செய்தித்தாள் விற்பனையாளர்,
**குளத்தூர் அஞ்சல்,**
(வழி) விளாத்திகுளம்,
திருநெல்வேலி மாவட்டம்.

# ஏன் எதற்காக எங்கே?

திரு. சி.பி.சிற்றரசு எம்.எல்.சி
— மேலவைத் தலைவர் —

மூடப் பழக்கங்களை, கடவுள் பேரால் நடக்கும் அநீதிகளை, அதற்கோர் மனு நீதி என்ற அநீதி துணைபோவதை, உயர்ந்தவன்—தாழ்ந்தவன் என்ற இறுமாப்பான கொள்கையை, மக்களை மடையர்களாக்க மன்னனும், மன்னனை எதிர்த்தால் நரக லோகந்தான் கிடைக்கும் என்று பயமுறுத்திய மதத்தலைவர்களையும் ஒருசேர ஒழித்துக்கட்ட சவனரோலாவும், இங்கர்சாலும் சார்லஸ் பிராட்லாவும், ஜான் ஏஞ்சல்சும் மேலை நாட்டுக்குத் தேவைப் பட்டதைப் போல் இங்கே ஒரு பெரியார் தேவைப்பட்டார். நினைப்பதை வெளியில் சொல்லி, உடனே செயலில் இறங்கும் துணிவுடையவர் பெரியார்; எனினும் அவர் செயலில் இறங்குவதற்கு முக்கியமான காரணமாக இருந்தது மெத்த வைணவபக்தி கொண்ட அவரது குடும்பந்தான் என்றால் மிகையாகாது. கோயில் திருப்பணிக்சென பெரியார் குடும்பத்தில் பணம் வாங்காத குருக்கள் குடும்பமே கிடையாது. தாய் தந்தையர்கள் அவ்வளவு பக்தி மிகுந்தவராயிருந்தனர்.

அந்த குடும்பத்திலே தான் இரண்டாவது மகனாகத் தோன்றினார் பெரியார். அவர் வீட்டு பூசை அறையில் எழுந்த மணியோசையும் பெரியாரின் சிந்தனா சக்தியைக்குலைத்து விடவில்லை. அந்த குருமார்கள் போட்ட ஓங்கார கூச்சலும் பெரியாரின் விடாப் பிடியை அசைத்து விடவில்லை. 'இவன் அடுத்த பொங்கலுக்குள் இருக்கமாட்டான்,என்று அவர்களிட்ட சாபம் பெரியாரை தொண்ணூற்றிரண்டு ஆண்டுகள் வாழவைத்திருக்கிறது. இன்னும் பல லாண்டுகள் வாழவைக்கும் என்ற நம்பிக்கை நமக்குண்டு. தனது எழுபத்தி இரண்டாவது ஆண்டிலேயே ஏதென்ஸ் நகர நீதி மன்றத்தில் சாக்ரடீஸ் பேசியதைக் கவனிப்போம்.

"ஏதென்ஸ் நகர நீதிமான்களே! எழுபத்தியிரண்டு ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறேன். மனிதனுக்கு விதிக்கப்பட்ட ஆயுள் நூறாண்டுகள் என்று வைத்துக் கொண்டு பார்த்தால் நான் வாழ்ந்த இந்த எழுபத்திரண்டாண்டுகள் மிகப்பெரிய காலமாகும், ஆனால் நித்திய தத்துவத்தோடும் முடிவில்லாத காலத்தோடும் ஒப்பிட்டுப் பார்த்தால் நான் வாழ்ந்த நாட்கள் அணுவுக்கு அணுவாகும். ஆகவே எழுபத்தி இரண்டாண்டுகள் வாழ்ந்து,மக்கள் நல்வழிப்படவேண்டுமென்று உழைத்த என்னை, நகரப் பொது மாளிகையில் வைத்து உபசரிக்க வேண்டிய நீங்கள், என்னை இன்று குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியிருக்கிறீர்கள்."

இப்படிப்பேசினான். ஆனால் பெரியார் அந்த சாக்ரடீசைவிட கடுமையாக உழைத்து மக்கள் எளிதில் செரிக்க முடியாத கொள்கைகளைச் சொல்லி நாமெல்லாம் பெருமைப்படக் கூடிய அளவுக்கு வாழ்ந்துகொண்டிருக்கின்றார்.

நீதிமன்றத்திலே வீற்றிருந்து சட்டப் பரிபாலனம் செய்யும் தமிழராய்ப் பிறந்த நீதிபதிகள், அரசாங்க அலுவலகத்தில் வேலை பார்க்கும் தமிழர்கள், கிடைக்க வேண்டிய உரிமை, விகிதாசாரப்படி கிடைக்கப் பெறாமல் தவித்த பல்லாயிரம் அலுவலர்களுக்கு அது கிடைக்கத் தன் முழு ஆற்றலைக்கொண்டு போராடிப் பெற்றுத் தந்த பெரியாரை ஒவ்வொரு குடும்பமும் விளக்கேற்றி அவரது வாழ் நாள் விழாக் கொண்டாடிய வண்ணம் உள்ளனர்.

கடவுள் உண்டு என்று சொல்வதற்கு பணிவு இருந்தால் போதும், இல்லை என் பதற்கு துணிவு வேண்டும். உண்டு என் பதற்கு ஆதாரங்கள் வேதங்கள்; இல்லை என்பதற்கு ஆதாரம் இந்த உலகம்.

“கடவுள் எல்லாரையும் சமமாகப் படைத்தார்; அது உண்மையாயின் மனித ருள் ஏற்றத் தாழ்வுகள் ஏன்? கடவுள் எல்லாரையும் வாழப் படைத்தார். அப்படி யென்றால் கோடிக் கணக்கான பிச்சைக் காரர்கள் ஏன்? கடவுள் எல்லாரையும் சுகமாக இருக்கப் படைத்தார். அப்படியா னால் நோயாளிகளுக்கு மருத்துவமனைகள் ஏன்? உலகைப் படைத்தார், அதில் உணவைப் படைத்தார்; அப்படியானால் அந்த உணவு பலருக்குக் கிட்டாமல்போவ தற்குக் காரணம் என்ன? ஆண்டவனால் படைக்கப்பட்ட மனிதர்கள் குற்றங்களே செய்யமாட்டார்கள். அப்படியானால் நீதி மன்றங்கள், காவல் நிலையங்கள், சிறைச் சாலைகள் ஏன்? உலகத்தில் நான்கைந்து பேர்கள்தான் கற்புக்கரசிகள்; அப்படியா னால் மற்றத் தாய்மார்களின் நிலை என்ன?” என்று கேட்டார் பெரியார். ஏன் என்று கேட்டதாலே பெரியார். விடைக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார் பெரியார். கிடைக்கும் என்ற நம்பிக் கையே தென்படவில்லை என்கிறார் பெரியார், “கிடைக்காது......மாயையால் கட்டப்பட்ட கனவுக்கோட்டைகள்; தூக்கம் கலைந்ததும் மறையும்” என்று இன்னமும் நாட்டின் எண் திசையிலும் எடுத்தோதிக் கொண்டிருக்கும் பெரியார் போர் ஓயாது; ஒழியாது. ஓர் உண்மை கிடைக்கும் என்ற நம்பிக்கை தோன்றாது என்று உறுதியாக நம்பிய பெரியார் தமிழ் சமூகத்திற்கு செய்த தொண்டினை தமிழகம் மறந்தால் நன்றி கெட்டதாகும். அதைத் தமிழகம் என்றுமே செய்யாது. பெரியாருக்கு நன்றி சொல்லும் நாமும் அதோடு சேர்ந்துகொள்வோம்.

★


போன்: 342

**தந்தை பெரியார் தம் 92-வது பிறந்த நாளில் எங்களது நல்வாழ்த்துக்கள்**

★

# அபிராமி & கோ.

[டிஸ்டிரிபியூட்டர்ஸ், இம்பீரியல் டுபாகோ கம்பெனி ஆப் இந்தியா]

வடக்குரத வீதி, திருச்செங்கோடு.

# யாருக்கு விரோதி பெரியார்?

அறநிலைய பாதுகாப்பமைச்சர் திரு கே. வி. சுப்பையா.

பகுத்தறிவு வேந்தர், தந்தை பெரியார் அவர்களின் 92வது பிறந்தநாள் விழாவைக் கொண்டாடும் இத்தருணத்தில் நம் இதயங்கனிந்த வாழ்த்தை—வணக்கத்தை செலுத்துவோமாக.

எதிர்காலம் அறிவியலுக்கே, என்று உணர்த்தியவர் தந்தை பெரியாரே. அவர் தம் கருத்துக்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தான் அறிவியல் பூக்குடம், நாளும் முன்னேறும். மூடப்பழககம், குருட்டு நம்பிக்கை இவைகளால் நாடு கீழ் நோக்கிப் போய்க்கொண்டிருக்கும் பொழுது மக்களின் அறிவுக் கண்களைத் திறந்தவர் தந்தை பெரியார். அவர், தன் கருத்துக்களை செயலாக்க தமிழக அரசு அறிவு வழி நடக்க முன் வந்துள்ளது.

1938லேயே கருத்தடை அவசியத்தைப் பற்றி பெரியார் அவர்கள் பிரச்சாரம் செய்தார்கள். அதனை 1968ல் தான் மத்திய அரசு உணர்ந்து அதற்காக கோடிக்கணக்காக செலவழிக்கிறது. அவர் தம் கருத்தை அப்போதே உணர்ந்து நடந்தால் இன்று இவ்வளவு செலவு நேர்ந்திருக்காது. தந்தை பெரியார் அவர்கள் நம் எதிர்கால சந்ததிக்கும் வழிகாட்டியாகவே உள்ளார்.

தந்தை பெரியார் அவர்கள் அறிவுக்கு விரோதியல்ல. அக்கிரமத்திற்கும் அநியாயத்திற்கும் தான் விரோதி. சமுதாயத்தில் நடக்கும் அக்கிரமங்களை எதிர்க்கக் கற்றுக் கொடுத்தவர் பெரியார். அதோடு அறிவு, ஆற்றல், அன்பு ஆகியவைகளுக்கு மதிப்பளிக்க கற்றுக் கொடுத்தவரும் பெரியார் அவர்களே. தி. மு. கழகம் ஆட்சி பொறுப்பேற்றதும் அண்ணா அவர்கள் திருச்சி சென்று தந்தை பெரியார் அவர்களின் ஆசியினை பெற்று வந்து அவர் தம் விருப்பத்திற்கு ஏற்பவும் தமிழ்ச்சமுதாய நலனுக்கு ஏற்பவும் ஆட்சி நடத்தினார். நம் அருமை அண்ணா அவர்கள் இயற்கை எய்திய பின்னர், நம் இன்றைய தமிழக முதல்வர் "பெரியார்தான் தமிழக அரசு, தமிழக அரசுதான் பெரியார்!" என்று முழங்கி அவர் தம் பார்வையிலேயே ஆட்சி நடத்தி வருகிறார். தமிழக அரசு சுயமரியாதைத் திருமணத்தை சட்டப்பூர்வமாக அங்கீகரித்தது. மேலும் சாதி பேதங்களை ஒழிப்பதற்காக கலப்புத் திருமணங்கள் நடைபெற ஊக்குவித்து வருகிறது.

தந்தை பெரியார் தமிழர்களின் அறியாமை விலங்கொடித்தவர். அவரது வாகை மலர்களில் தலையாயது இன்று அவர்தம் அருமைச் செல்வர்களால் நடத்தப்படும் பகுத்தறிவு ஆட்சி. மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் வரிகள், **"அய்யா ஒரு சகாப்தம், கால கட்டம், திருப்பம்"** என்பதில் எல்லாம் அடங்கிவிட்டது.

★

தொலைபேசி எண்: 123

# மகாலிங்கம் அச்சகம்

## தெற்கலங்கம், தஞ்சை.

எல்லா வகையான அச்சு வேலைகளும், நூற்பதிப்புகளும், வண்ண அச்சு வேலைகளும், சுவரொட்டிகளும், கணக்கு நோட்டு, புத்தகம் முதலிய கட்டு வேலைகளும் குறித்த காலத்தில் அழகாக வும், சிறப்பாகவும் செய்து தரப்படும்.

எங்களிடம்

அலுவலகத் தொடர்பான கருவிப் பொருள்கள், பள்ளிக்கூட நோட்டுப் புத்தகங்கள், விண்ணப்பத் தாள்கள், குத்தகைப் பத்திரங்கள் முதலியன மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

# பகுத்தறிவுப் பகலவன்

## அமைச்சர் திரு கா. வேழவேந்தன்

வாழ்ந்த தமிழினம் தமிழ்ப் பகைவரால் வீழ்ந்துபட்டு தாழ்ந்த நேரத்தில் வழி காட்டும் கலங்கரை விளக்கமாக வந்தவர் தந்தை பெரியார் அவர்கள்.

தந்தை பெரியார் மட்டும் பிறக்கா விட்டால், தன்மானச்சுடர் விளக்கை ஏற்றி வைத்து தமிழர் வீட்டை ஒளிரச் செய்யும் மதத்தலைவர் யார் இருப்பார்? எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு ஒருமுறை தான் தூய முத்தான தலைவர்கள் தோன்று கிறார்கள்; எல்லோரின் நெஞ்சத்திலேயும் நின்று நிலைபெறுகிறார்கள்.

துருக்கி நாட்டை பகுத்தறிவு வழியிலே நடாத்திச் சென்று, தொல்லுலகத்திற்கு அறிமுகப்படுத்திய பெருமை 'முஸ்தபா கமால் பாஷா'வுக்கே உரியதாகும்.

பண்டைய கிரேக்கத்தின் பெருமையை உயர்த்திக் காட்டியவர் பகுத்தறிவு வகுப்பை நடத்திய சாக்ரட்டீஸ் அவர்கள் தான். அதைப்போல் நெறி பிறழ்ந்த தமிழருக்கு நேரிய வழியைக் காட்டி 'கல்லி லேயும் மண்ணிலேயும் கடவுள் இல்லை, காணுகின்ற உலகத்தார் முகங்களிலேதான் கடவுளைப் பார்க்கிறேன்' என்று தன் 91ஆம் ஆண்டிலும் துவளாமல் பட்டி தொட்டி எல்லாம் சென்று பணியாற்றும் பெரியாரின் தொண்டு காலகாலத்திற்கும் தமிழர் வரலாற்றிலே பொன்னெழுத்துக் களால் பொறிக்கப்பட இருக்கிறது.

தமிழ்ப் பூங்காவிலே சாதி என்னும் கரு நாகம் படமெடுத்து ஆடியபோது அதன் தலையை நொறுக்கி தூர எறிந்தவர் தந்தை பெரியார் அவர்கள்.

இன்று நாம் பேசும் தூய தமிழுக்குச் சொந்தக்காரரும் அவர் அல்லவா?

பொறுப்பேற்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, தன் வீட்டுப் பிள்ளைகள் அமைத்த ஆட்சி என்ற தனிப்பற்றோடு இன்றைக்கு வேலிகட்டிப் பாதுகாக்கும் வேலையையும் தந்தை பெரியார் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

அவர் பிறக்காவிட்டால் இன்று தமிழன் தன்மானத் தமிழனாகத்தான் வாழ முடியுமா? அடிமட்டத்திலே இருப்பவர்கள் மேல் மட்டத்திற்கு வந்திருக்கத்தான் வழி பிறக்குமா? ஆகவே, பெரியார் வெள்ளச் சுழலில் சிக்கிய தமிழருக்கு ஒரு தோணியாகவும், வெந்தீயிலே தவித்த நம்மவருக்கு ஒருஏணியாகவும்,என்றென்றும் காட்சி தருகின்றார்.

அவர் ஆயுள் நீண்டால், நாமெல்லாம் வாழ்வோம்-நாம் வாழ, அவர் வாழட்டும்!

ஆயிரம் ஆண்டு காலம் நாம் காத்திருந்து பெற்ற அந்த அருந்தலைவரின் முன்னிலை யில் அவருடைய நூற்றாண்டு விழாக் களைக் கொண்டாட காலம் நமக்குத் துணை புரியட்டும்.

★

போன் எண் : 220
" " 220A

## 92-வது பிறந்தநாள் வாழ்த்து
## தந்தை பெரியார் நீடூழி வாழ்க!

# A. O. சோமசுந்தரம் செட்டியார்

இரும்பு & பெயிண்ட் வியாபாரம்

H. O. அய்யங்கடைத்தெரு தஞ்சாவூர்.
B. O. கீழ வாசல் "
B. O. W. B. ரோடு, திருச்சி-8. போன்: 6750

# ஸ்டுடன்ஸ் டியூடோரியல் சென்டர்

கோட்டை — சேலம்-1.

| | | |
|---|---|---|
| Matric | — | மதுரை-தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் |
| S.S L C. | — | அகடெமிக் பிரிவு |
| P. U. C. | — | எல்லாப் பிரிவுகளும், பாடங்களும் (சென்னை—மதுரை) |
| B. A, B Sc, | — | ஆங்கிலம், வரலாறு, பொருளாதாரம் கணிதம், தமிழ். |
| M. A. | — | வரலாறு. |

**காலை, மாலை வகுப்புகள் :** கல்லூரி, பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கும். ஆசிரியர்களுக்கும், திறமை மிக்க ஆசிரியர்கள்—சிறந்த ஆய்வுக்கூடம்—அச்சிட்ட பாடக்குறிப்புக்கள்—திங்கள் தோறும் தேர்வுகள்—குறைந்த கட்டணம்—உயர்ந்த கல்வி.

A. மஹபூப்ஜான் B.A., இயக்குநர். T. V. சொக்கப்பா M. A., L. T., முதல்வர்.

# பெரியார் பெருந்தொண்டு

செப்டெம்பர் மாதத்தைச் செந்தமிழர் எல்லாரும்
ஒப்பற்ற மாதமென உள்ளங் களிகொள்வர்
அறிவியக்கம் கண்ட அருந்தலைவர் பிறந்ததுவும்
அறிவுலகம் போற்றுகின்ற பேரறிஞர் நம்அண்ணா
பிறந்ததுவும் இம்மாதம் ; பெற்றிக் குரியீரே !
தந்தை பிறந்ததுவும் தனயன் பிறந்ததுவும்
இந்தப் பெருமாதம் ; இங்கேநாம் நமதண்ணன்
தனைப் பிரிந்த பெருந்துயரக் கண்ணீரால் நம்தந்தை
இணையடியை நீராட்டி இதயமலர் தூவுகின்றோம் !

இனநலத்தை இனஉரிமை தன்னை யிங்கே
எண்ணியவர் சிலபேர்கள்; எண்ணிப் பார்த்தும்
மனந்துணிந்து சொன்னவர்கள் மிகவும் சில்லோர் ;
வாராத பெருந்துயரும் பழியும் வந்து
மனங்குமைந்து வாழ்வழித்த போதும் சற்றும்
வருந்தாமல் தயங்காமல் அஞ்சி டாமல்
இனங்காக்க எழுந்தவரார்? அவரெம் தந்தை
பெரியாரே என்றுரைத்தால் யார்ம றுப்பார் ?

அயராமல் துறைதோறும் உழைத்தோ ருண்டு ;
அத்துறையில் வெற்றிபெற்றோர் மிகவும் சில்லோர் ;
அயராமல் இனநலத்திற் குழைத்த பல்லோர் ;
அத்துறையில் தோல்வியையே கண்ட யர்ந்தார் !
அயராமல் இனநலத்திற் குழைத்து வெற்றி
அடைந்தவரார்? எம்தந்தை பெரியா ரன்றோ ?
செயற்கரிய செய்பவர்கள் பெரியார் என்னும்
திருக்குறளின் விளக்கமே அவரே யன்றோ ?

**அமைச்சர்**
**பாவலர் மா. முத்துச்சாமி**

கல்லூரிக் கல்விபெற்றா ரில்லை யேனும்
கவினார்ந்த பல்கலையின் கூட மாக
வெல்லரிய திறன்கொண்ட வெண்மைத் தாடி
வேந்தராய் நடமாடிப் பயிற்று விக்கும்.

சொல்வல்ல பேரறிவாய், தோல்வி கண்டால்
துவளாத உறுதியராய்—சோம்ப லென்னும்
பொல்லாங்கை எதிர்க்கின்ற வன்மை பெற்ற
புரட்சியுளம் கொண்டவராய் விளங்கு கின்றார்!

போதனைகள் புரிவதிலே வல்லோர் இந்தப்
புவியினிலே பலபேர்கள் இருக்கின் றார்கள்;
சாதனைகள் செய்பவர்கள் அரியர்; நந்தம்
தந்தையவர் அவர்களிலே தலைசி றந்தார்!
சாதகர்நம் தந்தையவர்; காந்தி யண்ணல்
தமைக்கண்டு அவர்பேச்சில் நாட்டங் கொண்டு
மேதக்க சாதனைகள் புரிந்த செய்தி
மேதினியில் வரலாற்றுப் பெருமை யாகும்!

சாதிகளும் பல்சமயச் சழக்கும் மற்றுச்
சாத்திரமும் கோத்திரமும் குலமும் இங்கே
ஆதியிலே இல்லாமல் பாதி நாளில்
ஆதிக்கம் கொண்டதனைக் கண்டு நைந்தார்.
ஆதிக்கக் காரர்களின் வெறியாட் டத்தை
அழிக்கின்ற திருத்தொண்டில் ஈடு பட்டார்.
சாதிப்பேய் ஒழிப்புக்கு மணக்க லப்புச்
சஞ்சீவி தனைக்கண்டார்; வெற்றி கொண்டார்.

தாழ்வுற்ற தமிழரினம் வாழ்வு பெற்றுச்
சமுதாய உரிமையொடு பெருமை பெற்று
வாழ்வதற்கு நாள்தோறும் செய்யும் தொண்டே
மதமாக இலட்சியமாய்க் கொள்கை யாக
வாழ்விக்கும் இலக்கியமாய்க் கலையாய்க் கொண்டார்;
வசையோடு வாழ்த்தினையும் சமமாய்க் கொண்டார்;
காழ்ச்சிந்தை மிகக்கொண்டார்; இனவாழ் வுக்கே;
காலமெலாம் உழைப்பதிலே களிப்புக் கொண்டார்.

தீண்டாதார் எனச்சிலரை ஒதுக்கி வைத்தே
தெருவழியே நடப்பதற்கும் தடைவிதித்தார்!
ஆண்டவனின் திருக்கோயில் நுழைவ தற்கும்
அருகிலுள்ள குளத்தில்நீர் எடுப்ப தற்கும்
வேண்டாத தடைவிதித்தார்; இவற்றைக் கண்டு
வேதனையால் நம்தந்தை 'வைக்கம்' தன்னில்
தீண்டாதார் என்போரை உடன ழைத்துத்
தெருவழியே நடைபோட்டு வெற்றி பெற்றார்!

காலத்தால் நல்லறிவால் முதுமை கொண்டும்
கயமையினை எதிர்ப்பதிலே இளைய ரானார்!
காலத்தைக் காப்பதிலே கருத்து மிக்கார்
காற்றோடு கடுமழையும் கலந்து வீசல்
போலவர்தம் பேச்சிருக்கும்; ஏழை மக்கள்
பொங்குணர்ச்சி பெறுமாறு சொல்லி ருக்கும்;
ஞாலத்தில் கற்றோரும் மற்றை யோரும்
நாட்டமுறச் சொல்லுகிற திறனி ருக்கும்!

பெண்ணுரிமை தனைப்பறித்து அவரை யெல்லாம
பேசாத மடந்தையராய் அடிமை யாகக்
கண்ணிழந்த பேதையராய்க் கருதும் பொல்லாக்
கயமையினைத் தகர்த்திங்கே மறும ணத்தால்

பெண்ணுரிமை மலர்தற்கு வழிவ குத்த
பெரியாரை ஈரோட்டு ஏந்தல் தம்மை
மண்ணகத்தே பெண்கள்குலம் வாழு மட்டும்
வாழியபல் லாண்டென்று வாழ்த்தி டாதோ !

அவர்சொன்னார் இவர்சொன்னார் என்ப தற்காய்
அப்படியே நம்பாதே! யார்சொன் னாலும்
உவர்போட்டுத் துணிவெளுத்தல் போல உன்றன்
ஒப்பற்ற பகுத்தறிவால் ஆய்ந்து பார்த்தே
எவர்சொன்ன கருத்தையும்நீ ஏற்பாய் என்ற
இந்நாட்டுப் பகுத்தறிவுத் தந்தை யான
உவமையிலாப் பெரியாரை எந்த நாளும்
உளமாரப் பகுத்தறிவு இயக்கம் வாழ்த்தும்!

தமிழ்நாட்டில் தமிழினத்தார் துறைகள் தோறும்
தாழ்வுற்று இழிநிலையில் நைதல் கண்ட
தமிழ்த்த லைவர் நம்பெரியார் தமிழர்மீண்டும்
சமுதாய உரிமையொடு பெருமை பெற்றுத்
தமிழர்களாய் வாழ்வுபெற விரும்பி மக்கட்
சமுதாய அடிப்படையில் பதவி கொள்ள
அமைவான வழிவகுத்தார்; அதனா லிங்கே
அடிமட்டங் தனில்வாழ்ந்தோர் வாழ்த்து கின்றார்!

நாட்டிற்கு முதுகெலும்பு மொழியே என்பார்
நம்பெரியார் இவ்வுண்மை தனையு ணர்ந்து
பாட்டுமொழி பயில்கின்ற தமிழர் நாட்டில்
பண்படா இந்திமொழி வேண்டா மென்றார்.
வேட்டைக்கா டாயிந்த நாட்டை யாக்க
விரும்பியவர் இந்தியினை வரவேற் றார்கள்.
நாட்டுமொழி காக்கும்போர் தன்னில் அந்நாள்
நம்பெரியார் சிறைசென்று நமை வளர்த்தார் !

நம்தந்தை பெரியாரின் மூத்த செல்வன்
நம்அண்ணன் ஆட்சியினை ஏற்ற தாலே
தமிழன்னை அகமிகவும் மகிழ்ந்தாள் ; அடிமைத்
தளைநீங்கி விடுதலைபெற் றுய்ந்தாள்; இங்கே
தமிழ்மொழியே துறைதோறும் செழிக்கக் கண்டு
தமிழரெலாம் மகிழ்கின்றார் ; அதனா லிங்கே
தமிழ்காக்கச் சிறைசென்ற நமது தந்தை
தமிழ்போல வாழ்கவென வாழ்த்து கின்றார் !

ஈரோட்டுப் பாசறையில் வளர்ந்த எங்கள்
இதயத்து நாயகனை எண்ணும் போதும்
ஈரோடு எனும்பெயரைச் சொல்லும் போதும்
எம்முன்னர் பெரியார்தம் நினைவே தோன்றும் !
ஈரோடு எனும்ஒலியைக் கேட்டால் இங்கே
இடியுண்ட நாகம்போல் மடமை யாவும்
வேரோடு நடுநடுங்கும்! சீர்தி ருத்தம்
விரும்பிடுவோர் பெரியாரைப் போற்று கின்றார்!


தமிழினத்தின் பெருந்தலைவர் பெரியார் தம்மைச்
சமயத்தின் பெரும்பகைவர் என்று சொல்லிச்
சமுதாயப் பகைவளர்த்து, அதனால் தங்கள்
சதைவளர்க்க முனைவோரும் இருக்கின் றார்கள் ;
அமைவாக நான்அவரை ஒன்று கேட்பேன்
அன்பரீர் ! சமுதாயம் அழிந்த பின்னர்
சமயத்திற் கிங்நாட்டில் என்ன வேலை ?
சமயந்தான் வேரூன்றி நிற்ப தெங்கே ?'

சமயத்தின் மறுமலர்ச்சித் தந்தை யாகித்
தமிழ்கொழிக்கும் அடிகளார் தம்மைக் கேட்டால்
'சமுதாயத் தேவையினைப் பூர்த்தி செய்யும்
சால்பினதே நற்சமயம்; பெரியார் செய்த
அமைவான பெரும்புரட்சி விளைவா கத்தான்
அன்புவளர் சமயத்தில் மறும லர்ச்சி
இமைதிறந்த தென்றுரைத்து, சமுதா யத்தின்
இணையற்ற தந்தை'யெனப் போற்று கின்றார் !


தமிழரின இழிவெல்லாம் சருகாய் வீழச்
சண்டமா ருதம்கொணர்ந்த தலைவன் என்கோ!
தமிழரின வாழ்வுக்கே அமுத மீந்த
தகைமைசால் வையத்து அமரன் என்கோ !
தமிழரின் இருட்படலங் தன்னை நீக்கத்
தாரணியில் வந்துதித்த சுடரோன் என்கோ !
தமிழரினப் பெருந்தலைவ ! நின்னை யிங்கே
தமிழ்மொழியில் என்சொல்லி வாழ்த்து வேன்நான்?

அய்யா தாடி யசைந்தால் இங்கே
பொய்யர்தம் புரட்டு அய்யோவென் றோடும்.
அய்யா கைத்தடி அசைந்தால் இங்கே
அணிசெயும் கடவுளர் அனைவரும் நடுங்குவர்
அய்யா கைத்தடி தட்டினால் இங்கே
அனைவரின் பேச்சும் பாட்டும் அடங்கும்
அய்யா கண்கள் அசைந்தால் இங்கே
ஆதிக்க இனத்தின் கொட்டம் அடங்கும்
அய்யா சுட்டு விரலினைக் காட்டினால்
ஆணையைத் தமிழர் அன்போ டேற்பர்
அய்யா திருவடி அசைந்தால் இங்கே
அழிக்கும் மடமைகள் மிதிபட் டழியும்.
அய்யா திருவாய் திறந்தால் இங்கே
அறிவுக் கதிரோன் சுடர்விட் டெழுவான் !
அய்யா பிறந்த நாட்டிலே பிறந்த
அனைவரும் புண்ணியர்; அய்யா நெறியை
பொய்யா தொழுகிப் பொற்புற வாழ்வோம் !
அய்யா வாழ்க! செங்கதிர் திங்கள்
வாழும்நாள் வாழ்க! வளமொடு வாழ்க!
வாழநா ளெல்லாம் வாழுநாள் வாழ்க !


# இனப்போராட்டம் --பலகட்டங்கள்






வகுப்புரிமைத் தீர்மானத்தை காங்கிரஸ் ஏற்க மறுத்ததால்
காங்கிரசிலிருந்து வெளியேறினார்




அதன் மூலம் சுயமரியாதைப் பிரச்சாரம் தீவிரமாகியது








பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்ய 'குடி அரசு' தொடங்கினார்


'குடி அரசு' மூலம் கருத்துப் புரட்சி



சுயமரியாதை இயக்கம் தீவிரமாகியது



1929-ல் செங்கற்பட்டில் தீவிரத் திட்டங்கள்




ஆச்சாரியார் இந்தி திணிப்பும், அய்யா எதிர்ப்பும்





திருவாரூர் மாநாட்டில் பிரிவினை தீர்மானம் நிறைவேறியது





1944-ல் கருஞ்சட்டைப் படை அமைந்தது




சேலத்தில் ஜஸ்டிஸ் கட்சி திராவிடர் கழகமாக மாற்றப்பெற்றது




1949-ல் கழகம் இரண்டானது—தி.மு.க. பிறந்தது—
இரட்டைக் குழல் என்றார் அண்ணா!




1967-ல் தி.மு.க. கோட்டையைப் பிடித்தது





# உலக வரலாற்றில் பெரியார்

— ஏ.பி.சனார்த்தனம், எம்.ஏ., எம்.எல்.சி

கி.பி.2000ம் ஆண்டில் "உலக சமூக வரலாறு" படிக்கும் மாணவர்கள் பெரியாரின் சிறப்புக்கள் குறித்து அறிந்துகொள்வார்கள். மூடநம்பிகைகைகளைச் சாடி, புராணப் புரட்டுக்களை எடுத்துக்காட்டி, சமுதாய எழுச்சிக்கு வித்திட்ட சாக்ரடீஸ், கலிலீயோ, மார்க்ஸ், பிராட்லா, ரஸ்ஸல் ஆகியவர்களின் பட்டியலில் பெரியார் வைத்துப் போற்றப்படுவார் என்பது உறுதி.

இந்திய துணைக்கண்டத்திலே மிகத் துணிச்சலுடன் பழைட் ஏற்பாட்டை எதிர்த்து ஆமதாபாத், கான்பூர், பம்பாய் போன்ற இடங்களிலெல்லாம் கூட சிறிதும் அஞ்சாமல் முழக்கமிட்டவர் பெரியார்.

ஆரியத்தின் கோட்டை என கருதப்பட்ட காவிரிப் பள்ளத்தாக்கில் பகுத்தறிவுப் படைவீரர்களை தோற்றுவித்தவர் பெரியார். நாகை மணி, மாயூரம் C. நடராசன், S. V. லிங்கம், இராமாமிர்தத்தம்மையார், அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி, K. K. நீலமேகம், குத்தூசி குருசாமி போன்ற மறைந்த மாவீரர் பட்டியல் இதற்கு சான்று கூறும்...

கர்ப்பத்தடை முதற்கொண்டு கம்யூனிசம் வரை பல கருத்துக்களை இப்பகுதியில் பரப்பி முன்னேற்றக் கருத்துக்களுக்கெல்லாம் பண்ணை சமைத்துத் தந்தவர் பெரியார் ராமசாமி.

சிந்தனையைத் தூண்டியதில், ஒரு பெரிய மறுமலர்ச்சி இயக்கத்தை உருவாக்கியதில் 'குடி அரசு' ஏட்டுக்கு தனி இடம் உண்டு. அமைச்சர்களும், முதலமைச்சர்களும் அதன் ஆசிரியர் குழுவில் தயாரானவர்கள். 'விடுதலை' 'பகுத்தறிவு' 'Revolt' 'உண்மை' முதலிய பெரியாரின் ஏடுகள் மடமை மலைகளுக்கு வேட்டுவைத்ததை புதிய சமுதாய அமைப்புக்கு வழிகோலியதை 21ம் நூற்றாண்டுமக்கள்வியந்து வியந்து பாராட்டப் போகிறார்கள்.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற இராவணனாக, திராவிட மக்களை மூவாயிரம் ஆண்டு தூக்கத்தினின்றும் தட்டி எழுப்பிய எழுச்சிப் பண்பாடிய ஏந்தலாக, பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் பாது காவலராக பெரியார் என்றும் போற்றப்படுவார்.

'ஸ்மரணையற்றுக்கிடந்த தமிழ் மக்களின் அடிதெரியக் கலக்கிய பிரம்மாண்ட பாக்கியம்' பெற்றவர் பெரியார் என்று வ. ரா. போற்றினார்.

'ஆத்திகத்தின் முதுகெலும்பை வளைதததுபோல்' கைத்தடியை பெற்ற

# சித்த வைத்திய ஆராய்ச்சி

## சர்ம நோய்களில் நல்ல பயன் தருகிறது

பழனி, ஜூன்-1, பழனியில் கடந்த 17 வருடமாக தமிழ் வைத்தியத்தில் சிறந்த ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. வைத்திய நூல்களைப் பயின்று, அதன் படி மருந்துகளை பொருட்செலவு கருதாமல் செய்து, சோதனைகள் நடத்தி நல்ல பல முடிவுகள் கண்டு வருகிறார்கள். பழனியில் உள்ள பிரபல வைத்திய குடும்பத்தில் தோன்றி சட்டப் படிப்பு படித்தும், தமிழ் வைத்தியத்தில் உள்ள நம்பிக்கையின் காரணமாக, அதையே தொழிலாகக் கொண்டு, பல நற்பணிகளை இன்று செய்து வருகிறார், திரு. சங்கரநாராயண், B.A ,B.L.

சர்ம நோய்களில் பலவற்றிற்கு சித்த மருத்துவத்தில்தான் நல்ல குணம் காணலாம். சாதாரணமாக எக்ஸிமாவில் நீர் வடிதலும், தோல் தடித்து, கருப்பு பத்து போல ஆகிப் பல வருடங்களாக பல வைத்தியத்திற்கும் கட்டுப்படாமல் இருந்து வரும், இந்த சர்வ சாதாரணமான நோய், முதல் PSORIASIS உடம்பெல்லாம் செதிள்களாக உதிர்தல், செம்மேகம், தமிர் சொரணை குறைந்துவிடுதல் போன்ற பெரிய சர்மநோய்களுக்கும் மிக விரைவில் குணம் காணும் சித்த மருந்துகள் இருக்கிறது. வெண் புள்ளிகள் மிகவும் சாதாரண சித்த மூலிகைகளால் செய்த மருந்துகளால் குணமடைகிறது. மற்றும் ஆஸ்த்மா, நீரிழிவு, சோகை, காமாலை, உடல் மெலிவு, தளர்ச்சி போன்ற நோய்களிலும் சிறந்த பலன் தருகிறது. தமிழ் மருத்துவத்தில் நம்பிக்கை உள்ளவர்கள்-பயனடைய விரும்புகிறவர்கள் பழனிக்கு நேரில் வரலாம். எந்த நாளிலும் கடிதம் எழுதிவிட்டு புறப்பட்டு வரலாம். வசதிப்படாதவர்கள் கடிதம் எழுதி மருந்துகளை தபால் பார்சலில் பெற்றுக் குணமடையலாம். விலாசம்: **ஆனந்தா வைத்திய சாலை, ''வெற்றி நிலையம்''**, புது தாராபுரம் ரோடு, பழனி, தமிழ்நாடு. போன்: 364.


வாழ்க பெரியார்

**காரம், மணம், குணம் ஒருங்கே அமையப்பெற்றது.**

## K. S. சுப்பையா விலாஸ் பீடி

(பதிவு எண்: 103718 : 142023)

சோம்பலை நீக்கி சுறுசுறுப்பைக் கொடுப்பது எங்கள் K. S. சுப்பையா விலாஸ் பீடியே. இன்றுபோல் என்றும் எங்கள் பீடியை உபயோகித்து ஆதரவு தரும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

தங்கள் அன்புள்ள

**கே. சுப்பையா**

உரிமையாளர் :
K. S சுப்பையா விலாஸ்
பீடித் தொழிற்சாலை,
வடக்கூர், தூத்துக்குடி-1.
நெல்லை மாவட்டம்

---

பெரியார் வாழ்க! துவக்கம் 1936

பேரன்புடையீர்! வணக்கம்.

மதுரையில்

வண்ணத் தமிழ் எழுத்துக்களால்

வால்போஸ்டர் தயாரிப்பதற்கு

சிறந்த **ஸ்தாபனம்,**

## ஸ்ரீ கிருஷ்ணா பிரஸ்

**76A, கண்ணாடிக்கார சாயபு சந்து,**

**மேலமாசி வீதி,**

**மதுரை-1.**

வர் பெரியார் என்று பாவேந்தர் பாரதி தாசன் பாராட்டினார்.

"இந்த அமைச்சரவையே பெரியாருக்கு காணிக்கையாக்கப்பட்டுள்ளது" என்று அறிஞர் அண்ணா அவர்கள் சட்ட மன்றத்தில் முழக்கமிட்டார்கள்.

'நாங்கள் ஈரோட்டுப்பள்ளியில் பயின்றவர்கள்' என்று கலைஞர் எக்காளமிடுகிறார்.

'பெரியார் இல்லாதிருந்தால் நாங்கள் தொடர்ந்து மட்டம் தட்டப்பட்டிருப்போம்' என்று எண்ணற்றவர்கள் நன்றிப்பெருக்கை வெளியிட்டபடி இருக்கிறார்கள்.

உலகில் வேறு எந்தப்பகுதியிலும் தோன்றாத பிறவி ஆணவ இயந்திரமான வர்ணாச்சிரம நிறத்திமிர் பெரியாரிடம் சரியான அடி வாங்கியது.

இத்தகைய அநீதிகள் வேறு பகுதிகளில் இருந்திருந்தால் இரத்த ஆறுகள் ஓடியிருக்கும், எலும்பு மலைகள் குவிந்திருக்கும்.

பெரியார் ராமசாமி தன் துணிச்சலால், பகுத்தறிவுக் கணைகளால், உயிர்ச்சேதம் இல்லாத பல கிளர்ச்சிகள் மூலமாக நல்ல பலன்களை கண்டிருக்கிறார்.

திராவிடர் விழிப்புக்கு, எழுச்சிக்கு, மறுமலர்ச்சிக்கு, நல்வாழ்வுக்கு வித்திட்டு இன்னும் உழைத்து வரும் தந்தை பெரியாருக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறோம்.

பெரும் செல்வராக இருந்தாலும் எத்தகைய மட்டமான சாப்பாட்டையும்பெரியார் ரசித்து சாப்பிட்டு விடுகிறார்'

கஷ்ட நஷ்டம் ஏற்கப்பழகு, சலுகைகளை கேட்காதே என்று சிறையில் எங்களுக்கு பாடம் புகட்டினார்,

எத்தனையோ நோய்களை எதிர்த்து சமாளித்து, எத்தகைய இடுக்கண்களையும் பொருட்படுத்தாது, மக்களுக்கு தன் கருத்துக்களை எப்படியும் சொல்லிவிடவேண்டும் என்ற ஒரே துடிப்பில், தன் 92ம் வயதிலும் நாடு சுற்றும் வேறு தலைவரை இந்த உலகம் இதுவரை கண்டதில்லை; இந்தப் பெரியாரின் தொண்டர்களாக இருப்பதில் நாம் பூரிப்படைகிறோம்.

ஏடுகளை புரட்டாமல் தன் சிந்தனையையே நம்பி நல்ல கருத்துக்களை வெளியிட்டு வரும் பெரியார் உண்மையிலேயே தென்னாட்டு சாக்ரடீஸ் ஆவார்கள்:

1934ம் ஆண்டில் என்னுடைய 14ம் வயதில் பெரியார் அவர்களை முதன்முறையாக வேலூர் கோட்டை வெளியில் பார்த்தேன். அன்று முதல் என் இறுதிவரை பெரியாரின் முத்திரை என்னிடம் மிகப் பலமாக பதிந்திருக்கும், பெரியார் பெருமையை ஆங்கில உரையாடல்கள் மூலம் பல வெளி நாட்டாருக்கு எடுத்தியம்பி வருகிறேன். பெரியார் வாழ்க்கை வரலாற்றை ஆங்கிலத்தில் எழுத திட்டமிட்டுள்ளேன். எங்கு சென்றாலும் பெரியார் சிறப்புக்களை பரப்பியபடி இருப்பேன்.

அவரிடம் வேலை பார்க்கவும், அவரது செலவில் கலப்புத்திருமணம் செய்து கொள்ளவும், அவருடன் பல ஊர்களுக்குச் சென்று பல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவும் கிடைத்த வாய்ப்புகளை எண்ணி எண்ணி பூரித்தபடியிருப்பேன் என் இளமையை அவரிடம் கழித்தேன். உணர்ச்சி பெற்றேன் என்பதை எண்ணும்போது என் உள்ளம் சிலிர்க்கிறது: பெரியார் காலத்தில், அவருடைய படையில் இருக்கிறோம் என்பது கிடைத்தற்கரியபேறு.

பெரியார் பல்லாண்டு வாழ்ந்து அவரது 100வது பிறந்த நாளை நாம் உற்சாகமாகக் கொண்டாடப்போகும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

## உங்களுக்குத் தெரியுமா ?

### தமிழ்நாட்டில் 'கடவுள் வாழ்த்து' இல்லாத இரண்டே பள்ளிகள் !

---

1. இரும்புலிக்குறிச்சி சிதம்பரனார் மான்ய நடுநிலைப்பள்ளி.
2. சிவகங்கை "கற்பூர சுந்தர பாண்டியன் இராமலட்சுமி" உயர்நிலைப் பள்ளி.

தகவல்: **சி. பி. சர்வாதிகாரி,**
**இரும்புலிக்குறிச்சி.**

Phone : 84644

With the
Best Compliments
From

★

**Madras X-ray Clinic & Laboratory**
57, Pillayar Koil Street,
TRIPLICANE, MADRAS-5

**மதராஸ் எக்ஸ்ரே க்லினிக் அண்டு லாபரடரி**
**57, பிள்ளையார் கோயில் தெரு,**
**திருவல்லிக்கேணி, மதராஸ்-5.**

With the
Best Compliments
From:

**M/s. ASHDEEP AGENCIES**

★

23, MINT STREET,
MADARAS-3.

# ‘குருகுல வாசம்’

கவிஞர். கருணாநந்தம்

“குடும்பப்பாசம்” என்ற தலைப்புத்தரலாமா என ஒரு கணம் நினைத்தேன். ஆனால் இந்தச்சொல்லைக் கற்பித்தவர் இன்று நம்மிடையே காட்சிப்பொருளாக இல்லை. எனவே அதே நிலைமையை விடச் சற்று உயர்ந்த-வேறுபட்ட-இந்தச் சொல்லைத் தேர்ந்தெடுக்க நேர்ந்தது.

உலகத்தின் மிக உயரிய சிந்தனையாளர்களில் ஒரு தனி நிலை வகிப்பவரும்-ஒரே பகுத்தறிவாளருமாகிய தன்மதிப்பு இயக்கத்தின் தந்தை பெரியார் அவர்களது பாசறைப்பள்ளியிலே பயின்று, தேர்ச்சி பெற்று, வெற்றிகரமாக வெளிவந்த மாணவருள் நானும் ஒருவனாக அமைந்திருப்பதை வாழ் நாளெல்லாம் எண்ணியெண்ணி மகிழ்தல் கூடும். அந்தப்பள்ளி மாணவருள் தலைசிறந்த இருவர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் பொறுப்பினை ஏற்று இணையோ எடுப்போ அற்ற நிலையினைப் பெற்றதும்பெரும் பேறுதான் அல்லவா? நான் பணியில் சிறியேனாயினும் அந்த அணியில் இருந்து வந்தவன் என்ற பெருமையை யார்தான் மறுக்க இயலும்!

காலையில் எழுந்தவுடன் செய்தித்தாள் படிப்பதுதான் முதல் வேலை. காலைக் கடன் முடிக்கச்செல்லும்போதும் கையில் செய்தித்தாள் இருக்கும்; படிப்பும் தொடரும். பின், முகம் கைகால் கழுவிக்கொண்டு (சில வேளைகளில் குளிப்பதும் உண்டு!) சிற்றுணவு அருந்துதல்;ஓற்றை மாட்டுவண்டியில் ஏறியோ, கைத்தடியினை ஊன்றியவாறு நடந்தோ “குடி அரசு” அலுவலகம் வந்து சேர்தல். அன்றையக் கடிதங்களைத் தாமே பார்வையிடல். உறைகளைக் கிழித்து வீணாக்கி உள்ளடக்கமாகிய அஞ்சலைப் படிப்பதில்லை. ஒட்டிய இடத்தில் உறையைப்பிரித்து முழுமையாக வைத்துக் கொண்டால் முகவரிப்பகுதி மீது சிறு தாள் ஒன்றை ஒட்டி மீண்டும் பயன்படுத்த வாய்ப்பு. பிறகு உள்ளிருக்குங்கடிதங்களைப் படித்து அவற்றின் தன்மைக்கேற்ப ஓரத்தில் “பென்சி”லால் குறிப்புகள் எழுதி எதிரில் பயபக்தியோடு நிற்கின்ற நண்பர் கருணாநிதியிடமோ, என்னிடமோ, “மானேஜர்” நல்லசாமி இடமோ, “காஷியர்” கரிவரதசாமியிடமோ தருதல். பின்னர் தாம் ஆற்றி வந்த சொற்பொழிவின் சுருக்கமோ, கட்டுரையோ, தலையங்கமோ எழுதத் துவங்கி விட்டால் அருகில் யாரும் செல்லக்கூடாது. ஏதாவது இடையிடையே அய்யம் ஏற்படின் எங்களில் யாராவது ஒருவர் பெயர் சொல்லி அழைத்துக்கேட்டுக்கொள்ளுதல்.

அலுவல்கள் முடிந்தபின்னரே அயலூர் உள்ளூர் நண்பர்கள் வந்திருந்தால் அவர்களுடன் உரையாடல்; வயதிற் சிறியோராயினும் “என்னங்க! ஏனுங்க?” என்று மரியாதையும் கனிவும் மிளிரும் சொற்கள் தாம் அங்கே உதிரும். எழுந்து நின்று வணங்குதல், மனம் விட்டுச்சிரித்தல், ஒரே கலகலப்பு!

வேலைகள் முடிந்ததா? வீட்டுக்குப் புறப்பாடு; “ஏம்ப்பா! போகலாமா?” என்ற குரல் கேட்டதும் எங்கள் குழு - அந்த அழைப்பு எப்போது வரும் என்று எதிர் பார்த்துகாத்துக்கிடந்த பரபரப்பு மிகுந்திடப் பின் தொடரும். ஈரோட்டில் மிக உயர்ந்த பெரியார் மாளிகையின் இரண்டாவது மாடியினை அடைவோம்.

வாழ்க பெரியார் ! வளர்க பகுத்தறிவு !!

# சுப்பிரமணியம் ஸ்டோர்ஸ்

## கடை வீதி, தருமபுரி-2.

எங்களிடம்

மொத்தமாகவும் சில்லறையாகவும்
கைத்தறி, மில், சில்க், நைலான், நைலக்ஸ், டெரிலின்
மற்றும் திருமண விழாக்களுக்குத் தேவையான பட்டுப்
புடவைகளும, சரிகை வேட்டிகளும் விலை மலிவாகக் கிடைக்கும்.

சு. தங்கவேல்,
உரிமையாளர்.

நிரப்ப மதிப்பெண்கள் பெற, நிச்சயம் வெற்றி பெற
படியுங்கள்

# GOLDEN GUIDE

[9, 10 Standards English Texts]

# ரமணா உரை நூல்

[9, 10 வகுப்புத் தமிழ்ப்பாட நூல்களுக்கு]

எல்லாப் புத்தக விற்பனையாளர்களிடமும் கிடைக்கும்

வெளியீட்டாளர்கள் :

# ஜயம் கம்பெனியார்

## சென்னை-34.

மணியம்மையாரின் எப்போதும் சிரிக்கும் அந்த இனிய முகம் உள்ளேதென்படும். "என்னம்மா ? சாப்பிடலாமா ? இன்றைக்கு ஏதாவது விசேசமா ? கறி உண்டா ? அது இருக்குமென்றுதான் இந்தப்பட்டாளம் சுறு சுறுப்பாக என்பின்னால் வந்திருக்கு !"

அலுவலகத்தில் ஆசிரிய பீடத்தில் அமர்ந்து அந்தத்தோரணையில்காரியத்தில் கண்ணாகப் பணிகளைக் கவனித்தாரே அதே அய்யாதானா இவர் ! அல்ல அல்ல; இவர் இப்போது "தந்தை" பெரியார்.

சாப்பாட்டு மேசை முன் வரிசையாக அமர்வோம். மணியம்மையார் பரிமாறி முடிவதற்குள் அவர்கள் பாடு போதும் போதும் என்றாகி விடும். அவ்வளவு கேலியும் கிண்டலும் அங்கே தவழும். அய்யா துவக்கி வைப்பார் மிக மெதுவாக ! தவமணிராசன் தொடர்ந்து குரலெழுப்புவார். நண்பர் கருணாநிதி இடையில் நுழைந்து தவமணியை மேலும் தூண்டிவிடுவார். ஜனார்த்தனம் இதில் கலந்து கொள்ளாமல் விரைவாகச் சாப்பாட்டை விழுங்குவார். நான் சிரித்துக்கொண்டேயிருப்பேன். துவக்கி வைத்த அய்யாவோ எங்கள் அனைவரையும் ரசித்துக் கொண்டே சாப்பிடுவார். மணியம்மையார் பொய்யாகக்கோபித்துக் கொள்வார். ஒருவழியாக அமளி அடங்கும். அவ்வளவு சுவையாக அவர் சமைத்திருந்தும் கேலிக்கு ஆளாகலாமா ? தனக்குக் கடைசியில் கெட்டித் தயிர் தனியாக வைத்திருப்பார். எங்களுக்கு இவ்வளவுக்கும் பிறகு அதைப்பார்த்துப் பொறாமை ஓங்கும் !

இடம்மாறி உட்கார்வோம். அய்யா கட்டில் மீது; நாங்கள் எதிரே நாற்காலிகளில், தரையில்......இவ்வாறு இப்போதுதான் வகுப்பு துவங்கும். ஏதாவது ஒரு சந்தேகம் கேட்பதுபோல விஷயத்தைத் தொடங்கி விடுவோம். தமிழ் மொழியில் எழுத்துச் சீர்திருத்தம் எவ்வாறு செய்யலாம்; மனித இனத்தில் உறவுமுறை தேவையா; இந்தி நுழைவதால் தமிழ் கெடுமா, மக்கள் முன்னேறக் கடவுள் வேண்டுமா இப்படி ஏதோ ஒரு கேள்வியைப்போட்டுவிடுவோம். நீண்ட சொற்பொழிவு, தெளிவான விளக்கம், எளிய உவமைகள், ஏற்கனவே சிந்தித்துத் தாமே முடிவு கண்டுள்ள தீர்ப்புகள்...... நேரம் போவதே தெரியாது-மாலை வந்துவிடும்.

விடைபெற்றுக்கொண்டு மீண்டும் கச்சேரி வீதிக்கு வருவோம். அலுவல் பாக்கிகளை முடிப்போம். மாலையில் உலவிடச் செல்வோம். நண்பர்கள் நிறைய உண்டு; பொழுது போவது தெரியாது ; யாவும் இயக்கம் பற்றிய உரையாடலே.

இரவு உணவுக்குப்பின் நேசத்திற்கேற்ப அய்யாவின் விரிவுரை நீளும் ; சுருங்கும்; சில சமயங்களில் சிக்கல் நிறைந்த தலைப்பை எடுத்துக்கொண்டால் எங்களுக்குக் கூடத் தூக்கம் வந்துவிடும். ஆனால் முழுமையாக விளக்கங்களை முடிக்காமல் அய்யா போகவிடமாட்டார்.

நண்பர் கஜேந்திரன் அப்போதும் அதிகம் பேசமாட்டார். தானுண்டு தன் எழுத்துப் பணி உண்டு என்றுதான் இருப்பார். ஆங்கிலம் அழகாகத் தெளிவாகஎழுதுவார். அவரும் ஜனார்த்தனமும் சேர்ந்து Justicite ஆங்கில இதழை ஓட்டி வந்தனர். குடி அரசு அலுவலகத்தில் தங்கி, உறங்கி, எப்போதாவது குளித்து (நண்பர் கருணாநிதி மட்டும் விதிவிலக்கு-அவர் நாள் தவறாமல் குளிப்பவர்) காலையும் மாலையும் எதிர் வீட்டுச் சிற்றுண்டி வாங்கி அருந்தி, அய்யா வீட்டில் இருவேளை உணவு உண்டு தமிழகத்தில் சுயமரியாதை இயக்கத்தோழர்கள் எவ்வளவோ பேர் தந்தை பெரியாரின் மாணாக்கர் பட்டியலில் இடம் பெற்றுள்ளார்கள்.


இந்த நிரந்தரமான "குருகுல வாச" மாணவர் தவிர இடையிடையேவிடுமுறைக் காலங்களில் "மாணவர் பயிற்சி முகாம்" வேறு அய்யா நடத்தினார்கள். மாணவப் பருவத்தில் அவர்களுக்குப் பகுத்தறிவுப் பயிற்சி அளித்தால்தான் அவர்கள் பிற்காலத்தில் அறிவுள்ள சமுதாயத்தினைப் படைத்திட இயலும் எனக்கண்டறிந்த அய்யா அவர்கள் மாணவர்களிடத்தில் மிக்க ஈடுபாடு கொண்டு தாமே தமது சொந்தச் செலவில் உணவு உறையுள் முதலியன ஏற்பாடு செய்து எங்கள் வாயிலாக அநேக மாணவர் பயிற்சி முகாம்களை நடத்தினார்கள். தமிழகத்தின் பல்வேறு திக்குகளிலிருந்தும் ஆர்வமிக்க மாணவர்கள் திரண்டு வந்து பயிற்சி பெற்றுள்ளனர். தாமே எதிரில் இருந்து அவர்களுக்கு உணவு படைக்குமாறு அய்யா கட்டளையிடுவார்கள். சிறப்பான தலைப்புகளில் விரிவுரைகளும் ஆற்றுவார்கள்.

மிகப்பெரிய செல்வக்குடும்பத்தில் பிறந்தும் தாமே தக்க உதாரணமாகத் திகழ்ந்து அய்யா அவர்கள் கற்பித்த எளிமைதான்

அண்ணா அவர்களிடமும் அவர்தம் தம்பிமார் களிடமும் குடிகொண்டு விளங்கியது. ஆடம் பரங்களை வெறுத்தும், பகட்டான உடை களை ஒதுக்கியும், சிக்கனமாகச் செலவு செய்தும், குறிப்பிட்ட நேரந்தவறாது காரி யங்களை ஆற்றியும், நாணயம் நேர்மை கடைப்பிடித்தும், நம்பிக்கை உள்ளவர்பால் பொறுப்புகளைப் பகிர்ந்தளித்தும் அய்யா அவர்கள் வாழ்ந்து காட்டி வரும் வாழ்க்கை நெறிகளைப் பாராட்டதவர் யார் ?

"குருகுல வாசம்" செய்த காலங்களில் தனிப்பெருந்தலைவராக விளங்கியும் தாம் மூன்றாம் வகுப்புப் பெட்டியில் பிரயாணம் செய்வதும், மூட்டை முடிச்சுகளைப் "போர்ட்டர்" இல்லாமல் தாமே சுமந்து செல்வதும், பேருந்து வண்டிகளிலும், நடந் தும் ஊர்கள்தோறும் போவதும், நண்பர்கள் தருகின்ற கட்டுச்சோற்றினை வழியில் பய ணத்தின் போது உண்பதும், நான்கு முழ வேட்டியும், அரைக்கைச்சட்டையும் அணி வதும், பயணத்தின்பொழுது ரயில் பெட்டி யில் உட்கார்ந்தவாறே கைத்தடியில் தலை யைச் சாய்த்து உறங்குவதும், பிளாட்பாரங் களிலேயே தங்கியிருப்பதும், ஒற்றை மாட்டு வண்டியிலேயே பலநேரங்களில் ஊருக்குள் சவாரி செய்வதும் உடனிருந்து கண்டு, அனு பவித்து வந்துள்ளதால் உள்ளத்தில் படிந் துள்ள உயர்ந்த நோக்கங்கள்தாம் எவ்வ ளவு ? ஓய்வில்லாது மக்களுக்காகத் தொண் டாற்றி உழைக்கின்ற உழைப்பின் தன்மை தான் எத்தகையது ?

உலகத்தில் எந்த அரசியல் கட்சியில் தலைவருக்கும் தொண்டர்களுக்கும் இடை யே இப்பேர்ப்பட்ட குடும்பப்பாசம் நிலவிய தாக வரலாறு உண்டு? தொண்டர்களுக் கும் தம் வீட்டில் உணவளித்து உபசரிக்கும் தலைவர்கள் வேறு எந்த இயக்கத்திலாவது கேள்விப்பட்டிருக்கிறோமா ? தந்தையென் றும் அன்னையென்றும் அண்ணனென்றும் தம்பியென்றும், மாமன் என்றும் மச்சான் என்றும் உறவு முறையை உள்ளன்போடு கொண்டாடி, யார் யார் என்ன குலம் என்ன சாதி என்ன பிரிவு என்பதை எப்போதுமே அறிந்திடாமல் பழகி, பகுத்தறிவும் மூட நம் பிக்கையற்ற முன்னேற்றமும் குடும்பங்களில் நிலவிட வகைசெய்து, தமிழகத்தில் ஒரு தனித்தன்மை வாய்ந்த இயக்கத்தினைக் "குருகுலவாச" முறையில் வளர்த்து வரும் தந்தை பெரியார் காலத்தை வென்றவர்; காலத்தைக்கண்டவர், காலத்தைப்படைத் தவர் என்று நெஞ்சார வாழ்த்தி முடிக்கின் றேன். வணக்கம்.


வணக்கத்திற்குரிய

**தந்தை பெரியாரின்**

**92வது ஆண்டில்**

எங்கள் நன்றி, அன்புகலந்த
வாழ்த்துக்கள் !

**எங்கள் "தங்கவேல் பீடி"யை புகைக்கும் அன்பர்கள் எப்போதும் போல் புகைத்து, ஆதரவு கொடுக்கு மாறு வேண்டிக்கொள்கிறோம்.**

உரிமையாளர் :

**K. K. சின்னராசு,**

தங்கவேல் பீடி கம்பெனி,
சோலையார்பேட்டை.

# பெரியார் உருவாக்கிய சமுதாயப் புரட்சி

## ஏ.என். சட்டநாதன்

சமீபத்தில் நான் ஆற்றிய உரை ஒன்றில் உச்சத்தில் உள்ள மேட்டுக்குடியினர் என்றும் அடிமட்டத்தில் உள்ள இகழ்ந்தொதுக்கப்பட்ட வகுப்பினர் என்றும் இந்து மரபில் இருவகை தீண்டத்தகாதோர் இருப்பதாக நான் குறிப்பிட்டபொழுது,பலர் தங்கள் புருவங்களை நெரித்து உயர்த்தினர். உச்சத்தில் உள்ள பிராமணன் உடலளவிலோ சமூக அளவிலோ பிறரைத் தொட மாட்டான்; அவனது நிலை, யாரும் அவனைத் தொட முடியாதவண்ணம் தகர்க்கவொண்ணாததாகவும் உள்ளது. அடிமட்டத்தில் உள்ள தாழ்வுமனப்பான்மையில் ஊறிய மக்களுக்கு பல நூற்றாண்டு காலமாக அடக்குமுறையாலும் மதவிலக்குகளாலும் பிறயாரும் அவர்களைத் தொடவோ, பார்க்கவோ அல்லது பிறரை அவர்கள் அணுகவோ விடாதபடி சமூகத்திற்கு வெளியே ஓர் இகழ்ந்தொதுக்கிய அந்தஸ்தே ஒதுக்கப்பட்டது.

இரு துருவங்களாகவுள்ள இந்த இரு வகுப்புகளுக்கும் இடையே, பல்வேறு அளவில்—''டிகிரியில்'' இழிந்த மக்களாக உருவான தீட்டு காரணமாக மக்கள்தொகுதியின் பெரும்பகுதி உள்ளது. துருவங்கள் இரண்டும் நிலையானவை; இவற்றின் இடையே உள்ள மக்கள் சமூக ஏணியில் மேல் நோக்கி ஏற ஆச்சார அனுஷ்டானப்படி வரலாறு நெடுகிலும் போராடி வந்திருக்கிறார்கள்; ஆச்சாரங்கள், புராணம், கர்மம், பாவம், புண்ணியம் போன்ற இந்துமதத்தின் உள்ளே கட்டமைந்துள்ள சக்திகள் இந்தப் போராட்டக்காரர்களைக் கீழ் நிலையிலேயே அமுக்கிவைத்துக்கொள்ளப் பல்வேறு அளவில் எப்போதுமே தங்களை உறுதிப்படுத்துகின்றன.

மேலும், துருவங்களுக்கு இடையே உள்ள வகுப்பினர் தங்களை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டிக் கையாண்ட முறைகளும் கூட அதே ஆச்சாரங்கள், புராணம், கர்மம் போன்றவற்றின் மீது தான் நிலைகொண்டிருந்தன. ''தாழ்ந்த'' வகுப்பினர் ''உயர்'' வகுப்பு அந்தஸ்தை எய்துவதற்காகக் கையாளப்பட்ட இந்த முறைகள் 'சமஸ்கிருதமயமாககம்' (Sanskritization) எனப்படும். என்றபோதிலும்இந்தமுறைகள், மிகத்தாழந்த மட்டத்திலுள்ள தீண்டத்தகாதோருக்குஅனுமதிக்கப்படவில்லை;ஏனென்றால், ஏணியில் மேல் நோக்கி ஏறும் செயல்முறைக்கு குறைந்தபட்ச சாதித்தகுதி எப்போதுமே அவசியப்பட்டது.இந்த முறைகள் வரலாறு முழுவதுமே மாறுபடும் வெற்றிகளுடன் நடைபெற்று வந்திருக்கின்றன. ஆனால் மேல்நோக்கிய இப்போராட்டத்தின் ஓர் இன்றியமையாச்சிறப்பு அம்சம் என்னவென்றால் பிராமண அந்தஸ்தை யாராலும் வெற்றிகரமாக அடையமுடியாது என்பது தான். விசுவாமித்திரனின் கதையே இதற்குத்தக்க சான்று.

வெற்றிகரமான கொள்ளைக்கூட்டத்தினரும் சூறையாடிகளும் அதிர்ஷ்டம் மிக்க படைவீரர்களும் அரசுகளையும் பேரரசுகளையும் நிறுவிய பின்னர் தங்களைச்

தந்தை பெரியார் வாழ்க!

சுவைமிக்க

உணவு, பிரியாணி,

டீ, காபி,

சிற்றுண்டிகளுக்கு

டெலிபோன்: 404

# செல்வம் உணவு விடுதி

பஸ் ஸ்டாண்டு

தஞ்சாவூர்.

★

உரிமையாளர்: **M. A. கோயா.**

சத்திரியர்கள் என்று பிரகடனம் செய்து கொண்டனர்; எண்ணுவது ஒன்று பேசுவது ஒன்றான பிராமண மதகுருக்களும் நிலம், பசு, தங்கம் ஆகிய தட்சிணைகளைப் பெரு மளவில் பெற்றுக் கொண்டு இதற்குத் தேவையான மந்திரங்களை ஓதினார்கள் அதே நேரத்தில்,கலியுகத்தில் சத்திரியர்கள் யாருமே இல்லை என்றும் ஆளுபவர்கள் ஒன்று சூத்திரர்களாக அல்லது மிலேச்சர்க ளாகவே இருப்பார்கள் என்றும் நிறுவும் வண்ணம் பரசுராமனின் கதைகளையும் புராணங்களையும் அவர்கள் யாத்தனர். படாடோபமான இளவரசர்கள் தங்கள் மகுடங்களுடனும் சிம்மாதனங்களுடனும் தங்களை சந்திர-சூரியர்களின் வழித்தோன் றல்கள் என்று பிரகடனம் செய்து அஸ்வ மேதயாகங்களைச் செய்தனர்; அதன்மூலம் தங்களையும் தங்கள் மதகுருக்களையும் செல்வர்களாக்கினார்கள்; தங்கள் குடி மக்களையே தரித்திரர்களாக்கினார்கள்.

19ம் நூற்றாண்டின் கடைசிக் கட்ட பத் தாண்டுகளிலிருந்து தமிழ்நாட்டில் சமஸ் கிருதமயம் அல்லது மேல் நோக்கி எழும் இந்த முறை விஷ அலையாகப் பரவி வந்தது இந்த நூற்றாண்டின் ஆரம்பகட்ட பத்தாண்டுகளில் இந்த இயக்கம் அதன் உச்சகட்டத்தில் இருந்தது. நாடார்கள் பூணூல் அணிந்தார்கள்; தங்களைச் **சத்திரியர்கள்** என்று அழைத்துக் கொண டார்கள். வன்னியர்கள், வன்னியகுல **சத்திரியர்**களானார்கள். வாணியர்கள் (எண்ணெய் ஆட்டி விற்போர்) **வைசியர்** களானார்கள் தாழ்மையும் பணிவுமுள்ள தச்சர்களும் கொல்லர்களும் **விஸ்வ பிராம ணர்**களானார்கள் சமஸ்கிருத காவியங் களில் கொண்டாடப்படும் வசிஷ்டனுக்கு எதிராக இடையீடற்ற இயக்கம் ஒன்றை நடத்திய தங்கள் புராணவழி பிதாமகனின் முன்னுதாரணத்தைப் பின்பற்றி 'காப்பி' அடிக்கும் இக்கலையில் மிகச்சிறப்பாகச் செயல்பட்டார்கள்

வேறு பல வகுப்பினரும் சத்திரிய, வைசிய மூலாதாரம் தங்களுக்கிருப்பதாக உரிமை பாராட்டினார்கள் பர்வதராஜ குலம், அருந்ததியார் போன்ற புதிய புதிய சொற்கள் கண்டுபிடிக்கப்பட்டன! இந்த உரிமை பாராட்டல் அனைத்தும்ஆராய்ச்சி களினால் வலுவூட்டப்பட்டன; 'வர்ண' வரலாறுகள் வெள்ளமெனப் பெருகி புராண கால கதாநாயகர்கள், தெய்வங்கள், பழங்காலத்தின் குறிப்பிட்ட அரசகுடும்பங் களின் வழித்தோன்றல்கள் தாங்கள் என்று நிறுவத் துவங்கினர்.

இந்தக்கால கட்டத்தில்தான் திராவிடர் இயக்கம் பலம் பெற்றது; பிரம்மாண்டமான உருவுடன் பெரியார் அவர்கள் அரங்கில் தோன்றினார். சத்திரிய, பிராமண, வைசிய அந்தஸ்துகளை அடையவிரும்பிய பல்வேறு வகையினரும் சாதி அந்தஸ்து என்ற புரிந்து கொள்ள முடியாத எதிரியுடன் போரிட்டுத் தோற்ற பின்னால் தங்கள் சக்தியனைத்தும் இழந்துவிட்டதாக உணர்ந்தனர் இதற்குச் சரியான மாற்று முறை **பெரியாரின் தகர்ப்பு மந்திரமே**—சாதி இல்லை, பிரா மண மதகுரு இல்லை, புராணம் இல்லை என்பதே.

கடந்த அரை நூற்றாண்டு காலமாக மூடநம்பிக்கை, புராணம், மூட பக்தி ஆகிய வற்றுக்கெதிராக அவர் இடையறாத போரை நடத்தி வருகிறார் இதனால் நிச்சயமான விளைவு ஒன்று உள்ளது. தங்களைப் பிராமண, சத்திரிய, வைசிய மூலாதாரங்களிலிருந்து தோன்றியவர்க ளாக யாரும் இப்போது நிறுவிக்காட்டவோ உரிமை பாராட்டவோ முயல்வதில்லை அம்மாதிரிப்போலி ஏணியில் ஏறுவது தேவையற்றது என்றும் லாபமற்றது என்றும் இப்போது அனைவராலும் ஏற்கப் பட்டுவிட்டது. இத்தகைய போராட்டம் சாதி முறையை பலவீனப்படுத்துவதற்குப் பதிலாக அதைப்பலப்படுத்தவே செய்கிறது.

சாதியின் மீதான தாக்குதலையும், சமூக சமத்துவம் அடைதலையும் பிறவழி களில் சமூக மற்றும் தொழில்ரீதியில் மேல் நோக்கி நகரும் தன்மையை உறுதி செய்யும் வழிகளில் செய்யவேண்டும். இந்த வகையில் மக்கள் என்ன வெற்றி பெற்றிருக்கிறார் களோ அதற்கான மதிப்பீட்டின் பெரும் பங்கு பெரியார் அவர்களின் துணிச்சல் மிக்க தகர்ப்புமுறைக்கே சேரவேண்டும்.

சமூக மற்றும் தொழில் ரீதியில் மேல் நோக்கி நகரும் தன்மையை அடைவதற் கான படுநிச்சயமான வழி கல்வி மூலமே ஆகும். பழங்காலங்களில் கல்வி பஞ்சமர் களுக்கும் சூத்திரர்களுக்கும் மறுக்கப் பட்டது; அறியாமையும் கல்வி அறிவின் மையும் தங்களது மாமூல் நிலைமை என்று ஏற்கப்பட்டிருந்தது. பிரிட்டிஷ் அரசுபள்ளி களையும் கலலூரிகளையும் திறந்தவுடனே மேட்டுக்குடியினர் முந்திக்கொண்டனர்; அதில் பெற்ற ஆங்கிலக்கல்வியின் துணை யால் அரசு பதவிகளிலும், இந்தியர்களுக்கு

# இனிக்கும் செய்தி

**9, 10, 11 ஆகிய உயர் வகுப்பு மாணவர்களே!**

★ தமிழ் இரண்டாம் தாளில் வரும் எல்லாக் கேள்விகளுக்கும் விடையளிக்க

★ நிரம்ப மதிப்பெண் பெற்றிட

★ இலக்கண வினாக்களை ஒதுக்கிடும் பழக்கத்தை கைவிட

உங்களுக்கெல்லாம் ஒரே துணைவன்

# அறிஞர் தமிழ்த் துணைவன்

வெற்றிக்கு உறுதி! வாங்கிப் பயனடையுங்கள்!!

**கிடைக்குமிடம்:**

தொலைபேசி எண்: 75118

## ரேவதி பப்ளிஷிங் கம்பெனி

10, மதனகோபால் தெரு,

அபிராமபுரம் :: சென்னை-18.

அனுமதிக்கப்பட்ட சில தொழில்களிலும் அவர்கள் ஏகபோகமாக அனுபவித்தனர்

இந்த நூற்றாண்டின் முதல் கட்ட பத்தாண்டுகளிலும் கூட பட்டதாரிகளில் 70 சதவிகிதத்தினர் பிராமணர்களே; அரசு பதவிகளில் அந்த சதவிகிதத்தையும் விட அதிகமாக அவர்கள் பெற்றிருந்தது தவிர்க்க முடியாததாக இருந்தது பிராமண ஏகபோகம் என்று தம்மால் அழைக்கப்பட்டு வந்ததன் மீது பெரியார் அவர்கள் நல்ல அடி கொடுத்தார்; பிறரையும் ஆங்கிலக்கல்வி கற்குமாறு அறைகூவல் விடுத்தார். இந்த அழைப்பின் விளைவே நவீன மறுமலர்ச்சி. கிடைக்கக் கூடிய தொழில் வாய்ப்பைப் பல்வகைப்பட்டதாக்கியது கல்வி. சவரத்தொழிலாளி ஒருவரின் மகன் அல்லது நெசவாளி ஒருவரின் மகன், தான் ஆங்கிலக்கல்வி கற்றிருந்தால் இனிமேலும் சவரத் தொழிலாளியாகவோ நெசவாளியாகவே இருக்க வேண்டியதில்லை.

தொழில் ரீதியாகவும் அத்துடன்கூட சமூகரீதியாகவுமான மேல்நோக்கி நகரும் தன்மையை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு கல்வி அளித்தது. சாதி முறை இந்த அடியை வாங்கிக்கொண்டு சற்றுத்தள்ளாடியது; இப்போது அது தனது மாயா வேலை முறையை மீண்டும் சரிப்படுத்திக்கொண்டிருக்கிறது, சாதிகள் மறைந்துவிடவில்லை ஆனால் அவற்றின் கொடுமை மறைந்து கணிசமான அளவு நீக்குப்போக்கு ஏற்பட்டிருக்கிறது. இதுதான் சமூகப்புரட்சி—என்றாலும் முற்றுப்பெறாத புரட்சியே; ஆனால் இது தொடர்ந்து கொண்டிருக்கிறது. சாதிகளற்ற ஒரு சமுதாயத்துக்கே இது இறுதியாக கொண்டுசேர்க்குமா என்பது யாராலும் கூறமுடியாது இது இனம் காட்டும் குறியாக, ரத்த சம்பந்தமான அல்லது உறவிலான குழு ஒன்றாகத் தொடரக் கடமைப்பட்டது. அய்ம்பதே ஆண்டுகளுக்கு முன் நிலவிய நிலைமைகள் என்ன என்று நாம் நினைவில் கொண்டோமானால் இதுவும் கூட மாபெரும் சாதனை ஆகும். இதற்காக தென்னிந்தியாவின் மக்கள் இந்த பழம்பெரும் மனிதருக்கு- முதுபெரும் பெரியவருக்கு (Grand oldman) நன்றிக்கடன் பட்டிருக்கிறார்கள்.


## நவீன இராமாயணம்!




ஆச்சாரியாரின் இந்திரா எதிர்ப்பு என்பது தி. மு. க. வை எதிர்ப்பதற்கு ஒரு திரையே—**பெரியார்**

தொலைபேசி எண் : 283 தபால் பெட்டி எண் : 9

# தந்தை பெரியார் அவர்களின் 92-வது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



## முத்தையா உணவு விடுதி (பர்ம்)

M. U. V, டிரான்ஸ்போர்ட்ஸ்
M U. V. ரைஸ் & பிளவர் மில்ஸ்
M. ராஜன் & பிரதர், பேங்கர்ஸ்
திருச்செங்கோடு P. O. சேலம் மாவட்டம்

## திருச்செங்கோடு முத்தையா உணவு விடுதி & கோ.

பேமஸ் வெஜிடேரியன் & நான்வெஜிடேரியன்
திருச்செங்கோடு-சேலம் மாவட்டம்

## சங்ககிரி முத்தையா உணவு விடுதி

சங்ககிரி சேலம் மாவட்டம்
சென்னை—கள்ளிகட் நெடுஞ்சாலையில் லாரி, பஸ், டூரிஸ்ட் கார் நிறுத்தி சாப்பிட நவீன ஓட்டல்

# கருத்துக்கலை வாழ்க...!

## கலைமாமணி. ப. கண்ணன்

மனிதனுக்குரிய தனிச்சிறப்பு பகுத்தறிவு.அதனாலேயே மனிதன் உயர்ந்தான். பகுத்தறிவை மறநதுவிட்டு செயல்படும் சூழ்நிலையும் மனிதனுக்கு அதிகம். அதனாலேயே அவன் தாழ்ந்தான்.

மனிதத்தன்மைக்குரிய மானம், மரியாதை, அறிவு, ஆற்றல்களை மறந்துவிட்டான். வாழ்வுக்குரிய வளமனைத்தும் மாற்றானிடம் கொடுத்துவிட்டான்; அறியாமைச்சூழலில் அஞ்சி நடுங்கி, மடமை இருலில மண்டியிட்டுசூத்திரனாக—அடிமை விலங்காக— வாழ்ந்தான் தமிழ் மனிதன்! இன்னமும் வாழுகிறான்.

தனது இனம் மறந்தான்; நிலம் மறந்தான்; மொழி மறந்தான், கலை மறந்தான்; வரலாறு மறந்தான்; பண்பாடு மறந்தான்; தன்னையே தான் மறந்தான் தமிழன். சாதி மதச் சாக்கடையில் சருக்கி விழுந்து பன்றி போல் மெய்மறந்து மயங்கிக்கிடந்தான்! மனிதன் மிருகமானான்! வீதியில் நடமாடும் உரிமையுமின்றி தாழ்ந்துவிட்டான்.

இப்படிக் கிடந்த தமிழ் மகனைத் தட்டி எழுப்பி பகுத்தறிவு ஒளிகாட்டி, தன்மான உணர்வூட்டி புத்தம் புதிய உரிமை வாழ்வுக்கு, உண்மை வாழ்வுக்கு வழிகாட்டியவர் பகுத்தறிவுத் தந்தை பெரியார்! இது அறுபதாண்டு காலத்திய தமிழினத்து வரலாறு உலகம் ஒப்பிய வரலாறு. உண்மை வரலாறு!

பெரியார் தந்த பகுத்தறிவு ஒளியும், தன்மானவுணர்வும் மனித குலத்திற்குரிய என்றும் மங்கிடாத மாணிக்கக்கற்கள்! பெரியாரோடு இணைந்து, பெரியாரின் பகுத்தறிவுப்பாசறையிலே பயின்று வளர்ந்தவர், உயர்ந்தவர் பேரறிஞர் அண்ணா! மறைந்த மாமேதை அண்ணா அவர்களின் அறிவாற்றலும், அரிய கலைத்திறனும், அந்த மாணிக்கக்கற்களிலே புதிய ஒளிமயமான பட்டைகளைத் தீட்டிக் காட்டியுள்ளன. காட்டிப்பயன் விளைத்துள்ளன. நாம் காண்கிறோம்; களிப்படைகிறோம்! புத்துணர்வு பெறுகிறோம்!

அறிஞர் அண்ணா தீட்டிய நாடகங்கள், திரைப்படங்கள், இயல்- இசை- நாடகம் பற்றிய முத்தமிழ்க் கட்டுரைகள், கருத்துரைகள், விளக்கங்கள் யாவும் மனிதவுள்ளத்தில் எழுப்பிய புரட்சிப்புயலையும் அவற்றின்பயனையும்நினைந்து பார்க்கவேண்டும். அண்ணாவைப் பின் தொடர்ந்து கலைத்துறையில் கால்வைத்த அவரது அருமைத் தம்பிமார்களையும், அவர்களின் கலைப் படைப்புகளால் தமிழன் பெற்ற எழுச்சியினையும், ஏற்றத்தினையும் மறக்கமுடியாது? மறந்தால் கருத்துக் கலையுலகம் வாழ முடியாது.

எல்லாவகையிலும் நமது அறிவுக்கு விலங்கு பூட்டும் வைதிகத் திருமேனிகள், “கலை கலைக்காகவே” என்று கதைத்தனர். அதனை மாற்றி “கலை கருத்துக்காகவே” என்று திருத்தியமைத்த தனிப் பெருந்தலைவர் அண்ணா. அவர் கால்வழியில் வளர்ந்த கலைப் பாரம்பரியமொன்று

இருக்கிறது, தமிழ்நாட்டில். அவர்கள்செயற் படவும்—சிறப்படையவும்வசதி வாய்ப்புகள் மிகக் குறைவு. மறுப்பதற்கில்லை.

இயல், இசை, நாடகம், சிற்பம், ஓவியம், போன்ற கலைத்துறைகளில், அறியாமையை வளர்த்து நம்மை அடிமைகளாக்கும் வைதிக வருணாசிரமக் கருத்துக்களும், மனிதனை மிருகமாக்கும் மயக்கவுணர்வுகளுமே கொடிகட்டிப் பறக்கின்றன. அதன் மூலமாகத் தமிழன் மீண்டும் சாதி மதச் சாக்கடைக்கே இழுக்கப்படுகிறான். பகுத்தறிவு பரிகசிக்கப்படுகிறது. இந்த நிலைமை நீடிக்க விடலாமா? நாம் சிந்திக்கவேண்டும்.

பாட்டுப்பாடியும், நாட்டியம் ஆடியும், நாடகம் நடத்தியும் காட்டுகின்ற கலை வடிவங்களின் உணர்ச்சி மிகப்பெரிது. அவற்றைக் குறைவாக மதிப்பிட்டோ, அவற்றிடமிருந்து மக்களைப் பிரித்துவிடலாம் என்று கருதியோ நாம் இருந்தோமானால், ஏமாந்தவர்களாவோம். வைதிகமும் அடிமைப்புத்தியும் வளர்வதற்கு வழிவிட்டவர்களாவோம்.

மனிதனுக்குப் பகுத்தறிவு வேண்டும்; தன்மானம் வேண்டும்; நாட்டுக்குச் சுதந்திரம் வேண்டும்; சமநீதியும், சமதரும வாழ்வும் வேண்டும்; சாதி, மதம், பழக்க வழக்கம், புராணம்,இதிகாசம், மூடநம்பிக்கை போன்ற தீய சக்திகளிடமிருந்து விடுபடுவதற்கான பகுத்தறிவு வேண்டும்; விடுதலையுணர்வும், தாகமும் வேண்டும். இவை பெரியாரின் நிலையான கொள்கை இலட்சியம். இவற்றையே கலைத்துறை மூலமாக பரப்பினார் அண்ணா. படைத்தளித்தார் புதிய கருத்துக் கலையுலகை.

பேச்சாக, எழுத்தாக மட்டுமில்லாது பெரியாரின் கருத்துக்களும், அண்ணாவின் எண்ணங்களும் கலையாகவும், கலைச்செல்வங்களாவும் உருப்பெற்று, நாட்டில் என்றும் அழியாது நிலை பெறவேண்டும். அதற்குரியன பெரியாரின் தலை முறையிலேயே நாம் செய்தாக வேண்டும். இந்த விருப்பம் எனக்குமட்டுமன்று; பலருக்குமுண்டு.

நமையாண்ட மகேந்திரபல்லவன் மறைந்துவிட்டான்; அவன் நாட்டிய மாமல்லபுரம் சிற்பக்கூடங்கள் மறையவில்லை. தஞ்சை வேந்தன் இராசராசசோழன் மறைந்து விட்டான்; அவன் கட்டிய ஆலயங்கள் மறையவில்லை. மதுரையாண்ட திருமலை நாயக்கன் மறைந்து விட்டான்; அவன் அமைத்த "திருமலை மகால்" மறையவில்லை. பெருவேந்தன் கரிகாற்சோழன் மறைந்தான்; அவன் கட்டிய கல்லணை இன்றும் பொறியியல் பெருமைக்குச் சான்றாக நிற்கிறது! இப்படி எத்தனையோ சான்றுகள்.

என்றும் அழியாத பெரியாரின் கருத்துக்களும், காலத்துக்கேற்ற முறையில் கலை வடிவு பெறவேண்டும். அவை நிலையான வாழ்வு பெறவேண்டும். நாட்டின் எதிர் காலச்சந்ததிகள் அவற்றைக் கட்டியும், பார்த்தும் எழிலும் ஏற்றமும் பெறவேண்டும் இதற்கென கலைமேதை அறிஞர் அண்ணாவின் பெயரால் சென்னையில் சகதிவாய்ந்த கலை மாமன்றம் ஒன்று நிறுவவேண்டும். கருத்துக் கலையாக்கத்தினைப் பெருக்க வேண்டும். தமிழன் என்றும் பகுத்தறிவும் தன்மானமும் படைத்தவனாகவே வாழ வேண்டும்; பெரியாரின் பெயரும் புகழும் நிலைக்காவண்டும்.

பெரியாரின் தனயனும், அண்ணாவின் அருமைத் தம்பியுமான கலைஞர் கருணாநிதி அவர்களின் ஆட்சிக்காலத்திலேயே இந்தக்கலைக்கோட்டம் அமைதல்வேண்டும் தமிழ்நாடு உயர்தல் வேண்டும்; நிறைவேறுமா?

★


வாழ்க பெரியார்! வளர்க பகுத்தறிவு!


**கடவுள் இல்லவே இல்லை!!!**

பகுத்தறிவுப் பேரொளி தந்தை பெரியார் அவர்களின் 92-வது பிறந்ததின விழா நாளில் என் தாழ்மையான வணக்கங்களை அய்யாவின் காலடியில் சமர்ப்பிக்கின்றேன்.

**ஜி. துரைராஜ்,**

மிக்சர், பலகாரக் கடை,
127, முனிச்சாலை ரோடு-மதுரை-1.





















INTERNATIONAL EDUCATION YEAR 1970
AWARD
TO
THE SOCRATES OF SOUTH EAST ASIA
PERIAR E.V.R
PRESENTED BY:
M.KARUNANITHI
CHIEF MINISTER
TAMILNADU
PRESIDENT
Dr. TRIGUNASEN
MINISTER, GOVT. OF INDIA
K.ARIVAZHGAN,
UNESCO MANRAM.



# சரிதையிலோர் புது மனிதர்!

## பேராசிரியர் டாக்டர். வி.சீ.குழந்தைசாமி

ஒரு நாட்டின் பொதுவாழ்வில் தலைவர்களாக விளங்குவோர் இரு வகைப்படுவர். அரசியல் கட்சித் தலைவர்கள், இயக்கத் தலைவர்கள். இவர்கட்குள் ஆங்காங்கு ஒற்றுமை காணப்படினும், இவர்கள் அடிப்படையில் வேறுபட்டவர்கள். அரசியல் கட்சித் தலைவர்கள் மக்களது விருப்பு, வெறுப்புக்களை, துன்பந்துயரங்களை, அவர்களது அன்றாட வாழ்வின் கவலைகளைப் பிரதிபலிப்பவர்கள். மக்கள் மத்தியில் பரவலாகக் காணப்படும் ஆசைகட்கு, பிரச்னைகட்கு, ஒரு கொள்கை வடிவம் கொடுத்து அதை நிறைவேற்றப் பாடுபடுபவர்கள்; அல்லது பாடுபடுவதாகச் சொல்பவர்கள், அவர்கள் வலிமை, கட்சியின் பலத்தைப் பொறுத்தது. அவர்களது வெற்றியும் தோல்வியும் கட்சியின் வெற்றி தோல்வியோடு இரண்டறப் பிணைந்தவை. சுருங்கக் கூறின் அவர்கள் கட்சியின் தோளில் நிற்பவர்கள். அவர்கள் உயரம், ஏறி நிற்கும் தோளின் உயரத்தைப் பொறுத்தது.

இயக்கத் தலைவர்களின் நிலை வேறு. அவர்கள் பெரும்பான்மை மக்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிப்பவர்கள் அல்ல. அவர்களது எண்ணங்களை உருவாக்குபவர்கள். செல்லும் பாதையே சிறந்ததென்று கொள்ளாது, தேவைப்பட்ட வழி, திருப்பம் காண்பவர்கள். அவர்கள் மக்கள் வழிச் செல்பவர்களல்ல. மக்களை வழி நடத்துபவர்கள். அவர்கள் அரசியல் கட்சிச் சார்புடையவர்களாவும் இருக்கலாம், ஆனால் அரசியல் கட்சிகளின் வரம்புகட்குக் கட்டுப்பட்டவர்கள் அல்ல. அவற்றுக்கு அப்பாற்பட்டவர்கள்; கட்சியின் தோளேறி நிற்பவர்களன்று; கட்சிகளைத் தேவைக்கேற்பத் தங்கள் தோளில் தாங்கி நிற்பவர்கள். இன்று வித்திட்டு, நாளைத் தேர்தலில் அறுவடை தேடாது, வாழுங்காலத்தில் வித்திட்டு. வருங்காலத்திற்கு அறுவடையை விட்டுச் செல்பவர்கள். உலகின் பல பகுதிகளில், உலக வரலாற்றின் பல கட்டங்களில், சமுதாயத்தின் பல்வேறு கோட்பாடுகளின் அடிப்படையில் இயக்கத் தலைவர்கள் தோன்றியுள்ளனர். அப்படிப்பட்ட தலைவர்கள் பொதுவாகவே உயர்ந்த உள்ள உரன் கொண்டவர்கள் என்றாலும், சிறப்பாக, மதம், கடவுள், மற்றும் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகள், கோட்பாடுகள் இவற்றைத் திருத்த, செம்மைப்படுத்த, அவ்வப்பொழுது முயன்றவர்கள். மற்ற யாருக்கும் இல்லாத மனவலியும், சிந்தைத் தெளிவும், செய்கைத் துணிவும், தியாக மனப்பான்மையும் கொண்டவர்கள். இந்த வரலாற்றுப் பெருமக்கள் வரிசையில் இருபதாம் நூற்றாண்டின் பிரதிநிதியாக விளங்குபவர் பெரியார்.

தன்னலத்தார் கொடுமையால் நைந்து, சாதி, சாத்திரங்களின் இருள்மூடி, சமய, சம்பிரதாயப் பிடிகளின் இறுக்கத்திலே நலிந்த தென்னகத்துக்கு, ஒளியும், வாழ்வும், விடுதலையும் தர, அவர் கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக்கு முன்பு தொடங்கிய பயணம் பெரிது; அவர் செல்ல இருந்த பாதை நெடிது. வழியில் இருந்த துயரும், துன்பமும் துடைக்க அவருக்கிருந்த துணை சிறிது. அன்று அவர் "எனக்கு ஒருசிலரும்

போதும்; அதுவுமில்லை யெனில் நான் ஒருவனே போதும்,'' என்று துணிந்து தொடங்கிய, வரலாற்றுப் பெருமை கொண்ட பணியை, இன்றும் தொடர்ந்து செய்து வருகிறார். இடையில் அவர் கண்ட களங்கள் பல. பலரைத் துணைக்கொண் டார்; பலர் துணையை உதறித் தள்ளினார். புதிய கட்சிகளை அமைத்தார். இருந்த கட்சிகளில் பலவற்றை எதிர்த்தார். எதிர்த் தவைகளை ஆதரித்தார். அவருடைய நீண்ட பாதையில், மகத்தான குறிக்கோ ளில், மாபெரும் புரட்சி வாழ்க்கையில் இவை யெல்லாம் சிறுசிறு சங்கிலித்தொடர்கள். அவர் மேற்கொண்ட பணியின், அவரை ஆட்கொண்ட குறிக்கோளின், 'முழுமையும்' காண்போர் அவர் சென்ற பாதையின் 'முறையும்' காண்பர். மற்றபடி, அகலமறி யாது, ஆழம்காண இயலாது, 'சிறு சிறு பகு திகளை' எடுத்து, அலசி, ஆராய்ந்து, 'முன் னுக்குப்பின் முரண்' காண்பாரும் உண்டு. யானை கண்ட குருடர்கள் சிரஞ்சீவிகள். அவர்கள் என்றுமிருப்பர். எங்குமிருப்பர்.


எந்த நாட்டிலும், சமூக சீர்திருத்தவாதிக ளாக, சமய, மத எதிர்ப்பாளர்களாகத் திகழ்ந் தவர்கள், தங்கள் வாழ்நாளில் இன்னலுக்கு ஆளானார்கள். எதிர்ப்பையே கண்டார் கள். வருங்காலத்தில் நம்பிக்கை வைத்துத் தொடங்கிய பணியைத்தொடர்ந்து நடத்தத் தொண்டர்களை விட்டுச் சென்றார்கள். இது சாக்ரடீஸ் காலத்திலிருந்து நாம் பார்க் கும் வரலாற்று உண்மை. கடந்த இரண்டா யிரம் ஆண்டுகளாக அந்த நிலை மாறாமலே இருந்து வந்திருக்கிறது! அறிஞர்கள் மத்தி யில் மட்டுமே, தத்துவ ரீதியில் எழுதியும், பேசியும் வந்த பகுத்தறிவாளர் சிலருக்கு, பாராட்டும், ஒப்புதலும் கிடைத்திருக்கலாம். ஆனால் நேரே பொதுமக்கள் மத்தியில் சென்று; தங்கள் சீர்திருத்த முயற்சியைத் தொடங்கிய சிந்தனையாளர்கள் அனை வரும், புரட்சிவாதிகளாக வாழ்ந்தார்கள். எதிர்ப்புக்கிடையே வளர்ந்தார்கள். எனி னும் ஏற்கப்படாதவர்களாகவே மறைந் தார்கள். எதிர்காலம் மட்டுமே அவர்களைச் சிந்தனைச் சிற்பியாக்கிக் கௌரவித்தது. நன்றி செலுத்தியது. வாழையடி வாழை யாக வந்த இந்தப் 'புரட்சிவாதிகள் வரலாற் றிலே', ஒரு புது யுகத்தை ஏற்படுத்தியவர் பெரியார். எதிர்ப்புக்கும், ஏளனத்திற்கும் இடையே தொடங்கி, கல்லடி, கலகங்கள் என நலிந்து, 'ஒருசிலர் உடன்பாடு' என்ற நிலைக்கு வளர்ந்து, பெரும்பகுதியினர்க்குத் தந்தை பெரியாராகி, இன்று ஆளும் கட்சி யினர், அவர்கட்கு எதிர்தரப்பினர், படித் தோர், படியாதவர் என்ற எல்லாத் தரத்தின ரும் 'தென்னகத்தின் ஒரு தலைவர்' என்று சிறப்பிக்கும் அளவிற்குத் தமது தொண்டின் பயனை நாடு உணர்ந்திருப்பதை, ஒப்புக் கொள்வதை, அவர் காணுகிறார்.

அறுபது ஆண்டுகட்கு மேலாக, இரவு பகலென்று பாராது, ஓய்வு, ஒழிவு என்று கருதாது, பாராட்டும், பதவியும் தேடாது, பட்டி தொட்டிகளில், நாட்டில், நகரில், தமிழகத்தின் மூலைமுடுக்குகளனைத்தி லும், கூட்டம் கூட்டி, எடுத்துச்சொல்லி. இடித்துரைத்து, மறியல் நடத்தி, வழக்காடி அவர் நடத்திய தளராத, தயங்காத, நீண்ட போரின் பயனை அவர் இன்று காண்கிறார்; நாம் அநுபவிக்கிறோம். தமிழகத்தின் ஒவ் வொரு பிடி மண்ணிலும் அவர் வியர்வைத் துளிகளைக் காணலாம். இன்றையத் தமிழ் நிலத்தின் செயலில், சிந்தையில், வாழ்க்கை முறையில், வழக்கங்களில், தமிழ் மக்களின் அன்றாட வாழ்வின் ஒவ்வொரு கட்டத்தி லும் அவரது தொண்டின் விளைவுகள் பிரதி பலிப்பதைக் காணலாம். சிந்தனையாளர் களின் எண்ணங்கள் மட்டும்தான் அவரது சீர்திருத்தப்பணியால் தெளிவுபெற்றதென்ப தில்லை. பக்தர்களாக இருப்போர் தம் பக்தி கூட—குறையாவிட்டாலும், மறையாவிட் டாலும்—அவரது பகுத்தறிவு இயக்கத்தால் ஒரு புதுமை பெற்றிருக்கிறது.

"தென்னகத்தின் ஒருதலைவர்;
ஒருநூ றாண்டு
திரவிடத்தின் வளர்ச்சிக்கே
தன்னைத் தந்த
தன்னிக ரிலாத் தமிழர்;
இந்த மண்ணின்
**சரிதையிலோர் புதுமனிதர்**;
இருண்ட வானில்
மின்னலெனத் துவங்கியவர்;
வளர்ந்து யாங்கும்
விரிகின்ற சுடரான
வேந்தர் சூழ்ந்த
தன்னலத்தின் கோட்டையெலாம்
ஒருங்கு வீழச்
சாய்த்திட்ட பெரியார்"

அவர்கள் தமது 92வது ஆண்டில் அடி யெடுத்து வைக்கும் இப்புனித நன்னாளில், நான்கு கோடி தமிழ்மக்களும், பணிவுடனும, பற்றுடனும், தங்களது உண்மையான நன்றி யுணர்ச்சியையும், உளம் நிறைந்த வாழ்த் துக்களையும் தெரிவித்துக்கொள்வதிலே பெருமையும் பூரிப்பும் கொள்கின்றனர்.

★



# தமிழகத் தலைவர்க்குத் தலைவர்

பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார்

தமிழகத் தலைவர்களுக்கெல்லாம் தலைவர், தமிழகத் தேசீயத்தின் மூலமுதல்வர் நம் தந்தை பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள். உலகெங்கும் புகழ்மணம் வீசிய மாண்புகழ் அறிஞர் அண்ணா அவர்களையும், அவர்களது ஒப்பற்ற தம்பிமார்களையும், அவர்களது தி.மு. கழகத்தை உள்ளிட்ட எத்தனையோ மாபேரியக்கங்களையும் அலை அலையாக எழுப்பிய, எழுப்பி வரும் பேராற்றல் மிக்க பேரறிவுக்கடல் என்று அவரைக் கூறுவது மிகையாகாது.

புத்தர்பிரான், இயேசுநாதர், நபிகள் நாயகம், காந்தியடிகள் ஆகியவருடன் மட்டுமே உலக வரலாற்று வானில் இடம் பெறத்தக்கவர் எம் ஈரோட்டண்ணல்! அவர்கள் ஒவ்வொருவரிடத்திலும் அவர்களிலேயே அடுத்தவரிடம் காணமுடியாத தனிப்பெருஞ் சிறப்புகள் உண்டு. அதுபோலவே அந்த நால்வரிடமும்கூடக் காணமுடியாத தனிப் பெருஞ் சிறப்பு நம் பகுத்தறிவுச் செம்மலிடம் உண்டு என்று உறுதியாகக் கூறலாம். ஏனெனில் அவரளவு எதிர் நீச்சலிலேயே வெற்றி கண்ட தலைவரை உலக வரலாறு கண்டிருக்க முடியாது.

தமிழகத்தின் தந்தை என்று நாம் அவரைக் கூறும்போது, நாம் அவரைப் பெருமைப்படுத்திவிட்டதாகக் கொள்ளமுடியாது. ஏனெனில் தகுதியால் அவர் புதிய இந்தியாவின் தந்தை, புதிய ஆசியாவின் தந்தை, புதிய உலகின் தந்தை என்று கூறத்தகும் தகுதிகள் அவரிடம் மண்டிக் கிடக்கின்றன. பண்டைக் கிரேக்க நாட்டின் சாக்ரடீஸ், உரோமநாட்டின் மார்க்கஸ் அரிலியஸ், பிரான்சு நாட்டின் ரூசோ, வால்ட்டேர், ஆங்கில நாட்டின் பெர்னார்ட்ஷா, நார்வே நாட்டின் இப்சன், ருஷ்ய நாட்டின் கார்க்கி, அமெரிக்க நாட்டின் வால்ட்விட்மன், இன்னும் பகுத்தறிவுலக சோதிகளான இங்கர்சால், பெர்ட்ரண்ட்ரஸல் ஆகியோரின் பண்பு மலர்களையெல்லாம் ஒரு கோவையாகத் தொடுத்த பண்பார்ந்த படலை மாலையாக அவர் திகழ்ந்தார். அத்தகைய வரலாற்றுப் பெருமகனார் இந்தியாவுக்கும் உலகுக்கும் செய்ய வேண்டிய சேவைகளையெல்லாம் இந்தத் தமிழகத்துக்குள்ளேயே செய்து செறிவுபடுத்தியுள்ளார்.

தமிழகத்தின் செறிந்த அடிமை,மடிமை, மடமை அவரது உலகச் சீர்திருத்த ஆற்றல் முழுவதையும் தன் சீர்திருத்தத்துக்கே பயன்படுத்திக்கொள்ளுமளவு அடர்த்தியங்கதாகி வுள்ளது. ஆனால் பெரியார் தமிழகத்துக்கு அறிஞர் அண்ணா போன்ற, கலைஞர் கருணாநிதி போன்ற, நாவலர் நெடுஞ்செழியன் போன்ற, இன்னும் எண்ணற்ற தி.மு.க., தி.க., தன்மான இயக்க, தமிழ் ஆராய்ச்சித் துறைக் கதிரவன்களைத் தமிழகத்தில் படைத்தாக்கி, அவர்கள் மூலம் தம் வாழ்நாளுக்குள்ளேயே இந்திய வரலாற்றை, ஆசிய வரலாற்றை, உலக வரலாற்றை, மாற்றியமைத்துத் தருவார் என்ற திட நம்பிக்கை எமக்கு உண்டு. சென்னையிலும் திருச்சியிலும், கோவையிலும் மட்டுமன்று; இந்திய நகர்களில், மேலையுலக நகர்களிலெல்லாம் நம் பெரியார் சிலைகள் அறிவுருக்களாக மிளிரும் காலத்தை நாம் விரைவில் காண இருக்கிறோம்.

இந்திய விடுதலை இயக்கத்தை மககள் இயக்கமாக்கிய பெருமையில் காந்தியடிகளுக்குக் குறையாத பெருமை தந்தை பெரியாருக்கு உண்டு. கீழ் திசையில் புத்தர் பெருமானுக்குப்பின் மறைந்து கிடந்த பகுத்தறிவுப் பேரொளியைப் புதுச் சோதியுறப் புதுக்கிய பெருமையோ அவர் ஒருவருக்கே உரியது. தாழ்த்தப்பட்ட ஆசிய மக்களை உயர்த்தும் பணிக்குக் கொடியேற்றி வைத்த ஒரே கீழ்த்திசை வீரர் அவர்!

படியாதமேதை என்ற வகையில் நபிகள் நாயகத்தை ஒத்தவர் எம் ஈரோட்டு நாயகம்! அராபிய மக்களிடையே நபிகள் நாயகம் அவர்கள் கண்டு கிட்டிய அதே வகையான அறிவுப் பெருவெற்றியை அவர் தமிழகத்திலே நாட்டியுள்ளார்—வருங்காலத் தமிழக வரலாறு, ஆசிய வரலாறு எழுதுவோரே இதனை முழு அளவில் கண்டு அளவிடுதற்குரியவர் ஆவார். உலகில் இஸ்லாமியப் பெருந்தத்துவ ஞானிகளுக்கு, இஸ்லாமியப் பெருங் கவிஞர்களுக்கு அடியெடுத்துக் கொடுத்த படியாத மேதை நபிகள் நாயகம்! மறுமலர்ச்சித் தமிழகத்தில், அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், கலைமாண்குரிசில் மு. கருணாநிதி ஆகிய மேதைகளையும், அவர்கள்மூலம் எண்ணற்ற தத்துவ ஞானிகளையும், புதுப் பாடம் படித்துப் புதுப் பக்கம் தொடங்க வைக்கத்தக்க கடவுண் மாமேதையாகத் தத்துவப் பெருமுரசம் கொட்டி ஆர்ப்பரித்து வருகிறார் அறிவுலக அரிமானேறாகிய தந்தை பெரியார்!

தந்தையர் தந்தையாகிய தமிழன்னை ஈன்ற தறுகண் சேயாகிய பெரியாரின் உடலினுள்ளே வருங்காலத் தமிழகத்தின் பெருமைகள் எல்லாம் அடங்கிக் கிடக்கின்றன. அவற்றைப் பேணியூக்கிய அன்னை, அவற்றைப் போற்றி வளர்த்து வரும் அன்னை தமிழனனையின் தனிப் பாராட்டுக்குரியவர். அன்னை வாழ அவர் வாழ்க, அவர் வாழத் தமிழர் திரண்டெழுந்து அவர் அறிவியக்க மரபு வளர்க்க என மனமார விரும்புகின்றேம், வாழ்த்துகின்றேம்!

தொண்ணூற்று இரண்டு வயதில் புகும் பெரியார் புகழ் வாழ்வு, இன்னும் ஒரு தொண்ணூற்று இரண்டு ஆண்டு புதுப்புகழ் புதுக்கி உலகெலாம் பகுத்தறிவுப் பயிர் தழைப்பிக்கும் வான் முகிலாக வளம்பெறுமாக!

———


**தந்தை பெரியார் அவர்களது 92ம் பிறந்த நன்னாளில்**
**எமது வாழ்த்துக்கள்**

# H. அஹ்மத்பாஷா,

**Prop: M/S. மஹ்பூப் டெக்ஸ்டைல்ஸ்,**
(மேட்டூர் பியர்ஸல்ஸ் Ltd.)

★

**Stockist: M/S. K. C. P. சிமிண்ட்ஸ்,**
**33/8, மவுண்ட் ரோடு, சென்னை-35.**



# ஏ, இந்திய மனிதா...!

பேராசிரியர்: சாலை இளந்திரையன்

பானை வயிற்றுக்கு இடையூறு இன்றி,
மடமை இருளுக்கு உடைபாடு இன்றிப்
பூனை எனஒரு புதுமை நுழையுமா?—
புகல்கிறா யோ,இதை இந்திய மனிதா!
சாதிக் கல்முள் பரப்பிய தரையில்
நாட்பட்ட மூடத் தனம்வளர் சோலையில்,
சோதிச் சுகநலப் பொதுமை தழையுமா?—
சொல்கிறா யே,இதை இந்திய மனிதா!

முளைத்த சாமிக் குலம்அழி யாமல்,
மூத்த பழமைப் பிடிநெகி ழாமல்.
கிளைத்துச் சோச லிசம்வரும் என்றாய்:—
கிறுக்கா, பிதற்றா, இந்திய மனிதா?—
'அழியத் தக்கவை அழிந்தா லன்றி
அரும்பத் தக்கவை அரும்பா' எனவே
மொழியத் துணிந்தோர் முரடர் என்றால்,
மூதறி வாளர்சொல் வழிதான் எதுவோ?

பெரியார் சொல்வது நாத்திகம்,- உண்மை;
பிறர்கள் என்னதான் வழிசொல்லு கின்றீர்?
சரியாய்ப் பாதை சமையா முன்னம்
சமநலம் என்பது நடப்பதெவ் வாறு?
பண்பாடு பேசிப் பகட்டுகள் காட்டிப்
பலநூறு ஆண்டிந்த மானுடக் குலத்தை
மண்ணோடு மண்ணாய் மடித்ததை அல்லால்
வளர்வென்ன கண்டார், மதச்சாதிக் காரர்?

காலை இடறுது கல்லுச் சாமி,
கையைத் தளையுது பண்டைச் சாதி,-
மேலே செல்லும் விதமறி யாமல்
வீணில் நிற்கிறான் இங்குள்ள மனிதன்!

சிந்தனைத் தடத்தைச் சிதைத்துக் குலைத்துச்
செழுமா னுடத்தின் நடையையே மாற்றிட
வந்தகாட் டாறுகள் மதமும் சாதியும்;—
வைத்துக்கொண் டேவழி நடப்பதெவ் வாறோ?

இவ்வீடு ஒருவழி அவ்வீடு ஒருவழி—
இப்படிச் செய்தவை நம்மதச் சாதிகள்!
எவ்வாறு, இந்த இணையா மனைகளில்,
இணைச்செயல் சோச லிசம்குடி புகுமோ?
நெற்றி மீதிலே நிற்குது வேற்றுமை,
நெஞ்சின் மீதிலே ஆடுது வேற்றுமை;—
வெற்றி எப்படி விளையும், இத்தகு
விந்தைப் பன்மைகள் வீங்கிய காட்டிலே?

காட்சியில் வேற்றுமை, கேள்வியில் வேற்றுமை,
கருதிடக் கிடைத்துள நூல்களில் வேற்றுமை;—
மாட்சிகள் ஏறிய சோச லிசப்பூ
மணமுறப் பூக்குமோ இந்தவெங் காட்டிலே?
வேற்றுமை என்னும் விலங்கறுக் காமல்,
'மேநிலம் என்னும் சோச லிசத்துக்கு
ஏற்றுவேன்!' என்றே எவரோ சொன்னால்,
இந்தியத் துள்ளோர் ஈரறி வாளரோ?..


**INDO-CEYLON HOTEL**
THANJAVUR

**இந்திய-இலங்கை ஹோட்டல்**

**84, மார்க்கட் ரோடு, மணிக்கூண்டு**

**தஞ்சாவூர்**

**சாப்பாடு, பிரியாணி வகைகளுக்குச் சிறந்த இடம்.**

உரிமையாளர்: **K. சுவாமிநாதன்**

# நான் காணும் பெரியார்!

## டாக்டர் எச். எஸ். பட்

பெரியார் அவர்களுடன் எனது முதல் சந்திப்பு என் உள்ளத்தில் நீங்காத ஒரு நினைவினை ஏற்படுத்தியிருக்கிறது. அவரைப்பற்றி வர்ணிக்க "பெரியார்" என்ற சொல் பயன்படுத்தப்படுவதை நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன். ஆனால் அவர் அப்படிப் 'பெரியாராக' இருக்க என்ன காரணம் என்று அவரைச் சந்தித்ததற்கு முன்னால் நான் எப்போதும் வியந்ததுண்டு. இதற்குக் காரணம் எனக்குத் தமிழ் படிக்கத் தெரியாது என்பதால் நான் உண்மையைக் காணத் தவறியதாக இருக்கலாம். சிலதடவைகள் சந்தித்துவிட்டபடியால் அவரது பெருந்தன்மையைப் பற்றிய உண்மையையும் அவருக்குப் பின்னேயுள்ள ரகசியத்தையும் இப்போது நான் புரிந்துகொண்டிருக்கிறேன்.

விஷயங்களை நோக்குவதில் ஏறத்தாழ குழந்தை போன்ற மனோபாவம் கொண்டிருக்கும் அவர் முன்னேற்றத்துக்கான விஷயங்களைப் பற்றி அறிந்துகொள்ள எவ்வளவோ ஆர்வமும், ஆராய்ச்சி மனப்பான்மையும் உள்ளவரா வார். ஓர் எளிமையான போர் வீரர் போல மூலாதாரமான கண்ணோட்டத்துடன் உள்ள அவர், தம் கருத்தை எடுத்துக்கூறுவதில், எவருக்கும் அஞ்சுபவராகவோ, எவரொருவரின் தயவுக்கு ஏங்குபவராகவோ காணப்படுவதில்லை.

முட்டி மோதுகின்ற சாலைகளில், கலகலத்துப் போயிருக்கும் தமது ஸ்டேஷன் வாகனில் தமக்கே உரித்தான பாணியில் ஓய்வெடுத்துப் பழக்கப்பட்ட அவர், இன்றுங்கூட அனேகமாக தினந்தோறும் 200 மைலுக்கு மேல் சிலவேளைகள் பிரயாணம் செய்கிறார்.

வரிசைக்கிரமமாக எதிர் நோக்கியுள்ள பல பிரச்னைகளைத் தீர்க்க உழைக்க வேண்டுமென்று மக்களை ஊக்குவிப்பதற்காகவும், மதக்கொள்கைகள் மூடநம்பிக்கைகள் ஆகிய தளைகளை அறுத்தெறிய மனத்திட்பம் இல்லாதபடி சிறுமை உள்ளம் கொண்டிருப்பதற்காக மக்களைக் கடிந்துரைக்கவும், கடினமாக உழைக்கும்படி அவர்களை உற்சாக மூட்டவும், அவர்களிடையே கட்டுப்பாடு ஏற்படுத்தி காலத்தோடு ஒட்டி ஒழுகவும், காலத்தை, உணவை, சக்தியை, விரயப்படுத்துவதைத் தவிர்க்கவும், தேசத்தைத் தேக்கப்படுகுழிக்குக் கீழே தள்ளும் பலவீனங்களை ஒழிக்கவுமே அவர் சூறாவளிச் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.

**எவ்வளவு அதிகம் பெரியார் பயணம் செய்கிறாரோ, உரை நிகழ்த்துகிறாரோ, எழுதுகிறாரோ அந்த அளவு அவரது சக்தியும் மனோ வலிமையும் 92 வயதிலும் கூட மீண்டும் உயிரூட்டப்படுகின்றன.**

விரக்தியான உணர்ச்சியிலிருந்து விடுபட்டு மக்களை மேலெழும்பச் செய்யவேண்டும் என்ற தமது லட்சியத்திற்காக உயிர் வாழ்கிறார்; வேறெதற்காகவும் அல்ல என்று நான் நம்புகிறேன்.

அவர் தமது உரைகளில் கண்ணுக்குப் புலப்படாத லட்சியங்களின் அடிப்படையில் —பொருள் பிடிபடாத சொற்களைப் பயன்படுத்துவதை நான் கேட்டதே இல்லை. எனவே, இயல்பாகவே அவரை ஒவ்வொருவரும் புரிந்து கொள்கிறார்கள். அவரைச் சுற்றிலும் வியாபித்திருக்கும் கருணையும், அன்பும், தாழ்மையுமான சூழ்நிலை சதா அவ

ருடன் இருக்கும் அவரது துணைவியார் மணியம்மையார் அவர்களால் வளர்க்கப்பட்டிருப்பதை அவரைப்பற்றி எழுதப்பட்டிருக்கும் எழுத்துக்களைப் படிப்பதைவிட அவரை நேரில் சந்தித்தால் தான் நம்பக்கூடியதாக இருக்கும்.

வரலாற்றில் ஒரே ஒரு பெரியார் தான் இருப்பார்; அவர் பெரியார் ஈ. வெ. ராமசாமியாக மட்டுமே இருக்க முடியும். தென்னிந்திய வரலாற்றின் இந்தக் கால கட்டம் "பெரியாரின் காலகட்டம்" என்று பொருத்தமாக அழைக்கப் படலாம்; நம் காலத்தில் உள்ள மிகக்குறைந்த அளவிலான பெரிய மனிதர்களில் பெரியாரும் ஒருவர் என்பதையும் அவரைப் பின்பற்றுவோருக்கும் பாராட்டுவோருக்கும் ஒரு தெய்வ மனிதராக இருப்பது எப்படி என்பதையும் நான் இப்போது பூரணமாகப் புரிந்துகொண்டிருக்கிறேன்.

★

**மலத்தில் அரிசி பொறுக்கலாமா ?**

கம்பராமாயணம் அரிய இலக்கியமாய் இருக்கிறதாகச் சொல்கிறார்கள். இருந்து என்ன பயன்? ஒருவன் எவ்வளவு தான் பட்டினி இருந்தாலும், மலத்திலிருந்து அரிசி பொறுக்குவானா? அதுபோல்தானே கம்ப இராமாயண இலக்கியமும் இருக்கிறது! அதில் தமிழ் மக்களை எவ்வளவு இழிவாக குறிப்பிட்டிருக்கிறது! சுயமரியாதையை விரும்புகிறவன் எப்படிக்கம்பராமயண இலக்கியத்தைப் படிப்பான்? இன்று கம்ப இராமாயணத்தால் தமிழ் மக்களுக்கு இலக்கியம் பரவிற்றா என்று நடுநிலையிலிருந்து யோசித்துப் பாருங்கள்.

**—தந்தை பெரியார்**


வாழ்க பெரியார் ! பெரியார் ஆண்டு 92.

மூடநம்பிக்கை இருளகற்றி, பகுத்தறிவு ஒளி பரப்பிய தந்தை பெரியார் மேலும் பல ஆண்டு வாழ்ந்து நமக்கு நலம் பல ஏற்படச் செய்ய விரும்புகிறோம்.

Lion, ம. பெ. முத்துக்கருப்பையா, பெரியகுளம்.

**வாணிகத் தொடர்புகள் !**


# M. P. முத்துக்கருப்பையா ஆட்டோமோபைல்ஸ்

(பெரியகுளம் பூரண உரிமை)

ஆனந்த் ஆட்டோ ஸ்டோர்ஸ்—தேனி பார்ட்டனர்.
ஆனந்த் ஹார்டுவேர்ஸ்—பெரியகுளம் ,,
ஆனந்த் ஆட்டோ ஸ்டோர்ஸ்—போடிநாயக்கனூர் ,,

**பொதுநலத் தொடர்புகள் :**

தலைவர் : திராவிடர் கழகம், பெரியகுளம்.
டைரக்டர் : லையன்ஸ் கிளப் ,,
செயலாளர் : நகர் நலச் சங்கம் ,,
செயலாளர் ; சோ. கு. ஆயக்கட்டுதாரர்கள் சங்கம், பெரியகுளம்
பொருளாளர் : அய்ந்தொழிலாளர் சங்கம், பெரியகுளம்
சர்வாதிகாரி : பெரியசாமி பூரணத்தம்மாள் தரும ஸ்தாபனம், பெரியகுளம்
நிர்வாகி : ஆனந்த் அற நிறுவனம், பெரியகுளம்.



# கோயில்கள் ஏற்பட்டது எப்படி?

## பெரியார் ஈ.வெ.ரா

— ஓர் ஆராய்ச்சி —

உலகில் எங்கும் இருப்பதைவிட இந்தியாவில் தான் அதிகமான ஆலயங்கள் இருக்கின்றன. இந்தியா முழுமைக்கும் பார்த்தால் தமிழ் நாட்டில்தான் அதிகமான பெரிய ஆலயங்கள் (கோவில்கள்) இருக்கின்றன.

இந்தப்படி அதிகமான பெரிய ஆலயங்கள் கட்டப்பட்டிருப்பவையெல்லாம் பெரிதும் அக்கால அரசாங்க அரசர்களாலேயே கட்டப்பட்டவையாகும்.

இதற்குக் காரணம் என்னவென்றால் அக்காலத்தில் இந்த ஆலயங்களின் மூலம் அரசாங்கத்திற்கு பணம் (நிதி) வருவாய்க்கு வழி செய்து கொள்ளும் ஏற்பாடு இருந்திருக்கிறது என்பதுதான்.

எது போலென்றால் சுமார் 40, 50 ஆண்டுகளுக்கு முன் வரையில், அரசாங்க நிதி (''வரி'') வசூலுக்கு அரசாங்கமே மது (கள்ளு) க் கடைகளை ஏற்பாடு செய்து அதை வியாபாரம் போல் செய்து பணம் சம்பாதித்து, வரி நிதியோடு சேர்த்து வந்தது போலவே யாகும். அதனாலேயே கோவில் கட்டுவது என்பதை அரசாங்கத்திற்கே உரிமையாக வைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அரசாங்க அனுமதியில்லாமல் யாரும் கோவில் கட்டக்கூடாது என்கிற நிபந்தனையும் இருந்து வந்திருக்கிறது. இதற்கு ஆதாரம் நம்தேசத்தில் சுதேச சமஸ்தானங்கள் இருக்கும் வரை அந்த ''அரசாங்க அனுமதியில்லாமல் யாரும், எந்த கோவிலையும் கட்டக் கூடாது'' என்ற நிபந்தனை இருந்து வந்திருப்பதே யாகும்.

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன் சாணக்கியர் என்ற ஒரு பார்ப்பனர் பொருளாதார நிபுணராக இருந்தார். அவர் உண்டாக்கிய 'அர்த்த சாஸ்திரம்' என்னும் நீதி நூலில் இதைப்பற்றி விளக்கியுள்ளார். இந்த சாணக்கிய அர்த்த சாஸ்திரம் என்னும் நூலானது **மனுதர்ம சாஸ்திரம், யாக்ஞவல்கியர் ஸ்மிருதி** ஆகிய நூல்களுக்கும் முந்தியதாகும் என்பது ஆராய்ச்சியாளரின் முடிவு. இதிலிருந்து மனு யாக்ஞவல்கியர் முதலிய நீதி நூல்களின் ஆயுள் சுமார் 2000 ஆண்டுகளுக்கு உட்பட்டதென்றே தெரிகிறது.

இந்த சாணக்கிய அர்த்த சாஸ்திரத்தில் ''மத சம்பந்தமான ஸ்தாபனங்களை மேற்பார்வை செய்யும் அரசாங்க அதிகாரி நகரங்களிலும், கிராமங்களிலும் உள்ள ஆலயங்களுக்குச் சொந்தமான சொத்துக்களின் வரும்படிகளையும், கோவில்களுக்கு பக்தர்களிடமிருந்து பணமாக வசூலித்து, அந்தப்படி வசூலிக்கப்படும் பணத்தையும் அரசாங்க வருவாய் நிதியுடன் சேர்க்கவேண்டும்'' என்ற விதிகள் இருந்திருக்கின்றன.

### புதிய வருவாய்த் திட்டம்

அரசாங்கத்திற்குப் புதிய வருவாய்த்திட்டங்களாக மக்களை ஏமாற்றி வசூலிக்க பல திட்டங்கள் இருந்தன.

ஒரு இரவில் பொதுமக்கள் யாருக்கும் தெரியாமல் ஒரு கடவுளை அல்லது மேடையை ஏற்படுத்தி, அதைத் தானாகத்

தோன்றியது என்று விளம்பரப்படுத்தி, அதை வணங்கினால் பல கெடுதிகள், வியாதிகள் விலகுமென்று கூறி திருவிழாக்கள் முதலியன நடத்தி அதன் மூலம் பணம் சம்பாதித்து பொக்கிஷத்தில் சேர்க்க வேண்டியது.

அரசாங்க ஒற்றர்களை விட்டு ஒரு மரத்தில் பிசாசு, முனி இருப்பதாக பொது மக்களிடம் பயத்தை ஏற்படுத்திவிட வேண்டும். பிறகு இதை விரட்டவும், திருப்தி செய்யவும் பெரிய சாந்தி விழா நடத்தி பெருந் தொகை வசூலித்து பொக்கிஷத்திற்கு சேர்த்துவிட வேண்டும்.

அரசரது ஒற்றர்கள் சந்நியாசி மாதிரி வேடம் பூண்டு இந்த தந்திரத்தைச் செய்து பணத்தை வசூலிக்க வேண்டியது. இவற்றால் "பிசாசு நகரத்தை விட்டுப் போய்விடுகிறது. பணம் அரசரது பொக்கிஷத்திற்கு சேர்கிறது. அந்தக் காலத்தில் அரசனுக்குப் பணம் தேடிக்கொடுக்கும் வேலை அதிகாரிகளுக்கும் கடுமையான வேலையாகவே இருந்திருக்க வேண்டும்.

மற்றும் பாம்பைக் காட்டி பணம் பறிக்கும் தந்திரம் இதைவிட விசித்திரமானது; இது இன்றுங்கூட சிறிது மாற்றத்துடன்-ஒரு கோவிலிலாவது-இருந்து வருவதாகத் தெரிகிறது. சாணக்கியர் காலத்தில் "தீர்த்தம்" எவ்வாறு பயன்படுத்தப்பட்டிருந்குமென்பதை எளிதாக உணர்ந்து கொள்ளலாம். சாதாரணமாக எளிதில் இவ் விஷயங்களை நம்பாத மக்களிடத்தில் தான் இந்த "தீர்த்தம்" உபயோகிக்கப் பட்டது. இதை அவர்களுக்கு நம்பிக்கை யூட்டும் "மருந்"தாக உபயோகித்தார்கள். ஆனால் இந்த தந்திரங்களை யெல்லாம் அரசர்களுடைய காரியத்திற்காக உபயோகித்தார்களே யன்றி இன்று நடப்பதுபோல் ஒருசிலருடைய சுயநல வாழ்வுக்காகவன்று என்பதை ஞாபகத்திலிருத்திக்கொள்ள வேண்டும். தந்திரம் இரண்டும் ஒன்று தான்.

"பார்ப்பான் தன்னலத்தையும் ஆதாயத்தையும் கருதி கோவில்களில் ஏமாற்றிப் பணம் பறிக்க எவ்விதத் தந்திரத்தையும் உபயோகிப்பான்" என்று பிரஞ்சு பாதிரியான கற்றறிந்த ஆபி டுபாய் ஒரு நூற்றாண்டுக்கு முன் எழுதியிருக்கிறார். மேலும் சாணக்கியர் கூறுவதாவது:-

## அற்புதங்கள் உற்பத்தி

"அரசனது தோட்டத்தில் ஏதாவது ஒரு மரம் பால் வடித்தாலாவது அல்லது அகாலமாகப் பூக்கவோ, காய்க்கவோ செய்திருந்தாலாவது அதில் கடவுள் தோன்றியிருக்கிறார் என்று பொது ஜனங்களிடம் காட்டி பிரசித்தப் படுத்தவேண்டும்".

"அல்லது ஒரு கிணற்றில் அனேக தலைகளையுடைய பாம்பு ஒன்று இருப்பதாகச் சொல்லி அதைப் பார்க்க வருபவர்களிடமிருந்து ஒற்றர்கள் பணம் வசூலிக்கலாம்".

"ஒரு பாம்பு விக்கிரகத்தில் துவாரமிட்டோ, அல்லது கோவிலின் இருட்டு மூலையிலோ, அல்லது ஏதாவது பொந்திலோ பசியால் வாடிக் கிடக்கும் பாம்பு ஒன்றை வைத்து, ஜனங்களைப் பார்க்கச் சொல்லி பணம் வசூலிக்கலாம். இம்மாதிரி தந்திரங்களை எளிதில் நம்பாத ஜனங்களுக்கு மயக்க மருந்து கலந்த நீரைத் தீர்த்தமென்றும், பிரசாதமென்றும் சொல்லிக் குடிக்கும்படிச் செய்து, அவர்கள் குடித்து மயங்கியவுடன் அதற்குக் கடவுள் கோபம் என்றும் சொல்ல வேண்டியது. அல்லது தாழ்ந்த ஜாதியானொருவனைப் பாம்புகடிக்கும் படி செய்து இம்மாதிரி துர்சகுனம் நேரிடாது தடுக்கப் போவதாகப் பாசாங்கு செய்து ஒற்றர்கள் பணம் வசூலிக்கலாம்."

தெய்வங்களுக்கு சமர்ப்பிக்கப் படும் காணிக்கைகள் அரசனது பொக்கிஷத்தைச் சேரவேண்டும்! அரசனது செலவுக்காக அரசன் வாழும் பொருட்டுப் பணம் வசூலிக்க ஒரே இரவில் தேவதைகளையும், பீடங்களையும் ஸ்தாபித்துத் திருவிழாக்கள் நடத்த வேண்டும்! காணிக்கைகளைப்பெறுவதற்காக அடிக்கடி கடவுள்கள் தோன்றும் படிச் செய்யவேண்டும்! "சாதாரணமாக மிக வெளிப்படையான தந்திரங்கள் தான் அதிகமான பலனை அளிக்கின்றது. கடவுள் தம் மூலம் பேசுவதாகப் பாசாங்கு செய்து பணம் திரட்டும் வழி முன் காலத்தில் தான் மற்ற நாட்டுப் புரோகிதர்களாலும் கையாளப்பட்டு வந்தது. ஆனால் இந்தியாவில் இன்றும் இவ்வழக்கம் ஒயவில்லை. இங்கு விக்கிரகங்களே பேசுகின்றன. இவற்றை வழிபடுகிறவர்கள் மிகக் கவனமாகக் கேட்டு பரவசமடைகிறார்கள்; ஆனால் கல் விக்கிரகத்தின் உள்ளோ, பக்கத்திலோ வஞ்சகனொரு

வன் மறைந்திருந்து விக்கிரகத்தின் வாய்வழியாகப் பேசுகின்றான் என்பதை இவர்கள் அறிவதில்லை''யென்று ஆபே டூபாய் கூறுகின்றார். இவைபோன்று இன்றளவும் கையாளப்பட்டு வருகிற பலவிதத் தந்திரங்களையும் அவர் விரிவாக விளக்குகிறார்.

## கோவில் மூலம் வியாபாரம்

இனி நமது சாணக்கியரைக் கவனிப்போம். சாணக்கியர் காலத்தில் கோவில் வருவாயிலிருந்து ஒரு பைசாவாவது அரசனது பொக்கிஷத்தைச் சேரத் தவறி விட்டால், அந்த இடத்திலேயே கோவில் அதிகாரி ஏன் தூக்கிலிடப்பட்டிருப்பார் என்பதை நாம் மேற் சொன்னவற்றிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

அது மிகவும் நியாயமே. ஏனெனில் அக்காலத்தில் விக்கிரகங்களும், பீடங்களும், அரசனது வியாபாரத்திற்காக ஏற்பட்டவைகளாகும். பொது ஜனங்களின் பணத்தைச் செலவிட்டே விக்கிரகங்களையும், பீடங்களையும், மடங்களையும், கோவில்களையும் உண்டுபண்ணி பரிபாலித்து அவற்றைப் பற்றி பெரிதாக விளம்பரப்படுத்தியும் வந்தார்கள். இக்காலத்தில் அரசாங்கத்தார் எவ்வாறு பெரும் பொருள் செலவிட்டு மேட்டூர் தேக்கத்தையும், சுக்கூர் அணைக்கட்டையும் கட்டி, அவற்றினின்றும் லாபத்தை எதிர் பார்க்கின்றார்களோ அதே போல முன் காலத்து அரசர்கள் கோவில்களையும், ஸ்தலங்களையும் உற்பத்தி செய்ததும் லாபத்தைக் கருதியே யாகும்.

இம்மாதிரி 'மத ஸ்தாபனங்க' ளை ஏற்படுத்திய முற்கால மன்னர்களைச் சுற்றி விரோதிகள் எப்பொழுதும் இருந்து வந்ததால் இடைவிடாது யுத்தங்கள் நேரிட்டுக் கொண்டேயிருந்தன; இதற்காக அவர்கள் பெருஞ்சேனைகளை வைத்திருந்தனர். யுத்தங்களுக்கும் சேனைகளுக்கும் வேண்டிய பணத்திற்காக ஏராளமான வருவாய் தேவைப்பட்டது. கோவில் வருவாயைக் கொண்டு பார்ப்பனருக்கு மட்டும் சோறு போடுவது என்றிருந்தால், அரசும் கோவிலும் அன்றே மறைந்திருக்கும். இக்கோவில்களையும், பீடங்களையும், கடவுள்களையும் படைத்த அக்காலத்து அரசர்களுக்கு அரசாங்கத்தை நடத்தும் கஷ்டம் எவ்வளவு என்று தெரியும். உதாரணமாக பூரண மது விலக்கு ஏற்பட்டால், நாட்டில் உயர்தரக் கல்வியை நிறுத்த நேரிடுமென்று இன்று (இராஜாஜி முதலியவர்கள்) சொல்வது போல, தங்களது க்ஷேமமும் கோவில் வருமானத்தில் தொங்கிக் கிடந்தனவென்பதை அக்கால அரசர்கள் அறிந்திருந்தார்கள். ஆதலால் அவர்கள் அதன் மீது மிகுந்த கவனம் செலுத்தி வந்தார்கள். இவ்வுலக சுக துக்கங்களைக் குறித்து அவர்கள் நினைத்தார்களேயன்றி மோட்சலோகத்தைப் பற்றி நினைக்கவில்லை. இக்காலத்து சுதேச மன்னர்களில் பெரும்பாலோர் யாதொரு பொறுப்பும் கவலையுமெடுக்காது மோட்சலோகத்தைப் பற்றி நினைக்கின்றார்கள். பார்ப்பானை திருப்தி செய்தால் மோட்சத்துக்கு சீட்டு கிடைத்துவிடுமென நம்புகிறார்கள். அங்ஙனம் செய்துவிட்டு, தங்கள் ராஜ்யங்களைவிட்டு தற்கால மோட்ச பூமியான பாரிஸ் முதலிய மேநாடுகளுக்குச் சென்று விடுவதுமுண்டு.

## மன்னர்கள் யோக்கியதை

சர்தார் கே. எம். பணிக்கர் அவர்கள் ''இந்திய சமஸ்தானங்களும், இந்திய அரசாங்கமும்'' என்ற தனது புத்தகத்தில் பின் வருமாறு எழுதுகின்றார்.

''பல சிற்றரசர்கள் மிதமிஞ்சிய சுக போகங்களுடன் இழிவான வாழ்க்கை வாழ்வதற்குக் காரணம் அவர்கள் இராஜ்ஜிய பாரத்தில் நேராக பொறுப்பேற்று நடத்தாததேயாகும். முன் காலங்களில் குடிகளைத் துன்புறுத்தும் கொடுங்கோல் மன்னனையும், தனது சுகமொன்றையே கருதும் துர் நடத்தைக்காரரையும் சும்மா விட்டு வைத்திருக்க மாட்டார்கள். வெளியிலிருந்தேற்படும் படையெடுப்போ அன்றி உள்நாட்டுக் கலகமோ அவனது வாழ்க்கையை முடித்து விடும். ஆனால் இக்காலத்தில் அப்படியல்ல. ஒரு அரசன், தான் பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு செய்து கொண்ட உடன்படிக்கையை மீறாதிருப்பது வரையும், நாகரீக ஆசாரங்களை வெளிப்படையாக புறக்கணியா திருப்பது வரையும் அவனுக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஆதரவிருக்கின்றது. அவன் தனது சுக போகங்களுக்காகத் தன் இஷ்டம் போல் பொக்கிஷத்தை உபயோகிக்கவும், குடிகளை கொள்ளையடிக்கவும் விட்டு விடுகிறார்கள்.'

சர். தாமஸ்மன்ரோவின் அடியிற்கண்ட குறிப்புக்களையும் திரு. பணிக்கர் அவர்கள் எடுத்துக் கூறுகிறார்.

"இந்தியாவில் மோசமான ராஜ்ய பாரம் ஏற்படுமாயின், அரண்மனையில் புரட்சி உண்டுபண்ணியோ அல்லது உள் நாட்டுக் கலகத்தாலோ அதைச்சரிப்படுத்துவது தான் வழக்கம். ஆனால் உள்நாட்டு, வெளிநாட்டு விரோதிகளினின்றும் மன்னனைக் காப்பாற்ற பிரிட்டிஷ் படைகளிருப்பதால், அவ்விதம் கொடுங்கோன்மையைப் பரிகரிக்கும் வழியெதுவுமில்லாமற் போய்விடுகின்றது. தனது பாதுகாப்புக்கு அன்னியர் உதவியிருக்கிறதென்ற நம்பிக்கையால் அவன் சோம்பேறியாய் விடுகின்றான்; தனது குடிமக்களுடைய வெறுப்பு தன்னை யொன்றுஞ் செய்ய முடியாதென்ற எண்ணத்தால் அவன் கொடியவனாகவும் பேராசை பிடித்தவனாகவும் ஆய் விடுகின்றான்."

கோவில்களிலிருந்து தனக்குப் பணம் வந்துகொண்டேயிருக்க வேண்டும் என்பதொன்றையே அரசன் கவனித்தான் என்பது இதுகாறும் எடுத்துக்காட்டியவற்றிலிருந்து விளங்கும். யார் பணம் கொடுத்தார்கள்; யார் கோவில்களுக்குப் போய் வணங்கினார்கள்; யார் மதுவருந்தினார்கள் என்பதைப் பற்றியெல்லாம் அவன் கவனித்ததில்லை. இவர்கள் சண்டாளராகவும், சூத்திரராகவும், வைசியராகவும், க்ஷத்திரியராகவும், பிராமணராகவும் இருக்கலாம். சண்டாளனாகவிருந்தாலும், அவன் எவ்வளவுக்கெவ்வளவு, அதிகமாகப்பணம் கொடுக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அரசனும் திருப்தி யடைந்திருப்பான். பணம் வரும் என்று தெரிந்தால், அரசன் தனது விக்கிரகங்களையும், பீடங்களையும், ஸர்ப்பங்களையும் கொண்டு சண்டாளருக்கு விசேஷ வேடிக்கைகளையும் காட்டியிருப்பான். ஒரு சண்டாளன் தனது கோவிலுக்குள் நுழையவோ, விக்கிரகத்தையோ, பாம்பையோ, மரத்தையோ வணங்கவோ செய்யவொட்டாமல் ஓர் வர்ணாசிரமதர்மி தடுப்பதுனிமித்தம் தனக்கு நியாயமாக வரவேண்டிய வருவாய் தடைபடுவதாகத் தனது காதுக்கு எட்டினால், இம்மாதிரிதடை செய்பவர்கள் பார்ப்பனராக இருந்த போதிலும், இவர்களை சமீபத்திலிருக்கும் மரத்தில் கட்டி தூக்கியிருப்பான்.

அக்காலத்தில் இந்துக்கோவில்கள் அரசனுடைய வருவாய்க்கு அவ்வளவு தூரம் மூலகாரணமாயிருந்தன. ஆகவே எக்காரணத்தைக் காட்டியேனும், இவன் சண்டாளன்; இவன் தாழ்ந்த சாதி; ஆகையால் கோவிலுக்குள் போகவோ வணங்கவோ கூடாதென்று யாரேனும் சொன்னால், அவன் அந்த இடத்திலேயே கொடிய குற்றஞ் செய்தவனாகக் கருதப்பட்டிருப்பான்.

## கோவில் பொதுச் சொத்து

கோவில்கள் அரசாங்க ஸ்தாபனங்களாக இருந்தன; ஏதேனும் ஒரு ஸ்தாபனம் 'பொதுச் சொத்து' என்று சொல்லக்கூடியதாக இருந்திருந்தால் அது இந்தக்கோயில்களாகும். இப்போது உயர்சாதி இந்து வக்கீல்கள் கோயில்களைப் "பொது ஸ்தாபனங்கள்" என்று சொல்லும் போது ஒரு புது மாதிரியான விசேஷ அர்த்தத்துடன் சொல்லுகின்றார்கள். "பிரதம திருஷ்டியில், நான்கு சாதியாருக்கும் தட்டுத் தடையின்றி இக்கோயில்களில் பிரவேசித்து வழிபட உரிமையுண்டு" என்பது இவர்கள் கூற்றாகும்.

"வேதங்களை அடிப்படையாகக் கொண்ட ஆரிய மதத்தில் விக்கிரக ஆராதனையில்லை. இது பின்னர் தோன்றிய இழிவு பட்ட ஆராதனையாகும்" என்று காலஞ்சென்ற மாக்ஸ் முல்லர் என்னும் உலகப்பிரசித்தி பெற்ற மேனாட்டு ஆசிரியர் கூறுகின்றார்.

வங்காள தேசத்து பிரபல வழக்கறிஞரான மிஸ்டர் ஜே. சி. கோஷ் தமது தாகூர் சட்டப் பிரசங்கத்தில் அடியில் வருமாறு குறிப்பிடுகிறார்:—

"மக்கள் யாகம் முதலியவற்றை நடத்தி வந்த காலத்தில் கோவில்களையும், விக்கிரகங்களையும் ஸ்தாபிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை; பிராமணர்கள் மட்டுமே அக்கினியை வளர்க்கலாம். இதனால் அவர்களை "அக்கினி ஹோத்திரிகள்" என்றழைத்தார்கள். மற்ற சாதியாரும் உயர்ந்தபோது, அவர்கள் வழிபடத்தெய்வங்கள் வேண்டியதாயிற்று. பிராமணரது ஆதிக்கம் குறையவும், அக்கினி வணக்கம் தனது செல்வாக்கை யிழந்தது; இதிலிருந்து விக்ரக வணக்கம் ஆரம்பமாயிற்று. மற்றும் புத்த

விக்கிரகங்களையும், ஸ்தூபிகளையும் ஸ்தாபித்து புத்த மதத்தினர் வழிபடவாரம்பித்தது, இந்துக்கோயில்களையும். விக்கிரகங்களையும் ஸ்தாபிப்பதற்கு வழிகோலியாயிற்று.''

''விக்கிரகங்களையும்,கோயில்களையும் ஏற்படுத்திய போது, அவற்றைப் பரிபாலிக்க சொத்துக்களை விடவேண்டியதும் அவசியமாயிற்று. எனவே நிலங்களை விட்டது மன்றி பல பழைய கோவில்களில் மக்களை ஈர்க்க (அடிமைப் பெண்களையும்) தாசிகளையும் விட்டார்கள். இதிலிருந்து இந்தியாவில் எந்த நோக்கத்துடன் விக்கிரக ஆராதனை ஆரம்பிக்கப் பட்டது என்பது புலனாகும். இப்பொழுது ஒவ்வொரு கோயிலும் நடனச்சாலை இருப்பதாகவே கருதப்படுகிறது.'' என்று மிஸ்டர் கோஷ் சொல்லுகிறார்.

பண்டைக் காலத்தில் இக்காலத்திலிருப்பது போலவே, கோவில்கள் வேடிக்கை, வினோத ஸ்தலங்களாகவே இருந்துவந்தன; இவ்வுத்தேசத்துடன்தான் அக்கால அரசர்களும், ஆலயங்களை ஏற்படுத்தியிருந்தார்கள். எனவே இந்நாட்டிலிருக்கும் பல கோயில்கள் வேசியர் விடுதிகளைவிடச் சிறந்தவையல்ல'' வென்று காந்தியார் குறிப்பிட்டது சரித்திரப்படியும் மிகையாகாது. இந்நோக்கத்துடனேயே ஆலயங்களை ஸ்தாபித்தார்கள் என்பது சரித்திரபூர்வமான உண்மையாகும்.

★


அறிவுலக மேதை
தந்தை பெரியார் வாழ்க!

★

எல்லாவித ஸ்டேஷனரி சாமான்களும், மளிகை சாமான்களும், நயமாகவும் விலை குறைவாகவும் கிடைக்குமிடம்:

மல்லிகா ஸ்டோர்

புத்தூர் :: திருச்சி-17

உரிமையாளர்: லாசர் நாடார்

தொலைபேசி எண்: 406

**எமது வாடிக்கையாளர்களுக்கும், அன்பர்களுக்கும் தந்தை பெரியார் அவர்களின் 92-ம் ஆண்டு நன்னாள் வாழ்த்துக்கள்.**



எங்களிடம் நயம் அலுமினிய பாத்திரங்களும், நவீன எவர்சில்வர் பாத்திரங்களும், மொத்தமாகவும், சில்லரையாகவும் உத்திரவாதத்துடன் கிடைக்கும்.

# எம். சிதம்பரம் அண்டு ஏ. பால்சாமி

**அலுமினியம், எவர்சில்வர் பாத்திரம் உற்பத்தி அண்டு விற்பனையாளர்கள்**

**178, மெயின்ரோடு, திண்டுக்கல்**

பாக்டரி :—

**1006 நெட்டுத்தெரு, திண்டுக்கல்**

Telegrams: "LOCKS" Telephone: 94 PBX

# K. KALIAPPA NADAR & SONS.,

POST BOX NO. 22

DINDIGUL-1.

DEALERS AND STOCKISTS OF:

Asian Paints, Bombay.
National Paints, Bombay,
GKW Bolts & Nuts, Madras.
Carborundum Universal Ltd., Madras (Ajax Sand Paper)
Hindustan Steel Files, Calcutta
Charminar Asbestos Cement Ltd, Hyderabad.
Dindugul Locks, Hardware, Iron & Steel, etc.

# உழைப்பின் உறைவிடம்

டாக்டர் சி. இலக்குவனார்

பகுத்தறிவுப் பகலவராம் தந்தை பெரியார் அவர்கட்கு ஒன்பது குறைய ஒரு நூறாண்டு நிறைவுறும் செய்தி மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கின்றது. நிறை நலத்துடன் இன்னும் பல பத்தாண்டுகள் வாழ்வார்களாக. இப்பொழுது 92ஆம் வயதை அடையினும் 29 ஆண்டு இளைஞரை விட ஏற்றமுறு பொலிவுடன் நம் மக்கள் நலன்நாடி அவர்கள் உழைத்து வரும் பெற்றிமையை மாற்றுக் கருத்துடையோரும் மனமாரப் பாராட்டாது இருத்தல் இயலாதே. கொடுஞ்சாதி அமைப்பையும் குருட்டு மூடக் கொள்கைகளையும் அழித்தொழித்து அறிவார்ந்த தன்மான வாழ்வை எவரும் பெற்றிட இம்முதுமையிலும் அயராது உழைத்து வரும் அவர்களின் அருளார் தொண்டை எவர்தாம் போற்றாதிருப்பர். இருபதாம் நூற்றாண்டுப் புத்தராக இனிதே விளங்கும் அவர்கள் தோன்றிலரேல், நம் இன்தமிழ் நாட்டார் இருட்டறையில் இருப்பார் போன்று ஏதும் அறியாராய், உலக வாழ்வின் உயர்நலன்கள் பெறாது ஆரிய அடிமைத்தளையால் நசுக்குண்டு அழிந்து கொண்டிருப்பார் அன்றோ? பரத கண்டத்தில் ஏனைய மாநிலங்களைவிடத் தமிழ்நாடு இன்று ஏற்றமுற்று விளங்குவதற்கும், எளிய நிலையில் இருந்தோரும் இழிபிறப்பினர் எனக் கருதப்பட்டு ஒதுக்கப்பட்டோரும் உயர்நிலையெய்தி ஓங்குபுகழ் அடைவதற்கும் பெரியார் அவர்களின் பெருந்தொண்டே காரணம் அன்றோ? உரூசோவும், மாசினியும், உலூதரும், இங்கர்சாலும், காரல்மார்க்சும் ஆற்றிய புரட்சிகளைத் தனி ஒருவராய் இத்தமிழ்நாட்டில் நிகழ்த்தி அறிவு விடுதலை பெறச் செய்த அய்யா அவர்களின் சீர்த்தி தான் என்னே!

பெருஞ்சொற்கொண்டல், உழைப்பின் உறைவிடம், பகுத்தறிவுப் பேரொளி, ஒடுக்கப்பட்டோரை உய்விக்க வந்த பெருமான், ஏழை மக்களின் இனிய புரவலர், இன்றைய அரசின் காவலர், இன்னும் ஒரு நூறாண்டு இனிதே வாழ்வாராக.

வாழ்க பெரியார்; வளர்க பகுத்தறிவு ஆட்சி.

"தஞ்சை நகரின் இதயப் பகுதியான நீண்டு உயர்ந்த மணிக்கூண்டுக்கு அருகில் சாலையை நோக்கியவாறு பெரியார் கையிலே தடியை ஊன்றி நின்றுகொண்டு இருக்கும் நிலையில் சிலைவடிக்கப்பட்டிருக்கிறது சாலையின் மத்தியில் அறிஞர் அண்ணாவின் சிலை வைக்கப்பட்டிருக்கிறது. அய்யா தடி ஊன்றி நின்றிருக்க, அவருக்குக் கீழே விரித்த புத்தகத்துடன் பேரறிஞர் அண்ணா பாடம் படித்துக் கொண்டு அமர்ந்திருக்க இப்படி வடிக்கப்பட்டு அமைக்கப்பட்டிருக்கும் இருபெரும் தலைவர்களின் சிலைகளின் தோற்றப் பொலிவைப் பார்க்கும்போது அய்யாவிடம் அண்ணா பாடம் கேட்கிறார் என்று எண்ணத் தோன்றுவதர்க இருக்கிறது. அய்யா அவர்கள், அண்ணா சரியாகப் பாடத்தினைப் படிக்கின்றாரா என்று நின்று கவனித்துக்கொண்டிருப்பது போலிருக்கிறது."

—**தஞ்சை சிலை திறப்பு விழாவில் அமைச்சர் நாவலர் பேச்சு.**



அய்யா அவர்களின் 92-ம் ஆண்டு விழாவில்

அன்னாருக்கும் அனைவருக்கும் எங்கள் இதயம் கனிந்த

நல்வாழ்த்துக்கள்

## தேனியில் சிறந்த உணவு நிலையம்

# நாகர் உணவு நிலையம்

தேக்கடி, வைகை, மூணார் சொல்லுகின்ற உல்லாசப் பயணிகளுக்கு மத்திய இடமாகிய தேனியில் அமைந்திருக்கிறது எங்கள் உணவு நிலையம்.

எங்களிடம் கோழி ரோஸ்ட், புறா ரோஸ்ட், வாண்கோழி - கோழி பிரியாணி, முட்டை பிரியாணி வகைகளும் மற்றும் மட்டன், கோழிக்கறி, புரோட்டாக்களும் எந்த நேரத்திலும் கிடைக்கும்.

(குறிப்பு :-) எல்லாத் தலைவர்களாலும் போற்றிப் புகழப்பட்ட நிலையம், எங்கள் நாகர் உணவு நிலையம்.

LONG LIVE IYAH!

With the Best Compliments


From

# S. M. SAMY


## GENTS' TAILOR

2/6, WALLERS ROAD,

Mount Road Madras-2.



# 91 க்கும் 92 க்கும் இடையில்



## தந்தை பெரியார் அவர்களது சுற்றுப்பயண விவரம்

### 1969 செப்டம்பர் 17 முதல் 1970 செப்டம்பர் வரை

| செப்டம்பர் 1969 | | ஊர்கள் |
|---|---|---|
| 17-ம் நாள் | ... | தஞ்சை பிறந்த நாள் விழாவும், உருவச் சிலை திறப்பு விழாவும் |
| 27 ,, | ... | திருச்சி பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன கல்வி நிலையங்களின் நிறுவனர் நாள் விழா |
| 28 ,, | ... | திருச்சி தில்லை நகர், பிறந்த நாள் விழாவும், சுயமரியாதைக் குடும்பங்கள் சார்பில் கருத்தரங்கு விருந்து பாராட்டு விழாவும் |
| **அக்டோபர்** | | |
| 19-ம் நாள் | ... | காலை: செர்பரை திருமணம்<br>மாலை: கரூர் - தந்தை பெரியார் பிறந்த நாள் விழா |
| 20 ,, | ... | மன்னார்குடி கமிட்டிக் கூட்டமும், பொதுக்கூட்டமும் |
| 26 ,, | ... | வேலாயுதம்பாளையம், கரூர் வட்ட தி. க. சமுதாய சீர்திருத்த மாநாடு |
| 27 ,, | ... | திருச்சி |
| **நவம்பர்** | | |
| 1-ம் நாள் | ... | திருச்சி காலை: கமிட்டிக் கூட்டம்<br>மாலை: பொதுக்கூட்டம் |
| 3, 4 ,, | ... | சென்னை |
| 5 ,, | ... | காலை: கட்டளை திருமணம்<br>மாலை: கிருஷ்ணராயபுரம் பொதுக்கூட்டம் |
| 7 ,, | ... | ஆனைமலை திருமணம் |
| 12 | | |

| | | |
|---|---|---|
| 13 ,, | ... | சேலம், காலை : திருமணம் |
| 14, 15 ,, | ... | திருச்சி |
| 16 ,, | ... | காலை: ஒரத்தநாடு திருமணம்<br>மாலை: திருச்சி பொதுக்கூட்டம் |
| 19 ,, | ... | சீரங்கம் திருமணம் |
| 30 ,, | ... | திட்டக்குடி பிறந்த நாள் விழா |

**டிசம்பர்**

| | | |
|---|---|---|
| 5-ம் நாள் | ... | சிதம்பரம் காலை : திருமணம்<br>மாலை : அண்ணாமலை பல்கலைக் கழக மாணவர் பேரவையும், பொதுக் கூட்டமும் |
| 7 ,, | ... | தஞ்சாவூர் |
| 13, 14 ,, | ... | மதுரை |
| 15 ,, | ... | திருச்சி |

**ஜனவரி 1970**

| | | |
|---|---|---|
| 9-ம் நாள் | ... | பொத்தனூர் திருமணம் |
| 17 ,, | ... | கீவளூர் (நாகை வட்டம்) பாராட்டு, பொதுக்கூட்டம் |
| 18 ,, | ... | கும்பகோணம் (திராவிடர் கழக சமுதாய சீர்திருத்த மாநாடு) |
| 19 ,, | ... | காலை : கடலூர் திருமணம்,<br>மாலை : திட்டக்குடி பிறந்த நாள் விழா |
| 20 ,, | ... | இளம்பள்ளி (சேலம்) மருத்துவமனை திறப்பு விழா |
| 21 ,, | ... | திருச்சி பொதுக்கூட்டம் |
| 25 ,, | ... | தர்மபுரி அரசு அலுவலர் விருந்தும், பாராட்டும் |
| 30 ,, | ... | மன்னார்குடி (தஞ்சை) திருமணம் |
| 31 ,, | ... | விழுப்புரம் ரயில்வே ஊழியர்கள் தேனீர் விருந்தும், பொதுக்கூட்டமும் |

**பிப்ரவரி**

| | | |
|---|---|---|
| 1-ம் நாள் | ... | (பாண்டி) ஒதியம்பட்டு திருமணம், பொதுக்கூட்டம் |
| 7 ,, | ... | சென்னை தேனாம்பேட்டை |
| 8 ,, | ... | காலை: சென்னை திருமணம்<br>மாலை: நெல்லிக்குப்பம் திருமணம் |
| 9 ,, | ... | பொத்தனூர் (சேலம்) திருமணம் |
| 14 ,, | ... | மதுரை |
| 15 ,, | ... | காலை: கோவில்பட்டி திருமணம்<br>மாலை: சாத்தூர் பொதுக்கூட்டம் |

| | | |
|---|---|---|
| 16 ,, | .. | அலங்காநல்லூர் 91 - வது பிறந்ததின விழாவும், எடைக்கு எடை சர்க்கரை அன்பளிப்பும் |
| 19 ,, | ... | காலை: நீடாமங்கலம் (திருமணம்)<br>மாலை: திருநள்ளாறு நகராட்சியில் அண்ணா படத்திறப்பு விழா |
| 22 ,, | ... | காலை: அதிகாரப்பட்டி (திருமணம்)<br>மாலை: பாபிரெட்டிபட்டி பொதுக்கூட்டம் |
| 23 ,, | ... | தர்மபுரி (பொதுக்கூட்டம்) |
| 26 ,; | ... | முசிறி மாலை: நகர பஞ்சாயத்து வரவேற்பு, பொதுக்கூட்டம் |

**மார்ச்**

| | | |
|---|---|---|
| 7-ம் நாள் | ... | திருச்சி |
| 8 ,, | ... | திருத்துறைப்பூண்டி |
| 9 ,, | ... | காலை: பொருள் வைத்தசேரி திருமணம்<br>மாலை: ஒக்கூர் (நாகை) |
| 10 ,, | ... | கொள்ளிடம் (சீர்காழி வட்டம்) |
| 11 ,, | ... | சைதாப்பேட்டை தேரடித் தெரு, திராவிடர் கழகப் பொதுக்கூட்டம் |
| 12 ,, | ... | காலை: சென்னை மாநிலக் கல்லூரி தமிழ் மன்ற வாழ்த்தியல் விரிவுரை<br>மாலை: மைலாப்பூர் வீரபெருமாள் கோவில் தெரு, திராவிடர் கழகப் பொதுக்கூட்டம் |
| 18 ,, | ... | உள்ளிக்கோட்டை (மன்னார்குடி வட்டம்)<br>காலை: திருமணம்<br>மாலை: திருப்பாலக்குடி பஞ்சாயத்து போர்டு வரவேற்பு, பொதுக்கூட்டம் |
| 22 ,, | ... | திருச்சி தில்லை நகர், காலை: 9-30 திருமணம்<br>முற்பகல்: 11-30 பாராட்டுக் கூட்டம்<br>மாலை: 6-30 சிறப்புக் கூட்டம் |
| 23 ,, | ... | அரியமங்கலம் (திருச்சி) |

**ஏப்ரல்**

| | | |
|---|---|---|
| 4-ம் நாள் | ... | கூத்தப்பார் (திருமணம்) |
| 5 ,, | ... | திருவாரூர் |
| 7 ,, | ... | திருச்சி |
| 11 ,, | ... | காலை: மாதிரிமங்கலம் (திருமணம்)<br>மாலை: மாயூரம் வட்ட திராவிடர் கழக மாநாடு |
| 12 ,, | ... | மாயூரம் சமுதாய சீர்திருத்த மாநாடு |
| 13 ,, | ... | திருச்சி (டவுன்ஹால் மைதானம் பொதுக்கூட்டம்) |
| 14 ,, | ... | கரூர் |

15 ,, ... ஈரோடு

16 ,, ... காலை: சென்னை நந்தனம் திருமணம்

மாலை: புதுவண்ணாரப்பேட்டை பொதுக்கூட்டம்

17 ,, ... சென்னை வில்லிவாக்கம் (பிறந்ததினவிழா)

18 ,, ... காஞ்சிபுரம்

19 ,, ... பண்ணுருட்டி

21 ,, ... சிவகங்கை (முகவை வட்டம்)

22 ,, ... அம்பா சமுத்திரம்

23 ,, ... வள்ளியூர்

24 ,, ... நாகர்கோவில்

25 ,, ... சிவகாசி

26 ,, ... மதுரை

27 ,, ... கிருஷ்ணகிரி

29 ,, ... திருச்சி பாலக்கரை

30 ,, ... காலை: பருத்தியூர் (திருமணம்)
மாலை: கண்கொடுத்த வனிதம் (நன்னிலம் வட்டம்)

**மே**

1-ம் நாள் ... நாகப்பட்டினம்

2 ,, ... வடகரை (நாகைவட்டம்)

6 ,, ... சேலம் (திரு. ரத்தினசாமி இரங்கல் கூட்டம்)

17 ,, ... சென்னை

18 ,, ... உள்ளிக்கோட்டை திருமணம் (மன்னார்குடி வட்டம்)

19 ,, ... வேளாங்கண்ணி கழகக்கட்டிட அடிக்கல் நாட்டு விழா (நாகை வட்டம்)

20 ,, ... அத்திப்புலியூர் (நாகை வட்டம்)

31 ,, ... காலை: தென்பாதி திருமணம் (திருத்துறைப் பூண்டி வட்டம்)
மாலை: திருச்சி நீத்தார் நினைவு நாள்

**ஜூலை**

4-ம் நாள் ... தொட்டியம் (டாக்டர் அம்பேத்கார் பிறந்த நாள் விழா)

5 ,, ... கொட்டாம்பட்டி

7 ,, ... காலை: கோயமுத்தூர் (திருமணம்)
மாலை: திருச்சி (புத்தர் விழா)

8 ,, ... தஞ்சாவூர் (திருமணம்)

| | | | |
|---|---|---|---|
| 9 | ,, | ... | காஞ்சிபுரம் |
| 10 | ,, | ... | சென்னை காலை: திருமணம்<br>மாலை: திரு. காஞ்சிமணி மொழியார் பிறந்த நாள் விழா பாராட்டு |
| 11 | ,, | ... | காலை: தர்மபுரி (திருமணம்)<br>மாலை: அரூர் (பொதுக்கூட்டம்) |
| 12 | ,, | ... | குருப்பேரி மாலை: (அண்ணாவின் 60-வது ஆண்டு நினைவுப்பள்ளிக்கட்டிட திறப்பு விழா)<br>இரவு 7 மணி பொதுக்கூட்டம் |
| 13 | ,, | ... | சோலையார் பேட்டை |
| 14 | ,, | ... | காலை: மாடப்பள்ளி (திருமணம்) |
| 15 | ,, | ... | கிருஷ்ணகிரி |
| 17 | ,, | ... | தொண்டராம்பட்டு (ஒரத்த நாடு வட்டம்) |
| 18 | ,, | ... | காலை: தென்னமநாடு (திருமணம்)<br>மாலை: கோட்டைத்தெரு |
| 20 | ,, | ... | திருச்சி பூங்தோட்டம் |
| 22 | ,, | ... | திருச்சி (நகராட்சி, பிரான்சிஸ் படிப்பக திறப்பு விழா) |
| 24 | ,, | ... | திருச்செங்கோடு (பெரியார் சுயமரியாதைப் பிரச்சார ஸ்தாபனக் கமிட்டிக் கூட்டம்)<br>பொதுக்கூட்டம் |
| 27 | ,, | ... | சென்னை |
| 29 | ,, | ... | சென்னை |

**ஜுலை**

| | | | |
|---|---|---|---|
| 1-ம் நாள் | | ... | திருப்பத்தூர் (இராமநாதபுரம் வட்டம்) |
| 2 | ,, | ... | சிவகெங்கை |
| 3 | ,, | ... | பரமக்குடி |
| 4 | ,, | ... | தேவக்கோட்டை |
| 5 | ,, | ... | காலை: பட்டுக்கோட்டை (திருமணம்)<br>மாலை: காரைக்குடி |
| 6 | ,, | ... | இராமநாதபுரம் |
| 7 | ,, | ... | அருப்புக்கோட்டை |
| 10 | ,, | ... | திம்மராய சமுத்திரம் (திருமணம்) |
| 11 | ,, | ... | திருச்சி ஜெயில் பேட்டை |
| 12 | ,, | ... | காலை: 9 மணி சீரங்கம் (திருமணம்)<br>காலை: 11 மணி திருவானைக்காவல் (திருமணம்)<br>மாலை: திருவெறும்பூர் (பொதுக்கூட்டம்) |
| 14,15 | ,, | ... | சென்னை |
| 16 | ,, | ... | சென்னை (பொறியியல் கல்லூரி தமிழ் மன்றத் துவக்க விழா) |
| 18 | ,, | ... | சென்னை (கல்வியமைச்சர் நாவலர் பிறந்த நாள் விழா) |
| 19 | ,, | ... | கும்பகோணம் |
| 20 | ,, | ... | லாலாப்பேட்டை (குளித்தலை வட்டம்) |

21 ,, ... மாலை: 4 மணி தாளக்குடி (லால்குடி)
பஞ்சாயத்து அலுவலக திறப்பு விழா
மாலை: 6-30 மணி ஆலப்பாடி (லால்குடி)
பள்ளிக்கூடத்திறப்பு விழா

22 ,, ... பச்சாம்பேட்டை (லால்குடி)
25 ,, ... இடைப்பாடி (சேலம் மாவட்டம்)
26 ,, ... சேலம் பொன்னம்மாப்பேட்டை (திராவிடர் கழக ஆண்டுவிழாவும், கடவுள் மறுப்பு கல்வெட்டு திறப்பு விழாவும்)

**ஆகஸ்ட்**

2-ம் நாள் ... சென்னை தாழ்த்தப்பட்டோர் பண்பாட்டுக் கழக ஆண்டு விழா
5 ,, ... சின்னாளப்பட்டி (மதுரை மாவட்டம்)
6 ,, ... ஆத்தூர் (மதுரை மாவட்டம்)
7 ,, ... வாடிப்பட்டி (மதுரை மாவட்டம்)
8 ,, ... மதுரை
9 ,, ... நிலக்கோட்டை
10 ,, ... பெரியகுளம்

**செப்டம்பர்**

1-ம் நாள் முதல் 4 வரை ... கோவை மாவட்டம்
6 ,, ... வடசேரி (ஆம்பூர் வ. ஆ.) திருமணம்
9 ,, ... திருவலஞ்சுழி திருமணம் (குடந்தை)
10 ,, ... பாண்டிச்சேரி


Phone: 32176 / 39638 Grams: "WOODHOUSE"

WISH THANTHAI PERIAR
MANY MORE USEFUL YEARS
IN THE SERVICE OF SOCIETY

V. S. K. DURAISWAMY NADAR & CO.,
TIMBER MERCHANTS,
No 1, BASIN BRIDGE ROAD, MADRAS-1

# வரலாற்றில் "தசரதர்கள்!"

புலவர் கோ. இமயவரம்பன்

அயோத்தி அரசன் தசரதனுக்கு 60,000 மனைவிமார்கள் இருந்தார்கள்; கிருஷ்ணன் 10,000 கோபியர்களுடன் லீலைகள் புரிந்தான் என்னும் செய்திகளை நாம் புராணங்களில் காண்கின்றோம்.

இந்த தசரதர்களும், கிருஷ்ணபரமாத்துமாக்களும் புராண காலங்களில் மட்டுமின்றி வரலாற்றுக் காலங்களிலும் வாழ்ந்திருக்கின்றார்கள்.

புராண காலமுதல் அண்மையில் சில ஆண்டுகளுக்கு முன் நிறைவேற்றப்பட்ட பலதார மணத் தடைச்சட்டம் அமுலுக்கு வரும் வரையிலும் ஒருவனுக்கு ஒருத்திதான் (ஏகதார மணம்) என்ற முறை சமுதாயத்தில் இருந்ததே இல்லை. ஆண் எத்தனை மனைவியர்களை வேண்டுமானாலும் மணந்துகொள்ளலாம்; எத்தனை விலைமகளிர்களை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம்; அதன் காரணமாக சமுதாயத்தில் அவனுக்கு அந்தஸ்து ஒன்றும் குறைந்துவிடுவதில்லை. மாறாக ஒருவன் வீடுவாசல், நிலபுலன்கள் மற்றும் செல்வப் பொருள்கள் பெற்றிருப்பதுபோல பல மனைவியர்களையும் பல விலைமகளிர்களையும் பெற்றிருப்பது பெருமையாகக் கூட கருதப்பட்டு வந்தது.

சாமான்ய மக்களுக்கும், செல்வர்களுக்குமே இந்த நிலை என்றால் மன்னர்களைப் பற்றி கேட்கவும் வேண்டுமோ? இவர்கள் பல நூறுமனைவியர்களையும்பரத்தையர்களையும் பெற்று காமக் களியாட்டத்தில் மூழ்கி இருந்தனர்.

இஸ்லாமிய மதச்சட்டம் ஒருவன் நான்கு மனைவியர்களை மட்டும்தான் மணக்கலாம் என்று கூறுகின்றது. முகலாய மன்னர்கள் பலர் இவ்விதிக்கும் மாறாக நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான பெண்களை மணந்தும், காதல் பரத்தையர்களாகக் கொண்டும் வாழ்ந்திருக்கின்றார்கள். இப்படி பெண்களை அரசர்கள் ஏராளமாக வைத்திருக்கும் இடத்திற்கு உவளகம் (பெண்கள் பகுதி) அல்லது அந்தப்புரம் என்று கூறுவர்.

பண்டைய மன்னர்கள் இவ்வாறாக காம வெறியாட்டத்தில் நாட்டங் கொண்டு உவளகங்களை அமைத்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், பிற நாடுகளில் இருந்தும் அழகியப் பெண்களைக் கொண்டு வந்து சேர்ப்பிக்கவும், மதுவகைகளுக்கும், ஆடம்பரப் பொருள்களுக்குமே மக்களை கசக்கிப்பிழிந்து வசூல் செய்த வரியில் பெரும் பகுதியினை அவற்றிற்கென செலவிட்டும் வந்திருக்கின்றனர். இப்படிப்பட்ட வரலாற்றுக்கால தசரதர்கள் கிருஷ்ண பரமாத்துமாக்கள் சிலரை இங்கு காண்போம்.

**பிரோஸ் துக்ளக்** (கி. பி. 1351-1388)

பிரோஸ் துக்ளக் முகமதுபின் துக்ளக்குக்குப் பிறகு டெல்லிசுல்தான் ஆனான். இவன் தனது உவளகத்தில் (பெண்கள் பகுதியில்) 2000க்கு மேற்பட்ட பல்வேறு இனங்களைச் சார்ந்த - பல்வேறு நாட்டினைச் சார்ந்த பெண்களைக் கொண்டு வந்து வைத்திருந்தான்.

**மாளவ சுல்த்தான்நாசிருதீன்** (1500-1510)

மாளவம் 1305-ல் டெல்லி சுல்தானுக்கு உட்பட்ட ஒரு மாகாணமாகவே இருந்தது. பிறகு தனி ராஜ்யமானது. நாசிருதீன் என்பான் தன் தந்தை கியாஸ் - உத்தீன்

என்பானைக் கொன்று விட்டு 1500-ல் பட்டம் எய்தினான். இச்சுல்தான் காமக் களியாட்டத்தில் மிக்க நாட்டம் உடையவன் ஆவான். அவன் 15000-ம் பெண்டிர்களைக் கொண்ட உவளகத்தை அமைத்திருந்தான். நாட்டின் எந்தப்பகுதியில் எந்த அழகியைப் பற்றி அவன் கேள்விப்பட்டாலும் எந்த வகையிலாவது அந்தப் பெண்ணைக் கைப் பற்றித் தனது உவளகத்தில் கொண்டுவந்து சேர்ப்பித்து வந்தான்.

**பிரோஸ்** (1397-1422)

பிரோஸ் பாமினி சுல்த்தான்களின் வழி வந்தவன். இவன் 1397 முதல் 1422 வரை யிலும் ஆட்சி செலுத்தினான். இவன் பீம நதிக்கரையில் "பிரோசோபாத்" என்ற நகரை அமைத்து அங்கு 800 மாதர்களைக் கொண்ட உவளகத்தை ஏற்படுத்தினான். அந்தப் பெண்டிர்கள் துருக்கியர், ஆப்கானி யர், வங்காளியர், சீனர், அய்ரோப்பியர் முதலிய இனத்தைச் சார்ந்தவர்கள். சுல்தான் அவ்வவ் இனத்தாரிடம் அவ்வவ் மொழிகளிலேயே அளவளாவியதாகக் கூறப் படுகிறது.

**அக்பர் பாதுஷா**

பேரரசர் அக்பர் பாதுஷா 5,000 பெண் களைக்கொண்ட உவளகத்தை அமைத் திருந்தார் என்றும் அவர்களை பெண் அதி காரிகளைக் கொண்டு கண்காணித்து வந் தார் என்றும் 'அபுல் பாஸல்' என்னும் வர லாற்று ஆசிரியன் கூறுகின்றான்.

**முதலாம் தேவராயர்** (1406-1422)

விஜய நகர வேந்தரான முதலாம் தேவ ராயர் அவரது உவளகத்தில் 12,000 பெண் டிர்களை வைத்திருந்தார் என்று 1420-ல் விஜயநகரைப் பார்வையிட்ட 'நிக்கோலோ கோந்தி' என்னும் மேல் நாட்டு யாத்திரிகன் குறிப்பிட்டுள்ளான்.

**இரண்டாம் தேவராயர்** (1424-47)

விஜயநகரத்தினை 1424 முதல் 1447 வரையில் இரண்டாம் தேவராயலு அல்லது பிரவுட தேவராயலு என்னும் மன்னன் ஆண்டனன். இவனது ஆட்சிக் காலத்தில் 'அப்துல் ரஜாக்' என்னும் பாரசீக நாட்டு அரசியல் தூதுவன் விஜயநகரத்தைப் பார்வை இட்டான். அவன் தான் எழுதிய 'பாரசீக வரலாறு' என்னும் நூலில் "2-ம் தேவராயலுவின் அரண்மனையில் 12,000 அழகியப் பெண்கள் இருந்தார்கள் என்றும், அவர்களில் 3,000 பேர்கள் தேவராயலுவின் மனைவிமார்கள் என்றும், அவர்களில் 500 பேர்கள் ராயலு வெளியில் போகும்போது கூடவே பல்லக்கில் போய்வருவார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளான்.

மற்றும் ஓர் ஆசிரியன் அரசனின் உவளகத்தில் அரசிளங்குமரிகளும், காமக் கிழத்திகளும் 700 பேர்கள் இருந்தார்கள் என்றும் அத்துணைப் பெரிய உவளகத்து மங்கையர்களுக்கு மகிழ்ச்சியளிக்க, ஊக் கத்தைப் பெருக்கும் வெற்றிலி மன்னனுக்கு உதவியாக இருந்ததென்றும் கூறுகின்றான்.

**பார்போஸா கூற்று**

மற்றும் விஜயநகர மன்னர்கள் பல நூறு மனைவியர்களைப் பெற்றிருந்தார் கள் என்னும் செய்தி மேல் நாட்டு யாத்திரிக னான 'பார்போஸா' என்னும் யாத்ரிகன் கூற்றில் இருந்து தெற்றெனப்புலனா கின்றது. "விஜய நகர மன்னர்கள் இறந் தால் அவர்களால் நேசிக்கப்பட்ட அன் பிற்கு உரிய பெண்டிர்கள் 400 முதல் 500 வரையில் உடன்கட்டை ஏறுவார்கள்" என்று கூறியுள்ளான். இச்செய்தியினை அபுல் பாஸல் முதலிய வரலாற்று ஆசிரியர் களும் குறிப்பிடுகின்றனர்.

**மதுரை நாயக்க மன்னன்**

ஓர் முகமதிய எழுத்தாளன் மதுரை யில் ஆண்ட நாயக்க மன்னன் ஒருவன் 700 மனைவியர்களைக் கொண்டிருந்தான் என் னும் செயதியை "1628-ல் ஒரு நாயக்க மன்னன் இறந்த போது அவனது 700 மனைவியர்களும் உடன்கட்டை ஏறினார் கள்" என்ற குறிப்பின்மூலம் உணர்த்து கின்றான்.

**திருமலை நாயக்கமன்னன்** [1623-1656]

புரோயின்சா (**Proenza**) என்னும் மேல் நாட்டுப்பாதிரியாரின் கடிதத்தின் மூலம் மதுரையினை ஆண்ட திருமலை நாயக்கன் 200 மனைவியர்களைக் கொண்டிருந்தான் என்றும் அவன் இறந்தபோது 200 பேர் களும் அவனுடன் உடன்கட்டை ஏறினார் கள் என்றும் குறிப்பிடும் செய்தி மூலம் புல னாகின்றது.

## கிழவன் சேதுபதி [1674-1710]

இராமநாதபுரம் சமஸ்தானத்தினை ஆண்ட கிழவன் சேதுபதி என்னும் குறுநில மன்னன் 1710-ல் காலமானான். அவன் 47 மனைவியர்களைப் பெற்றிருந்தான் என்பதும் அத்துணை பேரும் அவன் இறந்தபோது உடன்கட்டை ஏறினார்கள் என்பதும் மேல் நாட்டில் இருந்து இங்கு வந்து வசித்த மார்ட்டின் (Martin) என்னும் கிருஸ்தவப்பாதிரியாரின் கடிதத்தில் இருந்து தெரிய வருகின்றது.

## இரஞ்சித்சிங் [1780-1839]

சீக்கிய அரசனான இவனுக்கு 18 மனைவியர்கள் இருந்தார்கள். அத்துடன் மட்டும் நில்லாது ஏராளமான காமக்கிழத்தியர்களையும் பெற்றிருந்தான். காஷ்மீரம், பாரசீகம், பஞ்சாப் முதலிய நாடுகளில் இருந்து வந்த 150-க்கும் மேற்பட்ட அழகியப் பெண்கள் அவனை சூழ்ந்து கொண்டு களிப்புக்கடலில் ஆழ்த்தி வந்தார்களாம். அவனது உவளகத்தில் ஜிண்டான் என்ற கொடிய ஒழுக்கமுடைய பெண்ணொருத்தியும் இருந்தாளாம்.

## அய்தர் அலி

பெருவீரனான அய்தர் அலி காமக் களிப்பில் நாட்டம் உடையவன். இவனது உவளகத்தில் 600 பெண்கள் இருந்தார்களாம்.

## நவாப் ஷுஜா-உத்-தௌலா

அயோத்தி நவாப் ஷுஜா-உத்-தௌலா 1775-ல் இறந்தான். இவனுக்கு 31 மனைவியர்கள் இருந்தார்கள். இவர்கள் மூலமாக அவன் 49 பிள்ளைகளைப் பெற்றானாம்.

## தஞ்சை மன்னன் சிவாசி

தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னன 1883-ல் காலமானான். அவனுக்குப் பிறகு அவனது மகன் சிவாஜி என்பான் பட்டமெய்தினான். இவனுக்கு மனைவியர்கள் மட்டும் 20 பேர்களாம். காமக்கிழத்திகளோ ஏராளம் ஏராளம்.

## பெண்ணின் பொருட்டுப்போர்

பல அரசர்கள் மாற்று நாட்டு அரசர்களின் பெண்களை மணக்க எண்ணியும் அவர்கள் பெண் கொடுக்கமறுத்தால் போர் தொடுத்தும் அழிவு உண்டாக்கித் தாங்களும் அழிந்துபோயிருக்கின்றனர்.

## தஞ்சை-மதுரை போர்

17-ம் நூற்றாண்டில் தஞ்சையை வீஜயராகவ நாயக்கன் என்னும் மன்னன் 1630 முதல் 1670 வரை ஆண்டான். அவன் மகன் மன்னாரு நாயக்கனுக்கு ஓர் அழகிய பெண் இருந்தாள். அதனைக் கேள்விப்பட்ட மதுரை மன்னன் சொக்கநாத நாயக்கன் தஞ்சை சமஸ்தானத்திற்குப் பெண் கேட்டுத் தூது அனுப்பினான். தஞ்சை மன்னன் விஜயராகவன் பெண் கொடுக்க மறுத்தது மல்லாமல் ஏளனமாகப் பேசியும் அனுப்பி விட்டான். இது காரணமாக மதுரை மன்னன் தஞ்சையின்மீது போர் தொடுத்தான். இந்த கொடும் போரில் தஞ்சை தரணியே தரைமட்டமாகியது. தஞ்சையின் அரசுக்குரிய வாரிசு செங்கமலதாசன் என்னும் சிறு குழந்தையைத் தவிர அரச குடும்பத்தினர் அனைவருமே மடிந்தார்கள். போருக்குப் பிறகு மாண்ட பிணக்குவியலை அப்புறப்படுத்த முடியாத அளவுக்கு மிகுந்திருந்தது. இதனால் பல தொத்து நோய்கள் பரவி பல்லாயிரவர்கள் மடிந்தார்கள். அத்துடன் பெரும் பஞ்சமும் ஏற்பட்டு வாட்டியது. இதன் காரணமாகவும் பல்லாயிரக் கணக்கானவர்கள் மடியலானார்கள்.

## ராஜபுதனத்தின் நலிவு [1810]

உதயபுரி ராணாவிற்கு கிருஷ்ண குமாரி என்னும் அழகிய பெண்ணொருத்தி இருந்தாள். அவளை அடைவதற்கு இராஜபுத்திர அரசர்கள் தங்களுக்குள் போட்டியிடலாயினர், இதன் காரணமாக 1807-ல் ஜோத்பூர் அரசருக்கும் ஜெய்பூர் அரசருக்கும் கடும்போர் நடந்தது. முதலில் ஜோத்பூர் அரசர் பீம்சிங் அவளை மணந்துகொள்வது என்று முடிவு செய்யப்பட்டது. அவன் திருமணத்திற்கு முன்பே திடீர் என்று இறந்துவிட்டான். அதன் பிறகு ஜெய்பூர் அரசன் ஜெகத்சிங் அவளை மணந்து கொண்டான். ஜோத்பூர் அரசனாக அடுத்து வந்த மான்சிங் கிருஷ்ணகுமாரி தனக்கே உரியவள் என்று வாதிட்டான்.

ஜோத்பூர் அரியணையின் பொருட்டே முதலில் கிருஷ்ண குமாரியின் திருமணம் உறுதி செய்யப்பட்டது என்றும், அதனை மாற்றுவது கூடாது என்றும், இன்று தான் பீம்சிங் இடத்தில் அமர்ந்திருப்பதால் அவள் தனக்கே உரியவள் என்றும் வாதிட்டான்.

இதன் காரணமாக ஏற்பட்ட போரில் ராஜபுத்திர நாடுகள் பலவும் இரு தரப்பிலும்

கலந்துகொண்டு போரிட்டன. இரு தரப்பிலும் பல்லாயிரவர்கள் மடிந்தனர். இறுதியில் ஜோத்பூர் அரசன் மான்சிங் தோல்வியுற்றான்.

தம் மகளின் பொருட்டு இராஜப்புத்திர நாடுகள் ஒன்றுக்கு ஒன்று போர் செய்து கொள்ள நேர்ந்ததை எண்ணிய உதயபுரி ராணாவானவர் தமது மகளுக்குத் தாமே நஞ்சு கொடுத்துக் குடிக்கச் செய்து மாயும்படிச் செய்தார்.

கிருஷ்ண குமாரி கிரேக்க நாட்டு ஹெலனைப்போல தமது குலமும் எதிரியின் குலமும் ஒழிவதற்குக் காரணமாக இருந்தாள் என்று வரலாற்று வல்லுநர்கள் கூறுவர்.

## அரசியலில் காமக்கிழத்திகள் ஆதிக்கம்

### உதாம்பாய்

டெல்லியில் ஆண்ட முகலாய அரசன் அகமதுஷா மிதமிஞ்சிய குடிகாரனாகவும், காமுகனாகவும் திகழ்ந்தான். அவனுடைய ஆட்சியில் அவனால் நேசிக்கப்பட்ட ஜவித்கான் என்னும் பேடியும், உதாம்பாய் என்ற காமக்கிழத்தியும் ஏற்றம் பெற்று விளங்கினர். இந்த உதாம்பாய் என்ற தாசிப் பெண்ணை ஷா இராணி அந்தஸ்துக்கு உயர்த்தினான். அவள் அரசியல் விவகாரங்களில் தலையிட்டு பல சீர்கேடுகளை விளைவிக்கலானாள்.

### மஸ்த்தானி

பாஜிராவ் 2-4-1720-ல் மகராஷ்டிரத்தின் பிஷ்வா ஆனார். இவருக்குச் சொந்த மனைவி இருந்தும் மஸ்த்தானி என்ற முக மதியக் காமக்கிழத்தி இடமே இவர் மிக்க அன்பு செலுத்தினார். பூனாவில் அவரால் கட்டப்பட்ட ஷன்வார் வாடா என்னும் அரண்மனையில் தமது காமக்கிழத்தியின் பெயரால் மஸ்த்தானி வாசல் என்பதாக அமைத்தார்.

இவள் அரசியலில் ஆதிக்கம் பெற்றுத் திகழ்ந்தாள். இது கண்ட பேஷ்வாவின் தம்பி 'சிம்னாஜி அப்பா' இவளைச்சிறையில் இடலானான்.

### சின்டான்

சீக்கிய அரசன் இரஞ்சித்சிங் காம வெறியிலும், குடியிலும் மூழ்கிக்கிடந்தான். என்பதையும் அவனது உவளகத்தில் ஜின்டான் என்னும் பெண்ணொருத்தி இருந்தாள் என்பதையும் முன்பே கண்டோம். இவள் தீயஒழுக்கமுடையவள்.கொடுமையே உருவானவள். இவள் அரசியலில ஆதிக்கம்பெற்று பல கேடுகளைப்புரிந்து வந்திருக்கின்றாள்.

### ஜஹாங்கீர்

அளவுக்கு மிஞ்சிய குடிவெறியிலும் காமக்களியாட்டத்திலும் மூழ்கி இருந்தவன் ஆவான். அவனுக்கு 20-க்கும் மேற்பட்ட மனைவியர்கள் இருந்தார்கள். அவன் அரசியல் காரியங்களை அவனால் நேசிக்கப்பட்ட மனைவியான நூர்ஜகானிடம் ஒப்படைத்து இருந்தான். நூர்ஜகானே அரசியல் காரியங்களில் ஈடுபட்டு வந்தாள். "நான் நாட்டு அரசியலை நூர்ஜகானிடம ஒப்படைத்துவிட்டேன். எனக்கு வேண்டுவது ஒரு புட்டி சாராயமும் அரை துண்டு இறைச்சியுமேயாகும்" என்று ஜகாங்கீரே கூறியுள்ளான்.

இப்படியாக மன்னர்கள் காமக்கடலில் மூழ்கித் திளைத்தும், குடிவெறியிலும், அளவுக்கு மீறிய ஆடம்பரத்திலும் ஈடுபட்டு இருந்தார்கள்.

### சாதாரண மக்கள் நிலை

ஆனால் இவர்களுடைய ஆட்சியில் சாதாரண மக்களுடைய நிலை பரிதாபத்திற்கு உரியதாகவே இருந்தது.

### அக்பர்

முகலாயப் பேரரசர்களில் நல்லாட்சி நடததியவர் என்று அக்பர் புகழப்படுகிறார். இவரது ஆட்சியிலும் மக்களிடையே பசி பஞ்சம், பட்டினி நிலவியுள்ளது. மக்களையே மக்கள் அடித்துத் தின்று இருக்கின்றார்கள்.

### ஷாஜகான்

காதலுக்குச் சின்னமாக தாஜ்மகால் எடுத்த ஷாஜகானது ஆட்சியைப் பற்றிக் கேட்கவே வேண்டியதில்லை. மக்களுடைய வரிப்பணத்தில் காதல் சின்னம் அமைத்து விட்டு நாட்டில் பஞ்சம் புகுந்து மக்களின் உயிரைக்குடித்த காலத்தில் அவனால் தடுக்கமுடியவில்லை.

ஷாஜகான் ஆட்சியில் அரசாங்க வரலாற்று ஆசிரியனாக இருந்த ‘அப்துல்கமிது லாஹுாரி’ என்பான், “மனிதர்கள் ஒருவரை ஒருவர் கொன்று விழுங்கத் தொடங்கினர். மகனுடைய அன்பைக்காட்டிலும் அவனுடைய உடலிறைச்சியையே பெரிதும் விரும்பினர்” என்று கூறியுள்ளான்.

மற்றும் ஓர் டச்சு வணிகன், “இன்னும் பட்டினியால் இறந்து போகாமல் வீதியில் கிடப்பவர்களை மக்கள் துண்டு துண்டாக வெட்டினார்கள். மனிதர்கள், உயிரோடு இருக்கும் மற்ற மனிதர்களைக் கொன்று தின்றார்கள். வீதியில் செல்வதும் அதனிலும் மிகுதியாகப் பாதைகளில் பிரயாணம் செய்வதும் உயிருக்கு ஆபத்தாக இருந்தது. எந்த நேரத்திலும் யாராலும் கொன்று தின்னப்படும்” என்ற பயம் இருந்தது என்று கூறியுள்ளான்.

பதௌனி என்பார், ‘தம் கண்களாலேயே மக்கள் மற்ற மக்களைத் தின்னத் தொடங்கியதைக் கண்டாராம். எலும்பும் தோலுமாக நைந்திருந்த — பட்டினியால் வாடியவர்களைக் காணச் சகியாத நிலை இருந்தது.........நாடு முழுவதும் பாலைவனமாகக் காட்சி அளித்தது. நிலத்தை உழுவதற்கு நாட்டில் எந்த உழவரும் இல்லை என்றும் கூறியுள்ளார்.

எனவே, பண்டைய மன்னர்கள் மக்களின் நல்வாழ்வுக்காகத்தான் மன்னர்களாகத் தாங்கள் உள்ளோம் என்பதை மறந்து மன்னர்களின் ஆடம்பர வாழ்வுக்ாகத்தான் மக்கள் என்று எண்ணி ஆட்சி நடத்தினர் போலும்.

★


Grams : | Rose Arunachalan | Shevapet Salem — Phone No. 4047 — Rly. Station : Salem Market

**R. S. ARUNACHALAM CHETTY & SONS,**

HANDLOOM CLOTH MERCHANTS,
54, Komarasami Chetty Street,
Post Box No 209,
SHEVAPET, SALEM-2

**ரா. சு. அருணாசலம் செட்டி & சன்ஸ்**

**கைத்தறி ஜவுளி வியாபாரம்,**
தபால் பெட்டி எண்: 209,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்-2.

**வியாபாரிகளுக்கு ஓர் நற்செய்தி**

நாங்கள் 29 வருடங்களாக ஆடவர்களுக்கு 60s, 80s, 100s நூல் கட்டு வேட்டிகளும், மேல் துப்பட்டாக்களும், டைமண்டு வேட்டிகளும், லினன் லுங்கிகளும், மகளிர்களுக்கு 6,7,8 கெஜம் நூல் சீலைகளும், நார்பட்டு சீலைகளும், அசல் பட்டு சீலைகளும், ரவிக்கைகளும், கைத்தறியில் தயாரித்து, மொத்த வியாபாரிகளுக்கும், சில்லரை வியாபாரிகளுக்கும் விற்பனை செய்து வருகின்றோம்.

வியாபாரிகளின் நல்வரவை எதிர்பார்க்கின்றோம்.

வணக்கம்.

# கடந்த ஆண்டில் கழக டைரி

## 1969 செப்டம்பர் 17 முதல் 1970 செப்டம்பர் வரை

**தஞ்சையில் தந்தையின் சிலை**

17—9—69

கழகக்கோட்டையாம் தஞ்சையில் தந்தை பெரியார் அவர்களின் 91-வது பிறந்த நாள் விழாவை 17-9-69 அன்று தஞ்சை மாவட்டக் கழகம் தமிழர் சமுதாயத்தின் பெருவிழாவாக நடத்தியது. அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் விழாவிற்கு தலைமையேற்க, முதல்வர் கலைஞர் கருணாநிதி, மக்கள் கடலின் பெருமகிழ்ச்சி ஆரவாரத்திற்கிடையே தந்தை பெரியார் அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலையை திறந்து வைத்து தந்தை பெரியாருக்குப் பொன்னாடையும் போர்த்தினார். அமைச்சர் நாவலர் பொற்கிழி அளித்தார். மற்றும் அமைச்சர் முத்துசாமி உட்பட பலர் கலந்துகொண்டனர். தந்தை பெரியாருக்கு அறுவை சிகிச்சை செய்த டாக்டர் பட் அவர்களுக்கும், டிகிர் ஜான்சன் அவர்களுக்கும், முதலமைச்சர் பொன்னாடை போர்த்தினார். அனைவரும் பாராட்டுரையாற்றி மகிழ்ந்தனர். அன்று காலை 10-30 மணிக்கு தஞ்சை ராமநாதன் செட்டியார் ஹாலில் அமைச்சர் முத்துசாமி தலைமையிலும், குன்றக்குடி அடிகளார் தலைமையிலும், தந்தை பெரியார் அவர்களைப் பற்றி கவியரங்கம் நடைபெற்றது.

**சுயமரியாதைக் குடும்பங்களின் கருத்தரங்கு**

28—9—69

திருச்சி தில்லை நகர் மக்கள் மன்றத்தில், திருச்சி மாவட்ட சுயமரியாதைக் குடும்பங்களின் சார்பில் கருத்தரங்கு: சென்னைப் பல்கலைக் கழக துணைவேந்தர் திரு. நெ.து. சுந்தரவடிவேலு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாலை நிதியமைச்சர் மதிபழகன் கலந்துகொண்டு வாழ்த்தினார்.

**இழிவுநீக்கக்கிளர்ச்சியும் கருஞ்சட்டைப் படையும்**


8—10—69

''காலம் வீணாய்ப் போய்க்கொண்டிருக்கிறது. அய்ப்பசி மாத வாக்கில் 'சூத்திரன்' என்கின்ற இழிவு நீக்கக் கிளர்ச்சி துவக்கப்படும். அதில் ஈடுபட விருப்பமுள்ளவர்கள் தெரிவியுங்கள்'' என்று தந்தை பெரியார் அவர்கள் விடுத்த அறிக்கைக்கிணங்க தமிழகமெங்குமிருந்து கருஞ்சட்டைப் படை திரள ஆரம்பித்தது. 18—10—69 முதல் தொடர்ந்து நாள்தோறும் நூற்றுக்கணக்கில் பட்டியல் வர ஆரம்பித்தது. சுமார் 2000க்கு மேற்பட்ட வீரர்கள் கர்ப்பக்கிரகப் போர்ப்படையில் அணிவகுத்து நின்று தங்கள் பெயர்களை ''நுழைவுக் கிளர்ச்சி''ப் பட்டியலில் பதிவு செய்துகொண்டார்கள்.

**கிளர்ச்சிச் செயற்குழு**

20—10—69

தஞ்சை மாவட்டம் மன்னார்குடி கழகக் கட்டிடத்தில் 20—10—69 அன்று தஞ்சை மாவட்ட திராவிடர் கழகக் கமிட்டிக் கூட்டம் தந்தை பெரியார் அவர்கள் தலைமையில் கூடி, சூத்திரன் என்னும் இழிவு நீக்கக் கிளர்ச்சியான '' கர்ப்பக்கிருக நுழைவுக்




தஞ்சையில் தந்தை பெரியார் சிலை திறப்பு விழா (17-9-69)

கிளர்ச்சி" யினை மன்னார்குடி இராஜ கோபால் சாமி கோயிலில் தொடங்குவது என்று தீர்மானிக்கப்பட்டு, கிளர்ச்சிக் கமிட்டியும் அமைக்கப்பட்டது.

### கரூர் வட்ட சமுதாய சீர்திருத்த மாநாடு

26—10—69

கரூர்வட்ட திராவிடர் கழகத்தின் சார் பில் வேலாயுதம் பாளையத்தில் 26—10—69 அன்று, சமுதாய சீர்திருத்த மாநாடு 'விடுதலை' ஆசிரியர் கி. வீரமணி எம். ஏ. பி எல். தலைமையில் மிகச்சிறப்புற நடத் தப்பெற்றது. அம்மாநாட்டில் தந்தை பெரியார் கலந்துகொண்டு சமுதாய விழிப் புக்கோர் அரிய வழி முறையினை எடுத்துக்காட்டி அறிவுறுத்தினார்கள்.

---

### 'விடுதலை'க் கருத்துக்களும் தமிழக முதல்வர் கலைஞரும்

4—11—69

"நான் இந்த மாமன்றத்திலே காணுகின்றேன். நண்பர் மாதவனி டத்திலே பேசிக்கொண்டிருக்கும் போதுகூடச்சொன்னேன். எங்கெங்த இடங்களில்-எங்கெங்த உருவங்களில் பெரியார் இங்கு அமர்ந்திருக்கின் றார் என்பதை மன்றத்தில் என்விழி களை மேயவிட்டுப் பார்த்ததில புரிந்துகொள்ள முடிகிறது. அப்படி பெரியார் வியாபித்திருக்கிறார். எல்லா இடங்களிலும் வியாபித் திருக்கிறார். அந்தப் பெருமகன் ஒரு பத்திரிகையை நடத்த வேண்டும், கருத்துக்கள் பரவிட வேண்டும் என்று நினைக்கிறார் என்றால் பணம் சம்பாதிக்கவேண்டும் என்ற லாப நோக்கத்தோடு அல்ல; என்னு டைய பத்திரிகை அதிக எண்ணிக் கையில் விற்பனையாக வேண்டும் என்பதல்ல. அது போய்ச்சேரவேண் டிய இடத்திலே அதிலே சொல்லப் படுகிற கருத்துக்கள் போய்ச்சேர்ந் தால் போதும் என்று ஆணித்தர மாகக் குறிப்பிட்டார்கள்.

அவர்கள் சொன்னாலும் சொல் லாவிட்டாலும், 'விடுதலை' யிலே வருகிற கருத்துக்கள் போய்ச்சேர வேண்டிய இடத்திலே போய்ச் சேர்ந்து கொண்டிருக்கின்றன. அதை யாரும் மறுப்பதற்கில்லை."

---

### 'விடுதலை'யின் புதுத் தோற்றம் !

கழக ஏடான 'விடுதலை'க்கு, கிழக்கு ஜெர்மனியிலிருந்து லட்ச ரூபாய் செலவில் வரவழைக்கப்பட்ட "விக்டோரியா 820" எனும் புதிய அச்சு இயந்திரம் இயக்குப் பெருவிழா 4-11-69 அன்று 'விடுதலை' பணி மனையில் நடைபெற்றது. பிற்படுத்தப்பட் டோர் நல அமைச்சர் என். வி. நடராசன் தலைமையிலும், தந்தை பெரியார் முன் னிலையிலும், முதல்வர் கலைஞர் கருணா நிதி அச்சு இயந்திரத்தை இயக்கி வைத் துப் பேசினார்.

பின்னர் தந்தை பெரியார் உருவப் படத்தினை சட்ட அமைச்சர் எஸ். மாதவன் அவர்களும், அறிஞர் அண்ணா உருவப் படத்தினை தந்தை பெரியார் அவர்களும் திறந்து வைத்து உரையாற்றினர்.

அடுத்து முதல்வர் கலைஞர் அவர் களுக்கு தந்தை பெரியார் அவர்கள் பொது மக்களின் பெருத்த ஆரவார மகிழ்ச்சிக் கிடையே பொன்னாடை போர்த்தினார். அன்று முதல் 'விடுதலை' புதிய பொலி வுடன் பெரிய அளவில் வெளிவந்தது.

### கர்ப்பக்கிருக நுழைவுக் கிளர்ச்சி : போர்க்கொடி உயர்ந்தது

16—11—69

1970 ஜனவரி 26-ம் நாள் கர்ப்பக்கிருக நுழைவுக் கிளர்ச்சி தமிழகமெங்கும் தொடங்கப்பெறும் என்று தந்தை பெரியார் போர்க்கொடி உயர்த்தினார். 16-11-69 அன்று மாலை 3-30 மணியளவில் திருச்சி 'பெரியார் மாளிகை' யில் தந்தைபெரியார் தலைமையில் திராவிடர் கழக மத்திய நிர்வாக கமிட்டி கூடியது. தந்தைபெரியார் அவர்கள் கர்ப்பக்கிருக நுழைவுக் கிளர்ச்சி யின் அவசியம் பற்றி விளக்கினார். அவர்க ளால் பிரேரிக்கப்பட்ட 8 தீர்மானங்கள் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டன.

### வழக்கறிஞர் படை திரண்டது

"கர்ப்பக்கிருக நுழைவுப் போராட்டத் தில் ஈடுபடும் கழகத் தொண்டர்களுக்கு நீதித்துறை சம்பந்தப்பட்ட எல்லாவித உதவிகளையும் இலவசமாக நடத்தித்தர நாங்கள் இதன் மூலம் ஒப்புதல் அளிக்கி றோம்" என்று நிலக்கோட்டை வழக்கறிஞர் கள் 28-11-69 லும், குடந்தை வழக்கறிஞர் கள் 3-12-69லும், தஞ்சை வழக்கறிஞர்கள் 11-12-69 லும், கோவை வழக்கறிஞர்கள் 9-1-70லும் அறிக்கை வெளியிட்டு போராட்ட அணியில் சேர்ந்தார்கள்.



தஞ்சையில் தந்தைக்கு முதல்வர் பொன்னாடை போர்த்துகிறார்

## அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தந்தை பெரியார்

5—12—69

அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் பொதுப் பேரவையில், தந்தை பெரியார் அவர்கள் 5-12-69 அன்று மாண வர்களின் எதிர்கால நலன்களை எடுத்துக் காட்டி அறிவுரையாற்றினார்.

## மதுரையில் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம்

14—12—69

மதுரையில், பெரியார் சுயமரியாதைப் பிரச்சார ஸ்தாபனக்கட்டிடத்துக்கு 14-12-69 அன்று தந்தை பெரியார் அவர்கள் அடிக் கல் நாட்டினார்கள்.

## அடிகளாரின் புரட்சி நமது வெற்றி

20—12—69

தந்தை பெரியார் அவர்கள் அறிவித்த கர்ப்பக்கிருக நுழைவுக்கிளர்ச்சியின் முதல் வெற்றியாக, இழிவு ஒழிப்பின் மாபெரும் முன்னோடி வெற்றியாக, "குன்றக்குடி ஆதீன கோயில்களில் கர்ப்பக்கிருகத்திற்கு உள்ளே அனைவரும் செல்லலாம்" என்று குன்றக்குடி அடிகளார் தெரிவித்தார். 24-12-69 முதல் இம்முறை அமுலாகுமென அவர் அறிவித்தார்.

## தமிழன் கடமை வலியுறுத்தல்

2—1—70

தமிழர்கள் சாதி ஒழிப்பிலும், அதற்கு ஆதாரமானவற்றை ஒழிப்பதிலும் ஈடுபட வேண்டுமென்பதை தந்தை பெரியார் அவர் கள் வலியுறுத்தி ஒரு அறிக்கை 2-1-70 அன்று வெளியிட்டார்கள். அவ்வறிக்கையில் தமிழர்கள் பார்ப்பனப் பத்திரிகைகளை வாசிப்பதைத் தடுத்தல், கோவில்களுக்குப் போவதைத் தடுத்தல், பூசாரிக்கு தட்சணை கொடுக்காமல் இருக்கச் செய்தல், மத நெற்றிக்குறிகளை கண்டித்துத் தடுத்தல், பார்ப்பனர்களை "பிராமணர்" என்று சொல்வதைத் தடுத்து பார்ப்பனர் என்றே சொல்ல வைப்பது போன்ற கட்டளை களை வெளியிட்டு வலியுறுத்தியிருந்தார் கள்.

## வடபுலத்திலும் பெரியாரின் சூறாவளி

தந்தை பெரியார் அவர்களின் இங்கி லீஷ், இந்தி, "இராமாயண பாத்திரங் களுக்கு" உ. பி. அரசு தடை விதித்தது.

## தந்தை பெரியாரின் வானொலி பேட்டி

4—1—70

தந்தை பெரியார் அவர்களின் பகுத் தறிவுத் தொண்டு குறித்து திருச்சி வானொலி நிலையத்தினர் தந்தைபெரியார் அவர்களை திருச்சியில் பேட்டி கண்டு 5-1-70 அன்று 8 மணிக்கு அவரது கருத்தை ஒலிபரப்பினர். அப்பேட்டியில் கடந்த கால நிகழ்கால, எதிர்கால தமிழர் சமுதாய நல் வாழ்வு பற்றியும், அதில் தம் தொண்டு என்ன என்பது பற்றியும் மிக விளக்கமாக தந்தை பெரியார் அவர்கள் எடுத்துரைத் தார்கள்.

## பெரியாரின் பெருவெற்றி

6—1—70

தஞ்சையில் நிறுவப்பட்டுள்ள தந்தை பெரியார் அவர்களின் முழு உருவச் சிலையின் பீடத்தில் பொறிக்கப் பட்டுள்ள கடவுள் மறுப்பு வாசகத்தை எதிர்த்து, பார்ப் பனர்கள் பிதற்றிக் கொண்டிருந்த தைக் கண்டித்து பதிலளிக்கப்பட் டது. மற்றும் சிலர் அரசுக்குக் கொடுத்த மனுவிற்கு பதிலளித்து "ஒருவரது பேச்சுக்களையும், எழுத் துக்களையும் அவருக்கு சிலை எழுப் புகையில் அவரது சிலையின் பீடத் தில் பொறிப்பது வழக்கம். ஆகவே இது முற்றிலும் நியாயமான ஒன்றே யாகும்" என்று தமிழக அரசு சார் பில் தலைமை செயலாளர் ஈ. பி. ராயப்பா அய். ஏ. எஸ். பதில் இறுத் தார்.

## "உண்மை" வெளியீட்டு விழா

14—1—70

தமிழர்களை விழிப்புறச் செய்யும் பேரொளியாக "உண்மை", 'விடுதலை' ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் வெளியிட் டார்கள். 14-1-70 மாலை திருச்சி புத்தூர் "பெரியார் மாளிகை"யில் நடைபெற்ற இவ்வெளியீட்டு விழாவில் தந்தை பெரியார் அவர்கள் கலந்துகொண்டு 'உண்மை' இத ழின் சிறப்புக்கு ஆக்க ரீதியான வழி முறை களை எடுத்துக்காட்டினார்கள். மற்றும் ஏராளமாக கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். உண்மைக்கு 10,000 சந்தாதாரர்கள் சேர்ந்தனர். இது அய்யாவின் வெற்றிக்கு அடையாளம்.



அய்யாவுக்கு அறுவை சிகிச்சை செய்த டாக்டர் **பட்** அவர்களுக்கு
முதல்வர் **கலைஞர்** பொன்னாடை போர்த்தினார்

"நாம் நம் வசதிக்கேற்ப, நிலைக்கேற்ப அறிவைப் பயன்படுத்த ஆரம்பித்தால் வெள்ளைக்காரன் நம் பின்னால் நிற்கவேண்டும். மற்ற நாட்டானைவிட நமக்கு அறிவு **அதிகம்.** அதைப் பயன்படுத்தாத காரணத்தினாலேயே நாம் இன்று காட்டுமிராண்டிகளைப்போல் இருங்கிறோம்"

**—தந்தை பெரியார்.**

## முதல்வர் கலைஞர் தந்த வெற்றிக்கனி
17—1—70

"ஆலயங்களில் கர்ப்பக்கிரகம்வரையில் சாதி பாகுபாடின்றி அனைவரும் சென்று ஆண்டவனைத் தொழுதிட வேண்டுமென்றும், அனைவர்க்கும் உயர்வு தாழ்வின்றி அர்ச்சகராகும் உரிமை வேண்டும் என்றும் வலியுறுத்துகிற அடிப்படையில் பெரியார் அவர்கள் ஒரு கிளர்ச்சி தொடங்குவதாக அறிவித்ததையொட்டி, அதற்கு ஆதரவான கருத்துக்களும், எதிர்ப்பான கருத்துக்களும், நடவடிக்கைகளும் ஏடுகளில் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பிட்ட வகுப்பினர்தான் அர்ச்சகராக இருக்கவேண்டுமென்று யாரும் இந்த நூற்றாண்டில் வாதாடுவார்கள் என நான் எதிர்பார்க்கவில்லை. காலம் வேகமாகச் சுழன்று மனிதனுக்கு மனிதன் பிறப்பால் உயர்வு தாழ்வு கிடையாது என்ற கொள்கை வலுப்பெற்று வரும் இந்நாளில், அப்படிப்பட்ட ஒரு பிற்போக்கு எண்ணத்தை யாரும் முரட்டுப்பிடியாக பிடித்துக்கொண்டிருக்க மாட்டார்கள். வள்ளுவர், புத்தர், காந்தியடிகள் போன்றோரைப் போற்றுகின்றவர்கள், ஆண்டவனுக்கு அர்ச்சகர்களாக குறிப்பிட்ட ஜாதியினர் தான் இருந்திடல் வேண்டுமெனல் அநியாயமாகும்.

அர்ச்சகர்களுக்கென சில தகுதிகள் இருக்கவேண்டும். புனிதத்தன்மைகளை அவர்கள் கடைப்பிடித்தாக வேண்டும். அதற்குரிய பயிற்சிகளை அவர்கள் பெற்றாகவேண்டும். அதில் எனக்கு கருத்து வேறுபாடு இல்லை. அப்படிப் பயிற்சி பெறுகிறவர்கள் எந்த வகுப்பினராயிருந்தாலும் அவர்கள் அதில் தேர்வு பெற்று அர்ச்சகராக இருக்கலாம். அதற்கு விதிமுறைகள் வகுக்க அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. அதே சமயம் பரம்பரை அர்ச்சகர் வீட்டுப் பிள்ளைகள் அர்ச்சகராக விரும்பினால், அவர்களுக்கு முதல் சலுகை அளிப்பது பற்றியும் அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது.


இந்த விதிமுறைகள் உருவாக்கப் பட்டு, அதன்படி அர்ச்சகர் பதவிகளை பிறப்பினால் கணக்கிடாமல், தகுதியொன்றினால் கணக்கிடப் படக்கூடிய நாள் வந்துவிடுமானால், ஆண்டவனைத்தொழ ஆலயம்செல்வோர், சாதி வேறுபாடின்றி கர்ப்பக்கிரகம் வரையில் செல்வதற்கு தடையில்லையென்பதும் கொள்கை ரீதியாக ஒப்புக் கொண்டதாக ஆகிவிடும்.

கர்ப்பக்கிரகத்தில் இருக்கின்ற பொருள்களின் பாதுகாப்புக்காக மட்டுமே அந்த இடம் ஒருவர் பாதுகாப்பில் விடப்பட வேண்டுமே தவிர அதற்கு சாதி வர்ணம் பூசப்படக் கூடாது என்பதை இந்த அரசுமட்டுமல்ல; "ஆண்டவன் எதிரே அனைவரும் சமம்" என்ற கருத்தினை ஒப்புக்கொள்கிற அனைவரும் ஏற்றுக் கொண்டே தீர்வர்.

ஆகவே, இந்த நன்னிலை ஏற்பட ஆலயங்களில் ஆண்டவன் திருமுன்னே சாதியின் பெயரால் மற்றவர்களுக்கு இழைக்கப் படும் இழிவான அநீதி அகன்றிட, விடுமுறைகள் செய்திட அரசு முன் வருகிறது என்ற உறுதி மொழியினை ஏற்று, பெரியார் அவர்கள், தான் திட்டமிட்டிருக்கிற கிளர்ச்சியினை நிறுத்தி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த என் வேண்டுகோளை பெரியார் அவர்கள் ஏற்பார்கள் என்ற நம்பிக்கையுடன் இந்த அறிக்கையை வெளியிடுகிறேன்."

**மு. கருணாநிதி,**

தமிழக முதலமைச்சர்.




'விடுதலை'யின் புது அச்சு இயந்திரம்

★

விடுதலை பணிமனையில் புதிதாக ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, பொருத்தப்பட்ட "விக்டோரியா 820" ஆட்டோமேட்டிக் அச்சு இயந்திரத்தை முதலவர் கலைஞர் இயக்கி வைக்கிறார்.

★



## குடந்தையில் சமுதாய சீர்திருத்த மாநாடு

18—1—70

குடந்தையில் 18-1-70 அன்று குடந்தை வட்ட தி. க. சார்பில் சமுதாய சீர்திருத்த மாநாடு, பி. முத்துதனபால் பி. ஏ. பி. எல். தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அதில் அமைச்சர் என். வி. நடராசனும் கலந்து கொண்டார். தந்தைபெரியார் அவர்கள் கலந்து கொண்டு அறிவுரையாற்றினார்கள்.

## போரின்றி வெற்றி

19—1—70

"தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் திரு. கருணாநிதியவர்கள், சாதி அடிப்படையில் கோயில் அர்ச்சகர்கள் நியமனம் செய்யப்படாமல் அனைவருக்கும் சமவாய்ப்பு அளிக்கும் வகையில் சட்ட விதிமுறைகள் ஏற்படுத்தப்படும் என்று அறிவித்துள்ளதால், கிளர்ச்சியின் தத்துவத்தை நல்லவண்ணம் புரிந்து செயல்பட முனைந்துள்ள அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதுடன், 26-1-70 அன்று நடைபெறவிருந்த கிளர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது என்று தந்தை பெரியார் அவர்கள் கழகத்தோழர்களுக்கு அறிவித்தார்கள்.

## பிற்படுத்தப்பட்டோர் குழுவுக்கு பெரியார் பேட்டி

22—1—70

தமிழக அரசால் நியமிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் நலக்குழுத் தலைவர் ஏ. என். சட்டநாதன், செயலாளர் குழந்தை வேலு, மற்றும் உறுப்பினர்கள் சின்னப்பன், ஜமால் உசேன் ஆகியோர் 22-1-70 மாலை 4-30மணிக்கு திருச்சி புத்தூர் "பெரியார் மாளிகை"யில் தந்தை பெரியார் அவர்களைச் சந்தித்து ஆலோசனை பெற்றனர். பிற்படுத்தப்பட்டோர் நலத்திற்காக நல்ல பல திட்டங்களை அவர்களிடம் தெரிவித்தார்.

## மதுரையில் புதிய கட்டிடம்

14—2—70

மதுரை செனாய் நகர் ஜகஜீவன்ராம வீதியில் கட்டப்பட்டுள்ள திராவிடர்கழக புதிய கட்டிடத்தை 14-2-70 அன்று எஸ். சுப்பையா தலைமையில் தந்தை பெரியார் திறந்து வைத்து அறிவுரையாற்றினார்.

## உ. பி. யிலும் பெரியாரின் வெற்றி!

தந்தைபெரியாரின் இராமாயண நூல் இந்தி மொழி பெயர்ப்பை, உ. பி. அரசு தடை செய்தது சட்டபூர்வமானதல்ல அது செல்லாது; என்று 17-2-70 அன்று அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் 'ரிட்' மனு தாக்கல் செய்யப்பட்டது.

தந்தை பெரியார் அவர்களின் இராமாயண நூலை மொழிபெயர்த்தவர் லலயிசிங் யாதவ் என்பவர்.

## தந்தை பெரியார் நூலுக்கு டில்லி தடை

28—2—70

தந்தை பெரியார் எழுதிய "ராமாயண கதாபாத்திரங்கள்" நூலை "அசோக் புஸ்தகாலயா" என்ற நூல் வெளியீட்டாளர்கள் வெளியிட்டிருந்தார்கள்.

"சச்சி ராமாயண்" எனும் இந்தி மொழி பெயர்ப்பு நூலான அதை, டில்லி நிர்வாகப் பகுதியில் பறிமுதல் செய்யும்படியும், அதை வெளியிடுவது இந்தியன் பினல்கோடு 295ஏ பிரிவின்படி தண்டனைக்குள்ளாகும் என்றும் டில்லி லெப்டினென்ட் கவர்னர் தடை விதித்து உத்தரவிட்டார்.

## குடும்பக்கட்டுப்பாடு அமைச்சர் அய்யாவிடம் பேட்டி

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் என்னென்ன புதுமுறைகளைப் புகுத்தலாம் என்பதை அறியும் வகையில் டில்லி அரசின் சுகாதார - குடும்பக் கட்டுப்பாடுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். சந்திரசேகர் தந்தை பெரியார் அவர்களை பேட்டி கண்டார். 8-3-70 இரவு 9-15 மணிக்கு சென்னை வானொலி ஒலிபரப்பிய இப்பேட்டியில், மத நம்பிக்கை இல்லாத அதிகாரிகளே குடும்பக் கட்டுப்பாடு அதிகாரிகளாக வரவேண்டும் என்றும், மற்றும் கருச்சிதைவைச் சட்ட பூர்வமாக்கி, பதவிகளில் பாதியை பெண்களுக்கே கொடுக்கலாம் என்பது போன்ற பல யோசனைகளை தந்தை பெரியார் அவர்கள் தெரிவித்தார்கள்.

## கர்ப்பக்கிரகக் கிளர்ச்சி முழு வெற்றி

12—3—70


"தந்தை பெரியார் அவர்கள் கர்ப்பக்கிரக நுழைவுப் போராட்டத்தை ஒத்தி வைத்திருப்பதாக அறிவித்துள்ளார்கள். குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்லாத பிற எல்லா இனத்தவரும் கோவில் கர்ப்பக்கிரகத்தினுள் போகவும், தகுதி அடிப்



முதல்வருக்கு 'நலம்நாடுவோர் குழு' பாராட்டு விழா—ஓட்டல் அசோகாவில்



குடந்தை மாநாட்டில் கழகத் தோழர்களுடன் அய்யா



மத்திய அமைச்சர் டாக்டர் சந்திரசேகர், அய்யாவிடம் வானொலிப் பேட்டி

படையில் அர்ச்சகராகவும் அனுமதிக்கும் வண்ணம் சட்டத் திருத்தம் ஒன்றை அரசு கொண்டு வரும்" என்று **தமிழ்நாடு சட்ட மன்ற பேரவையில்** 12-3-70 அன்று முதல்வர் கலைஞர் கருணாநிதி அறிவித்தார்.

### மாயூரம் வட்ட மாநாட்டில் சாதி ஒழிப்புப் போர்க்கொடி

மாயூரம் வட்ட தி. க. சார்பில், மாயூரத்தில் 11-4-70 அன்று சிவகங்கை ஆர். சண்முகநாதன் தலைமையில் மாயூரம் வட்ட தி. க. மாநாடும், 12-4-70 அன்று 'விடுதலை' ஆசிரியர் கி. வீரமணி தலைமையில் சமுதாய சீர்திருத்த மாநாடும் மிகவும் சிறப்புடன் நடத்தப்பெற்றது. இரண்டு நாள் மாநாட்டிலும் தந்தை பெரியார் அவர்களும் சர்வ கட்சித் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

12-4-70 மாநாட்டில் தமிழர் சமுதாயம் விழிப்புற வழிவகுத்து 7 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

6-வது தீர்மானத்தில், வியாபார விளம்பரப் பலகைகளில் சாதிப் பெயர்கள் இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் அதை 10 நாட்களுக்குள் அகற்றிவிட வேண்டும் என்றும் அப்படி அகற்றாவிட்டால் அப்படிப்பட்ட வியாபாரக் கடைகள் முன் அமைதியான முறையில் கிளர்ச்சி நடத்தி ஜாதி வெறியை விரட்டுவதென்றும் கூறி அறப் போர்க்கொடி உயர்த்தப்பட்டது.

### தந்தை பெரியார் விளக்கம்
16—4—70

மாயூரம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையொட்டி, உணவுச் சாலைகளில் 'பிராமணாள்' பெயர் நீக்கக் கிளர்ச்சி தொடங்குவதன் அவசியத்தை வலியுறுத்தி தந்தை பெரியார் அவர்கள் 16-4-70 அன்று, "வேண்டுகோள் கிளர்ச்சி" என்னும் தலைப்பில் அறிக்கை விடுத்து, 26-4-70-ல் கிளர்ச்சி துவங்க வேண்டுமென்றும், கழகத் தோழர்களுக்குக் கட்டளையிட்டார்.

### 'பிராமணாள்' ஒழிப்பில் வெற்றிவாகை!
19—4—70

தந்தை பெரியார் அறிக்கை விடுத்த மூன்றே நாட்களுக்குள் ஓட்டல் பெயர் பலகைகளில் உள்ள 'பிராமணாள்' பெயர் மறையத் தொடங்கியது. அரக்கோணம்

ஓட்டல் அதிபர்களே அப்பெயரை நீக்கினர். அடுத்து தஞ்சை கழகம் அணிவகுத்தது, அங்கும் ஓட்டல் அதிபர்களே 'பிராமணாள்' பெயரை நீக்கினர். தொடர்ந்து திருப்பத்தூர், வேலூர், காரைக்குடி, சோலார் பேட்டை, சிவகங்கை, திட்டக்குடி—என்று ஒவ்வொரு நாளும் பல்வேறு ஊர்களில் உரிமையாளர்கள் கையாலேயே அந்த சாதிவெறிச் சொல்லை அகற்றிய வெற்றிச் செய்திகளை கழகத் தோழர்கள் அளித்தனர், சில இடங்களில் மட்டும் மறுத்தவர் களையும் மண்டியிடச் செய்யும் வகையில் கருஞ்சட்டைப்படை திரண்டு 'பிராமணாள்' பெயரை அகற்றியது. மதுரை, திருச்சி போன்ற நாலைந்து இடங்களில் கருஞ் சட்டைப்படை அதன் வலிவைக் காட்டி அப்பெயரை அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. தொடர்ந்து தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் வெற்றிப் பட்டி யல்கள் வரத் தொடங்கின.

**குடியரசுத் தலைவருக்குத் தந்தி**

9—5—70

வேலூர் கோட்டைக்குள்ளே இந்துமத வாதிகளும், பார்ப்பனர்களும் சேர்ந்து சலகண்டேசுவரர் சாமிக்கும் மற்ற சாமி களுக்கும் சிலை வைக்க முயன்றதைத் தடுத்து, 'விடுதலை' ஆசிரியர் கி. வீரமணி, எம்.ஏ., பி.எல். அவர்கள் தலைமையில் கருஞ்சட்டைத் தொண்டர்களின் குழு இயங்கியது. அது பற்றிய எதிர்ப்புக் குழு, குடியரசுத் தலைவருக்கும், அம்மாவட்டக் கலெக்டருக்கும் தந்தி கொடுத்து அம் முயற்சியை தடுத்து நிறுத்தியது. பிறகு அதுபற்றி குடியரசுத் தலைவரிடம் மனுவும் கொடுத்து மதவாதிகளின் முயற்சி தடுக்கப் பட்டது.

**நாடாளுமன்றத்தில் 'விடுதலை'க் குரல்**


12—5—70

"இந்தியன் பாங்கா-அக்கிரகாரமா?" என்று 'விடுதலை' ஏட்டில் 'சர்ச்லைட்' எழுதி வந்த பார்ப்பனர் ஆதிக்கத்தை முறி யடிக்கும் தொடர் கட்டுரை பற்றி தி. மு. க. உறுப்பினர் கிருட்டினன் கேள்வி கேட் டார்.

**டில்லி மாநிலங்களவையில்...**

23—5—70

"தந்தை பெரியார் அவர்கள் எழுதிய நூலுக்கு தடை விதிக்கப்பட்டது ஏன்?"



என்று மாநிலங்களவையில் கேள்விக் கணைகள் தொடுக்கப்பட்டன.

அதற்கு பதிலளித்து மத்திய உள்துறை ராசாங்க அமைச்சர் வி. சி. சுக்லா பதில் கூறினார்.

### தந்தை பெரியாருக்கு 'யுனெஸ்கோ' விருது

27—6—70

அய்.நா. கல்வி, பண்பாட்டு அமைப்பு மன்றத்தின் (யுனெஸ்கோ) சார்பில் சென்னை ராஜாஜி மண்டபத்தில் தந்தை பெரியார் அவர்களுக்கு விருது வழங்கப் பட்டது. மத்திய அமைச்சர் திரிகுணசென் தலைமையில் முதல்வர் கலைஞர் விருதை வழங்கினார். அவ்விருதுப் பட்டையத்தில் "புது உலக தீர்க்கதரிசி, தென் கிழக்கு ஆசியாவின் சாக்ரடீஸ்", "சீர் திருத்த இயக்கத்தின் தந்தை", "அறியாமை, மூடநம்பிக்கை, அர்த்தமற்ற சம்பிரதாயம், இழிந்த வழக்கங்கள் ஆகிய வற்றின் கடும் எதிரி" என்று தந்தை பெரியார் அவர்களை பாராட்டியிருந் தார்கள்.

### திருச்சி கலெக்டர் அலுவலகத்தில் அனுமன் கோவில் தடுக்கப்பட்டது

31—7—70

திருச்சியில் கலெக்டர் அலுவலகத் திற்குள் ஒரு குரங்கு செத்துவிட்ட இடத்தில் கோயில் கட்டி கும்பாபிஷேகம் நடத்த ஏற் பாடு செய்ததற்கு, தந்தை பெரியாரின் ஆலோசனையின் பேரில் எதிர் நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், திருச்சி நகர தி.க. தலை வர் செல்வேந்திரன் மூலம் மாவட்ட முன்சீப் கோர்ட்டில் வழக்கும் தொடுக்கப்பட்டு அம் முயற்சி தடுக்கப்பட்டது. மாவட்டக் கலெக் டரும் அம்முயற்சி நடைபெற்றதற்கு வருத் தம் தெரிவித்தார்.

### " எச்சரிக்கை "

3—8—70

தமிழக ஊராட்சித் தேர்தல்களின் முடிவையொட்டி தி. மு. க. வினரை உஷார் படுத்தி தமிழக அரசைப் பலப்படுத்துவதற் கான காரணங்களையும் அவசியத்தையும் விளக்கி, 3-8-70 'விடுதலை' ஏட்டில் "வேண்டுகோள் எச்சரிக்கை" என்னும் தலைப்பில் தந்தை பெரியார் தலையங்கம் எழுதினார். அய்யா கூறிய அறிவுரையை ஏற்று அதற்குத்தகுந்தாற்போல் நாங்கள் செயல்படுவோம் என்று முதல்வர் கலைஞர் அவர்களும் மதுரையில் அறிவித்தார்.



தந்தை பெரியார் அவர்களுக்கு 'யுனெஸ்கோ' சங்கட் பாராட்டை முதல்வர் கலைஞர் அளிக்கிறார். மத்திய அமைச்சர் டாக்டர் திரிகுணசென் உடனிருக்கிறார்.

# பெரியார் பெருந்தொண்டு

17—9—1969 அன்று தந்தை பெரியார் அவர்களது பெருந்தொண்டினைப் பாராட்டி 'கவியரங்கம்' ஒன்று தவத்திரு. குன்றக்குடி அடிகளார் முன்னிலையிலும், அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள் தலைமையிலும் நடைபெற்றது.

கவிஞர்கள் ஆனந்தம், புதுவை சிவம்,எம் பி, பாலசுந்தரம், பழனி, முத்தன், குடிஅரசு ஆகியோர் தந்தை பெரியார் அவர்களது பெருந்தொண்டினை பல்வேறு தலைப்புகளில் பாடினர்.

அவைகள் இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன.

## முன்னிலைக்கவிதை

**: தவத்திரு குன்றக்குடி அடிகளார் :—**

பூவுல கினிற்பொற் புடைத்தமி ழகத்தில்
கல்தோன்றி மண்தோன் றாக்கா லத்தே
முன்தோன்றி மூத்த தொன்மைக் குடியினர்
தமிழ்க்குடி யினராம்! தரணியில் அவரே
புகழ்க்குடி யினராய்ப் பொலிந்தவ ராவார்!
முந்தைநூ றாயிரம் ஆண்டுகள் முன்பே
மூதறி வதனால் முத்தமிழ் கண்டதும்
வையகத் தினில்வாழ் வாங்கு வாழ்ந்திடும்
வகையும் முறையும் மாண்புறு காதலும்
கவினுறு கலையும் கடலது கலங்கக்
கலங்கள் இயக்கும் திறனும் வீரமும்
சீர்மிகு செப்பம் திகழ்நல் லாட்சியும்
கண்டதும், புகழினைக் கொண்டதும் தமிழினம்!
ஆயினும் என்ன? அவலமே உற்றது.
வளர்பசு மரத்தில் தழைபுல் லுருவிபோல்
ஒட்டி யும்உற வாடியும் தமிழ்உரம்
கெட்டிடச் செய்தது அயல்வழக் கதுவே!
அருமைத் தமிழ்நா டதனில் கொடிய
பேதம் வளர்த்து, மொழியில் நெறியில்

## கவியரங்கம்

## முட்டுக்கட்டைபோட முடியுமா ?



"என்னைப் பொறுத்த வரை இரண்டு காங்கிரசும் ஒன்றுதான். இரண்டு பேரில் யார் ஆதிக்ககாரர்களாக இருந்தாலும் எனக்கு வேண்டியகாரியத்துக்குக் கேடு வராது. சமுதாய சீர்திருத்தம்-முன்னேற்றம் என்பதற்கு இனியாராலும் முட்டுக்கட்டைபோட முடியாது... கீழ் நிலையிலிருக்கிற பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள், தங்கள் நிலையை உயர்த்திக்கொள்ளத் துணிந்துவிட்டார்கள். காமராஜரால் கல்வியும், முன்னேற்றக் கழகத்தால் பதவியும், உத்தியோகமும், சமூக உணர்ச்சியும் பெற்றுவிட்டார்கள். இனி எந்தக் கட்சி அல்லது யார் ஆதிக்கத்துக்கு வந்தாலும் இந்த இரண்டிலும் கைவைக்க முடியாது. மற்றபடி, இந்த (இந்திரா அம்மையார்-காமராசர்) இருவரில் நியாயம் எப்படி இருந்தாலும் தி. மு. க. யாரை ஆதரித்தால் தங்கள் ஆட்சிக்கு கேடில்லாமல், தொல்லையில்லாமல் இருக்கக்கூடுமோ, தங்கள் கொள்கைகளைப் பரப்ப முடியுமோ அவர்களைத்தானே ஆதரிக்கும்."

**—தந்தை பெரியார்**

27—11—69

'விடுதலை'

நஞ்சினைக் கலந்து நலம்கெடச் செய்தது!
ஓராண் டிற்கொரு உயர்பாட் டளித்த
மூலன் சொன்ன முதுமொழி நோக்கின்
ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
என்றே இயம்பினன்! நன்றே அம்மொழி!
தமிழர் மறந்தனர்! உமிழ்நீர் நாவுடன்
பேழை வயிற்றினை வளர்த்திட வந்தோர்
ஒருபிறப் பாகி உறவு கலந்து
வாழப் பிறந்த மனிதனைப் பிரித்தனர்!
மனிதனை மனிதன் மோதிட வைக்கும்
மூடச் சாதிப் பகைமையை மூட்டி
விட்டனர்! தமிழ்ச் சாதியும் வீழ்ந்தது!
கூடித் தொழில்செய் தின்புறும் மானுடச்
சாதியில் சாதிச் சழக்குகள் தோன்றின!
குன்றிய தந்தோ, குன்றின் அனைய
புகழினம்! தமிழினம்! பொய்ந்நெ றியாலே!
"அறிவால் எதையும் ஆய்ந்து பார்" என
மேலும் மூல முனிவன் விளம்பினன்.
ஆயினும் வாழும் அரியபே ரினத்தை
வகைபடச் சூழ்ந்தே அடக்கிட வல்ல
சூதினைக் கொண்டார்! தொல்லறம் மாய்ந்தது!
"இவன்தலை யில்அவன் எழுதினான்" என்றே
இயம்பினர் இந்நெறி பொய்ந்நெறி, பொய்ந்நெறி
"தீதும் நன்றும் பிறர்தர வாரா"
"அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்"
என்பதும் இந்த நாட்டின் பழைய
நெறியே! ஆயினும் இடையினில் வந்த
ஏமாற்று நெறியே நெறியது வாகி
ஏழைகள் ஏங்கித் தவித்திடச் செய்தது!
வளம்பல படைத்தோர் மக்களை வாட்டிட
அவலம் பெருகிய(து) ஆழ்கடல் போல
அருந்துயர் பெருகி அழித்தது! இந்தப்
பொல்லா நெறியினைப் புனித முனிவன்
திருமூ லரவர் ஒரோவழி மறுத்தும்,
தென்னகத் திருவிளக் காய், நூற் றாண்டது
ஏழினில் தோன்றிய ஏந்தெழில் ஞாயிறு
அப்ப ரடிகள் சாடியும் சதுரப்
பாடுடைச் சூது செத்த பாடிலை!
இருளே சூழ்ந்து படர்ந்து செறிந்தது!
இந்த நிலையில் ஈரோடு தந்த
ஏந்தல், ஏற்றமார் தமிழினம் தனக்கே
தலைமை தாங்கினன்! சிந்தனை ஒன்றே
உலகம் திருந்திட உற்ற வழியென,
பகலவன் ஒளியினும் பகுத்தறி வே,மேல்;
கண்மூடிப் பழக்கம் மண்மூடிப் போகச்
செய்ய வேண்டுமென வெய்யோன் போலத்
தமிழின வாழ்வே தம்வாழ் வென்றும்
தமிழினம் ஒன்றே தம்மின மென்றும்
தமிழின உயர்வே தம்உயர் வென்றும்
தமிழின மகிழ்வே தம்மகிழ் வென்றும்

வள்ளுவன் வகுத்துத் தந்த குடிசெயல்
வகையினை போற்றும் தகைசால் பெரியார்
மாற்றா ருக்குஇடி! மருள்நெறி யினர்க்கு
மருந்து! தமிழினப் பகைக்கு மாருதம்!
தமிழினத் தந்தை! தழுவிப் பழகிடும்
இனியபண் பாடு! குனியும் தமிழனைத்
தலைநிமி ரச்செய் திடுமுது கெலும்பு!
இழிதகை நீக்கி ஏற்றம் தரும்ஓர்
இணையிலா வீரர்! கணைமொழிப் பெரியார்
வாழும் தலைமுறை தமிழகத் தின்பொற்
காலத் தலைமுறை அவர்படை சார்ந்த
அருமைத் தலைமகன் அண்ணா! தமிழினத்
தானைத் தலைவன் ஆண்ட தலைமுறை!
அண்ணா அமர ரானபின் ஆட்சிப்
பொறுப்பினை யேற்று பொலிந்திடு கின்றவர்
பெருகிய அன்பு பேணும் நெறியினை
உடைமை யாய்க் கொண்டவர்! உலகம்புகழும்
கலைஞர்! கவினுறத் தமிழக அரசினை
நடாத்து கின்ற இந்தநூற் றாண்டைப்
பெரியார் நூற்றாண் டெனில்அது பிழையிலை!
வாழிய பெரியார்! வளர்கஇத் தலைமுறை!
தன்னிக ரில்லாத் தனிப்புகழ் பெற்றே
தமிழினம் ஓங்கித் தழைத்து வாழியவே!

———

# "பிறவித்தலைவர்"

## —: கவிஞர் ஆனந்தம் :—

காலத்தைக் கணிக்கின்ற மேதை அண்ணா
கவனமுடன் கழகத்துக் கடலில் கண்ட,
சேலத்துச் சிப்பியிலே விளைந்த முத்தே!
திருத்தந்தை பெரியாரின் பிறந்த நாளில்—
சீலத்தால், செஞ்சொல்லால், செயல்தி றத்தால்,
சீரிளமை குன்றாத செந்த மிழ்த்தாய்
கோலத்தைப் புதுக்குதற்குப் பாட்ட ரங்கில்
கொலுவிருக்கும் தலைமகனே! வணக்கம் ஏற்பீர்!

ஆசிரியத் தொட்டில்விட் டமைச்சுக் கட்டில்
ஆர்வமுடன் ஏறிவந்தே எம்மை ஆள்வீர்!
'ஆ! சிறிய கலைஞ'ரென அதிசயிக்க,
அற்புதமாய்ப் பணிபுரியும் பொற்பு மிக்கோய்!
'நீ சிறியன்!' என்றென்னை ஒதுக்க மாட்டீர்;
நெருக்கமுடன் அய்ந்தாண்டு பெரியா ரோடு
மாசறவே மாணவனாய்ப் பயின்று வந்தேன்
மகிழ்கின்றேன்; செஞ்சோற்றுக் கடனை ஆற்ற!

"ஆண்டவனே! எனநின்னை அறிந்த பின்னர்
அடியேனின் நெஞ்சத்தில் பக்தி கொண்டு


## நீக்ரோக்களும் பார்ப்பனரும்



"நீக்ரோக்களுக்கும் வெள்ளையருக்கும் இருக்கும் அளவு பிறவி பேதம், நிற பேதம், நாகரிக பேதம் நமக்கும் பார்ப்பனருக்கும் பூசாரிகளுக்கும் கிடையாது. அவ்வளவு பேதமுள்ள (மைனாரிட்டி) நீக்ரோக்கள், மெஜாரிட்டியான ஆளும் ஜாதியாரான பிரபுக்களான வெள்ளையர்களோடு எல்லாத் துறையிலும் சரிசமமாக கலந்து புழங்குகிறார்கள். ஆனால் நம் நாட்டில் 100க்கு 3 பேரே உள்ள கூட்டம்..........
கடவுள் என்கிற கல் சிலை இருக்கும் இடத்தில் பிரவேசிக்கக்கூடாத மிகமிக இழிதன்மையானவர்கள் என்பதான நிபந்தனையை நாம் ஏற்றுக்கொண்டு, கட்டிடத்திற்கு, அறைக்கு வெளியில் நின்று வணங்க வேண்டும் என்பதை நிலைக்கவிடலாமா என்பதுதான் கிளர்ச்சியின் தத்துவமாகும்.

குருக்கள், அர்ச்சகர்கள் என்பவர்கள் வீட்டில் பார்ப்பனர்கள் என்பவர்கள் சாப்பிடவே மாட்டார்கள்; பெண் கொடுக்கல், வாங்கலும் செய்யமாட்டார்களாம். இந்த நிலையிலிருப்பவர்கள் பூசை செய்யும் இடத்திற்கு மற்ற இந்து மக்கள், பார்ப்பனரல்லாதார் மட்டும் நுழையக்கூடாது என்றால் அது எப்படி நியாயமாகும்?

—தந்தை பெரியார்
15—10—69
'விடுதலை'



## கர்ப்பக்கிரக கிளர்ச்சி ஏன்?

"பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் சர்க்கார் காரியாலயங்களிலும் சர்க்கார் உணவு விடுதிகளிலும் "பிராமணாள்-சூத்திரன்" என்று பிரிக்கப்பட்டிருந்த பாகுபாடுகளைக் கிளர்ச்சி அறிக்கை மூலம் ஒழித்தேன். தெருக்களில் தாழ்த்தப்பட்டவர்கள் நடமாடக்கூடாது என்றிருந்ததைக் கிளர்ச்சி மூலம் ஒழித்தேன். கோயிலுக்குள் தாழ்த்தப்பட்டவர்கள் செல்லக்கூடாது என்றிருந்த தடையை ஒழித்தேன்...... இப்போது கோயிலுக்குள் சிலை இருக்கும் இடத்திற்குப் பார்ப்பான் தவிர வேறு யாரும் போகக்கூடாது என்ற தடை தமிழ்நாட்டில் இருந்து வருகிறது. மேலும் அந்தச் சிலைக்கு பார்ப்பான்தான் பூசை செய்யவேண்டும் என்கிற நிபந்தனையும் இருந்து வருகிறது. அதுமாத்திரமல்லாமல் பூசைக்குச் சொல்லும் வார்த்தைகள் வடமொழியாகத்தான் இருக்கவேண்டுமென்கிற கட்டாயமும் இருந்து வருகிறது...... இதற்காகக் கிளர்ச்சி துவங்க வேண்டியது — சிறப்பாகத் தமிழர்களுக்கு, நமக்கு இன்றியமையாத கடமையாகும்....

—தந்தை பெரியார்
9—10—69
'விடுதலை'

வேண்டியது கிடையாது! தாங்க வொண்ணா
வேதனையில் மூழ்கிநின்று துடித்த போதும்,
மூண்டெழுந்த பேரன்பால் நின்னை எண்ணி
முணுமுணுத்தேன்; கனத்திருக்கும் எனதுள்ளத்தை
ஆண்டவனே; எந்நாளும் ஆளும் அய்யா;
அருள் புரிக, பொருள் தருக, நினையே பாட!

தந்தை நகர், தஞ்சைநகர்; எனக்குக் கல்வி
தந்த நகர் சொந்த நகர்; சோழன் ஆண்ட
முந்தைநகர்; சந்தைநகர் கலைக ளுக்கே!
முன்தந்தை பெரியார்க்குச் சிலைய மைத்து
வந்தநகர்; வந்தவரை வாழ வைக்கும்
சிந்துநகர்; நெல்மணிகள்! பந்த முள்ள
இந்தநகர்ச் செந்தமிழர் பாட்ட ரங்கில்
குந்தியோர்க்குச் சிந்தை நிறை வணக்கம் செய்வேன்

என்னைப்போய், இவர், பிறவித் தலைவ ரென்னும்
ஏற்காத தலைப்பின்கீழ் பாடச் சொன்னீர்—
முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு. க.;
மு. க. வின் தலைவர் யார்? அறிஞர் அண்ணா!
தன்னிகரில் அண்ணாவின் தலைவர்? அய்யா!
தலைவருக்குத் தலைவருக்குத் தலைவர் அன்றோ!
பின்இவரை, வெறுந் தலைவர் என்று சொல்லிப்
பேசவிட்டால் எவ்விதம் நான் ஒப்புக்கொள்வேன்?

பிறவியிலே தலைவரிவர் என்று பாடப்
பெரியவர்கள் தலைப்பளித்தார்; பொருத்தம் பார்ப்போம்
துறவியர்க்குந் தலைவரிவர்; மதநம் பிக்கை
துறந்தவர்க்குந் தலைவரிவர்; தேசீ யத்தை
மறவார்க்குந் தலைவரிவர்; தனியு டைமை
மறுப்பார்க்குந் தலைவரிவர்; தேர்தல் வேண்டா
அறவியலே பொதுவாழ்வில் கையாள் வோர்க்கும்—
அரசியலால் பிழைப்பவர்க்குந் தலைவர், அய்யா!

நாயக்கர் பரம்பரைக்குத் தலைவர்; அன்னை
நாகம்மை யார்க்கும் பின் தலைவர்; அன்று
தூயமஞ்சள் வணிகர்க்கும் தலைவர்; தொண்டு
தொடர்ந்திடவே நகர்மன்றத் தலைவர்; இன்பத்
தாயகத்தின் தேசீயத் தலைவர்; வைக்கம்
சத்தியாக் கிரகத்தின் தலைவர்; சிந்தை
ஆயவந்த தன்மானத் தலைவர்; சேரும்
அணிதிராவி டர்கழகத் தலைவர், ஆவார்!

வேல்வடித்துக் கொடுக்கின்ற கொல்ல ருக்கு
விளங்குகின்ற உலைக்கூடப் பட்ட றைபோல்—
நூல்படித்துப் பயிற்றுவிக்கும் ஆசா னுக்கு
நுவலரிய வகுப்புநிறை பள்ளி யைப்போல்—
பால்குடித்து வளர்கின்ற மழலை யர்க்குப்
பாசமிகு தாயாரின் மடியி னைப்போல்—
கோல்பிடித்து முன்னேறும் தொண்ட ருக்குக்
குருபீடம் ஈரோடு வாய்த்த தம்மா!

இங்கிவரைத் தலைவராக ஏற்றுக் கொண்ட
எண்ணற்றோர் பட்டியலை எண்ண லாமா?—
சிங்கம்போல் கைவல்யம், இராம நாதன்,
சிதம்பரனார், குருசாமி, குஞ்சி தம்மாள்,
பொங்கும்பொன் னம்பலனார், அழகர் சாமி,
பூரிக்கும் மூதாட்டி இராமா மிர்தம்,
சிங்கார வேலருடன் விசுவ நாதம்,
சிவானந் தம், லிங்கம், காளி யப்பன்,

நடராசன், மணி, பால சுப்ர மண்யம்,
நாயகம்,சொ. முருகப்பா, நீல மேகம்,
அடலேறாய் முழக்கமிட்ட பன்னீர்ச் செல்வம்,
அரசரான பொப்பிலி, நம் சாமி யப்பா,
சடலான உமாமகேசர், குமார சாமி,
கண்ணன்,வே தாசலனார், பாவின் வேந்தர்,
தொடர்கின்ற மாணவர்கள் பட்டா ளத்தைத்
தூக்கிவந்த பேரறிஞர் அண்ணா—போதும்!

நூற்றுக்கு மூன்றுபேரா யுள்ளவர்கள்,
நுடங்காமல் பெரும்பான்மைக் கூட்டத் தாரைச்
சோற்றுக்கும் திண்டாடச் செய்து விட்டுச்,
சொகுசாக வாழ்ந்துவரும் கொடுமை கண்டு—
சீற்றமிகு வேங்கைபோல் குரல்கொ டுத்துச்,
சீரான சமுதாய அமைப்பை வேண்டி,
மாற்றத்தைப் புரட்சியினால் முடித்துத் தந்த
மகத்தான தலைவரிவர் ஒருவர் தாமே!

ஒன்றேதான் கடவுளெனும் உயர்ந்த கொள்கை
ஓங்கிநின்ற தமிழகத்தை உருக்கு லைத்துக்—
குன்றாத பகுத்தறிவைப் பாழடித்துக்—
கொடும்மூட நம்பிக்கை குவித்து - மேல்கீழ்
என்றெண்ணும் சாதிமத பேதங் காட்டி—
எல்லாருங் கல்விபெறா வண்ணம் செய்து—
நன்றாகத் தம்நிலையை உயர்த்திக் கொண்டோர்
நயவஞ்சம் கண்டித்தோர் பெரியார் தாமே!

சுரண்டல்அது எவ்வுருவில் வந்த போதும்
தொலைத்திடுவேன் என்றெதிர்த்து, வரிந்து கட்டித்,
திரண்டெழுந்த தனதுபடை வீரத்தாலே
சிறைக்கோட்டம் அறக்கோட்ட மாகக் கண்டு,
புரண்டெழுந்து புறமுதுக்கிட் டோடு மட்டும்
போராட்டம் வரிசைபெற நடத்திக் காட்டி,
முரண்டுசெயும் ஆதிக்க முதுகொ டித்த
முதுபெருந் தலைவரிவர் ஒருவர் தாமே!

சிந்தனையின் பெட்டகமாம் பெரியார், பள்ளி
சென்றதில்லை என்றாலும், பட்டம் பெற்றோர்
வந்தனரே அணியணியாய் இவர்பின் னாலே!
வளையாது தான்கொண்ட பிடிவா தத்தை
எந்தவொரு காரணத்தால் தளர்த்தி னாரா?
இருக்குமிடந் தேடித்தான் எவரும் வந்தார்!
'சொந்தபுத்தி இல்லாரே வேண்டு' மென்று
சொன்னபோதும், 'இவரே நம் தலைவர்!'
என்றோம்.



## ரூ. 10 ஆயிரத்துக்கு சவால்!

"சர்வ வல்லமையுள்ள கடவுள் என்பதாக ஒன்று இருக்கிறது; அது சர்வ சக்தி, சர்வ வல்லமையுடையது என்பதை நான் என் மனம், மொழி, செய்கையால் நம்புகிறேன்; அதற்கேற்பவே நடந்துகொள்கிறேன்" என்று யாராவது ஒருவர் சொல்லட்டும்; சொல்ல முன் வந்து தன் நடத்தையைக் கொண்டு மெய்ப்பிக்கட்டுமே பார்க்கிறேன்-அப்படி மெய்ப்பித்தால் ரூ. பத்தாயிரம் தருகிறேன். யாரிடம் வேண்டுமானாலும் கொடுத்து வைக்கிறேன் என்று கூறுகிறேன். யார் வருகிறீர்கள்? யார் வருகிறீர்கள்? எந்தப் பத்திரிகைக்காரர் பக்கத்தில் வரத் தயாராயிருக்கிறார்? எந்தப் பார்ப்பனர் வரத் தயாராயிருக்கிறார்? எந்த ம. பொ. சி.யோ, வேறு எந்த சி-யோ வரத் தயாராயிருக்கிறார்களா? வேறு யோக்கியமானவர்கள் யார் வேண்டுமானாலும் வரட்டும் என்று சவால் விடுகிறேன்.

—தந்தை பெரியார்

11—10—69
'விடுதலை'

## சாமியா—சாமியின் அறையா?



மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டிராத சாஸ்திரச் சடங்கு முறைப்படி வைக்கப்பட்ட எந்தக் கடவுளையும் யாரும் நெருங்கலாம்; தொடலாம்... ஆனால் மூலஸ்தானத்தில் இருக்கும் சிலைக்கு அருகில் மாத்திரம் பார்ப்பனர் அல்லாதவர்கள் செல்லக்கூடாது. அதாவது அந்த அறைக்குள் செல்லக் கூடாது என்பதுதான் தடையின் தத்துவம். மற்றபடி பூனை, எலி, பல்லி, கரப்பான் பூச்சி முதலிய ஜந்துக்கள் எதுவேண்டுமானாலும் போகலாம்; கடவுளையும் தொடலாமாம்; நாம் போகக் கூடாதாம். அதுவும் இந்திய தேசத்தில், அதுவும் பார்ப்பன ஆதிக்கமுள்ள சில மாகானங்களில் மாத்திரம் தான். இங்கு நாம் போனால் புனிதம் என்பது கெட்டுவிடுகிறதாம்.

ஜெகநாதம், காசி, பண்டரிபுரம் முதலிய கோயில்களிலும் மூலஸ்தானத்திற்குப் புனிதம் இல்லை. ஆகவே தமிழ்நாட்டில் தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாத மக்களாகிய நம்மை இழிவுபடுத்தவும் சட்டத்தின் மூலம் செய்துகொண்டிருக்கிற ஏற்பாட்டை நாம் உடைத்தெறிய வேண்டியது நமது ஜீவிதக் கடமையாக இருக்கிறது.

—தந்தை பெரியார்
13—10—69
'விடுதலை'

ஏராளச் சொத்திருந்தும், இவரைப்போலே
எளிமையான பிறதலைவர் எங்கே உள்ளார்?
தாராள மாய்மூன்றாம் வகுப்பில் செல்வார்!
தம்பொருளைத் தாமேதான் சுமந்து கொள்வார்!
சீராகக் குறித்தபடி எதையும் செய்வார்!
செத்தாலும் ஒத்த இடம் சென்றே தீர்வார்!
கூராக முதுமையிலும் எழுத்தும், பேச்சும்,
குறையாத ஞாபகமும் யாருக் குண்டு?

கல்லூரிப் பருவமெனில் கவலை காணாக்
காலமன்றோ காளையர்க்கு! மங்கை யின்பால்
பொல்லாத காதலுற்றுப், பித்தம் முற்றிப்,
புலன்கெட்டுப், பின்தொடர்ந்து போவ தைப்போல்.
நல்லவராம் மாணவர்கள் சிலபேர், அன்று
நாட்டுநிலை எண்ணியதால், பெரியா ரின்பால்
நில்லாத அன்புகொண்டு நெருங்கிச் சென்றோம்;
நிகரற்ற புகழுற்றோம், அதனால் இன்று!

ஈரோட்டில் குடிஅரசுப் பாச றைக்குள்
இருந்துவந்த காலம்மிக இனிய காலம்.
போராட்டம் உணவருந்தும் போதில்; அய்யா
பொல்லாத குறும்புசெய்வார்! மணியம் மையார்
சீரோடு சமைத்ததெல்லாம் கிண்டல் செய்வோம்!
சிரித்திடுவார் கபடமின்றிப் பெரியார்; நல்ல
பாராட்டுந் தந்திடுவார்; கலை ஞரையும்
பத்திரிகைத் தலையங்கம் எழுதச் சொல்வார்!

எங்களுக்குக் கலைஞரிடம் பொறாமை கொஞ்சம்
எப்பொதும் அழுககாடை கலைந்த கேசம்,
தங்கநிறப் பல்லழகு, குளியா மேனித்
தவமணியும், சனார்த்தனமும், நானும் சென்று—
'சங்கடத்தைத் தரும் கருணா நிதியைப் பார்ப்பீர்!
சலவை''புடை, அன்றாடங் குளியல், சுத்தம்,
இங்கிதமாய் வாரிவிட்ட சுருண்ட கேசம்;
ஏற்றிடுமா நமக்கென்போம்; நகைப்பார் அய்யா!

கருஞ்சட்டைப் படையமைத்தல் எனக்கு வேலை;
கழகத்தின் புதுக்கொடிக்கு வடிவங் காணும்
பெருஞ்சுமையைக் கலைஞரிடம் விட்டார் அய்யா!
பேனாவின் மைதடவிக் கொடியைத் தீட்டி,
அருஞ்சிவப்பு மையில்லாக் கார ணத்தால்
அணிவிரலில் ஊசியினால் குத்திக் கொண்டு,
வருஞ்சிவப்புக் குருதியினால் மையம் வைத்தார்!
வளர் கருணா நிதிஅமைத்த கொடிதான் இன்றும்.

விழுதுகளை ஒவ்வொன்றாய் இறக்கிக் கொண்டே
விண்ணோக்கிச் செழிக்கின்ற ஆலைப் போலே—
பழுதுபடாப் பிள்ளைகளைப் படைத்து விட்டுப்,
பசுமைதரும் தொண்டாற்றப் பயிற்சி தந்து,
தொழுதுவரும் தூயவர்கள் மகிழ்ந்தி ருக்கத்
தொண்ணூற்றோ ராண்டுகளைத் தூரத் தள்ளி,
எழுதியதைப் பாடுவதைக் கேட்க வந்தார்;
எவ்வளவு பேறுபெற்றோம் யாங்கள் எல்லாம்!

வாழ்ந்திருக்கும் ஒரேதலைவ ! நின்னைக் கண்டால்
வையகத்தில் கொடுமைகளே மடிந்து வீழும்;
ஆழ்ந்திருக்கும் மடமையிருள் கலைந்து போகும்;
அறியாமைப் பனித்துளிகள் மறைந்தே மாயும்;
சூழ்ந்துவரும் சாதிமதச் சனிய னெல்லாம்
சூரியனைக் குறைக்கின்ற நாயாய் ஓடும்;
தாழ்ந்திருக்கும் கீழ்மனிதச் செடிகள் யாவும்
தலைதூக்கிக், கிளைபரப்பி, இலைத ழைக்கும் !

உள்ளத்திற் சரியென்று தோன்றும் உண்மை
ஒளிக்காமல் உழைப்பவர்கள் நின்போல் யாரே ?
கள்ளத்தால் முகம்பார்த்துத் தயவுக் கஞ்சிக்
கருத்துகளைத் திருத்துவது நின்பால் இல்லை !
பள்ளத்தில் மேட்டைவெட்டிச் சமனாய்ச் செய்தாய்;
பரமனது பெயர்சொல்லிப் பரவும் நச்சு
வெள்ளத்தைத் தடுக்கவந்தாய்; வெற்றி கண்டாய் !
வீரமுடன் நின்புதல்வர் வாழ்த்து கின்றோம் !

நெடுநாளாய்க் கனவுகண்ட தமிழ ராட்சி
நிலைத்ததனால் நின் ஆயுள் வளரும்; உண்மை !
கொடுவாளாய் மக்கள் நலம் சிதைத்து வந்த
கொலையாட்சி தொலைந்ததனால் குதூக
லித்தாய் !
நடுவானின் விண்மீன்போல, நம்மு தல்வர்,
நடுவணாட்சி அதிகாரக் குவியல் மாற்றி,
விடும்நாளை விரைவில்எதிர் பார்ப்போம்; எந்தாய் !
வெண்தாடி அசைந்தாட எம்மை வாழ்த்து !

ஓயாது சுற்றுவதால்; உனையெ திர்ப்போர்
உடன்கருகித் தீய்வதனால்; உதவி வேண்டிச்
சாயாது, நேர்வழியிற் பிறழா மையால ;
சகலருக்கும் தேவையான சத்தா கையால்;
தேயாது, மாறாது, தினமோர் கொள்கை,
திட்டமெனக் குழப்பாத தெளிவால்; என்றும்
மாயாத கதிரவனும் நீயும் ஒன்றாம் !
மண்ணுலகே நின்னையெண்ணிப் பெருமை பூணும்!

பகுத்தறிவுப் பகலவன்நீ யில்லை! விட்டால்
பாரெங்கும் காரிருளில் மூழ்கிப்போகும்;
வகுத்தநெறி நின்றிடுவோம், வழிந டத்தும்
வரலாற்று நாயகனே ! நீயும் கண்ணீர்
உகுத்திடவும் காலமொன்று வந்த தந்தோ !
உன்னொளியின் வெப்பத்தைக் குளிர்ச்சி யாக்கி,
மிகுத்திடுமோர் தண்ணொளியால் நிலவாய் வீசி,
மேதினியை மகிழ்வித்த மேலோன் எங்கே ?

———

## பிரவேசச் சூழ்ச்சி



கோவில்களின்கர்ப்பக் கிரகம்-மூலஸ்தானமென்பதில் பார்ப்பனர் அல்லாத 'இந்து'க்கள் பிரவேசிக்க ஆகமம், நகைகள் ஆகிய இரண்டு காரணங்களால் பார்ப்பனர் தடை கூறுகிறார்கள்.

"ஆகமம்" என்பதன் பொருள் "ஒரு ஏற்பாடு" என்பதுதானே ஒழிய அதற்கு வேறு பொருளொன்றும் இல்லை, ஏற்பாடு என்பவையெல்லாம் மாறுதல்களுக்குக் கட்டுப்பட்டவையே ஒழிய மாறுபடக் கூடாதவையல்ல. கண்டிப்பாய் அனுஷ்டித்தே ஆகவேண்டும் என்பவையுமல்ல.

பொதுவாக உலகிலுள்ள செயல்திட்டங்கள் எல்லாமுமே ஒரு ஏற்பாடுதானே ஒழிய, இயற்கையானவையல்ல. ஏற்பாடு என்பவையும் காலத்திற்கு, நிலைமைக்கு ஏற்றவைகளே ஒழிய முக்காலத்திற்கும் எல்லா சந்தர்ப்பங்களுக்கும் ஏற்றவையல்ல.

மற்றும் எந்த ஏற்பாடும் மனிதனால் செய்யப்படுபவையே ஒழிய "மனிதத் தன்மைக்கு மேம்பட்டவன் என்பவனால்" செய்யப்படுபவையல்ல. ஆகமம் என்னும் சொல்லைப் போலவே 'அய்தீகம்' என்னும் தன்மையும் உண்டு. அய்தீகம் என்பதற்குப் பொருள் ஆதாரமில்லாமல் தொன்று தொட்டு நடந்து வரும், சொல்லிவரும் விஷயங்களுக்கு சொல்லும் சொல்லாகும்.

**தந்தை பெரியார்**
29—11—69 'விடுதலை'

## மதுவிலக்கு நாடகம்



நாட்டில் மது விலக்கு அமுலில் இருக்க வேண்டுமென்று விரும்புவோர், விரும்புவதாகக்காட்டிக்கொள்வோரில் பெரும்பாலோர் தங்களை ஒரு பொதுநல விரும்பிகள என்று மககள் கருதவேண்டும் என்கிற உணர்வு உள்ளவர்களாக இருக்கிறார்களே யொழிய உண்மையாளர்கள் என்று சொலல இடமில்லாதவர்களாகவே இருக்கிறார்கள். முதலாவது 55 கோடி மக்களுள்ள இந்தியாவில் 50 கோடி மககளுள்ள பிரதேசத்தில் இந்த மதுவிலக்கு நாடகம் அமுலில் இல்லை. ... இந்தப்படி நடந்து வரும் மதுவிலக்கு நாடகத்தை நிறுத்துங்கள் என்று சொன்னால் குறுக்கே நிற்பதென்றால், இதில் என்ன அறிவுடைமையோ மனிதாபிமானமோ பெருமையோ இருக்கிறது என்பது நமக்கு விளங்கவில்லை. இவற்றால் அரசாங்க நிர்வாக ஒழுக்கம், நேர்மை கெடுவதுடன் அதிகாரிகள் நேர்மையும் நாணயமும் கெடுவதோடு மக்களும் ஒழுக்கக்கேடர்களாக ஆகிக் கொண்டு வரமுடிகிறது. இது ஒருபுறமிருக்க இப்படிப்பட்ட மதுவிலக்கினால் அரசாங்கத்துக்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 40 கோடி ரூபாய் வரவு நட்டமாகிறதென்றால் இதைவிட மதியற்ற காரியமாக வேறு எந்தக்காரியம் இருக்க முடியும்?

—**தந்தை பெரியார்.**
27—9—69 'விடுதலை'

**—: கவிஞர் புதுவை சிவம், எம். பி. :—**

### அவைக்கு வணக்கம்

சீர்மிக்க பெரியாரின் பிறந்த நாளைச்
சிறப்பாகக் கொண்டாடும் கவிய ரங்கில்,
ஆர்வமுடன் தலைமைகொண்ட மாண்பு மிக்க
அமைச்சருக்கும், புகழ்வாய்ந்த அடிகளார்க்கும்,
நேர்மிக்க கருத்தினையே கவிதை யாக்கி
நீடுலகில் புகழ்நிறுத்தும் கவிஞ ருக்கும்
பேர்மிக்க பெரியோர்க்கும் தாய்மா ருக்கும்
பேரன்புத் தோழருக்கும் வணக்கந் தந்தேன்!

### அவையடக்கம்

திருநாடாம் தமிழகத்திற் பிறந்து வாழ்ந்து
சீர்திருத்தச் சிற்பியெனப் புகழை ஏற்ற
பெரியாரின் தொண்ணூற் றொன் றான இந்தப்
பிறந்ததின விழாவினிலே அவரைப் பாட,
அரங்கினிலே வந்துற்றேன்; உலகங் கண்ட
அறிஞர்களில் ஒருசிறந்தார் எனவே போற்றும்
பெரியாரை யான்பாடத் தகுதி யில்லேன்;
பிழைபொறுத்தே ஆதரிப்பீர் அவையி னோரே!

### வேறு

அறிஞரின் பிறந்த நாளை
அறிந்திடும் நல்லோர் உள்ளம்,
நிறைவுறும் மகிழ்ச்சி யாலே
நெடும்புனல் மீன்போல் துள்ளும்!
சிறையெனும் சமூகச் சட்டம்
சிதைந்திடத் தளராத் தொண்டு
கறையிலார் எவர்செய் தாலும்
கழிபெரும் உவகை பொங்கும்!

சீரிய தமிழர் நாடு
சிறந்ததன் நிலையை விட்டுப்
பேரிடர் கொண்டு வாடும்
பெற்றியை யறிந்தோர் பல்லோர்;
யாருமே அதற்கு மாற்றுக்
கண்டிட வில்லை; கொண்ட
நேரிய முறையைச் சொல்லி
நெஞ்சழிந் திட்டோ ருண்டு!

மனிதரிற் சாதி பேதம்
வகுத்துமே நாடு கொண்ட
இனமதைச் சுக்க லாக்கி
இடர்மிகும் வாழ்விற் றள்ளிப்
புனிதபண் பாட்டை மாற்றிப்
புவியினில் தாழச் செய்த
நனிபகை யாளர் இங்கே
நமக்கெல்லாம் உயர்ந்தோ ரானார்!

அன்னவர் ஆதிக் கத்திற்
கடிபணிந் திட்ட முன்னோர்,
சின்னதோர் மாற்ற மேனும்
செய்திட இயலா ராகி,
உன்னதக் கொள்கை யென்றே
உயர்வுடன் அவற்றைப் போற்றிப்,
பன்னெடுங் கால மாகப்
பாழ்நிலை ஏற்று விட்டார்!

தாரணி போற்ற வாழ்ந்த
தமிழ்ப்பெருஞ் சமுதா யத்தில்
நேரிலா உயர்வு தாழ்வு
நிலவிட, வறுமை துன்பம்
கோரதாண் டவங்கள் செய்யக்,
கொடியதாம் அடிமை ஆண்டான்
சீரிலாச் செயல்கள் யாவும்
திகழ்வதைப் பெரியார் கண்டார்!

நோயினை யறிந்தே, வாய்த்த
நோய்முதல் நாடி, அந்த
நோயினை முற்றும் நீக்கும்
நுண்ணறி மருத்து வர்போல்,
மாயிரு ஞால மெல்லாம்
மலைத்துமே வியக்கும் வண்ணம்
நேயமார் பெரியார் நாட்டின்
நீள்பிணி போக்க லானார்!

மாறுதல் விரும்பி டாத
வைதிகம், தன்னைக் காக்கச்
சீறியே எழுச்சி கொண்டு
செம்மனப் பெரியார் கொள்கைப்
பாறையில் மோதி மோதிப்
பயனது காணா தேங்கிச்
சூறையில் சிக்கி விட்ட
பொருளென ஆயிற் றந்தோ!

வாழ்வுகொள் துறைகள் தோறும்
வைதிகம் ஆட்சி கொண்டு,
தாழ்வினைத் தமிழ ருக்குத்
தந்துமே அடிமை யாக்கி,
'ஊழ்வினை யிதுவே; மாற்றம்
உள்ளலும் தீதே!' என்று
பாழ்நிலை உபதே சங்கள்

பற்பல புரிந்த திங்கே!
உரிமையைத் தவறிக் கேட்டால்
உக்கிர விழியைக் காட்டிப்,
பரம்பொருள் சொன்ன வேதம்
பழித்திடலாமோ? முன்னோர்
சரியென ஒப்பி விட்ட
சாத்திரம் மறுக்க லாமோ?
நரகினில் வீழ்வாய்! நீஓர்
நாத்திகன் எனமி ரட்டும்!

## 'ஆனந்தவிகடனின்' சாதிப் புத்தி



திரு. வாசன் அவர்களுக்குப் பின் அது(ஆனந்தவிகடன்) அசல்பார்ப்பன சாதிப் புத்திக்கு முதல்'வெற்றிலை பாக்கு வாங்கும்' நிலைக்கு வந்து விட்டது......"பூசை செய்பவர்களின் தகுதியை அந்த மதத் தலைவர்களின், பழையசாத்திரங்களின் அடிப்படையில் நிர்ணயம் செய்கிறார்கள். ஆனால் இதை அரசாங்கம் செய்யவிடக் கூடாது" என்பதாக "ஆனந்தவிகடன்" கூறுகிறது. ஒரு கோயில் உரிமையைப் பற்றி நிர்ணயிக்க அந்தக்கோயிலுக்கு வழி படச் செல்லும் பெரும்பான்மையான மக்களுக்கு உரிமை வேண்டுமா? அல்லது அதில் பொறுக்கித் தின்னும் சிறுபான்மை, வெகு சிறுபான்மை, வெகு வெகு சிறுபான்மைக் கூட்டத்துக்கு உரிமை வேண்டுமா என்று கேட்கிறேன்; இது எப்படியோ போகட்டும். அரசாங்கமும் இந்த விஷயத்தை உடனடியாகச் செய்து முடிக்காமல் பார்ப்பனர்க்குப் பயந்து "மக்களை ஏய்க்கலாம்", என்று கருதி காலம் காட்டுமானால், நாங்கள் ஒத்திப் போட்ட காலத்தை சுருக்கிக் கொள்ள நேரிடும் என்று வணக்கத்தோடும் மரியாதையோடும் தெரிவித்துக்கொள்கிறேன்..

**—தந்தை பெரியார்**
6—2—70 'விடுதலை'



### புத்தாண்டுச் செய்தி

தமிழனுக்கு இன்றுள்ள வேலையெல்லாம் சாதிஒழிப்புக்கு, அதற்கு ஆதாரமான, அதற்காக நம் எதிரிகள் பயன்படுத்துகிற எல்லா சாதனங்களையும், இருந்து வருகிற எல்லா அறிகுறிகளையும் பலவீனமாக்குவதும், ஒழிப்பதுமான காரியமேயாகும். முதலாவது செய்ய வேண்டிய பணிகள் (1) நம்மக்கள் பார்ப்பனப்பத்திரிகைகளை வாசிப்பதைத் தடுத்தல். (2) நம் மக்கள் கோயில்களுக்குப் போவதை தடுத்தல். (3) கோயிலுக்குப் போய்த்தீரவேண்டும் என்பவர்களைத் தேங்காய் பழம் கொண்டு போகாமல், வெறுங்கையோடு போகும்படிச்செய்தல், மீறி தேங்காய் பழம் கொண்டு போனால் அதைத் தாங்களே உடைத்துப்பூசை செய்தல் வேண்டும். (4) பூசாரிக்கு தட்சணை கொடுக்காமலிருக்கச் செய்தல். (5) மதநெற்றிக் குறிகளைக்கண்டித்துத்தடுத்தல் (6) நம் மக்கள் பார்ப்பனர்களைப்பிராமணர்களென்று சொல்லாமலும் பார்ப்பனர் எனறே சொல்லும்படியாகவும் செய்தல்.

இதுவே நமது இளைஞர்கள், இயக்கத் தோழர்களுக்கு எனது புத்தாண்டுச் செய்தியாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**—தந்தை பெரியார்**

31—12—69 'விடுதலை'

இவையெலாம் தமிழர் வாழ்வை
இரிந்திடச் செய்த தாலே,
நவையெலாம் ஒன்று சேர்ந்து
நாசமே விளைத்த திங்கே!
குவியலாய்க் கோட்பா டொன்றி
வாழ்ந்தவர் குலைந்தே போனார்!
புவியெலாம் ஆள வந்தோர்
பூனையாய் எலியாய் ஆனார்!

தன்னொரு பிழைப்புக் காகச்
சடங்குகள் பலவே சொல்லி,
மன்னிய தமிழர் தம்மை
மானமே இழக்கச் செய்த
தன்மையைப் பெரியார் தாமும்
தாரணிக் குணர்த்தி, அந்தப்
புன்செயற் சடங்கை வீழ்த்தப்
புரட்சியே தொடங்க லானார்!

உயிரெனப் போற்றி வந்த
உயிர்தமிழ் இழிந்த தென்றும்
பயில்வழக் கிழந்து விட்ட
பாழ்மொழி உயர்ந்த தென்றும்
செயல்படும் சடங்கி லெல்லாம்
தீந்தமிழ் ஒதுக்கி வைத்த
கயமையை எடுத்துக் காட்டிக்
கருத்தினில் ஒளியைச் சேர்த்தார்

போரினுக் கஞ்சா தோரும்
புல்லினுக் கஞ்சி நிற்கும்
காரணந் தனனைக் கண்டு
கடியதாம் சூழ்ச்சி மிக்க
ஆரியச சடங்கெல் லாமும்
அழிந்திடத் தொண்டு செய்த
சீரிய பெரியார் தம்மைச்
செகமது மறப்ப துண்டோ?

அய்ந்துள பஞ்சாங் கங்கண்
டைம்புலன் அஞ்சு கின்ற
விந்தையைக் கண்டு மேலும்
வேதனை மிகவே கொண்டு,
சிந்தையை இழந்து விட்ட
செயலினில் புரட்சி தோற்றி,
அய்ந்தனின் மயக்கந் தீர்த்த
அறிவனை மறப்ப துண்டோ?

இப்பெரும் பழிது டைக்க
இராப்பகல் என்றில் லாமல்
ஒப்பிலா முறையில தொண்டு
புரிந்தவர் பெரியா ராவார்!
எப்பகை வந்த போதும்
இம்மியும் அஞ்சி டாமல்,
அப்பகை வீழும் வண்ணம்
அயராது போர்மேற் கொள்வார்!
அமைதியாம வாழவு தன்னில்
அனைவரும் அன்பாய் வாழச்

சமத்துவ சமதர் மந்தான்
தருவதென் றுறுதி கொண்டு,
சுமைமிகு பார மேனும்
துவண்டிடா தெழுச்சி யூட்டித்,
தமிழரை அழைத்துச் செல்லும்
தலைவராய் அமைந்தா ரிங்கே!
கிளர்ச்சியை விரும்ப மாட்டார்;
வந்திடின் விடவு மாட்டார்!
வளர்ச்சியைத் தடுக்க எண்ணி
வருந்தடை எதுவா னாலும்
களத்திலே முதலில் நிற்பார்!
கடுஞ்சிறை வாழ்வுக் கஞ்சார்!
தளர்ச்சியாம் வயதா னாலும்
இளைஞனாய்ப் பணியே செய்வார்!
பருமனாம் பாறை யொன்றைப்
பகுத்துமே செதுக்கி, நல்ல
உருவினைக் கொடுத்துப் பாரின்
உயர்புகழ் ஏற்பான் சிற்பி!
பிரிவுகள் பலவா யுள்ள
பெருந்தமிழ்க் கூட்டந் தன்னை
ஒருபெருஞ் சமூக மாக
உயர்த்தியோர் இந்தச் சிற்பி!
இருபது நூற்றாண் டுக்குப்
பின்னரே இந்த நாட்டில்
ஒருபெரும் மாற்றங் கண்டோம்!
உற்றஅம் மாற்றத் திற்குக்
கருவியாய் அமைந்தா ரன்றோ
காணுநம் பெரியார்! அந்தப்
பெரியரும் நீடு வாழ
வாழ்த்துவோம் பெரு நாட்டோரே!

## சிபாரிசு வேட்டை



ஆட்சியிலிருக்கும் ஆட்சியாளர் கட்சியைச் சேர்ந்த எம்.பி., எம்.எல்.ஏ. எம்.எல்.சி. மற்றும் முன்னேறும் பிள்ளைகள் என்பவர்களுக்கு எப்போதும் நல்ல வேட்டை இருப்பது இயற்கையே ஆகும்....கழகத் தோழர்கள் பலர் இந்தத் தொழிலில் இறங்கிவிட்டார்கள்.,... நாட்டில் ஒரு பெரிய செய்தி பரவிவிட்டது. "பெரியாரைப் (ஈ.வெ,ரா.வை)ப் பிடித்தால் ஆகாத காரியம் எதுவுமில்லை......" இதனால் பல தோழர்கள் வழுக்கிவிழுந்துவிடுகிறார்கள்; விழுந்துவிட்டார்கள்......இதைப் பற்றி நான் வெட்கப்படுகிறேன்; வேதனைப்படுகிறேன்.

— தந்தை பெரியார்
2—3—70 'விடுதலை'


Grams: VASANTA

Phone: 25522 | 25523

# THE VASANTA MILLS LIMITED

REGISTERED OFFICE
SINGANALLUR, COIMBATORE-5

Authorised Capital: Rs 55,00,000
Paid up Capital : Rs. 36,00,000

SPINDLES: 48,124 LOOM: 266

SPINNING;

Ring yarn of all counts ranging from 20s to 100s.

| | | |
|---|---|---|
| SINGLE | CHEESES | DOUBLE |
| CONES | STAPLE FIBRE | GASSED & MERCERISED |

MANUFACTURING:

GADA DHOTIES MULLS TOWELS LONGCLOTH

## கட்டிடங்கள் • சாலைகள் • பாலங்கள் • அணைகள்

கட்ட உபயோகப்படுவது

# செட்டிநாடு சிமெண்ட்

CHETTINAD BRAND

பட்டுப்போல் மிருதுவானது. உருக்குபோல் உறுதி அளிப்பது.

IS: 269

தயாரிப்பாளர்கள் :

**செட்டிநாடு சிமெண்ட் கார்ப்பொரேஷன் லிமிடெட்**

6, அரண்மனைக்காரன் தெரு, சென்னை-1. போன் : 27256

தொழிற்சாலை : புலியூர் (கரூர்) திருச்சி ஜில்லா, போன் : 144

# "புரட்சியின் சின்னம்"

**—: கவிஞர் பழம்நீ :—**

ஆண்ட நாள் ஆண்ட அருந்தமிழ் வேந்தன்
பாண்டியன் மீண்டும் பாவரங் கேறிப்
புலவர்கள் போற்றும் புலமையோ னாகி
வந்துருந் தாற்போல் வயங்கிடும் தலைவ!
சிந்தனை உணர்ச்சி செத்து மடிந்த
எந்தமிழ் மக்களின் இரத்த நாளத்தில்
புரட்சிக் குருதியைப் புகுத்திய தந்தையீர்,
இரண்டு பற்றையும் எடுத்து விலக்கிக்
காவியை உடுத்தும் கன்னித் தமிழ்மேல்
ஆவியைக் கொடுத்த அடிகாள், இந்த
நாட்டைப் பிடித்தே நலிவு செய்திட்ட
கேட்டை யெல்லாம் கிளையோடு வீழ்த்திய
ஆற்றல் மறவரின் அருங்குணச் சிறப்பெலாம்
பாட்டாய்க் கொணர்ந்த பாவலீரே!
தந்தை புகழைத் தமிழிற் கேட்டுச்
சிந்தை மகிழச் செவியாங் கதவின்
தாழைத் திறந்து தணியா விருப்பொடு
கூடி யிருக்கும் கொள்கையிற் சிறந்தீர்!
இருகரங் கூப்பி வணங்கிப்
புரட்சியாற் சிறந்தார் புகழினைச் சொல்வேன்.

காவி நிறமும் கருநிறமும் பக்கத்தே
மேவி இருக்கின்ற மெய்யழகில்— தாவி
இருவண்ணங் காட்டும் எழிற்கொடியைக் கண்டே
ஒருவண்ணம் ஆனோம் உவந்து

மதப்பாட்டை மதுப்பாட்டை மயக்கப்பாட்டை
மடையரையும் மேதையென ஏற்றிக் கூறும்
துதிப்பாட்டை, அவ்வுலக வாழ்விற் கென்ற
தொழிற்பாட்டை விட்டொழித்து இனிமே லேனும்
புதுப்பாட்டைத் திராவிடர்கள் தலைநி மிர்த்தும்
புகழ்ப்பாட்டைப் போர்ப்பாட்டைப் பாடிப் பாடி
மதிப்பாட்டை செல்கவென அழைத்துச் சென்று
மாற்றத்தைத் தந்தவர்யார் பெரியா ரன்றோ?

அல்லலினால் மக்களினம் உகுகண் ணீரை
ஆணவத்தால் அறிவிழந்து தண்ணீர் என்றும்;
கொல்லுலையின் துருத்தியெழும் காற்றை யொக்கும்
துயரத்தார் பெருமூச்சைத் தென்றல் என்றும்;
வில்லுறையும் நாண்பிறந்த ஒலியைப் போல
விம்முகுரல் வீணைதரும் இசையே யென்றும்
புல்முளைத்த தலையுடையார் கருதுகின்றார்
பொங்குங்கள் புயற்காற்றாய்ப் புழுதி யாக்கி

எங்கெங்கும் அறிவுமலர் பூக்கும் காவை
இயற்றுங்கள்; சமதர்மப் பயிர்விளைத்துத்
தங்கங்கள் நிகர்கொள்கை பயனைத் துய்க்கத்
தகுதிபெற முந்துங்கள்; அறிவு தேடும்

அங்கங்கள் குருடாகிப் போகா வண்ணம்
ஆய்ந்தறித்து தேறுங்கள் என்று நம்மைச்
சிங்கங்கள் என உலகம் சொல்லு மாறு
செய்துவிட்டார் புரட்சிக்கோர் சின்னம் தானே !

பொய்க்கத்தான் பொய்க்காதா தீண்டா நோயும்,
பூணூலார் தெருக்களிலே தீண்டா தாரை
உய்க்கத்தான் முடிந்திடுமோ ? என்றே வையம்
உழல்கின்ற வேளையிலே துணிந்து சென்று
வைக்கத்தார் வீதியிலே எதிர்ப்பை மீறி
வந்தாரே ஊர்வலம் அந்தக் காட்சி
தைக்காத உள்ளங்கள் இருந்த துண்டா ?
தலைப்புரட்சி அதுவென்றால் மறுப்பா ருண்டா ?

மழைத்துளிகள் அவருடலில் சுடுவதில்லை;
மலர்மணத்தை நுகருங்கால் மாற்றம் இல்லை;
தழைத்துவளர் வேம்பவர்க்கு இனிப்ப தில்லை;
தணல்அவர்க்குப் பனியாகிக் குளிர்வ தில்லை;
பிழைத்ததென்ன அவர் நுமக்கு? தீண்டா ரென்று
பெயர்வைத்தே ஒதுக்குகின்றீர் இவ்வா றெல்லாம்
இழைத்ததனால் மானிடந்தான் உயர்வ துண்டா ?
இருட்டறைக்குப் பகற்பெயரா ? ஏலா தென்றார்

வடபுலத்து இராமனுக்குக் கோயில் கட்டி
வழிபாடு செய்வதற்குத் துணையா கத்தன்
திடபுலத்தை இறைமறைக்கும் திரையாய்க் கொண்டு
தீராத பழிசெய்தான் கம்பன் என்ன
வெடவெடத்துப் போனவர்கள், விழியி ரண்டை
வேலாக்கி எய்தவர்கள் இவர்க ளெல்லாம்
சடசடெனச் சரியும்வளம் வைத்த செந்தீச்
சமரின்னும் முடிவுபெற வில்லை யன்றோ ?

வேப்பிலையின் ஓரம்போல் சுருண்ட கூந்தல்
வேல்விழியார் தன்கணவன் மாய்ந்து போகச்
சாப்பறையின் ஓலத்தைக் கேட்குந் தோறும்
சாகாமல் சாகின்ற கொடுமை கண்டு
“பூப்புனைக பெண்மகளே ! மறும ணத்திற்
பொலிந்திடுக ! உனைஎதிர்க்க வருவா ராகில்
காப்பிருப்பேன் நானுனக்குக் கவலை வேண்டா
களிமயிலே” எனச்சொன்ன புரட்சியாளர்

பணத்தோடும் சாதியோடும் திரும ணத்தைப்
பண்ணுகின்றார் இந்நாளில் அந்தப் பெண்ணோ
பிணத்தோடு வாழ்வதுபோல் வாழ்ந்து தேயும்
பிறைபோலப் போகின்றாள்; இவற்றை நல்ல
குணத்தோடு தொடர்புடையார் எண்ணிப் பார்த்துக்
குருட்டுமனம் தெளிவுகொள என்று தூய
மனத்தோடு பாடுபட்டுத் தலைகீ ழாக
மாற்றத்தைச் செய்தவர்யார் பெரியாரன்றோ ?

எண்ணங்கள் புதையுண்ட இடுகா டாக
இதயங்கள் இருக்கட்டும்; பழைமை காட்டும்
வண்ணங்கள் சமூகத்தில் ஆட்சி செய்து
மாறாமல் வாழட்டும்; புளித்துப் போன

தென்னங்கள் உண்டாற்போல் தமிழ ரெல்லாம்
திணறட்டும் எனச்சொல்லும் ஆரியத்தின்
'கன்னங்கள் கிழியட்டும்' என்று கூறிக்
கைம்மடக்கி முன்வந்தார் இவரே யன்றோ ?

தேரோட்டிப் பகைவென்ற மூன்று வேந்தர்
சென்றுவிட்ட பின்னாலே தமிழர் வாழ்க்கைப்
பேரேட்டில் இழப்புக்கள் மெத்த உண்டு;
பிழைகளால் மாசுற்ற தமிழர் வாழ்வை
நீராட்டிப் புதுக்குவதற் கறிவு நீரை
நெடுங்கடலில் மொண்டெழுந்த கொண்டல் இந்த
ஈரோட்டில் பிறக்கவில்லை என்றால் இங்கே
இனமேது ? நாடேது ? மொழிதா னேது ?

படுத்திருக்கும் முட்பன்றி போல வேரில்
பழுத்திருக்கும் பலாக்கனிகள், வரப்புக் கன்னி
உடுத்திருக்கும் ஆடையைப்போல் காற்றிலாடி
ஓசிந்திருக்கும் நெற்பயிர்கள் விளையும் நாட்டை
அடுத்திருக்கும் வடபுலத்தார் ஒய்த்துக் கொள்ளை
அடித்திருக்க விடலாமோ ? என்று கேள்வி
தொடுத்தவர் யார் ? தமிழரெலாம் ஒன்று சேரத்
தொகுத்தவர்யார் ? இவரின்றிப் புரட்சி யுண்டா ?

சுதைவைத்த கோபுரத்தின் கீழிருந்து
சொறிபிடித்த தோலுடனே சரிந்திருக்கும்
சதைவைத்த மேனியினார் தமிழ் நாட்டாரைச்
சாய்ப்பதற்கும் ஒய்ப்பதற்கும் சமயம் பார்த்துக்
கதைவைத்த புராணத்தை எடுத்துரைத்துக்
காசுமுதல் வாழ்வுவரை பறிக்கப்பார்ப்பார்;
உதைவைத்தா லல்லாமல் திருந்த மாட்டார்
உணர்கவெனப் புரட்சி செய்த ஒருவர் யாரோ ?

அறியாமை இருட்டுக்குள் உலகம் என்றும்
அடைபட்டுக் கிடக்கட்டும்; இனம் புரிந்து
செறியாமல் தமிழரெலாம் சாதி பேசிச்
செற்றத்தால் மோதட்டும்; மோதும் போது
குறியாமல் வருகின்ற குருதி நீரைக்
குடித்திருப்போம் என எண்ணி நாச்சுழற்றும்
நரியார்கள் நாவையெல்லாம் அறுப்பதற்கு
நலம்பயக்கும் பகுத்தறிவு வாள் கொடுத்தார்

பூமியின்மேல் உரிமையொடு பிறந்தோன் ஈரம்
புலருமுன்னே ஆரியத்திற் கடிமை யாக்கச்
சாமியென்றும் மதமென்றும் சாதியென்றும்
சதுர்வேத நெறியென்றும் பொய்விலங்கைத்
தாமெடுத்துப் புனைவித்தார்; வளர்ந்த நாளில்
தளையறுக்க மாட்டாமல் தவிப்பார்க் கெல்லாம்
ஆமிதற்கோர் முடிவுசெய்வோம் எனச்சினத்தால்
ஆர்பாட்டப் போர்ப்பாட்டுப் பாடினோர் யார் ?

கொட்டிவரும் பறைக்கேற்பத் தலையசைக்கும்
கோயில்மா டாகாதே; அடிமை யாக்கக்
கட்டிவரும் இந்தியெனும் பெருங் கயிற்றைக்
கடுஞ்சினத்து வாளெடுத்துப் போர்க்களத்தே

வெட்டிவரும் இளவீரா! உறங்கா யாகி
விழித்திருப்பாய் எனச்சொல்லிப் போர்முழக்கை
கொட்டிவரும் முரசாகி எதிர்ப் பொருங்கு
கூட்டிவைத்த புரட்சியினை மறந்தோ மில்லை

மலையனைய கேடுகளை எல்லாம் சின்ன
மயிரிழையால் இழுக்கின்றேன்; வந்து விட்டால்
மலைவரட்டும் வாராதே அறுந்து போயின்
மயிர்தானே போகட்டும் என்று சொல்லும்
நிலைகுலையா மனத்துணிவால் அன்றோ இங்கே
நிலைத்துவிட்ட பழமையெனும் கொடுங்குன்றத்தைத்
தலைகுலையப் பெயர்த்தெறியக் கண்டோம் அந்தத்
தலைமைக்குத் தலைமையினைப் போற்றி செய்வோம்

கரியநிறக் களிறொன்று துதிக்கை தூக்கிக்
காட்டுதல்போல் திகழ்கின்ற 'லை' எழுத்தின்
சிறியதொரு துதிக்கையினை வெட்டி வீழ்த்தி;
சினப்பாம்பு தன்னுடலைச் சுருட்டிக் கொண்டு
சிறிதான வாலைத்தன் தலைவைத்தாற்போல்
திகழ்கின்ற ணா எழுத்தின் வாலறுத்துப்
பெரிதாகத் தமிழ்எழுத்தைச் சீர்திருத்திப்
பேணியதும் புரட்சி என்றால் மறுப்பார் உண்டா?

இன்னாரா? இனியாரா? என்று பார்க்கா(து)
ஈ.வே.ரா. செய்துள்ள புரட்சி யெல்லாம்
பொன்னாரால் தொடுத்தெண்ணிப் பார்ப்போரெல்லாம்
புகழ்வாரால்; ஈங்கிருக்கும் இளைஞருக்குத்
தொண்ணூறு நிறைந்ததென்று வியப்பில்மூழ்கி
தொழுகின்றார் மக்களெலாம் மேலும்மேலும்
பன்னூறாம் ஆண்டிங்கே வாழ்ந்திருந்து
பகைநடுங்கத் தலைமைகொள வாழ்த்துவோமே.

எத்தனை புரட்சி! எத்தனை சிறப்பு!
அத்தனைச் செயற்கும் அடிப்படை என்ன
எந்தாய்! எந்தாய்! எனவரும் இளைஞர்
சொந்தம் பேசிச் சுற்றமாய்ச் சூழ்ந்தே
ஒருகுடும் பத்தின் உறுப்பினர் போல
கட்டுண்டு கிடக்கும் கருத்துத்தான் என்ன?
வெட்டுண்ட போதும் நீர்போல் விலகி
ஒட்டிக் கொள்ளும் உறவுன் இருக்கும்
மறைபொருள் யாதாம்? மண்டையைக் குழப்பிக்
கண்டெடுத்தேன் ஓர் கருத்தை; அக்கருத்தை
விண்டுரைத் தேகல் விழையும்என் மனனே.
பகுத்தறி வியக்கப் பாசறை யாக
ஈரோட் டில்லம் இலங்கிய அந்நாள்
ஆய்வறி வாளர் அனைவரும் கூடித்
தாய்வீ டென்றே தங்கிக் கிடப்பர்;
வருவார் போவார் வழக்கறா தாகி
என்றும் கூட்டமாய் இருக்குமந் நாளில்,
கொடிபிடித் தேரும் குறுமகார் என்றோ,
முடிவிலா அறிவில் மூத்தோர் என்றோ?
வேற்றுமை சிறிதும் காட்டா தாகி
வாடிய முகத்தராய் வருவார்க் கெல்லாம்

நீடிய அன்பால் நெஞ்சம் நெகிழ்ந்து
உண்ணச் சோறும் உணருதற் கன்பும்
பின்னும் ஊர்செலப் பொருள்கைக் கொடுத்தும்,
தாயினும் பெரிதாய் ஆயின செய்யும்
நாகம்மை என்னும் நற்பெயர் பூண்ட
திராவிடர் குலத்துத் தெய்வதம் ஒன்று
இல்லில் இருந்தே இயற்றும் அறமெனச்
சொல்லக் கேட்டுளேன் தூயஅவ் வன்னைகை
உண்ணும் பேறிலா தொழிந்த சிறுவன்நான்
ஆதலின் இங்கே அமர்ந்திருப் பாருள்
அன்னையின் கரத்தால் உண்ணுதற் பேற்றைப்
பெற்றார் இருப்பர் அவரடி தொழுவேன்.
நாகம்மை என்னும் நற்றாய் உவந்து
போட்ட சோறும் காட்டிய பாசமும்
பூட்டிப் பிணைத்தது நம்மெலாம் என்றால்
இல்லை எனச்சொலும் இதயங்கள் உண்டா?
அன்னையார் தந்த அளப்பிலா ஊக்கமே
பின்னும் இவரைப் பெரிய செயல்களில்
ஊக்கிச் செலுத்தி உலப்பிலா வெற்றி
ஆக்கிக் கொடுத்தது எனநான் மொழியின்
எல்லாம் எதிர்க்கும் இயல்பின ரெனினுமிச்
சொல்லை எதிர்க்கத் துணியார் தந்தை
என்பதைக் கூறி இன்னே
என்பணி முடித்தே ஏகுவன் யானே.

★


**வாழ்க பெரியார்!** **வளர்க பகுத்தறிவு!!**

## வணக்கத்திற்குரிய தந்தை பெரியார் அவர்களின் 92-வது பிறந்தநாள் விழாவில் நல்வாழ்த்துக்கள்!

காரைக்காலில்:—இரயில், பஸ் நிலையங்களுக்கு அருகில் சகல நவீன வசதிகளும் கொண்ட தனி, குடும்ப அறைகள் நியாயமான வாடகைக்கு கொடுத்து, வருகிற பிரயாணிகளை "அய்யா" அவர்களின் விருப்பப்படி விருந்தினர்கள்போல் வரவேற்று உபசரித்து அனுப்பப்படுகிறது. வந்து தங்கி நல் ஆதரவுதர விரும்புகிறோம்.

★

# முருகன் தங்கும் விடுதி

22-சு. பாரதியார் வீதி,
**காரைக்கால்.**

உரிமையாளர்:
**சி. மு. சிவம், காரை வட்ட தி. க. தலைவர்**

போன்: | கடை: 259
| இல்லம்: 365

தந்தி: கற்பகம்

வாழ்க தந்தை பெரியார்!
வளர்க அவர்தம் தத்துவங்கள்!

★

கலைகள் சிறந்த காஞ்சியில்
வண்ண வண்ணப் பட்டுச் சேலைகள்
உங்கள் எண்ணம்போல் தயாரித்து
விற்பனை செய்கிறோம்.

★

# கற்பகம் & கோ.

பட்டு நூல் & மில் ஜவுளி வியாபாரம்

177, காந்தி ரோட் :: காஞ்சிபுரம்.

தங்கள் வரவை அன்புடன் எதிர்நோக்குகிறோம்.

# போராட்டப் புயல்

—: கவிஞர் குடியரசு :—

எனைவிட்டுப் பறந்தவனே ! இனியப் பேச்சால்
எனைக்கவர்ந்த தமிழ்க்கிளியே ! தமிழ கத்தின்
புனையாத ஓவியமே ! அன்பே! பண்பே !
பொறுமைக்கே இலக்கணமாய் நிமிர்ந்த குன்றே
மனையெல்லாம் மனமெல்லாம் நிறைவி ளக்கே
மகுடங்கொள் எழிலெழுத்தே ! அறிஞ ரேறே !
உனைமறக்க முடியாமல் உருகு கின்றேன்
உனைவணங்கிக் கவிதையினைத் தொடங்கு கின்றேன்.

கடனாற்ற வந்திருக்கும் அமைச்ச ருக்குக்
கனிவான விண்ணப்பம் ஒன்று—நீங்கள்
இடந்தெரிந்து வரவேண்டும்—எதிரி வாழும்
இடத்திற்கா வரவேண்டும். சாமி என்றால்
உடையென்று சொல்வாரே பெரியார்—நீங்கள்
ஊர்த்திரும்ப வேண்டாமா ! முத்துச் சாமி
கடவுளல்ல என்றேனும் சொல்லி விட்டு
கவியரங்கில் குந்துங்கள்—இதுஎன் ஆசை !

சென்னையிலே ஒருசமயம் பெண்ணாய் ஆகித்
திருவாரூர் கலைஞரினைக் காத லித்தீர்
அன்னவரோ பெரியாரின் இளையப் பிள்ளை
அம்முறையில் பெரியாரின் மருமகள்நீர்
கன்னலாகக் கலைஞருக்கு வாய்த்த உன்னைக்
கவியரங்கில் குந்தவைத்தார்—மாம னாரின்
பொன்னான பிறந்தநாளை உன்னைப் போன்ற
புதுப்பெண்ணே பாட்டாலே வாழ்த்த வேண்டும் !

போராட்டப் புயலென்று பெரியார் தம்மைப்
புதுப்பாட்டால் புறப்பட்டாய் பாடு தம்பி
காரோட்டும் புயல்காற்றைக் கண்ட துண்டு
கடவுளினை ஓட்டுகின்ற சூறைக் காற்றை—
நீரோட்டம் இல்லாத சாதிப் பேயை
நெடுந்தூரம் ஓட்டுகின்ற புயலைப் பற்றிச்
சீராட்டம் கொடுக்காத கவிதைத் தீயால்
சின்னவனே பாடென்றார் பாடு கின்றேன்.

மிரளாதீர் அவையோரே ! எனது பாட்டு
மென்மையாக இருக்காது ! சாதி என்னும்
சிரங்கிற்கும் சீழ்பிடித்த மதங்க ளுக்கும்
சிங்காரம் பாடயிங்கு வந்தே னில்லை !
கரடிவிட்டுச் சரடுவிட்டுக் காலங் தள்ளும்
கையெழுத்துக் கவிதையல்ல எனது பாட்டு
அரளியிலே அரைத்துவைத்த துவையல் ! என்னை
அணிசெய்யும் போராட்ட புயலின் சீற்றம் !

பட்டைகளைக் கொட்டைகளை நாமம் தீட்டும்
பட்டரையைச் சுட்டெரிக்கும் பெரியார் மட்டும்
வட்டநிலாப் போல்நாட்டில் இல்லை என்றால்
வௌவால்போல் தமிழனெல்லாம் இருட்டில் வாழ்வான்

மொட்டைதலை பாப்பாத்தி கூட நம்மை
முறத்தாலே அடித்திருப்பாள்! வேளை யோடு
தட்டியந்த பூணூலை வைத்த தாலே
தலைமுறையே தப்பித்துப் பிழைத்த தென்பேன்!

பொய்வீசிக் கொண்டிருந்த பார்ப்பா னுக்குப்
புகழ்வீசிக் கொண்டிருந்தான் தமிழ னெல்லாம்
கைவீசி நடந்துவந்த மறவ னெல்லாம்
கைகட்டி வாய்பொத்தி நின்றி ருந்தான்
வையென்ற இடத்தினிலே துட்டை வைத்தான்
விலகென்று சொன்னபோது விலகி நின்றான்
அய்யாவின் வைரக்கண் இதனைப் பார்த்து
அடிமுட்டாள் தனமொழிக்கப் புயலாய் ஆனார்.

நூலென்றால் நன்னூலா கலியா அறிவு
நுரைத்தள்ளி ஓடிவரும் குறளா இல்லை
நூலென்றால் பூணூல்தான் என்றான் பார்ப்பான்
நூற்றுக்கு தொண்ணூற்று ஏழு பேர்கள்
ஆலவட்டம் சுற்றினார்கள் அய்ய ருக்கு
அவன்காலை கழுவினார்கள் மூளை தன்னை
ஏலம்போட்டு விற்றார்கள்—பெரியார் பார்த்தார்
எருமாடாய் போகாதே தமிழா என்றார்.

வில்லாலே உலகாண்ட வீர னுண்டு
வெடிகுண்டால் துப்பாக்கி குண்டால் தீய்க்கும்
பொல்லாத அணுக்குண்டால், உலகை ஆண்ட
போர்வீரர் பார்த்திருப்போம்—மாடு தின்னும்
புல்லாலே சாணியாலே துணிது வைக்கும்
கல்லாலே புவியாண்டான் குடுமிப் பார்ப்பான்
எல்லாரும் அவனுக்கே நடுங்கி னார்கள்
ஏனென்று எதிர்த்தானோ பெரியார் போல.

சாக்கடையில் மொய்க்கின்ற கொசுக்கள் போல
சாத்திரத்தில் மொய்க்கின்ற கடவுள் கூட்டம்
பூக்கடையாய் இருந்துவந்த தமிழர் நெஞ்சில்
புழுப்போல புழுத்தநிலை பெரியார் கண்டார்
தூக்கத்தில் கயிறுதனைத் திரித்து நம்மைத்
தூக்கினிலே தொங்கவிடும் நிலைமை கண்டார்
தேக்கநிலை இனியிருந்தால் விபத்தே என்று
சீறிவரும் போராட்டப் புயலாய் ஆனார்!

கடவுளென்ற கற்பனைச்சொல் உருவம் பெற்றுக்
கடைத்தெருவில் குளத்தோரம் கோயில் கொண்டு
நடமாடும் பகுத்தறிவு மனிதன் தன்னை
நடைப்பிணமாய் ஆக்கிற்று! அறிவைக் கொண்டு
தொடங்குகின்ற செயல்களெல்லாம் ஆல யத்தின்
சொறிபிடித்த பார்ப்பானால் தொடங்கக் கண்டார்
வெடவெடத்துப் போயிற்றுப் பெரியார் உள்ளம்
வீழ்த்துகின்ற போராட்ட புயலாய் ஆனார்!

நாய்வெட்டை, கசுமலங்கள், மாட்டுச்சாணம்
நடுவீட்டுக் கடவுளாகி, நமது சொத்தை
வாயார ஏப்பமிட்டு வந்த போது
வாய்மூடிக் கிடந்ததிங்கே படித்த கூட்டம்!

பாய்போட்டா அரிதண்டம் போட்டான்! இல்லை
எச்சிலிலே போயுருண்டான் பட்ட தாரி
தாய்நாடு இவ்வாறு போதல் கண்டார்
தாக்குகின்ற போராட்ட புயலாய் ஆனார்!

சாத்திரத்தை, கோத்திரத்தை வடக்குக் காசி
ஷேத்திரத்தை நம்பியபின் மாடு பெய்யும்
மூத்திரத்தை குடிப்பதற்கே தமிழன் போனான்
முழுத்திறத்தை முத்தமிழன் தனித்தி றத்தை
நாத்திறத்தை செயல்திறத்தை கலைத்தி றத்தை
பாத்திறத்தை நழுவவிட்டால் பெரியா ருக்கு
ஆத்திரத்தைத் தூண்டாதா! மடத்த னத்தின்
அடிவேரைப் பிடுங்குகின்ற புயலாய் ஆனார்.

பாப்பாத்தி நடவுநட்டு பார்த்தோ மாநாம்
பணையடித்துப் பார்த்தோமா அய்யங் காரை
யார்பார்த்தார் பூணூல்கள் புடவை நெய்து
ஏர்பிடிக்கும் அய்யரைநாம் கண்ட துண்டோ
கூழ்பானை யும்நமக்கு வெறும்பா னையா
கும்பமெல்லாம் மடப்பள்ளி பெருச்சா ளிக்கா
ஏழ்மையிலே நாமிருக்க கண்ட அய்யா
ஏய்ப்பானைச் சாய்க்கின்ற புயலாய் ஆனார்!

பாரவண்டி நாமிழுத்தோம் மூட்டைத் தூக்கிப்
பதங்குலைந்தோம் குடிசையின்றி தெருவில் நின்றோம்
காரமற்ற கூழ்ப்பானை ஈக்க ளானோம்
கடுகைப்போல் மிகச்சிறுத்தோம்—பூதே வர்க்கள்
தேர்மீது திருக்கோலம் காட்டி நின்றார்
தெருமீதில் அலங்கோலம் காட்டி நின்றார்
ஓரத்தில் ஒதுங்கிருந்த தமிழன் வாழ
ஓங்காரப் புயலாகப் பெரியார் ஆனார்.

நாய்க்காதைத் திருகுதல்போல் கடவுள் காதை
நாட்டினிலே திருகியவர் பெரியார் அன்றோ
காய்ச்சலிலே உளறியது அக்ர காரம்
காசநோயால் இருமுகின்ற பார்ப்பான் கூட
'ஆய்'என்றான் 'ஊய்'என்றான்! ஆதி சக்தி
அப்படியே விழுங்குமென கரடி விட்டான்
வாய்பிளந்த சிங்கம்போல், கடவுள் தோலை
வெங்காயம் உரிப்பதுபோல் உரித்துப் போட்டார்.

பல்லைப்போல் நெருங்கிருந்த சமுதா யத்தைப்
பலகறைப்போல் தனித்தனியாய் பிரித்தே ஊரின்
எல்லைக்கோர் சாதியாக வர்ணம் தீட்டிப்
பொறுக்கியுண்ண ஏற்பாடு செய்தான் பார்ப்பான்
எல்லாரும் ஒன்றென்ற நிலைமை மாறி
என்சாதி உன்சாதி நிலைக்கு நாடு
சொல்லாமல் கொள்ளாமல் வந்த போது
சீர்த்திருத்த புயலாகப் பெரியார் ஆனார்.

ஊர்த்தெருவில் சேரிமக்கள் புகுதல் தப்பு
ஊர்ச்சொத்தை அமுக்குகின்ற இனத்தார் மட்டும்
தேர்மீது ஊர்வலமாய் வரலாம்! ஆனால்
தொழிலாளி பாட்டாளி வரக்கூ டாது

ஏர்பிடிப்போன் இழிசாதி! உழைத்துண் ணாத
ஈனனெல்லாம் மேல்சாதி! இதனை மாற்ற
போராட்டப் புயலானார்—வைக்கி யத்தில்
பூணூலைப் பொடியாக்கி திரும்பி வந்தார்.

ஒழுக்கத்தை சட்டத்தை நெறியை கூட
ஒருமனிதன் எதிர்த்துவாழ அனும திப்பர்
பிழைப்புக்கு வந்தவனின் வேத நூலைப்
பிற்போக்குப் புராணத்தை எதிர்த்து விட்டால்
அழுத்துதற்குத் தொண்டையிலே காலை வைப்பார்
அக்கினியில் கழுமரத்தில் சாக டிப்பார்
கழுமரத்தில் சாவதற்கு எவன்தான் போவான்
கண்மூடி கொண்டார்கள் எதிர்க்க வில்லை.

பெரியாரும் அப்படியா! இல்லை...இல்லை
புராணத்தின் புளுகுமூட்டை எல்லாம் வாரி
எரிநெருப்பில் கூசாமல் எடுத்துப் போட்டார்
எதிர்ப்பவனைப் பொதிக்கழுதை வாலில் கட்டித்
தெருத்தெருவாய் இழுத்துவந்தார். பழங்கா லத்துத்
திமிர்வாத பக்கவாதப் பேச்சுக் கெல்லாம்
வரிவரியாய் விளக்கங்கள் தந்தார்—வந்த
வைதீகன் வாலறுந்த நரியாய் ஆனான்!

வாந்திவரும் பார்வதியின் அழுக்கால் ஆன
வாதாபி கணபதியை, அவனின் அப்பன்
தான்தோன்றி சுடுகாட்டுச் சிவனை—சுத்த
தறுதலையாம் சுப்பரமணி—இவனை எல்லாம்
பேந்தவிழிப் பிதுங்கவைத்து உடைத்துப் போட்டுப்
பெரும்புரட்சி செய்தவர்யார்! நம்மைக் காத்த
ஏந்தல்யார்! சமுதாயச் சீர்த்தி ருத்தம்
ஏட்டளவில் நிற்காமல் செய்த வர்யார்!

செந்தமிழின் சுவையுணரா மாக்கள் இந்திச்
செந்தேளைப் பொதுமொழியாய் ஆக்கு தற்கு
முந்திருந்த காளைமாட்டுக் கட்சிக் காரன்
முயற்சியிலே ஈடுபட்டான்! பதவிப் பித்தால்
செந்தமிழர் அறப்போரை ஒடுக்கு தற்குச்
சிறைவாசம் வனவாசம் எல்லாம் தந்தான்
கொந்தளித்த கடல்போல பெரியார் நின்றார்
குடல்தெறிக்க ஓடிற்று இந்திப் பேயும்!

மனுதர்மம் வர்ணாச்சிர தர்மம் காக்க
வடிவெடுத்த ராஜாஜி—திட்டம் போட்டார்
இனிமேலே அவரவர்கள் தங்கள் சாதி
இழிதொழிலை செயவேண்டும் என்ற பொல்லா
குணங்கெட்ட குலக்கல்வித் திட்டம் ஒன்றைக்
கொண்டுவந்து வாலாட்டிப் பார்த்தார்—இந்த
இனமழிக்கும் வேலையினைப் பெரியார் கண்டார்
எதிர்க்கின்ற புயலானார் வெற்றி கண்டார்.

கலப்புமணம் விதவைமணம் தொழில்பு ரட்சி
கல்வியிலே புதுமாற்றம் மொழிபு ரட்சி
நிலவுடைமை சீர்த்திருத்தம் கிராம நலம்
நிலையான தமிழெழுத்துப் புரட்சி எல்லாம்

நிலம்வாழ செய்தவர்கள் பெரியார் அன்றோ
நெடியதொரு வரலாற்றில் அய்யா போல
பலங்கொண்ட சமுதாயச் சிற்பி இல்லை
பஞ்சாங்கப் போக்கிரியை அறவே சாய்த்தார்.

புத்தரைப்போல் நபிகளைப்போல் ஏசுவைப் போல்
புதுக்கொள்கை வகுத்தார்கள் பெரியார்—ஆனால்
புத்தரேசு நபிகளெல்லாம் தங்கள் நாளில்
பொல்லாத பேர்வழியால் தாக்கப் பட்டார்
கொத்தான மலர்போன்ற கொள்கை! மக்கள்
கைக்கொள்ளும் முன்பேயே மறைந்தே போனார்
இத்தரையில் பெரியார்தான் தாம்வ குத்த
எழில்கொள்கை வாழ்நாளில் பரவக் கண்டார்!

இருபக்கம் கூருள்ள கத்தி மீது
ஏறுதல்போல்—இக்கட்டே சீர்த்தி ருத்தம்!
நெருப்பின்மேல் நடப்பதுவும் நெருஞ்சி முள்ளில்
நடப்பதுவும் சுலபமாகும்—சமுதா யத்தைத்
திருத்துகின்ற பணிமிகவும் சிரம மாகும்
தீங்கரும்புச் சாற்றைப்போல் வேப்பஞ் சாற்றைப்
பருகுவது போலாகும் சமூகத் தொண்டு
பரிகாசம் இழிசொற்கள் பரிசாய் நிற்கும்!

கண்மூடி வழக்கெல்லாம் கீழே சாய
கண்மூடா திருந்துபணி செய்யும்போது
விண்ணிடிந்து வீழ்ந்தாலும் கலங்கா நெஞ்சை
விரிவாக பெரியார்தான் கொண்டி ருந்தார்
மண்ணகத்தார் பாடுகின்ற புகழை—மாற்றார்
வாய்நாறி வீசுகின்ற இழிந்த சொல்லை
ஒன்றாகக் கணிக்கின்ற பண்பு அந்த
ஒப்பில்லா போராட்ட புயலுக் குண்டு!

மாலையிலே சூரியனும் ஓய்வெ டுப்பான்
மலர்பறவை மிருகங்கள் ஓய்வெ டுக்கும்
காலையிலே வெண்ணிலவு விண்மீன் கூட்டம்
கண்மூடி ஓய்வெடுக்கும்—பொதிகைத் தென்றல்
சோலையிலே ஓய்வெடுக்கும் மலரின் மீது
சுரும்பினங்கள் ஓய்வெடுக்கும்—பெரியார் மட்டும்
பாலைவனம் ஆகிவிட்ட நாட்டைக் காக்க
படுக்காமல் ஓய்வின்றி பாடு பட்டார்.

பெரியாரின் வாழ்வெல்லாம் போராட் டந்தான்
பிறவிலேயே வீரனாகப் பிறந்த அய்யா
எரிநெருப்பில் எப்போதும் குடியி ருந்தார்
எதிரிகளின் நடுவிலேயே முளைத்தார்—நல்ல
அரியபெரும் தலைவராக வளர்ந்தார்—நாட்டை
ஆட்டிவைக்கும் மதக்கொழுப்பை தீயில் தீய்த்தார்
நரியாரின் வால்நறுக்க அண்ணா என்னும்
நாயகனை உருவாக்கி உலவ விட்டார்!

கண்கலங்கிப் பெரியாரைப் பார்த்த தில்லை
கல்லறைக்குத் தீனியாக நமது அண்ணா
கண்மூடி விட்டாரென் றறிந்த போது
கடவுளுக்கும் கலங்காத பெரியார் கண்கள்

கண்ணீரில் தெப்பமாகி மிதக்கக் கண்டேன்
காலத்தின் கருவூலம் அண்ணா ! இந்த
மண்ணுக்கே ஒளியூட்டும் விளக்கு ! என்றன்
மகனென்று எண்ணியதால் கலங்கிப் போனார் !

ஒருசட்டை யும்போடா திருந்து கொண்டே
ஊர்சத்தை உறிஞ்சுகின்ற கூட்டத் திற்குக்
கருஞ்சட்டை நீர்போட்டு கலங்க வைத்தீர்
கதர்ச்சட்டைக் காரனுக்கும் எமனாய் நின்றீர்
வருசட்ட வேகத்தைச் சிறைவா சத்தை
வண்டுறிஞ்சும் தேனாக சுவைத்தீர் உங்கள்
கருஞ்சட்டைக் குள்ளிருக்கும் வீர நெஞ்சை
காலமெல்லாம் வணங்குவதே எங்கள் வாழ்வு.

தள்ளாத வயதிலேயும் வாலி பத்தின்
தலைவாயில் நிற்கின்ற பெரியார் வாழ்க !
கொள்கைக்குச் சுகதுக்கம் மறந்து வாழ்வின்
குறிக்கோளை உணர்த்திவரும் பெரியார் வாழ்க !
பள்ளத்தை மேடுகளை சமனாய் ஆக்கிப்
பயன்கண்ட பெருந்தலைவர் பெரியார் வாழ்க !
எள்ளளவும் வழுவாது பண்பைக் காத்த
இனத்தலைவன் ! போராட்ட புயலே வாழ்க !
உரித்தெடுத்த பலாச்சுளையின் நிறத்தைக் கொண்டு
ஊர்ந்துவரும் வெண்மேக தாடி நீவிப்
பொறிபறக்கும் வைரக்கண் மலர்கள் சூடிப்
பகுத்தறிவு யாழ்மீட்டி கொள்கை பாடிக்
கரியநிற உடைஉடுத்து முக்கா லத்தைக்
கணக்கிட்டு அரசியலை வகுத்து பேசும்
பெரியாரே பல்லாண்டு வாழ்க ! வாழ்க
போராட்ட புயல்காற்றே நீண்டு வாழ்க !

துவரைக்கு முதல்நன்றி தமிழ்வ ளர்த்த
மதுரைக்கு நடுநன்றி மதுக டைக்கு
கவனமாக நன்றிசொல்லி அவையோர் மற்றும்
கழகத்து காளைக்கு நன்றி சொல்வேன்.

---

**வாழ்க பெரியார் !** **வளர்க கழகம்!!** **ஓங்குக தமிழகம்!!!**

# Greetings To The Immortal Dravidian

" வெள்ளத் தனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு. "

" சிதைவிடத் தொல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டூன்றுங் களிறு "

அன்பின் அணிகலன், கருணைக்கடல், கொடைவள்ளல் தந்தை பெரியார் அவர்களின் நன்கொடையும், உள்ளூர் வெளியூர்ப் பெரு மக்களின் அன்பளிப்புக்களுங்கொண்டு நிறுவப் பெற்றிருக்கும், திருச்சி பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிலையத்தின் நகர திராவிடர் கழகக் கட்டிடத்தில் இயங்கும் நூல் நிலையம் & படிப்பகத்திற்குப் புத்தகங்கள் பத்திரிகைகள் நன்கொடை வழங்கும் பெரியோர் பெருமக்கட்கு இந்நன்னாளில் எங்கள் உளங்கனிந்த நன்றியையும் வணக்கத்தையும் செலுத்திக் கொள்ளுகின்றோம்.

**நகர திராவிடர் கழகம்,**
**அருப்புக்கோட்டை.**

# "பெரியாரின் அஞ்சாநெஞ்சம்"

**—: கவிஞர் முத்தன் :—**

கொள்ளாட்சி தமிழ்நாட்டில் அண்ணா ஆட்சி
கொடுத்திட்ட நல்லாசான் அன்பு மிக்க
உள்ளாட்சித் துறையமைச்சர் உயர்ந்த தோன்றல்
மாண்புமிகு மா. முத்து சாமி! ஒன்றாய்
உள்ளூறி வருகின்ற தமிழ்வெள் ளத்தால்
உயர்ந்தசுவை வழிந்தோடித் தேங்கி நிற்க
அள்ளூறுங் கவிபுனையும் என்கு லத்தீர்!
அரங்குள்ளீர்! அனைவரையும் வணங்கு கின்றேன்.

காவியுடை யுள்ளிருக்கும் அடிக ளாரைக்
காண்பவர்கள் துறவியெனின் ஒப்பேன் ஒப்பேன்!
தாவிவரும் ஓராசை துறந்தா ரல்லர்
தமிழாசை, தமிழினத்தின் மேலும் ஆசை
ஆவியெலாங் குடியிருந்து நிறைந்தி ருக்கும்
அவரைப்போய்த் துறவியெனின் யாரும் ஒப்பார்;
மேவுதமிழ்ச் சுவை **குன்றக் குடியார்** அந்த
மேலவர்க்கும் என்வணக்கம் கூறு கின்றேன்.

அஞ்சாமை யல்லாலோர் துணையும் வேண்டா
ஆன்றபுகழ்ப் பெரியாரின் அடிகள் போற்றி!
எஞ்சாமல் தந்தையவர் அஞ்சா நெஞ்சம்
இன்னதெனச் சிலவற்றால் எடுத்துக் காட்டி
நெஞ்சார வாயாரப் பாட வந்தேன்;
நெடும்பாட்டை நான்விரியேன்; நேரந் தானும்
விஞ்சாமல் என்பாட்டை நிறைவு செய்வேன்
விருப்பத்தால் எல்லீரும் செவிம டுப்பீர்!

சாதியின்பால் பற்றுவைத்த ஓரி னத்தார்
சலுகைகளும் பதவிகளும் தாமே கொள்ள
நீதியின்றிக் காங்கிரசார் விட்டு விட்டு
நிலைமாறித் தடுமாறி நடக்கும் நாளில்
நீதியின்பேர் கொள்கட்சி; நீதிக் கட்சி
நிறுவியதன் தலைமையினைப் பெரியார் ஏற்றார்
ஓதிவந்த கூட்டத்தின் உறும லுக்கும்
ஒருநாளும் அஞ்சாமல் உழைத்தார் மேலும்.

புதியதொரு மனப்போக்கால் நீதிக் கட்சி
பொருந்தாமல் நடந்துவர அதனை விட்டு
மதிவலியால் வெளியேறிப் புதிய கொள்கை
வரைந்து**திரா விடர்கழகம்** அமைத்துக் கொண்டார்
கதியறியாத் தமிழர்சமு தாயத் திற்குக்
கண்ணளிக்கும் தலைவனெனத் தந்தை யானார்
விதிமுறைகள் புதியனவாய் வகுத்துக் கொண்டு
விரைந்துபணி யாற்றுவதில் தொண்ட ரானார்.

கண்மூடி வழக்கமெலாம் இந்த நாட்டில்
கடிவிரைவில் காலத்தில் நம்மை விட்டு
மண்மூடிப் போதற்குப் பெரியார் நாளும்
மனச்சோர்வும் நோக்காம லுழைத்தார்; இந்தப்
புண்ணோடிப் புரையோடி நின்றி ருந்த
பொல்லாத சழக்குற்ற சமுதா யத்தின்
உண்ணாடிப் பிடித்துப்புத் துயிரை யூட்ட
உயர்வான பகுத்தறிவு மருந்து தந்தார்.

பகுத்தறிவு மருந்துதனை விற்ப தற்குப்
பரிவுள்ள நம்தந்தை பெரியார் அந்நாள்
புகுத்துகிற முறைமையினை மக்கள் பல்லோர்
பொதுவாக ஏற்றனரோ? ஏற்கா விட்டால்
வகுத்தவிதி தலைவிதியே என்றே எண்ணி
வாய்மூடி மௌனிகளாய்ப் போன துண்டா?
தொகுத்துரைத்த பழிமொழிகள் கோடி கோடி!
துணிந்திழைத்த கொடுமைகளும் கோடி கோடி!

கல்லடிக்குக் கணக்குண்டா? சிந்தி நின்ற
காயத்தின் செங்குருதிக் களவு முண்டா?
சொல்லடிக்குக் கணக்குண்டா? அவற்றை எல்லாம்
தூயவொரு ஆடையின்மேல் தூசி என்று
மெல்லமுனந் தட்டிவிட்டு மேலும் மேலும்
வீறுநடை போட்டனரே! அஞ்சா நெஞ்சம்
வெல்லுகிற வழிகண்ட மக்கள் பல்லோர்
விரைந்தேற்றார் பகுத்தறிவு மருந்து கொண்டார்.

கடவுளென்றும் தெய்வமென்றும் சாமி யென்றும்
கண்டபடி யுண்டாக்கிக் குடும்பங் கூட்டி
உடனடியாய்ப் பிள்ளைகளும் பிறகசச் செய்தே
உருப்படியாய்க் கதைகளையுங் கட்டி விட்டும்
மடமையிலே மக்கள்தமை யுழல வைத்து
மறவாமல் நாடோறும் வணங்கி நிற்றல்
கடமையென ஓதிவந்த கூட்டத்தார்க்குக்
கனன்றெழுந்தே அஞ்சாமல் மறுப்புத் தந்தார்.

'தென்னிலங்கைப் பெருவேந்தன் இராவ ணன்மேல்
திட்டமிட்டுப் பழிசுமத்தி இழித்துக் காட்டி
முன்பெருமைத் திராவிடர்க்குத் தீங்கி ழைத்து
முதுநூலால் இராமன்றன் புகழைப் பாடி
என்னருமைத் தமிழர்களை இழிவு செய்தார்
இதைப்பாடும் இந்நூலை எரிப்பேன்' என்று
சென்றவிடம் எங்கெங்குஞ் செப்பிச் செப்பித்
தீயிட்டார்! யார்செய்வர்? அஞ்சா நெஞ்சர்!

ஆறுகுளம் எனுமிடத்தில் பெண்கள் நீரில்
ஆடிடுவர்; ஆண்களங்குச் செல்ல நேரின்
மாறுகொளும் மனத்தாராய் வைத்த கண்கள்
வாங்காமல் பார்க்கின்ற வழக்க முண்டா?

வேறுதிசை பார்ப்பவராய் விரைந்து செல்வர்
விளங்குகிற நாகரிகம் தமிழர் பண்பு
கூறுகிற உண்மையிது ! வடவர் பண்பு
கூறுகிற கதைகேட்பீர் உணர்ந்து கொள்வீர் !

கன்னியர்கள் ஆடைகளைக் கரையின் மீது
களைந்துவைத்து நீராட நீரிற் புக்கார் ;
முன்னுணர்ந்த கடவுளினோர் அவதா ரத்தான்
மோப்பமிடுங் கண்ணனெனும் பெயரான் அந்தக்
கன்னியர்கள் குளிப்பதையே உற்றுப் பார்த்தான்
கடிதுவரும் ஆசையினை அடக்கா னாகிப்
பின்னினைந்து பெண்களுடை யாடை தம்மைப்
பிணைந்தெடுத்து மரத்தின்மேல் ஏறிக் கொண்டான்.

கண்டுவிட்ட கன்னியர்கள் ஆடை கேட்கக்
கண்ணனவன் கன்னியரை உற்றுப் பார்த்துப்
'பெண்மணிகாள் ! நீரின்மேற் கைகள் நீட்டிப்
பெரிதாகக் கேட்டால்தான் தருவேன்' என்றான் ;
உண்மைநிலை யுணராத அவருங் கேட்டார் ;
உருக்கண்டு கண்ணனவன் போட்டான்; என்றும்
பெண்களையே சுற்றிவருங் கண்ண னைப்போய்ப்
பேசுகின்ற கடவுளெனின் பெரியார் ஒப்பார் !

அதனாலே அவன்கதையை ஊர்கள் தோறும்
அயராமல் எடுத்துரைத்துக் 'கண்ணன் பொம்மை
எதனாலும் வணங்கற்கோ ஏற்ற தன்றாம்
எங்கெங்கும் இதையுடைப்பீர் !' என்று டைத்தார் ;
பதறாத வைதிகர்கள் உண்டா ? நம்மேல
பாயாத ஆத்திகர்கள் உண்டா ? இல்லை ;
இதனாலே ஈரோட்டுச் சிங்கம் வாளா
இருந்ததுண்டா ? இருந்திடுமா அஞ்சா நெஞ்சம் ?

பார்வதியும் குளிப்பதற்கே ஆசை யுற்றுப்
பலரறியாத் தனியிடத்தை நாடிச் சென்றாள் ;
ஆர்வமுடன் குளிப்பதற்கு முனையும் முன்னர்
அவ்விடத்தைக் காப்பதற்குக் காவல காரன்
நேர்வரினே நன்றென்றே தன்னு டம்பில்
நிறையழுக்கை திரட்டியவள் உயிர்கொ டுத்து
'யார்வரினும் வரவிடாதே' என்று போனாள்
இருந்தானாம் காப்பவனாய்ப் பிள்ளை யாரும்.

அப்போது பார்வதியைத் தேடிக் கொண்டே
அவ்விடத்தில் பரமசிவன் வந்து நின்றார் ;
'இப்போது யாருமுளே போகக் கூடா
தென்னன்னை குளிக்கின்றார்' என்று பிள்ளை
தப்பாமற் சொன்னானாம் ; சிவன்சி னந்து
தடுத்துவிட்ட பிள்ளையது தலையைக் கிள்ளி
எப்பாலோ எறிந்தாராம் ; குளித்து விட்டே
எதிர்வந்த பார்வதியும் கதறி னாளாம்.

'என்னருமைப் பிள்ளையை,என் அழுக்கில் வந்த
எழில்மகனை ஏன்கொன்றீர்? அய்யோ!' என்றாள்;
'உன்னழகைக் காணற்கு வந்த என்னை
உள்நுழைய வொட்டாது தடுத்தான்' என்றார் ;

'என்னுடைய கட்டளையைச் செய்தான்' என்றாள் ;
'இருக்கட்டும் தலையிங்கே கிடக்கும், தூக்கி
முன்னிருந்த படிவைப்பேன்' என்பார் தேட
முற்படுங்கால் தலைமட்டும் கிடைக்க வில்லை.

பரிதவித்துப் பார்வதியும் புலம்பி நிற்கப்
பரமசிவன் தேற்றித்தங் கணத்தை ஏவிச்
'சரிவரவே வடதிசைக்கண் தலையை வைத்துச்
சாய்ந்திருக்கும் உடலினுடைத் தலையை வெட்டி
விரைவொடுநீர் வருக'வெனக் கணத்தார் போனார்
வேழமொன்றே வடதிசைக்கண் தலையை வைத்துத்
தெரியுநிலை புரியாமல் படுத்தி ருக்கத்
தேடியவர் வெட்டிவரப் பொருத்தி விட்டார்.

அழுக்காலே வந்தபிள்ளை உருவம் மாறி
யானைமுகம் ஆய்விடினும் உமைம கிழ்ந்தாள் ;
விழுக்காடு குறையாமல் அம்மா வைப்போல்
வேண்டுமொரு மணப்பெண்ணும் என்றான் பிள்ளை
பிழைக்காமல் இருந்திருந்தால் தொல்லை யில்லை
பெருமூச்சுப் பார்வதியும் கவலை கொண்டு
'புழைக்கையாய்! நீதேடிக் கொள்க' என்றாள் ;
பொன்மகளார் குளிக்கின்ற இடத்தைக் கொண்டான்.

'இவனுக்கோ கொழுக்கட்டை கோயில் பூசை
வெங்காயம்! என்னென்ன திருவி ழாக்கள் ?
அவமானம் அவமானம்' எனமு ழங்கி
ஆர்ப்பரித்தே அவன்கதையைப் பிட்டுப் பிட்டே
எவருக்கும் எளிதாக விளங்கச் செய்தே
இவன்சிலையைப் போட்டுடைத்தார் பெரியா ரிங்கே !
இவருக்கு நிகரிவரே ! இவரைப் போன்று
யாவர்க்கும் வேண்டுமிங்கே அஞ்சா நெஞ்சம் !


ஆரியர்யார் ? திராவிடர்யார் ? மேடை ஒன்றில்
அந்நாளில் அய்யாவைக் கேள்வி கேட்கக்
காரியத்திற் கண்முன்னே காட்டு கின்றேன்
கடிதாகக் கோவிலுக்குள் நேரே செல்வீர் !
சீரியலும் சிலையினையே தொட்டு நின்று
செய்கைபல செய்பவர்தாம் ஆரி யர்கள் !
நாரிழந்த மலர்களென நடுவில் நிற்போர்
நாஞ்சொல்லும் திராவிடர்கள் என்றார் அன்றும்.

பொடிவைத்துப் பேசுகிற நம்மண் ணாவைப்
பொல்லாத தேர்தல்சேர் அறுபத் தேழில்
விடிகின்ற வரையிலுந்தாம் வாழ்த்திச் சொல்லார் ;
வெற்றியினை அண்ணாதாங் கொண்டு வந்து
படிநின்றே அய்யாவின் காலிற் கொட்டப்
பனித்துவருங் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு
'முடிகின்ற வரையிலும்நான் உங்க ளோடு
முன்னுழைப்பேன்' என்றதுவும் அஞ்சா நெஞ்சம்.

அண்மையிலே வேலூரில் மருத்து வர்பால்
ஆசையொடும் அஞ்சாத நெஞ்சத் தோடும்
உண்பதற்கு வீட்டினிலே சுட்ட தோசை
உடன்வேண்டும் எனக்கேட்டுப் பெற்றுப் பின்னர்
உண்டனரே! உடல்நலத்தை நாளுங் காக்கும்
உரியவர்பால் மருத்துவர்பால் துணிந்து கேட்கும்
பண்பினராம் பெரியாரின் அந்த நெஞ்சம்
பார்க்குங்கால் பலர்மகிழும் அஞ்சா நெஞ்சம்.

ஓய்வின்றி ஒழிவின்றி உழைத்து மக்கள்
உள்ளத்துள் பகுத்தறிவு தந்தாய் தந்தாய்!
தேய்வின்றி எமையெல்லாம் வளர்த்தே ஈண்டுத்
திகழவையில் திகழ்திறமும் தந்தாய் தந்தாய்!
வாய்நின்றும் வருமொழியால் எம்மை வாழ்த்தி
வளர்கின்ற எந்திறமை பாராட் டற்கே
ஆய்கின்ற ஆண்டுபல தாங்கள் வாழ்க!
அரங்குள்ளீர் வாழ்த்துகவே! வணக்கம் நன்றி!

## தஞ்சையில் நடைபெற்ற கவியரங்கம்



தந்தை பெரியார், அமைச்சர் மா. முத்துசாமி, தவத்திரு. குன்றக்குடி அடிகள், கவிஞர் கருணாநந்தம், புதுவை சிவம், புலவர் பாலசுந்தரம் மற்றும் பலர்.

ஊராட்சிகளின் உற்ற நண்பன்

# பஞ்சாயத்துச் செய்தி

PANCHAYAT NEWS

ESTD: 1953 ஆசிரியர்: K. கோவிந்தராஜுலு நிறுவனம்: 1953

17 ஆண்டுகளாக கட்சிசார்பற்ற முறையில் பணியாற்றி வரும்
ஒரே வார இதழ்

ஆண்டு சந்தா ரூ. 10/-

விவரங்கட்கு :

நிர்வாகி,

"பஞ்சாயத்துச் செய்தி"

திருச்சி-2.

தொலைபேசி: 4186

## பெரியார் அவர்களின் 92-ம் ஆண்டு பிறந்த நாளில் எங்களது உளங்கனிந்த நல் வாழ்த்துக்கள்

## STAR TALKIES

High Class Exhibitors of Motion Pictures, ERODE.

S. R. சந்தானம்
S. R. சாமி

Phone :
Theatre — 76
MUNDY — 626
Residence — 1176

# பழைய வரலாறு ஆனால் புதிய செய்தி

தந்தை பெரியார் அவர்கள் நாற்பத்திநான்கு ஆண்டுகளுக்கு முன்பு 6-4-1926-ல் காங்கிரஸ் பிரச்சாரத்தின் காரணமாக காரைக்குடிக்கு வருகை தந்திருந்தார்கள்.

ஆதித்திராவிடர்களை-இந்து சமுதாயத்தோடு சேர்ந்து வாழ்வதை விரும்பாத, சாதிவெறி கொண்ட காங்கிரஸ் தனித்தே வைத்திருந்தது. சாதிவேற்றுமை நீங்க தந்தை பெரியார் அவர்கள் செய்த புரட்சியின் காரணமாக "காந்தியார் திட்டம்" என்று கூறி ஆதித்திராவிடர்களுக்கு காங்கிரஸ் நிதியிலிருந்து தனிக் கிணறு வெட்டித் தந்தார்கள். அந்த முறையில் காரைக்குடியைச் சேர்ந்த "சிராவயல்" என்ற ஊரிலும் ஒரு கிணறு வெட்டப்பட்டது. காரைக்குடிக்கு வருகை தந்த பெரியார் அவர்களை திரு. இராய. சொக்கலிங்கம் அவர்களும், திரு. பி. ச. சுப்ரமணியஞ் செட்டியார் அவர்களும், திரு. வ. ராமசாமி (வ.ரா.) அவர்களும், திரு. கும்பலிங்கம் பிள்ளை முதலானோரும் கிராம மக்களோடு பெருங் கூட்டமாக மேளம், கொம்பு, தாரை, தப்பட்டை முதலான வாத்திய முழக்கத்தோடு ஊர்வலமாக அழைத்துச் சென்று கிணற்றைத் திறந்து வைக்கும்படி கேட்டுக்கொண்டபோது, தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு.

அன்புள்ள பெரியோர்களே! தாய்மார்களே!!

பிரச்சாரத்தின் காரணமாகவே வந்த என்னை நண்பர்கள் எல்லோரும் சேர்ந்து சிறப்புக்கள் செய்து இங்கே இந்த கிணற்றைத் திறந்து வைக்கும் வேலையை எனக்குக்கொடுத்திருக்கிறார்கள்.

இந்த கிணற்றைத் திறந்து வைக்கும் வேலையை பெருமையாகக் கொண்டு எனக்கு அளித்திருந்தாலும் உண்மையில் சொல்லுகிறேன்; இந்தக்கிணற்றைத் திறந்து வைக்க கொஞ்சங்கூட என்மனம் இடந்தரவில்லை. மேலும் இந்த நிகழ்ச்சியை ஒரு சிறுமையாகவே மதித்து சங்கடத்துடனே இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்கிறேன்.

ஆதித்திராவிடர்களுக்கென்று தனியாக ஒரு கிணறு வெட்டுவது கொடுமையிலும் கொடுமையானது என்பது எனது எண்ணம். இது போலத் தனிக்கிணறு வெட்டுவது, ஆதித்திராவிடர்கள் நம்மைவிடத் தாழ்ந்தவர்கள் என்பதும், அவர்கள் நம்முடன் கலக்கத்தக்கவர்கள் அல்லர் என்று எண்ணிக் கொண்டு ஒரு நிரந்தரமான வேலியும், நினைவுக் குறிப்பும் ஏற்படுத்துவதாகத்தான் அது அர்த்தமாகும். நான் கேட்கிறேன்; எதற்காக அவர்களுக்குத் தனிக் கிணறு வெட்ட வேண்டும்? சிலர் ஆதித்திராவிடர்களுக்கு நன்மை செய்வதாக வேஷம் போட்டுக் கொண்டு, தாங்கள் உயர் சாதிக்காரர்கள் என்பதை நிலைநாட்ட இவ்வித தர்மங்கள்

உதவுமே அல்லாமல் வேறு காரணம் சொல்லமுடியுமா? உண்மையில் ஆதித்திராவிடர்கள் மேல் அனுதாபமும் இரக்கமும் இருக்குமேயானால் நாம் புழங்கும் கிணறு-குளங்களில் ஆதித்திராவிடர்களை தண்ணீர் எடுக்க அனுமதிக்கக் கூடாதா? பட்சிகளும், மிருகங்களும் குளங்களில் தண்ணீர் குடிப்பதில்லையா? குளங்களுக்கு எங்கிருந்து தண்ணீர் வருகிறதென்பது உங்களுக்குத் தெரியாதா? அதில் என்னென்ன அ[illegible]த்தங்கள் அடித்துக் கொண்டு வருகின்றன என்பது கண்ணுக்குத்தெரியாதா? அப்படிப்பட்ட தண்ணீரை இந்த ஆதித்திராவிடர்கள் எடுத்து சாப்பிடுவதால் என்ன கெடுதி ஏற்பட்டு விடும் என்று கேட்கிறேன்.

பறையர் என்கிற ஒரு சாதிப்பெயர் நம் நாட்டில் இருப்பதனால் தான் "சூத்திரர்" என்கிற ஒரு சாதிப்பெயரும் நம் நாட்டில் இருக்கிறது. "பறையர்" என்கிற சாதிப்பெயரைவிட "சூத்திரர்" என்கிற சாதிப்பெயர் மிகமிக இழிவானது. இந்து சாஸ்திரப்படி பறையர் என்கிற பெண்ணுக்கும்-ஆணுக்கும் பிறந்தவர்கள் பறையர் தான். ஆனால் சூத்திரர்களில் அப்படி இருக்க இடமே இல்லை. ஏனென்றால் "சூத்திரச்சி" என்றால் தாசி-வேசி என்று பொருள். "சூத்திரன்" என்றால் தாசிமகன்-வேசிமகன் என்று பொருள். இதை ஒப்புக் கொள்ளாதவன் இந்து ஆகமாட்டான் என்பது இந்துமத சாஸ்திரம். ஆகையால் என் போன்ற "சூத்திரன், என்று சொல்லப்படுபவன் "பறையர்கள்" என்று சொல்லப்படுவோர்களுக்கு உழைப்பதாகச் சொல்வதெல்லாம் "சூத்திரர்கள்" என்று தம்மை யாரும் எண்ணிக் கொள்ளக்கூடாது என்ற நோக்கமேயல்லாமல் வேறல்ல. எனக்காக நான் பாடுபடுவதென்பது உங்கள் கண்ணுக்கு உங்களுக்குக்காகப் பாடுபடுவதாய்த் தோன்றுகிறது. உங்களைத் தாழ்வாய்க் கருதும்,மேல்சாதி என்றும் கருதிக்கொண்டிருக்கும் ஆண்களும்-பெண்களும் அவர்கள் பிறரால் (பார்ப்பானால்) உங்களை விடக் கேவலமாய் - அடிமையாய்க் கருதுவதை அறிவதில்லை! மற்றவர்களைத் தாழ்வாய் நினைக்கும் அறியாமையால் தங்களை மற்றவர்கள் தாழ்வாய் எண்ணுவது அவர்களுக்கு ஈனத்தனமாய்த்தோன்றுவதில்லை. இந்த லட்சணத்தில் உங்களிடம் தப்பு கண்டு பிடித்து, "உங்கள் உடலில் கெட்டவாடை வீசுகிறது, நீங்கள் குளிப்பதில்லை, துணி துவைப்தில்லை, மாட்டுக்கறி தின்கின்றீர்கள், மது குடிக்கின்றீர்கள்" என்று ஞானோபதேசம் செய்கிறார்கள்.

நீங்கள் உடல் நனையக்குளிக்காமல், வேட்டி துவைத்துக் கட்டாமல் இருப்பதற்கு யார் காரணம்? யார் பொறுப்பாளி என்பதை அவர்கள் உணர்வதில்லை. குடிக்கவே தண்ணீர் இல்லை என்றபோது குளிப்பது எப்படி? வேட்டி துவைப்பது எப்படி? அழுக்கும் - நாற்றமும் உங்கள் கூடவே பிறந்ததா என்று கேட்கிறேன்.

குளிக்கவும், வேட்டி துவைக்கவும், பல் துலக்கவும் தண்ணீர் கொடுக்காமல், இந்த நாட்டில் உள்ள மகந்துகள், சங்கராச்சாரிகள் மற்றும் உயர்சாதி என்று சொல்லிக் கொண்டிருக்கிறவர்களை கொண்டு வந்து ஒரு ரூமில் போட்டுப் பூட்டி அடைத்து வைத்துவிட்டால் அவர்கள் துணி அழுக்கடையாமலும், உடலும்-வாயும் நாற்றம் அடிக்காமலும் இருக்குமா என்பதை சிந்தித்துப்பாருங்கள். நாமே ஒருவனைப் பட்டினிபோட்டு வைத்தால் அவன் செத்துப் போன பிறகு பட்டினியால் செத்துப்போய் விட்டான்; பாபி, என்றால் யார் பாபி என்பதை எண்ணிப்பாருங்கள்.

மாடு தின்பது, மது குடிப்பது என்பதால் நீங்கள் பறையர்களாக இருப்பதற்குக் காரணம் என்று சொல்லுவது கொஞ்சங் கூட யோக்கியமான காரணம் அல்ல. மாடுகளைத் தின்று மதுகுடிப்பவர்கள் தான் இப்பொழுது உலகத்தை ஆண்டுகொண்டிருக்கிறார்கள். நீங்கள் மாடு தின்பதின் குற்றம் உங்களைச் சேர்ந்ததில்லை. உங்களை மற்றவர்களைப்போல் சரியானபடி சம்பாதிக்கவும், தாராளமாய் சாப்பிடவும், தெருக்களில் சுதந்தரமாய் நடக்கவும், எங்கும் சென்றுவேலைசெய்து சம்பாதிக்கவும் முடியாமல் செய்துவிட்ட காரணத்தால் கிடைக்கும் கொஞ்ச பணத்தில் அதிக ஆகாரம் ஆகக்கூடிய மாட்டு மாமிசத்தை தின்ன வேண்டியதாயிற்று. மாட்டு மாமிசத்தை அனுமதிக்கும் மதத்தைச் சேர்ந்த முகமதியர்களும், கிருஸ்தவர்களுங் கூட, கைப் பணம் தாராளமாய்க் கிடைப்பதாய் இருப்பவர்கள்,நாங்கள் மாட்டு மாமிசம் சாப்பிடுகிற வழக்கம் இல்லை என்று பெருமைக்காகக் கூறுகிறார்கள். நமதுநாட்டார் மாட்டிறைச்சியை சாப்பிடுவதற்கு வருவாய்க் குறைவும்

ஒரு காரணம் என்றாலும் மாட்டு மாமிசம் சாப்பிடுவது குறைவும் அல்லவே!

ஆடு, கோழி, மீன், பன்றி இவைகளை விட மாடு என்ன குறைவாய் போய்விட்டது? கோழியும், மீனும், பன்றியும், எச்சில், பூச்சி, புழுக்களோடு அழுக்கோடு கூடிய மலத்தையும் சாப்பிடுகிறது. அதை ருசித்து சாப்பிடுகிற வடநாட்டுப்பார்ப்பான் முதல் தென்னாட்டு சூத்திரன் வரை நல்ல சாதியாகவும், தொடக்கூடியவனாகவும் இருக்கும் போது, புல்லும், பருத்திக்கொட்டையும், புண்ணாக்கும் தின்கின்ற மாட்டிறைச்சி சாப்பிடுவதில் எப்படி ஒரு மனிதன் தாழ்ந்தவனாவான்?

அப்படிப்பார்த்தால் மாடு சாப்பிடுகிறவர்களை எல்லாம் தொடாதே, தெருவில் நடக்காதே, குளத்தில் குளிக்காதே, கிணற்று நீரைச்சாப்பிடாதே, ஊருக்குள் குடியிருக்காதே என்றா சொல்லுகிறார்கள்?

வேண்டுமென்றே உங்களைத் தாழ்த்தி வைப்பதற்காகச் சொல்லும் யோக்கியப் பொறுப்பற்ற காரணமே அல்லாமல் உண்மையான காரணம் அல்ல என்பது தான் என் முடிவு. மதுவும் மாட்டிறைச்சியும் தள்ளினால் தான் உங்கள் சாதி உயரும் என்று சிலர் சொல்லும் அயோக்கியத்தனமான காரணத்தை நான் ஒத்துக் கொள்ள முடியாது.

சாதி உயர்வுக்காக மதுவையும், மாட்டிறைச்சியையும் விட்டு விடுங்கள் என்று நான் கேட்டுக்கொள்ளமாட்டேன். அதற்காக நீங்கள் விடுவதும் அவசியமில்லை. நமது நாட்டிலுள்ள தென்னை மரங்களில் ஊறும் கள்ளும், காய்ச்சி எடுக்கப்படும் சாராயத்தினுசுகளும் சென்னை மாகாணத்தில் மட்டும் சுமார் 15,20 கோடி ரூபாய் மதிப்புடையதெல்லாம் நீங்கள் மட்டுமா வாங்கிக் குடித்துவிடுகின்றீர்கள். இதைச் சொன்னால் யாராவது நம்புவார்களா? சாதி உயர்வைக் காரணங் காட்டி இவற்றை விட்டுவிட வேண்டும் என்றால் மற்றவர்கள் முதலில் விடட்டுமே.

மதுபானம் மனிதனின் ஒழுக்கத்துக்கு விரோதம் என்பதை ஒரு அளவு நானும் ஒத்துக்கொள்கிறேன். மதுவிலக்குக்காக நானும் சிறிது தொண்டு செய்திருக்கிறேன். ஆனால் சாதி உயர்வுக்கு எல்லா சாதியாரும் சாப்பிடும் மதுவுக்கு ஒன்றும் தடையில்லை. மதுவிலக்கும், மாமிச விலக்கும் சாதி உயர்வுக்கு அவசியம் என்று சொல்லுவது வேண்டுமென்றே சொல்லும் பொய்யாகும். மேலும் உங்களிடம் இருக்கிற சில குறைபாடுகளை என்னால் சொல்லாமலிருக்க முடியவில்லை.

நீங்களாகவே உங்கள் சாதிக்கு இழிவு தேடிக்கொள்கிறீர்கள் எவரைக் கண்டாலும் இரு கை தூக்கி "சுவாமி" என்று கும்பிடுகிறீர்கள். நீங்கள் தாழ்ந்தவர்கள் என்ற எண்ணம் உங்களுடைய ரத்தத்தில் கலந்திருக்கிறது; அதை மாற்றி விடவேண்டும். ஒரு மனிதனைக் கண்ணால் பார்த்தால் அவனுக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம் என்கிற எண்ணம் உங்கள் மனதில் பதிய வேண்டும். சுயமரியாதையில் கவனமில்லாத சாதியாரை எவ்வளவு தான் உயர்த்தினாலும் உயராது. அவனவனுக்கே நாம் மனிதன் என்கிற உணர்ச்சி வரவேண்டும். நீங்கள் இனி மேல் யாரையும் "சுவாமி" என்று கூப்பிடக் கூடாது. வேண்டுமானால் "அய்யா" என்று சொல்லுங்கள். நீங்களாகவே பதுங்குவதும்-ஒதுங்குவதுமான கெட்ட குணங்கள் உங்களை விட்டு அறவே ஒழிய வேண்டும். அப்போதுதான் மற்றவர்களைப்போல் சமத்துவமாக நடத்தப்படுவீர்கள் என்பதைக் கருதிக்கொண்டு பாடுபடவேண்டும்.

## நான் ஒரு சனாதன இந்து

### திரு. காந்தியார் எழுதியது

நான் ஒரு "சனாதன இந்து". கீழ் கண்ட காரணங்களால்தான் நான் என்னை சனாதன இந்துவென அழைத்துக்கொள்கிறேன்.

1. வேதங்கள், புராணங்கள் இதிகாசங்கள் முதலிய இந்து தர்ம சாஸ்திரங்களிலும், பகவானின் அவதாரங்களிலும் மறு பிறப்பிலும் எனக்கு நம்பிக்கை உண்டு.
2. வருணாச்சிரம தர்மத்தில் எனக்கு நம்பிக்கை உண்டு; வேதங்களில் சொல்லியுள்ள வருணாச்சிரமத்தையே நான் கொண்டாடுகிறேன்.
3. விக்கிரக ஆராதனையில் எனக்கு நம்பிக்கை உண்டு.

--**காந்தி**; 5-9-31.

தபால் பெட்டி நெ. 69 போன் நெ: 30

# தந்தை பெரியார் பல்லாண்டு வாழ்க!

**நவீன நாகரிகத்திற்கு ஏற்ற புதுமையான குளிர்ச்சி கண்ணாடிகளுக்கும், உயர்தர சாளெஸ்திர கண்ணாடிகளுக்கும் சிறந்த இடம்.**

உயர்தரமான ஷாப் சாமான்கள், டார்ச்சு லைட்டுகள், அரிக்கேன் லைட்டுகள் முதலியன மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

★

பெரியார் தொண்டன்: **ப. கனகலிங்கம்**

76-78, ஜவகர்லால் தெரு,
பாண்டிச்சேரி.

# "இராவண காவியம்"

**"பெரியார்தாசன்"**

சேரன் தம்பி இசைத்த சிலப்பதிகாரமும், சீத்தலைச் சாத்தன் தந்த மணிமேகலையும், சமண முனிவன் செதுக்கிய சிந்தாமணியும், வாழ்வு இழந்துவிட்ட வளையாபதியும், குண்டலகேசியும், அய்ஞ்சிறு காப்பியங்களும், ஆழ்வார்களின் நாலாயிரத் திவ்யப் பிரபந்தமும், நாயன்மார்களின் பன்னிரு திருமுறையும், பதினெண் புராணமும் 96 பிரபந்தங்களும் சமயம் எனும் சூளையிலே முளைத்திட்ட கருகிய மொட்டுக்கள்; சமய வாடையும், சாதிப் பீழையும் கொடிகட்டிப் பறக்கின்ற இலக்கியப் பீடைகள்; மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற இதிகாசக் குப்பைகள்; பகுத்தறிவுக்கு ஒவ்வாத பக்திக் குவியல்கள்; பழமை அவியல்கள்.

இத்தகைய இலக்கியங்களுக்கு இடையிலேதான் **"இராவண காவியம்"** தோன்றிற்று. தனித்தமிழ்க் காப்பியமாகத்—தன்மான இயக்கத்தின் இலட்சிய ஓவியமாக இராவண காவியம் பகுத்தறிவு உலகில் பவனிவரத் தொடங்கியது.

இதனைப் "பாவணம் மல்கும் இராவண காவியம்" என்று பாராட்டியுள்ளார் பாவேந்தர் பாரதிதாசன். ராமாயணம் என்ற நலிவு தரும் கதை பூமியில் இருப்பதையும், நம்பத்தகாத எல்லாம் நம்ப வைத்துத் தங்கள் நலம் சம்பாதிக்கின்ற சரித்திரக்காரர்களால் நாடு நலிகுவதையும் கண்டு பொங்கி எழுந்த புரட்சிக் கவிஞர், 'சஞ்சீவி பர்வதத்தின் சாரலில்,

"வானளவும் அங்கங்கள்,
வானரங்கள், ராமர்கள்
ஆனது செய்யும்
அனுமார்கள், சாம்பவந்தர்,
ஒன்றல்ல; ஆயிரம்
நூல்கள் உரைக்கட்டும்.
விஸ்வரூ பப்பெருமை
மேலேறும் வன்மைகள்,
உஸ்என்ற சத்தங்கள்
அஸ்என்ற சத்தங்கள்
எவ்வளவோ நூலில்
எழுதிக் கிடக்கட்டும்.
செவ்வைக் கிருபை
செழுங்கருணை அஞ்சலிக்கை
முத்தி முழுச்சுவர்க்கம்
முற்றும் உரைக்கட்டும்.
இத்தனையும் சேரட்டும்
என்ன பயனுண்டாம்?
உள்ள பகுத்தறிவுக்
கொவ்வாத ஏடுகளால்
எள்ளை அசைக்க இயலாது."

என்று புரட்சிப் பண் பாடி இராவண காவியத்திற்கு விதை தூவியவர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனேயாவார்.

"மரத்தடியில் மறைந்திருந்து
வாலியினைக் கொன்ற
மட்டமுறு கருத்துக்கள்
இப்போது வேண்டாம்"

என்று கம்பன் கெடுத்த காவியத்தை நமக்குக் காட்டிக்கொடுத்தவர் பாரதிதாசன்.

பகுத்தறிவு இயக்கம் பரவத் தொடங்கிய அந்த நாட்களில்—ஆரம்ப காலத்திலேயே பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் "இரணியன் அல்லது இணையற்ற வீரன்" என்ற படைக்கலனைப் பகுத்தறிவு நெறி வளரப் படைத்துத் தந்துள்ளார்.

பாரதிதாசன் கவிதைகளும் "இரணியன் அல்லது இணையற்ற வீரன்" போன்ற

நாடகமுமே "இராவண காவியம்" என்ற சுயமரியாதை இயக்க இலக்கியம் தோன்று வதற்குரிய பின்னணிகளாகும்.

புரட்சிக்கவிஞரின் புதுமை முழக்கம், வெறுப்பிலே பிறந்ததுமல்ல; வெறுங் கற்பனையுமல்ல; வரலாற்று உண்மை களே என்பதைச் சரித்திர ஆசிரியர்கள் உறுதிப்படுத்துகிறார்கள்.

வரலாற்று ஆசிரியர்களின் ஆராய்ச்சி களும், பாவேந்தரின் புரட்சி முழக்கமுமே "இராவண காவியம்" என்னும் பகுத்தறிவுக் காப்பியத்தின் தோற்றுவாயாக ஊற்றாக இருந்து, 1. தமிழகக் காண்டம், 2. இலங்கைக் காண்டம், 3. விந்தக் காண்டம், 4. பழிபுரி காண்டம், 5. போர்க் காண்டம் எனும் அய்ந்து காண்டங்களையும், 56 படலங் களையும், 2828 விருத்தப்பாக்களையும் உரு வாக்கியுள்ளன.

இக்காப்பியத்தில், கவிதைநயம் உண்டு; கற்பனை வளமும் உண்டு; சொல்லழகு உண்டு; சிந்துபாடும் செந்தமிழ்ச் சந்தம் உண்டு; இயற்கை வர்ணனையும் உண்டு; இலக்கியச் செறிவும் உண்டு; பாத்திரப் படைப்பும் உண்டு; பல்வகைச் சுவையும் உண்டு; பாமணம் உண்டு! பொருள் நலனும் உண்டு: இலக்கண நெறியும் உண்டு; இலட் சியக்குறியும் உண்டு; தமிழ் மணம் உண்டு; தன்மான உணர்வும் உண்டு; உவமை உண்டு; உருவகம் ஏராளம்; உள்ளதுபுனை தல் உண்டு; இல்லது புனைதல் இல்லை; தன்மை நவிற்சி உண்டு; இல் பொருள் உவமை இல்லவே இல்லை; மலைத்தோ ளும், தட மார்பும் உண்டு; மலையைத் தூக் கும் மனிதன் பற்றிய புளுகுஇல்லை; வானம் வரைக்கும் வளரும் உடல் இல்லை. யாப்பி லக்கணமும், காப்பிய நறுமணமும் பூத்துக் குலுங்குகின்றன. சிந்தாமல், சிதறாமல் அய்ந்து இலக்கணமும் இராவண காவியத் தில் தொட்ட இடமெல்லாம் கண்ணில் தட்டுப்படுகின்றன. அய்ந்து இலக்கணமும், அய்ந்திணை விளக்கமும், அகப்பொருள் நுணுக்கமும், புறத்திணைச் சிறப்பும் காப்பி யத்தில் களிநடம் புரிகின்றன.

உரையிடை விரவாத பாட்டுடைச் செய்யுள் இது; தண்டியலங்கார ஆசிரியர் குறிப்பிடுகிற தொடர்நிலைச் செய்யுள் இது. தொல்காப்பியர் வகுத்துள்ள வண் ணங்கள் நிறைய உண்டு; அதாவது சந்த வேறுபாடுகள் ஆங்காங்கே சிந்துபாடுகின் றன. ஓசை நயமும், தொடை நலமும், அணி யும், அலங்காரமும் இக்காப்பியத்தை இற வாத இலக்கியமாக்குகின்றன. வல்லிசை வண்ணமும், மெல்லிசை வண்ணமும், இயைபு வண்ணமும், ஒழுகு வண்ணமும் ஆங்காங்கே பட்டுத் தெரிக்கின்றன.

அறம் உண்டு; பொருள் உண்டு; இன் பம் உண்டு. ஆனால் வீடுதான் இல்லை. சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத் தாகிய வீட்டினை, வள்ளுவனார் விலக்கி யது போன்றே புலவர் குழந்தையும் விலக்கி னார் போலும்.

தமிழ்த்தாய் வாழ்த்தும், தன்னிகர் இல் லாத் தலைமையும், இருசுடர் தோற்றமும், நன்மணம் புணர்தலும், பொன்முடி கவித்த லும், பூம்பொழில் நுகர்தலும், புனல் விளை யாடலும் தினையளவும் குறையாமல் ததும்பி வழிகின்றன.

இராவண காவியத்தின் பாயிரமும் 'உலகம்' என்ற தோற்றுவாயைக் கொண்டு இலங்குகிறது. கம்பனையும் விஞ்சக்கூடிய அவையடக்கம் இராவண காவிய ஆசிரிய ரின் புலமைச் சிறப்பைப் பறைசாற்று கிறது.

குறிஞ்சி நிலத்தைப் புலவர் குழந்தை பாடுகிற பாணியைப் படியுங்கள்.

அருவிய முருகியம் ஆர்ப்பப் பைங்கிளி
பருகிய தமிழிசை பாடப் பொன்மயில்
அருகிய சிறைவிரித் தாடப் பூஞ்சினை
மருவிய குரக்கினம் மருண்டு நோக்குமால்

இப்பாடலிலே குறிஞ்சி நிலத்திற்கே உரிய பறையோசை ஒலிப்பதையும், சங்க இலக்கியச் சுவை சிந்து பாடுவதையும் கண்டுகொள்ளலாம்.

கல்லிடைப் பிறந்த யாறும்
கரைபொரு குளனும் தோயும்
முல்லையம் புறவில் தோன்றும்
முருகுகான் யாறு பாயும்
நெல்லினைக் கரும்பு காக்கும்
நீரினைக் கால்வாய் தேக்கும்
மல்லலஞ் செருவிற் காஞ்சி
வஞ்சியும் மருதம் பூக்கும்

இடையெழுத்துப் பயின்று வரும் இயைபு வண்ணம் இப்பாடலில் இசைத்தமி ழாய் நடை பயின்று வருவதைச் செவியுடை யார் சுவைத்திடலாம்.

சேற்றினை உழுவார் சேற்றில்
செங்நெலை விதைப்பார் செங்நெல்
நாற்றினை நடுவார் நாற்றின்
நடுக்களை களைவார் நன்னெல்
தூற்றினை அறுப்பார் தூற்றின்
சுமையினைச் சுமப்பார் சுற்றும்
ஏற்றினை உகைப்பார் ஏற்றின்
இகல்வலி உழுநர் வாழ்வே

இந்த விருத்தப்பாவில் வல்லிசை வண்ணம் கல் மேற் கல் உருட்டினாற்போல சொல் மேல் சொல் உருட்டி, சுவை ஊட்டிக் காவியத்தின் புகழ் கூட்டி விளங்குவதைக் கம்பதாசர்களும் மறுக்கார் அன்றோ !

நிலையிலாப் பொருளை நீக்கி
நிலைப் பொருள் ஆக்குமாபோல்
அலைபடு பதரும் புல்லும்
அப்புறப் படுத்தி ஆன்ற
கலைவலார் உள்ளம் போன்ற
களத்திடைக் களமர் மேலை
மலையெனக் குவித்துச் செங்நெல்
மணிப் பொலி தூற்றுவாரே !

உழவுத் தொழிலைச் சித்தரிக்கும் இச் செய்யுளில் உள்ள உவமை நயம் கண்டு வியவார் யாரே !

ஏடுகை இல்லா ரில்லை
யியலிசை கல்லா ரில்லை
பாடுகை யில்லா ரில்லைப்
பள்ளியோ செல்லா ரில்லை
ஆடுகை யில்லா ரில்லை
அதன்பயன் கொள்ளா ரில்லை
நாடுகை யில்லா ரில்லை
நற்றமிழ் வளர்ச்சி யம்மா !

கம்பனும், கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் சேர்ந்து பாடிய இராமயணத்திற்கு இராவண காவியம் எந்த வகையிலே இளைத்தது—சளைத்தது என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா !

வண்டார் குழலியை — இராவணன் தேவியை ஆசிரியர் வர்ணிக்கும் லாவகத்தைப் படியுங்கள்.

பாவைக்குல மெல்லாமவள்
பழமைக்குற வாடும்
கோவைக்குல மெல்லாமவள்
குதலைக் கிடைநாடும்
காவிக்குல மெல்லாமவள்
கண்ணுக் குறவாடும்
பூவைக்குல மெல்லாமவள்
புள்ளுக்குல மாகும்.

இக்காவிய ஆசிரியரையல்லவா கவிதைச் சக்கரவர்த்தி என்று பாராட்ட வேண்டும்.

இப்படி எடுத்துக்காட்டுக்களை ஏராளமாகக் காட்டமுடியும். இறுதியாக அவலச் சுவைக்கு ஒரு பாடலை இறைவீழ் படலத்திலிருந்து எடுத்துத் தருகின்றேன்.

புத்துணர்வே ஒருநாளும் பொன்றாத
பெரும்புகழே புலவர் ஆயும்
முத்தமிழின் உட்பொருளே மூவாத
பெரும்பயனே முகையொன் றில்லாக்
கொத்தலரும் புதுமலரே கொம்பவிழும்
தீங்கனியே குளிர்தென் காலே
**அத்தனையும் ஒவ்வாத அரும்பொருளே**
எங்குசென்றீர் அய்யோ ! அய்யோ !

பேரிருளைப் புறங்கண்டு பெருகொளியைப்
பரப்பியருட் **பெரியார் போலப்**
பாருலகைப் புறந்தந்து பாலிக்கும்
இருசுடர்போய்ப் பட்டாற் போலக்
காரிருளில் கண்ணஞ்சாக் கள்வர்கள்தம்
கைப்பட்டுக் கவல்வார் போல
ஆரியப்பாழ்ம் பேரிருளில் அலையவிட்டுச்
சென்றீரே அச்சோ அச்சோ !

இராவணன் வீழ்ச்சியை நினைத்துக் கதறுகின்ற இக்கையறு நிலைப்பாடல், காஞ்சித் தலைவன் பேரறிஞர் அண்ணாவின் இறுதிப் பயணத்தின்போது இந்நாட்டு மக்கள் அழுது அரற்றிய புலம்பலாக அல்லவா இப்பாடல் எதிரது தழுவி நிற்கிறது.

பகுத்தறிவு உலகிலும் பல்கலைக் கழகத்திலும் பவனி வரவேண்டிய இந்த அரும்பெரும் காப்பியம், பதுங்கியும், ஒதுங்கியும், தலைமறைவாக, இலைமறை காயாக இருந்து வரும் நிலைமையை அரசுகட்டிலில் வீற்றிருக்கும் பகுத்தறிவாளர்கள் விரைவில் தீர்த்து வைக்கவேண்டும்; தன்மான இலக்கிய உலகிற்குச் செய்யும் மகத்தான தொண்டு இது.

———

# அறிஞர் அண்ணா தந்த மதிப்புரையின்

## சில முக்கிய பகுதிகள்

**''இராவண காவியம்''** திடுக்கிடுகிறீர்களா? அப்படித்தான் இருக்கும். பன்னெடுங்காலமாக இராமாயணம் படித்தும், படிக்கப் பக்க நின்று கேட்டும் வந்த மக்களல்லவா! அவர்களின் செவிக்கு, இராவண காவியம் என்ற ஒலியே சற்றுக் கிலி தருவதாகத்தான் இருக்கும். எனினும், இந்நூல், எதிர் பாராததல்ல. காலத்தின் விளைவு, ஆராய்ச்சியின் அறிகுறி, புரட்சிப் பொறி, என்று பல கூறலாம் இதற்குக் காரணமாக; இது போல் ஒரு நூல் வெளிவந்தே தீரும் என்பதை, நாட்டுமக்களின் உள்ளத்தின் போக்கிலே ஏற்பட்டு வரும், புதிய எழுச்சியை அறிந்தோர் அறிந்திருந்தனர்; புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், இதனை அறிவித்தே விட்டார் பல ஆண்டுகளுக்கு முன்னரே.

**''தென்திசையைப் பார்க்கின்றேன்
என்செய்வேன் எந்தன்
சிந்தையெல்லாம் தோள்களெலாம்
பூரிக்கு தடடா!''**

**இராவணகாவியம்,** புரட்சிக்கவிஞரின் புதுக்கவிதைபோல, புதிய தமிழகத்தின் ஓவியம். இதனுடைய நோக்கம் முன்னுள்ள ஏடுகளின் மூலம் ஏற்பட்ட கேடுகளைக் களைந்து, இந்நாள் நினைவுக் கேற்ப, அவற்றினை ஆராய்ந்து புது உருவாக்கித்தருவது; பழைய உருவிலே பற்றுக்கொண்டோருக்கு இஃது பயங்கரப் புயலாகத் தோன்றும். இதனை ஆக்கியோர் அறிவார். மனிதஇயல் பறிந்தோர் ஆச்சரியமும் கொள்ளார். இராமநவமி கொண்டாடும் நாட்களிலே, நாட்டிலே, இராவண காவியம் ஆக்கப்படுவது, அதிசயம் என்று கருதிப்பயனில்லை. அறிவிப்பு என்று கொள்ள வேண்டும்— பழமை மடிவதற்கான அறிவிப்பு. ஜாரின் கொடுமை உண்டாக்கிய சூழ்நிலையால் தான் ஒரு லெனின் தோன்ற முடிந்தது. தோன்றினதால் தான், யார் தேவ குமாரன் என்று தேயத்தினரால் வணங்கப்பட்டு வந்தானோ அவன், மக்களின் இரத்தத்தை உறிஞ்சிடும் 'பேயன்' என்று ஏற்பட்டது. ஜார் இல்லையேல் லெனின் இல்லை! அவசியம் இராது!! அஃதே போல், இராமாயணத்திற்கு ஆக்கந் தேட முனைவோரும், சித்திரம் தீட்டிடுவோரும், சிறு கட்டுரையாக்கி விடுவோரும் இன்று புதுக கூத்தாட முற்பட்டிருக்கவில்லையானால், இக்காவியமும் எழுந்திராது. ஒன்றின் விளைவு மற்றொன்று - விளைவு மட்டுமல்ல - ஒன்றுக்கு மற்றொன்று மறுப்பு!

இராமன், தெய்வமாக்கப்பட்டான். இராமன் தெய்வமாகத் திகழ்வதற்காக, இராவணன் அரக்கனாக்கப்பட்டான். கோவிலுக்கு ஓர் உருத்தேவை என்பதற்காக,கொற்றவன் மகனாக மட்டுமே குறிக்கப்பட வேண்டிய இராமன் கையில், மகத்துவம் பொருந்திய கோதண்டத்தையும், இராம தூதனின் வாலுக்கு நினைத்த அளவில் நீண்டு வளரக் கூடிய மகிமையையும் கவி கற்பித்துக் கொண்டார். வாலும், வில்லும் வணக்கத்துக்குரிய பொருள்களாக்கப்படவே, தோள் வலியும், மனவலியும் படைத்த ஒரு மன்னன், மிலேச்சனாக்கப்பட்டான். இராமனுக்கு செந்தாமரைக் கண் அமைத்தார் கவி. எனவே, இராவணன் கண்கள் செந்தழலை உமிழ்ந்தன என்று தீட்டலானார். அவருடைய நோக்கம், இராமனைத் தேவனாக்க வேண்டுமென்பது. அதற்கேற்றபடி கதை புனைந்தார்.

இராவண காவியம், முன்னாள் கவி, தம் நோக்கத்துக்காக, இராவணன்மீது ஏற்றிய இழி குணங்களையும், கொடுஞ் செயல்களையும் களைந் தெறியவும், இராவணனுடைய தூய்மைக்கு ஆதாரமான பல புகலவும், அஃதே போல இராமனுடைய குணம், செயல் ஆகியவற்றிலே காணக் கிடைக்கும் தவறுகளைத் தெளிவுபடுத்தவும் தோன்றிய நூலாகும். இராமன் கோயில் எங்கும் காணப்படும் இக்காலத்திலே, இம்முயற்சியில் ஈடுபட "நெஞ்சழுத்தமும்" அதிகம் வேண்டுமல்லவா? அது ஆசிரியருக்கு அமைந்திருக்கிறது. எங்ஙனம் எனில், அவர் முன்னாள் கவிபோல ஆரியரின் போற்றுதல், அரசர்களின் மாலை, மரியாதை ஆகியவற்றினைப் பெறும் எண்ணம் கொள்ளாமல், மக்கள் மன்றத்திற்கு, மனத்திற்பட்ட உண்மையை எடுத்துரைப்பதே தமிழன் மாண்பு என்ற கொள்கையினரானவர். அவர் தன்மான இயக்கத்தவர்.

எனவே, தகுமா? முறையா? ஏற்றதா? என்ற கேள்விகளை அல்ல சொல்லித்தீர வேண்டும்—உண்மை வெல்லும்—இன்று அல்லது நாளை என்ற உறுதியைத்துணை கொண்டு இந்நூலைச் செய்துள்ளார்.

**இராமனும் இராவணனும்** உண்மை உருவங்களா? வரலாற்றுக் காலத்தவரா? அல்ல கற்பனைகள். இதனைக்கூறத் தன்மான இயக்கத்தார் தயங்குவதில்லை. ஆனால், அவர் தம் கேள்விகட்குத் தக்க விடையிறுக்க முடியாத நேரத்தில் மட்டுமே செந்தமிழை வாணிகம் செய்வோர், இராமாயணம் ஓர் கற்பனைக்கதை என்றுரைப்பரே யொழிய, மற்றைப் போதினில், இராமனை நிஜப் புருஷனாகவே எண்ணுவர்-மதிப்பர்-வணங்குவர். ஆராய்ச்சிக்கூடத்தில் மட்டுமே ஓரளவுக்கு அவர்களின் பஜனை மனப்பான்மை குறையும். மற்றப்போதெல்லாம் அவர்கள் இராமதாசர்களே!

தன்மான இயக்கத்தவர் — இராவண தாசர்களல்லர்! இராவணனுக்கு கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்வித்துப் பூசாரிகளாக வேண்டும் என்பதற்காக அல்ல இக் காவியம் புனைந்தது; பழி சுமத்தினரே பண்டைக் கவிஞர்கள் இராவணன்மீது, இது முறையல்லவே. துருவிப் பார்க்குங்கால், விஷயம் முற்றிலும் வேறாகவேயன்றோ உளது என்று எண்ணித் தீட்டியதே இந்த ஏடு.

இராமதாசர்களுக்கு இராவண தாசர் விடுக்கும் மறுப்புரை அல்ல இந்நூல். இராம தாசர்களுக்கு, தன்மானத் தமிழர் தரும் மயக்க நீக்கு மருந்து இது. "தாசர் நிலை கூடாது தமிழா! இராமதாசர் என்பது ஆரிய தாசராக்குவதற்கே பயன்படும் நண்பா!" என்று அறிவுறுத்தவே இந்நூல் வெளி வந்துளது.

இராமாயணம் தீட்டப்பட்ட காலம், இந்தப் பரந்த பூபாகத்திலே இருவேறு கலாச்சாரங்கள் மோதத் தொடங்கிய நேரம். இது பண்பாடு, மக்கள் உள நூல், நாட்டு நிலை அறிவோர், அறிந்தோர் கண்ட உண்மை.

திராவிட இன மக்களின் எழில் மிக்க வாழ்க்கையிலே, ஆரிய இனக் கலாச்சாரம் தூவப்பட்டது என்பதை மறுப்பவர் எவருமில்லை. நாம், நமது கருத்துக்கு மாறானவர்கள், இருசாராரும் இதனில் மாறுபட்டோமில்லை. ஏனெனில், இது மறைக்கமுடியாத உண்மையாகி விட்டது.

இராவண காவியத்தை இந்த மனநிலையில் கனியெனக்கொள்ளவேண்டும். இதுவும் அந்நாள் இராமாயணம்போல், **கலைப் போர் முரசுதான்!** இரண்டும் கற்பனைகளே! முன்னது இராமனைத் தேவனாக்க; இஃது, இராவணனைத் தேவனாக்கவுமல்ல-தமிழனாக்க! அதாவது வீரனாக்க! முன்னதற்குக் கவி, வானையும் வானிலுறைவோரையும் துணைகொள்ள நேரிட்டது. இந்நூலுக்கு அஃது தேவையில்லை. முன்னூலில் புதைந்துள்ளவைகளைக் கொண்டே, இராவணனின் உருவம் இத்தன்மையது என்று எடுத்துக்காட்டுகிறார் நூலாசிரியர். **சம்பராசுர யுத்தம்** என்று முன்னூல் கூறுகிறது. அசுரன் அவன் என்று பயங்காட்டுகிறது. இராவண காவியத்திலே, சம்பரன், அசுரனல்ல; பாண்டியன்! எதைக்கொண்டு இம்முடிவு கட்டுகிறார்? முன்னூலிலே சம்பராசுரன், **மீனக்கொடியோன்** என்று குறிக்கப்பட்டிருக்கிறது. ஆக மீனக்கொடி பாண்டியனுக்குரியது! எனவே, சம்பரன் அசுரனென்று ஆரியரால் நிந்திக்கப்பட்ட பாண்டிய மன்னனாகத்தான் இருக்க வேண்டும் என்று முடிவுகட்டுகிறது. இஃதே போலவே, இந்நூலின்கண் காணப்படும் பல்வேறு நிகழ்ச்சிகட்கும் ஆதாரம், இராமாயணத்திலிருந்தே சலித்து எடுக்கப் பட்டவையே யாகும்.

இராவண காவியத்திலிருந்து தப்ப வேண்டுமென்று விரும்பும் ஆரியருக்கும் ஆரிய நேசர்கட்கும் ஒரே ஒரு வழிதான் உண்டு; இராமாயணமே பொய்க்கதை. அதனை நாங்கள் ஏற்கோம் என்று அறிவித்து விடுவதுதான். வேறு மார்க்கமில்லை.

கதை கிடக்கட்டுமய்யா! காவிய ரசனை இருக்கிறதே, அது, கம்பனின் இராமாயணத்தில் பொங்கி வழிகிறதே, அதிருக்கட்டும். அச்சம் ஏன்? கொச்சைத்தமிழிலே ஏதோதோ கூறிடுவோர் கூறட்டும். அழகு கவிதையில் ஆரிய இராமன் மிளிர்கிறான் என்று கூறுவதற்கும் இந்தப் பொல்லாத குழந்தை இடந்தரவில்லை. கூற வேண்டியதைக் காவியச்சுவை குறைவுபடா வண்ணம் கூறிவிட்டிருக்கிறார். அங்கு ஆறு ஓடும் விதம் எவ்வளவு அழகுபட உளதோ, இங்கு முளது. அங்கு இயற்கைக்குத் தமிழ் ஆபரணம் பூட்டப்பட்டிருப்பது போலவே இராவண காவியத்திலும் பொலிவுறப் பூட்டப்பட்டுள்ளது. அதிலாவது தேவாம்சம் புகுந்து தமிழின் இனிமைக்கும் ஊறு தேடு

கிறது; இதன்கண் அக்குறையும்கிடையாது. அது ஆரியங்கலந்த கடுந்தமிழில் புலவர்க்காக ஆக்கப்பட்டது. இது எளிய இனிய தனித்தமிழில் எல்லாத் தமிழ்மக்களுக்கும் இயற்றப்பட்டது.

இராமாயணம் ஆரிய ஆதிக்கத்துக்கு பயன்பட்டது மறுக்கொணாத உண்மை. பண்டித ஜவஹர் தம் திரு மகளாருக்குத் தீட்டிய திருமுகத்திலேயும் இதனைக் குறித்தார். நோக்கமே அந்நூலுக்கு அது தான்.

தோழர் புலவர் குழந்தை, தமிழர்-தமிழ் இனம் விழிப்புற்று விறுகொண்டு, விடுதலை பெற்று, வீரமக்களாய், தன்னாட்சித் தனியரசுரிமையுடன் வாழவேண்டுமென்ற நோக்குடையவர். எனவே அவர் தமது அறிவுத் திறனை ஆராய்ச்சி அனுபவத்தை, தமிழை இந்த நோக்கத்துக்குப் பயன்படுத்தியுள்ளார். காவியத்திலே, தமிழ்நாடு, தமிழ், தமிழர் தன்மை, ஆரியர் வருகை, அவரைத்தமிழர் ஆதரித்தமை, ஆரியரின் உட்கருத்து, அவர்தம் உளவு முறை, கேடு நினைப்பு, தீய செயல் ஆகியவற்றினை விரித்துரைத் திருக்கிறார்.

சுருங்கக் கூறுமிடத்து, இந்நூல், பழமைக்குப் பயணச் சீட்டு; புதுமைக்கு நுழைவுச் சீட்டு; தன்மான இயக்கத்தார், தமிழ்ப் பகைவர்கள், காவியமறியாதார், கலையுணர்வில்லாதார் என்ற அவமொழியினை அடித்துத் துரத்தும் ஆற்றலாயுதம். தமிழ் மறுமலர்ச்சியின் தலைசிறந்த நறுமலர். நெடுநாள் ஆராய்ச்சியும், நுண்ணிய புலமையும், இனப்பற்றும் ஒருங்கமைந்த ஓவியம். தமிழரின் புதுவாழ்வுக்கான போர் முரசு! காவிய உருவில் ஆரியத்தைப் புகுத்திவிட்டோம். எனவே, இது அழிந்துபடாது என்று இறுமாந்திருப்போருக்கு ஓர் அறைகூவல். தமிழருக்கு உண்மையை உணருமாறு கூறும் ஓர் அன்பழைப்பு! தமிழரசுக்குக் கால்கோள்! விடுதலைக் கீதம்!

இவ்வரிய நூலை, மிகச் சிரமப்பட்டு, தமிழரின் தன்மானம் தழைக்க வேண்டும் என்ற நோக்குடன் எழுதியுள்ளமைக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதுடன், நந்தமிழ் மக்கள் இதற்குப் பேராதரவு தருவர் என்று அவர்க்கு உறுதி கூறுகிறேன். தமிழராகிய நீவிர், உமக்கென ஆக்கப்பட்ட இத்தனித்தமிழ்க் காவியத்தைப் போற்றி ஆதரிப்பீர் என்ற நம்பிக்கையை ஈடேற்றி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வணக்கம்.


Estd. 1960 Phone : 21597

## Sri Venkateswara Chits (Regd.)

336, Thambu Chetti Street, MADRAS-1

(under the Madras Chit Fund Act 24 of 1961)

Particulars of the Chit conducted.

| subscription | DAILY CHIT | Chit Amount |
| --- | --- | --- |
| Rs. 2 00 | 250 Days | Rs 500—00 |
| Rs, 5—00 | 200 Days | Rs 1000—00 |
| | MONTHLY CHITS | |
| Rs. 200 00 | 25 Months | Rs 5000—00 |
| Rs 200—00 | 30 Months | Rs. 6000 - 00 |

Reasonable Auction - Prompt Payment - Timely Help

OUR MOTTO IS TO HELP THE MERCHANTS

# பாருக்குள்ளே நல்ல நாடு!

## திருவாரூர். கே. தங்கராசு

"எந்த நாட்டில் வேண்டுமானாலும் எந்தப்புரட்சியும் நடக்கலாம். இங்கே எதுவும் நடக்காது—நடக்க விடவும் மாட்டோம்!

இது மறையவர் நாடு—மகேசனே மனித உருவில் வந்து மகிமைகள் பல புரிந்த புண்ணிய பூமி — புவித்தாயின் திலகம்!

மகான்களும் மகரிஷிகளும் மகாத்து மாக்களும் பிறந்து பிறந்து பெருமையூட்டிய பேறு வேறு எந்த நாட்டுக்குமே இல்லை!"

என்று, புராணக்கடை விரிக்கும் புளு கர்களாம் புல்லர்களும், தொப்பை வளர்க் கும் சதிக்கிடங்காம் கோயில்களைக் கட்டியழும் பண்டாரங்களும் பார்ப்பனர் களும் மட்டுமே கூறுவதில்லை.

அரசியல் மேதைகள் (!) கற்றுத்தெளிந்து பல நாடு சுற்றிப் பரந்த அனுபவம் பெற்ற பெரியவர்கள் எனப்படுவோருங்கூட அடிக் கடி இந்த "ஆன்றோர்கள் தேசப்பெருமை" யைக் கூறாது இருப்பதில்லை.

இந்தப் "பாரத புண்ணிய பூமி" யின் விசேஷ (Trade mark) உரிமை பெற்ற சிறப்பு அம்சங்களில் சில;

அய்ந்து ஆறு நபர்களுக்கு ஒரே சமயத் தில் மனைவியாக இருந்தவள் பத்தினி!

நாய்க்கும் நரிக்கும் பிறந்தவர்கள் மகரிஷிகள்!

மனைவியை மாற்றானுக்குத் தானம் செய்பவன் பக்தன்!

கொள்ளையடிப்பவன் ஆழ்வார்!

கொலைகாரன் கடவுள்!

இவைகளுக்கெல்லாம் ஆக்கம் தேடு கின்றவர்களே இங்கு 'அவன் அருள்' பெற்றவர்களாகவும், அந்தராத்மாவுடன் உரையாடுபவர்களாகவும், ஆச்சாரியார்க ளாகவும்-சங்கராச்சாரியார்களாகவும் ஜீயர் களாகவும் மடத் தம்பிரான்களாகவும் மக்க ளால் மதிக்கப்பெற்று புகழுக்கும் பெரு மைக்கும் உரிய பெரியவர்களாகப் பவனி வந்துகொண்டிருக்கின்றார்கள்.

இத்தகைய நாட்டு மக்களின் பொது ஒழுக்கம் எப்படி இருக்கும்?

இந்த மாதிரி பெருமைகள் (!) இல்லாத நாடுகளில் பலவற்றில்;

கண்டக்டர்கள் இல்லாமலே பஸ்கள் ஓடுகின்றன!

இங்கு கண்டக்டர்களைப்போட்டாலும் சரியாக ஓடுவதில்லை!

மக்களில் பெரும்பாலோர் முறையாக சீட்டுகளை வாங்குவதே இல்லை

அங்கே மாதா கோவில்களிலோ

மசூதிகளிலோ திருட்டுக்கு இடமே இல்லை !

இங்கே பொழுது விடிந்து பொழுது போனால் கடவுள் சிலைகள் காணாமல் போய்க்கொண்டே இருக்கின்றன !

திருப்பதி உண்டியலில் போட்ட பணமே " அபேஸ் " ஆகிவிட்டது !

அந்த நாடுகளில் மக்கள் நூற்றுக்கு நூறுவர் கற்றுத் தேர்ந்திருக்கின்ற நிலை!

இங்கோ நூற்றுக்கு இன்னும் அய்ம்பது விழுக்காடு கூடப் படிக்கவில்லை.

படித்தவர்களிலோ முக்கால் பகுதிக்கும் மேல் (புரட்சி கம்யூனிஸ்ட்கள் உள்பட) பஞ்சாங்க அடிமைகள் ! பார்ப்பன தாசர்கள் !

பெரிய கம்யூனிஸ்ட் வீரர் ஹீரேன் முக்கர்ஜி பஞ்சாங்கம் பார்த்து பார்ப்பானை வைத்துத்தான் தமது மகளுக்கு திருமணம் முடிக்கிறார் என்றால் ;

நமது நாட்டு மார்க்சீய கம்யூனிஸ்ட் புரோகிதர் ராமமூர்த்தி (அய்யர்) மக்களின் அடிப்படை சொத்து உரிமைகளுக்கான ஆதாரங்களை மனுதர்ம சாஸ்திரத்தில் தேடிக் கொண்டிருக்கிறார் (விளக்கம் ஆனந்தவிகடனில் காணவும்)

பார்த்தீர்களா ! என்னதான் மார்க்சையும் ஏங்கல்சையும் கரைத்துக் குடித்தாலும் பார்ப்பனப் புத்தி மனுதர்மத்தில் தானே இன்னமும் இருககிறது! ஆமாம்; மனுதர்ம சாஸ்திரப்படி சூத்திரர்களுக்கு சொத்து உரிமை ஏது? சூத்திரனிடம் சொத்து சேர்வதால் பார்ப்பானுககு ஆபத்து என்றல்லவா மனுதர்மம் சொல்கிறது ! சூத்ரர்களிடம் சேர்ந்துள்ள சகல சொத்துக்களையும் பார்ப்பனர்கள் அபகரித்துக் கொள்ளலாம் என்றும் மனுதர்மம் சொல்கிறதே !

இனிமேல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சை விட்டுவிட்டு மனுவையே தனது சித்தாந்தகர்த்தாவாக ஏற்றுக்கொள்ளலாம் பார்ப்பனர்கள் நினைத்தால் எதைத்தான் சாதிக்கமாட்டார்கள் !

நிற்க,

நமது ஆழ்வார்கள் அவதாரங்கள மகாத்துமாக்களின் அரிய உபதேசங்களையெல்லாம் பெறக்கொடுத்து வைக்காத பாபாத்துமாக்களின் நாடுகளில் பலவற்றில் பிச்சைக்காரர்களே இல்லை !

இங்கோ ! சொல்லவே வேண்டாம். பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருப்பவர்கள் அவர்களே ! நமது கடவுள்களே அடிக்கடி பிச்சைக்கார வேடத்தில் தானே அவதாரங்களை எடுத்திருக்கின்றன. ஒரு வேளை அதனால் இருக்கலாமோ என்னவோ...

அரசாங்கமும் பிச்சைக்காரர்களை ஒழித்துவிட்டால் அது கடவுளையே ஒழித்துவிட்டதுபோலாகுமென்று அஞ்சிக்கொண்டு தானோ என்னவோ அந்தத்துறையைப் பெருக்கிக்கொண்டே போகிறது !

பிச்சைக்காரர்கள் பாடிக்கொண்டு பிச்சை கேட்கும் 'பஜகோவிந்த'ப் பாடல் (records) வெளியீட்டு விழாவுக்கு ஜனாதிபதிப் பார்ப்பனரே தலைமை தாங்குகிறார் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன் !

மாயவனும், மகேசனும் அடிக்கடி வந்து அன்பர்களுக்கு அருள் (?) புரியாத நாடுகளிலேதான் **மார்க்கோனியும், எடிசனும், ஸ்டீவன்சனும், கூடன்பர்க்கும், ரைட்சகோதரர்களும், அலெக்சாண்டர் பிளமிங்கும்** பிறந்து முறையே ரேடியோவையும், மின்சக்தியையும், இரயில் வண்டியையும், அச்சு யந்திரத்தையும், விமானத்தையும், பெனிசிலின் மருந்தையும் கண்டுபிடித்து மனித குலத்துக்கு மதிக்கவொண்ணாத சேவைகளைப் புரிந்துள்ளனர்.

இங்கே ?

இங்கே, ஜீவாத்மாக்களைப் பரமாத்மாவோடு இணைக்கும் வேத வேதாந்த தத்துவங்களை—உபநிஷத்களை உலகினுக்கு ஈந்த மகரிஷிகளாம் ருஷ்யசிருங்கர், ஜம்புகர் கவுதமர், அகஸ்தியர், மாண்டவ்யர், கார்க்கேயர், சவுனகர் ஆகிய மகான்கள் பிறக்கவில்லையா என்று சனாதனிகள் அதட்டிக் கேட்கின்றனர்.

இந்த மகரிஷிகளுடைய உபதேசங்கள் (!) எல்லாம் ஓர்புறம் இருக்கட்டும்; முதலில் இந்த ரிஷிகள் எல்லாம் எப்படிப்பிறந்தார்கள் என்று கேளுங்கள்

ருஷ்யசிருங்கர்—மானுக்கும்
ஜம்புகர்—நரிக்கும்

கவுதமர்—பசுமாட்டுக்கும்
அகஸ்தியர்—குடத்திலும் (கும்பம்)
மாண்டவ்யர்—தவளைக்கும்
கார்க்கேயர்—முதலைக்கும்
சவுனகர்—நாய்க்கும்

பிறந்ததாக அல்லவோ பெருமைப்படச் சொல்கிறார்கள். பரிணாம வளர்ச்சித் தத்துவத்திற்கு (Theory of Evolution) விஞ்ஞான ரீதியில் புதிய ஆய்வுகளைக் கண்டுபிடித்து வெளியிட்ட பிரஞ்சு மேதை **ஜீன் பாப்டிஸ்ட் லாமார்க்கும்** அந்த அடிப் படையில் ஆய்ந்து **இனங்களின், மூலம்** (The origin of species) என்ற அரிய நூலை உலகிற்கு வழங்கிய **சார்லஸ் டார் வின்** என்ற ஆங்கிலேய அறிஞனும் நமது மகரிஷிகளின் பிறப்புகளுக்கு என்ன சமா தானம் சொல்கிறார்கள் ? என்று அடித்துக் கேட்கிறேன் ! இதற்கு ஒரு முடிவு கட்டி விட்டல்லவா இந்த நாட்டில் பாரத இராமா-யணக் கதாகாலட்சேபங்கள் நடைபெற வேண்டும். அல்லது பள்ளிகள், கல்லூரிகள், விஞ்ஞானக்கூடங்கள் நடைபெறவேண்டும் !

ஒன்றிற்கு ஒன்று முரணாக இந்த நல்ல நாட்டில் இரண்டுமே இணைந்து செயல்படு கின்றதே!

புல்லாய், புழுவாய், மீனாய், பறவை யாய், மிருகமாய் பலகோடியாண்டுகள் உரு மாற்றம் பெற்று இறுதியில் ‘ மனிதர் ’ உருப் பெற்றதாய் மேலே கண்ட அறிஞர்கள் ஆய்ந்து கூறுகின்றார்கள் ஆதாரங்களோடு.

ஆனால் இதோ மனுஸ்மிருதியை ஒருவர் ஓதுகிறார் கேளுங்கள் !

“ ருஷ்ய ஸ்ருங்கோம்ரு கோஜாத் ;
கௌசிகோ காதி நந்தன !
ஜம்புகோ ஜம்புகோத்பத்தி ;
கௌதமோ கௌதசம்பவ !
வால்மீகோப ரோர் பத்தி ;
அகஸ்திய கும்பசம்பவ !
வியாசோலுப்த சம்பூதோ ;
வசிஷ்டா வூர்வசித !

நாரதோப்ங் சகிபுத்ரோ ;
கௌண்டங்யோ முண்டகிசுத !
மதங்கல்ய மதங்கல்யாத் ;
மாண்டவ்யோ மண்டுகிசுத !
சாங்க்யாசப் சகம்பூதோ ;
கார்க்கேயோ கார்த்தவசுத !
சுநகிகர்ப்பாம் பூதோ ;
சௌனகாதி மகரிஷே !

இது மனுஸ்மிருதி! நல்ல வடமொழிப்பண்டி தர் ஒருவரிடம் பொருள் கேட்டு நமது இருடி கள் அனைவரது பிறப்புக்களையும் பூர்ண மாகத் தெரிந்து கொள்ளுங்கள்

இப்போது எண்ணிப்பாருங்கள் கேவ லம் இந்த அடிப்படை மோசடிகளைக்கூட மாற்றியமைப்பதற்கு மனம் வராது, தர்மம், சாஸ்திரம், பக்தி, கடவுள், ஆச்சாரம், அனுஷ் டானம் என்று கூறி நாசவேலைகளில் ஈடு பட்டிருப்பவர்களால் இந்த நாட்டுக்கோ மக் களுக்கோ காதொடிந்த ஊசி முனையளவா வது நலன் விளையுமா என்பதை !

எனவேதான் தந்தை பெரியார் அவர் கள் இந்த இருட்காட்டில் முளைத்த விடி வெள்ளியாகத் தோன்றி தனது தொண் ணூற்று இரண்டாவது பிராயத்திலும் அரும் பாடு பட்டு வருகின்றார்கள் !

இந்த நல்ல நாட்டில் (!) மனித வாழ் வின் ஒவ்வொரு துறையிலும் கடவுளின் பெயராலும், மதத்தின் பெயராலும் பரவிப் பல்கிக் கிடக்கும் மாசுகளை-மடமைகளை இழிவுகளைத் துடைக்க “ அய்யா ” அவர் களது அறிவுப்பணி இன்னும் எவ்வளவு தேவை என்பதை நன்குணர்ந்து அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்க என வாழ்த்து வோமாக !

★



## காசும் கடவுளும்!

காசைப் பிடுங்குதற்கென—பலர்
கடவுளென்பார் ! இரு காதையும் மூடு
கூசி நடுங்கிடு தம்பி !—கெட்ட
கோயிலென்றால் ஒரு காதத்தி லோடு !

கோயில் திருப்பணி என்பர்—அந்த
கோயில் விழாவென்று சொல்லியுன்வீட்டு
வாயிலில் வந்துனைக்காசு—கேட்கும்
வஞ்சக மூடரை மனிதர் என்னாதே.

—**புரட்சிக் கவிஞர்**

போன் : 24653

## என்றும்

# கோபால் பல்பொடி

## உபயோகியுங்கள்

தயாரிப்பவர்கள் : **எஸ். பி. எஸ். ஜெயம், அண் கோ.,** மதுரை-1.

வாழ்க பெரியார் !

வளர்க பகுத்தறிவு !!



## தமிழக எண்ணெய் பலகாரம்

**விற்பனை நிலையம்**

**92, திருப்பரங்குன்றம் ரோடு,**

கிளை : 261, மேலமாசி வீதி, மதுரை-1.



சுகாதார முறையில் தயாரித்த நாவிற்கினிய ருசிமிக்க
முறுக்கு—பகோடா—மிக்சர்—அதிரசம்—சேவு
மற்றும்
இனிப்பு காரம் வகைப் பலகாரங்களும்
கிடைக்கும்

உரிமையாளர் : **பே. தேவசகாயம்.**

**"தாழ்ந்த தமிழகத்தை தலைநிமிர வைத்த
தந்தை பெரியார் நீடூழி வாழ்க !"**

# 92-வது வயதது காணும்
# தந்தை பெரியார் அவர்கள் வாழ்க !

இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளாக ஏங்கிக்கிடந்த தமிழ் இனத்தை "தன்மானமாய் வாழ்" என்று சுயமரியாதையை ஊட்டி, கடவுள், சாதி, மதம் இவைகளில் அல்லல்பட்ட இனத்தை சில ஆண்டுகளில் வெற்றி கண்ட தலைவர் பெரியார் அவர்களே வாழ்க ! வாழ்க !!

★

**சி. நட்சேத்திரம்,**
**நெல்லை மாவட்ட தி. க. தலைவர்,**
**ஸ்டார் பேக்கரி & உணவு விடுதி,**
வள்ளியூர், நாங்குநேரி தாலுகா.



**தந்தை பெரியார் அவர்களின் 92-வது பிறந்த நாள் விழாவிற்கு**

## எமது நல்வாழ்த்துக்கள்

நீடித்த உழைப்புள்ளது நீண்டநாள் பயனுள்ளது

**பேரறிஞர் அண்ணா அவர்களால் துவக்கப்பட்ட**

# குடில் பம்பு செட்டுகள்

**எலக்ட்ரிக் மோட்டார்—ஆயில் இன் ஜின்**

**அரசாங்க கடனுதவி மூலம் விவசாயம் செழிக்க**
**— இன்றே அணுகுங்கள் —**

## ஸ்ரீ ரத்னா டிரேடர்ஸ்,

1307, வடக்கு 2-ம் வீதி, புதுக்கோட்டை,
திருச்சி ஜில்லா தமிழ்நாடு

கூட்டுறவே! நாட்டுயர்வு!! நம் உயர்வு!!!

# தஞ்சாவூர் தென்னக இரயில்வே தொழிலாளர் கூட்டுறவுப் பண்டகசாலை

★

கூட்டுறவு சிறப்பு அங்காடிகள் உருவாக்க வேண்டுமென்ற திட்டம் உருவாவதற்கு முன்பே ஒரு மாதிரி கூட்டுறவு சிறப்பு அங்காடியை "இரயில்வே ஸ்டோர்" என்ற பெயரில், தஞ்சாவூரில் தென்னக இரயில்வே தொழிலாளர் கூட்டுறவுப் பண்டகசாலை நிர்வாகக் குழுவினர் திறம்பட நடத்தி வருகின்றனர்.

—HINDU

**பண்டிகைகாலங்களுக்குதேவையான:**

பலப்பல வண்ணத்துணிகள், டெர்லின், டெர்லான், ஆர்லான், டெர்ரின், டெரிக்காட்டன், பின்னி, அரவிந்த், கட்டாவ், டாட்டா, மபெட்லால் ஆகிய பலவகை மில்துணிகள் மலிவான விலையிலும்,

பல ஊர் கைத்தறித் துண்டுகள், வேட்டிகள், சேலைகள் குறைந்த விலையிலும் கிடைக்கின்றன.

பல மில் துணிகளில் முத்திரை விலைக்கே சதவீதம் தள்ளுபடி வேறு செய்யப்படுகிறது.

**சுத்தம்செய்யப்பட்ட:**

மளிகைசாமான்கள், ஊத்துக்குளிவெண்ணெய், குடைகள், பனியன்கள், பலவகை ரெடிமேடு ஆடைகள், ஊட்டி—கோடைக்கானல் காய்கறிகள், எவர்சில்வர் பாத்திரங்கள், பிளாஸ்டிக் சாமான்கள், கண்ணாடி—பிளாஸ்டிக் வளையல்கள், ஸ்டீல் மேசை, நாற்காலி வகைகள், ரப்பர் காலணிகள், பெண்கள் அழகு சாதனப் பொருள்கள் மற்றும் பலவகைப் பொருள்கள் எல்லாம் ஒரே இடத்தில் அதுவும் மலிவான விலையில்!

**வாருங்கள்! காணுங்கள்!! ஆதாயம் அடையுங்கள்!!!**

**கூட்டுறவை ஆதரியுங்கள்.**

**A. ராமச்சந்திரன்,**
செயலாளர்.

**G. ராஜேந்திரன்,**
தலைவர்.

# பெரியாருக்குப்பின் யார்?

பெ. எதிராஜ்

அரசியல் துறையில் ஒருவருக்குப்பின் ஒருவராக பாரம்பர்யம் இருக்கிறது. உலக மேதைகளிலும் ஒருவருக்குப்பின் ஒருவர் என்கிற அறிஞர் பாரம்பர்யம் உண்டு. ஆனால் தந்தை பெரியாருக்குப்பின் யார்? என்ற வினாவுக்கு பதில் கூறுவது சாமான்ய மான காரியம் இல்லை. நமக்குத் தெரிந்த வரை அவருக்கு இணையாக அவரின் குறிக் கோளை அப்படியே ஒப்புக்கொண்டு அவ ரைப்போல் இலட்சிய உறுதியுடன் செயல் படக்கூடியவர் எவருமே இல்லை என்பது தான் உண்மையான பதிலாகும்.

ஏனெனில் தந்தை பெரியார் அவர்கள் மேற்கொண்டிருக்கும் பகுத்தறிவுப் பணி அத்தகையது. உடல் நலம் பெற விளக் கெண்ணெய் உட்கொள்ளவேண்டும் என்று வைத்தியர்கள் கூறுவார்கள், பலருக்கு விளக்கெண்ணெய் என்றாலேயே குமட்டும். விளக்கெண்ணெய் குமட்டினாலும் உடல் நலம்பெறச் செய்யும் என்பதில் யாருக்கும் சந்தேகமிருக்கமுடியாதல்லவா? அதுபோல வேதான் தந்தை பெரியாா அவர்களின் சமு தாயத்தொண்டு மனித சமுதாயத்தில் புரை யோடியிருக்கும் மடமையைஅகற்றி மனி தரை மனிதராக வாழச்செய்வதாகும்.

அரசியல் தொண்டு புரிவது என்பது கஷ்டமில்லாத வேலை. ஆனால் சமுதா யத் தொண்டு என்பது மிக மிகக் கஷ்டமான தாகும். தந்தை பெரியார் அவர்கள் 45 வருட காலமாக மிகப் பிடிவாதமாக போதித்து வருவது என்ன? மனிதர்கள் மனிதர் களாக வாழவேண்டும் என்பதுதான். இவ் வாறு கூறுவதற்கும் கடுமையான எதிர்ப்பு இருந்தது. இப்போது அந்த எதிர்ப்பு மாறி விட்டது. ஏனெனில் தந்தை பெரியார் அவர்களின் 45 வருட பகுத்தறிவுப் பிரச்சார மும் வீண் போகவில்லை. எல்லா அரசியல் கட்சிக்காரர்களும் தந்தை பெரியார் அவர் களுடன் அரசியலில் கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் அவரின் சமுதாயத் தொண்டுகளை எல்லோ ருமே ஒப்புக்கொள்கிறார்கள். எனினும் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளத்தயங்குகிறார் கள்.

இன்றைய சமுதாய வாழ்வு ஊழல்மிக்க தாக இருக்கிறது அல்லவா? இதற்கு அடிப் படை காரணம் மக்களிடையே தன்னம்பிக் கை இல்லாததுதான். நாம் உணராத ஒன் றை உண்மையிலேயே இல்லாத ஒன்றை இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டு அதன் பெயரால் மக்களிடையே மதவாதி கள் போதனைகள் செய்வதால் மக்கள் மனித உண்மையை உணர முடியவில்லை. தந்தை பெரியார் அவர்கள் கூறுவது என்ன? ஒவ்வொருவரும் சமுதாய சீர்கேட்டுக்கு உண் மைக் காரணம் என்ன என்பது பற்றி சிந் திக்க வேண்டும் என்பதுதான்.

சிந்திக்க மறுப்பவர்களும், சிந்திக்கத் தயங்குகிறவர்களுந்தான் சமுதாயம் சீர் கெடுவதற்குக் காரணமானவர்கள். மனிதர் கள் சிந்திக்கத்துணிந்துவிட்டால் தந்தை

பெரியார் அவர்களின் இலட்சியம் வெற்றியடைந்துவிடும்.

எல்லோரும் வாழவேண்டும் என்பதே தந்தை பெரியார் அவர்களின் விருப்பம். எல்லோரையும் வாழ விடமாட்டோம் என்று கூறுகிறவர்களுக்கு தந்தை பெரியார் அவர்கள் எதிரியாவார். மதவாதிகளால் போதிக்கப்பட்டிருக்கும் மடமையை விட்டொழிக்க மறுப்பவர்கள் தந்தை பெரியார் அவர்களைத் தூற்றுவது நமக்குப்புரிகிறது. அவ்வாறு தூற்றுகிறவர்கள்மீது நமக்கு ஆத்திரம் வரவில்லை ; அனுதாபந்தான் வருகிறது. ஏனெனில் அவர்கள் உண்மையை உணர முடியாமல் மதவாதிகளால் தடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

மனிதர்கள் மதவாதிகளின் போதனைகளை மனித உண்மையைக்கூட உணர முடியாமல் தடுக்கப்பட்டிருக்கிற கொடுமையான நிலைமை மாற்றப்படவேண்டும். ஒவ்வொருவரும் தம்மைப்பற்றி சிந்திக்கவேண்டும் என்பதை தந்தை பெரியார் அவர்கள் ஓயாமல் வற்புறுத்தி வருகிறார் அல்லவா ? அதற்கு காரணத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

பலவித காரணங்களால் சீரழிந்திருக்கும் நமது சமுதாயம் மீண்டும் சீரும், சிறப்பும் பெற்று செழித்து வளரவேண்டும் என்ற கவலைதான் இன்றும் தந்தை பெரியார் அவர்களுக்கு இருக்கிறது.

சமுதாய இழிவு அகற்றப்படவேண்டும் என்பதில் பிடிவாதமாக இருப்பவர் தந்தை பெரியார் ஒருவர்தான். சமுதாய இழிவு அகற்றப்பட வேண்டுமானால் சமுதாய இழிவுக்கு ஆதரவாக உள்ள கடவுள், மதம், புராண இதிகாசங்கள் தடுக்கப்படவேண்டும் என்பதும் தந்தை பெரியார் அவர்களின் விருப்பம்.

சமீபகாலமாக கடவுள் பற்றி தந்தை பெரியார் அவர்கள் பேசிவருவது பற்றி பல விதமான சர்ச்சைகளைக் கிளப்பி வருவதைப்பார்க்கிறோம். கடவுள் உண்டு என்பதற்கு உரிமை உண்டு என்றால் கடவுள் இல்லை என்பதற்கும் உரிமை உண்டு அல்லவா ?

தொண்ணூறு வயதைத்தாண்டிட் தொண்டு கிழவராகிய தந்தை பெரியார் உடல் நலக்குறைவால் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்துங்கூட தினசரி ஆயிரக்கணககான மக்களிடையே பகுத்தறிவுப்பிரச்சாரம் செய்து வருவதைப்போல் வேறு யார் செய்கிறார்கள். அரசியலில் ஒருவருக்குப்பின் ஒருவர் என்று கூறுவது போல் சமுதாய மாறுதலுக்கான பணிபுரிவதற்கு தந்தை பெரியார் அவர்களுக்குப்பின் யார் இருக்கிறார்கள் என்ற நியாயமான கேள்விக்கு யாரும் இல்லை என்ற பதிலைத்தான் கூறக்கூடிய நிலைமையில் இருக்கிறோம்.

உண்மையைக் கூறுவதற்கு தமக்குப் பிறகு யாரும் இல்லையே என்கிற ஏக்கந்தான் இன்று தந்தை பெரியார் அவர்களின் உடல் நலக்குறைவுக்குக் காரணமாக இருக்கக்கூடும் என்பது நமது சொந்தக்கருத்து.

ஆகவே தந்தை பெரியார் அவர்கள் காலத்திலேயே முடிந்தவரை மூட நம்பிக்கைகள், பழக்கவழக்கங்களை விட்டொழித்து, சமுதாய சீரழிவுக்குக் காரணமாக இருக்கும் கடவுள், மதம், புராண இதிகாசங்களைப் புறக்கணித்து பகுத்தறிவாளர்களாக-சிந்தனையாளர்களாக மனித உண்மையை உணர்ந்த மனிதாபிமானிகளாக வாழ்வதற்கு நாம் நம்மை தயார்படுத்திக் கொள்வோமாக.

மனிதர்கள் மனித உண்மையை உணர்ந்து மனிதர்களாக வாழவேண்டும் என்பதற்காகவே தமது வாழ்வை அர்ப்பணித்துக்கொண்டிருக்கும் மனிதராக வாழும் மனிதர் தந்தை பெரியார் அவர்கள் நீடூழி வாழ்ந்து சமுதாயத்துக்கு வழிகாட்டுவாராக.

தொலைபேசி எண் : 3486

# S. M. A. பாலசுப்பிரமணியம் (Firm)

வேஸ்ட் பேப்பர் டீலர்

## 31, சப்ஜெயில் ரோடு, திருச்சி.

தந்தை பெரியார் அவர்களின் 92-வது பிறந்தநாள் விழாவின்போது
வாடிக்கைக்காரர்களுக்கு எமது நல்வாழ்த்துக்கள் !

எங்களிடம் எல்லாவிதமான பழைய ரயில்வே பேப்பர்கள், ஆஃபீஸ்
மற்றும் பஜார் நியூஸ் வகையறாக்கள் பல சைஸ்களில்
சகாயமான விலையில் மொத்தமாகவும், சில்லரையாகவும்
எப்பொழுதும் கிடைக்கும்.

**அனைவருடைய ஆதரவையும் வேண்டுகிறோம் !**

உரிமையாளர்

**S. M. A. பாலசுப்பிரமணியம்**

திருமகள் அரிசி ஆலை
அரியமங்கலம்
திருச்சி-10.

**தந்தை பெரியார் நீடுழி வாழ்க !**

தொலைபேசி: 108 நிறுவனம்: 1936 தந்தி: வெண்சங்கு

நறுமண சீயக்காய் தூள்
CONCH
வெண்சங்கு
REGD No. 13817

தரத்திலும், நறுமணத்திலும்
சிறந்தது!


கூந்தலை உதிராது
ஒளிபெறச் செய்வது !!

உடல் தூய்மைக்கும்
சிறந்தது !!!

# வெண்சங்கு சீயக்காய்த்தூள்

## எங்கும் கிடைக்கும்

நறுமணழ் கமழும்
செல்வம் ராணி & சேகர் ஊதுபத்திகளையும்,
செல்வழ் ராணி ஸ்பெஷல் ஊதுபத்திகளையும்
வாங்கி உபயோகியுங்கள்.



உருசியில் சிறந்த

# வெண்சங்கு மார்க் சேமியாவை

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர் :

# வெண்சங்கு தொழிற்சாலை,

தஞ்சாவூர்.

# துருக்கியும், இந்தியாவும்

இந்தியநாடு ஆரியக் கொடுமைவாய்ப் பட்டு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் அடிமைத்தன்மையில் ஆழ்ந்து இருப்பதி னின்றும் தன்னை விடுவிக்க வேண்டின் அது நமது புனித சுயமரியாதை இயக்கத்தைத் தழுவுவதால் மட்டுமே யன்றி வேறொன்றி னாலுமியலாதென்பதை துருக்கியின் சரித் திரத்திலிருந்தே நன்கறியலாம்.

துருக்கியர் ஆதியில் மத்திய ஆசியா வில் இந்திய சீன எல்லைப்புற தேசமாய் துருக்கி ஸ்தானத்தைச் சார்ந்தவர். இவர்கள் சீக்கியர், கூர்க்கர், பட்டாணியர், போன்று சண்டை செய்யும் ஆற்றலில் உலகத்திலே யே முதன்மை பெற்றவர். அத்தகைய ஆற் றல் வாய்ந்த துருக்கியர் தமது பூர்வீகமத மாகிய துரேனிய மதத்தை விட்டு, அரேபி யாவில் புதிதாய் மகமது நபியால் தோற்று விக்கப்பட்ட இஸ்லாம் மதத்தில் சேர்ந்து அநேக தேசங்களை ஜெயித்து, இறுதியாக அய்ரோப்பாவில் அக்காலம் மிக உன்னத நிலையிலிருந்த கிழக்கு ரோமான் நகரத்தின் கான்ஸ்டான்டி நோப்பிளைத் தீவிரமாய்ப் போர் புரிந்து கைப்பற்றி, அதன் இயற்கை யமைப்பின் மேம்பாட்டினால் அதனையே தமது தலைநகரமாக்கி, அத்தேசத்திற்குத் துருக்கியென்று பெயர் கொடுத்து, அதற்கு முன்னும் பின்னும் தம்மாற் கைப்பற் றப்பட்ட தேசங்களை அரசாண்டு வந்த னர். அக்காலத்தில் இவர்களது பெயரைக் கேட்ட மாத்திரத்தில் நடுங்காத அய்ரோப் பிய தேசத்தவரிலர். கான்ஸ்டான்டி நோப்பி ளிலுள்ள மிக அழகான செயின்ட் சோமயா என்னும் கிறிஸ்துவக்கோயிலிலுள்ள விக்கிர கங்களை யெல்லாம் எடுத்தெறிந்து விட்டு, அதனையே தமது முக்கிய பள்ளி வாசலாக வும் அமைத்துக் கொண்டனர்.

## அய்ரோப்பாவின் நோயாளி

துருக்கி அரசர் மதத்தர்மத்தைக் காப்ப தற்காக இருக்க வேண்டியவரானதினால் இவ்வாறு சிறப்புற்று விளங்கி, மேனாட்டு தேசத்தவருக்கு எப்பொழுதும் சிம்ம சொப் பனமாயிருந்து வந்த துருக்கி ஏகாதிபத்தி யம் மதப் பைத்தியத்தின் பயனாய் தன் மகிமையிழந்து, தேசங்களிழந்து, அய்ரோப் பாவின் நோயாளி மனிதனென்றழைக்கப் பட்டு, சுருங்கக்கூறுமிடத்து சென்ற மகா யுத்தத்திற்குப் பின் பூகோளப்படத்திலேயே இல்லாமலழிந்துவிடக் கூடிய நிலைமைக்கு வந்து விட்டது. முஸ்தபாகெமால் என் னும் இயற்கை அறிவு நிரம்பிய சாதாரண மனிதர் அக்காலம் அதனைக் காப்பாற்றி இராவிடின் அது அந்த நிலைமைக்கே திட்ட மாக வந்திருக்கும். கெமாலும், அவர் தம் சகாக்களும் தங்கள் தேசம் அந்த நிலை மைக்கு வந்த காரணத்தை ஆராய்ந்து பின் வரும் சீர்திருத்தங்களைச் செய்து முடித்து, சண்டைத்திறனில் தமக்கு மிக்கா ரிலரென்று காண்பித்தது போலவே தேச முன்னேற்றத்திலும், சுயமரியாதைக் கொள் கை எத்தகைய உதவி புரியக் கூடியதென்ப தனையும் நிருபித்து விட்டனர். அச்சீர்திருத் தங்களில் முக்கியமாவன.

1. மத சம்பந்தமான கலிபாவாகிய சுல் தானை நீக்கி நாடு கடத்திவிட்டு குடியரசு ஏற்படுத்தியது.

2. அரசாங்கத்திற்கும் மதத்திற்கும் சம்பந்தமில்லை யென்று கண்டது.

3. மதப்பள்ளிக்கூடங்களை அறவே யொழித்து மதசம்பந்தமில்லாத கணக்கற்ற பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தியது.

4. மத சன்னியாசி ஆசிரமத்தையே யகற்றி அன்னாரது சொத்துக்களைக் கைப் பற்றியது.

5. அற நிலையங்களை அரசாங்கத்திற்கு உரித்தாக்கியது.

6. ஷரீயத்தை(இஸ்லாமியசட்டத்தை) நீக்கிவிட்டு, ஸ்விஸ் சிவில் சட்டம், ஜெர்மன் வியாபாரச் சட்டம், இட்டாலியன் கிரிமினல் சட்டம் இவைகளைக் கைக்கொண்டது.

7. பெண்களுக்கு ஆடவர்க்கொத்த சுதந்திரமளித்தது.

8. பெண்கள் முகமூடியை (கோஷ"வை) எடுத்துவிட வேண்டுமென்று சட்டமியற்றியது.

9. ஆணும் பெண்ணும் ஒன்றாயிருந்து கல்வி பயிலக்கூடிய பள்ளிக்கூடங்களேற்படுத்தியது.

10. கணவன் தன் இஷ்டம் போல் "தலாக்" சொல்லி மனைவியை நீக்குதல் செல்லாதென்றும், இருவரும் கோர்ட் மூலமே விவாகரத்து செய்து கொள்ள வேண்டுமென்ற சம சட்டமியற்றியது.

11, மனிதர்கட்குள் உயர்வு தாழ்வு காட்டக்கூடிய பட்டங்களை யகற்றி விட்டது.

12. முன்பு தாக்கப்பட்டிருந்த ஞாபகார்த்த உருவச்சிலை முதலியவற்றை ஏற்படுத்தியது.

13. பழைய அராபிக் எழுத்தை நீக்கி, லாட்டின் எழுத்தைக் கைக்கொண்டது.

14. வெள்ளிக்கிழமை விடுமுறையை விடுத்து ஞாயிற்றுக் கிழமையாக்கியது.

15. முன்பு கையாண்டு வந்த இஸ்லாமிய வருடக்கணக்கை விடுத்து, மேனாட்டாரனுசரிக்கும் கிறிஸ்து பிறந்த வருடக் கணக்கைக் கைக்கொண்டது.

16. நாடகம், சினிமா முதலியவைகளை கண்டுகளிக்கும்படி செய்தது.

17. காற்பந்து முதலிய மேனாட்டுமாணவர் விளையாட்டுகளேற்படுத்தியது.

18. அறியாமையகற்ற ஆடவருக்கு கட்டாயப் படிப்பு ஏற்படுத்தியது.

### சுயமரியாதை இயக்கம்

இவற்றை நன்றாராயின் இவை நமது சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டவையேயன்றி வேறன்று என்று தெரியலாம். ஆயினும் ஒரு வித்தியாசம் மட்டும் கவனிக்கலாம். சரீர அடிமைத் தன்மை, அறிவினடிமைத் தன்மை என்று இருவித அடிமைத்தன்மைகளையும் ஒழிப்பதே சுயமரியாதைக்காரரது ஆர்வமாயினும், இப்பொழுது அவர்கள் முதலில் விழைவது அறிவினடிமைத்தன்மையை அகற்றுதலேயாம். பின்னையதே முன்னையதற்கு வழிகாட்டியாயிருந்தது. ஆதலாலது ஒழியின் முன்னையது (இருள்) தானாகவே இறந்துபடுமென்பது அவர்களது உறுதியான கொள்கை. இந்து மதத்திலுள்ள பல சமய, சமூகக் குறைபாடுகள், உதாரணமாக ஜாதி வித்தியாசங்களும் அதனாலேற்படும் ஒற்றுமையின்மையும், விதவா விவாகமின்மை, பெண்களுக்கு சொத்துரிமையின்மை, மணரத்துயின்மை முதலியவை இஸ்லாம் மதத்தில் இல்லாமலிருந்தமையால் துருக்கி சுயமரியாதைக்காரர்கள் இரண்டுவித அடிமைத்தன்மையும் ஒரே சமயத்தில் அகற்றிக்கொள்ள முடிந்தது. இந்த ஒரு வித்தியாசத்தைத்தவிர மேற்கண்ட சீர்திருத்தங்கள் நம் சுயமரியாதைக் கொள்கைகளின் பாற்பட்டவையேயென்று தெள்ளிதிலறியலாம். நம் சுயமரியாதை இயக்கத்தை இழிதகையாளர் எவ்வாறு அறிவின்மையாலும், பொறாமையாலும், சுய நன்மையையுண்ணியும் தேசத்துரோக இயக்கமென்றும், சமய துரோக இயக்கமென்றும் பிதற்றுகிறார்களோ அவ்விதமே துருக்கிய சீர்திருத்தங்களையும் சொல்லலாம். அன்றியும் அவற்றுள் சில கிறிஸ்துவ மதத்தைத் தழுவியவையென்றும் குறை கூறலாம். ஆயினும், அவை அத்தகையனவல்லவென்பது அறிவாளிகளாராயின் நன்கு புலப்படும்; நீதி இலாகா மந்திரி புதிய சிவில் சட்டத்தை 1926ம் வருடம் பிப்ரவரி மாதம் அங்கோராவில் முதல் மந்திரியிடம் சமர்ப்பித்தபொழுது நிகழ்த்திய சொற்பொழிவு நமது இயக்கத்தைக் குறை கூறித் திரிபவர்கட்கு ஆணித்தரமான பதிலாயிருக்கின்றது.

"மதத்தின்மேற் கட்டப்பட்ட சட்டங்களையுடைய தேசங்கள் சிறிது காலத்திற்கு பிறகு தேசத்தினுடையவும், குடிகளுடையவும் அவசியங்களைத் திருப்பிச்செய்ய முடியாதவைகளாய் விடுகின்றன.

ஏனெனில், மதங்கள் முடிந்த முடிவு களையே தெரிவிப்பதாய்க் கூறுகின்றன. ஆனால் வாழ்க்கை சலனத்தோடுடைய மிருதுத்தன்மையுடையது; அடிக்கடி மாறுதல்களை காட்டுகின்றது. ஆகையால் சமயச் சட்டங்கள் உண்மையான தன்மையையாவது, பொருளையாவது உடையனவாயிருத்தலியலாது. அவை இறந்து பட்ட சொற்களினுருவாய் விடுகின்றன.

சமய வாய்ப்பட்ட சட்டங்கள் தம் ஜன சமூகத்தைக் காட்டுமிராண்டித்தனத்திலாழ்த்தி வைப்பதோடுகூட முன்னேற்றத்திற்கு முக்கிய தடைகளுமாய் விடுகின்றன.

மதத்தின் பேரால் கட்டப்பட்டு மாற்றப்படக்கூடாத நம் சட்டங்கள் நம் துருக்கியரை மத்திய கால வாழ்க்கையிலேயே ஆழ்த்தி வைப்பதற்கு முக்கிய ஏதுக்களாயிருந்திருக்கின்றன. நவீன நாகரீகத்தின் முதல் அடையாளம் மனித வாழ்க்கைகளையும், மதத்தையும் பிரித்தலாகும்.

நவீன நாகரீக தேசமெதிலுமிதற்கு இடங்கொடுக்கக் கூடாது. மதம் மக்களது மன உணர்ச்சியில் மட்டும் இருத்தல் வேண்டும்; சட்டங்களுக்குள் அது தலையிடுதல் கூடாது.

இந்தப் புதிய சிவில் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படும் அந்த நாளே துருக்கியர் தங்களைச் சென்ற பதின்மூன்று நூற்றாண்டுகளாய் அடக்கி ஆண்டு வந்த மத (சம்பந்தமான) பொய் நம்பிக்கைகளினின்றும் விடுவிக்கப்பட்ட நாளாகும். நம் நாடு உயரும், அபிவிருத்தியுமுடைய நவீன நாகரிகத்திலிறங்கும்'' என்று பேசினார்.

இன்னும் கெமாலின் சகாக்களிலொருவராகிய நௌரியே கூறியதாவது:—

"நமது மத வியாக்யானிகள் மதச் சட்டங்களை மாறுதல், சீர்திருத்தம் இவைகட்குட்படாதவையென்று நம்பினார்கள். அதனாலவர்கள் தங்களது வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் வளரவொட்டாமல் எல்லாக் கதவுகளையும் அடைத்துவிட்டார்கள். அதனாலிதுவரை இஸ்லாம் அதே நிலைமையிலிருந்து வந்திருக்கிறது. அபூஹனிபேயும் மற்ற நான்கு பெரிய இமாம்களும் வாழ்க்கையின் அவசியத்துக்குத் தகுந்தபடி எப்பொழுதும் புதுச் சட்டங்களை, அவைகள் கட்டளைகளுக்கு மாறுதலாயிருந்தாலுங் கூட ஏற்படுத்திக்கொண்டார்கள். அதே மாதிரியான செய்கையை நாமும் மத விஷயத்தில் பின்பற்றியிருந்தால், நவீன முற்போக்கிற்கேற்றவாறு இஸ்லாமும்கொண்டு வரப்பட்டிருக்கும். ஆனால் குருமார் அவ்விதம் செய்யவில்லை. அவர்கள் கண் மூடித்தனமாய் பழைய விதிகளையே பின்பற்றி வந்திருக்கின்றார்கள்.

இஸ்லாமின் இச்சட்டங்கள் அந்தக் காலத்திற்கேற்றவாறு மாத்திரம் ஏற்படுத்தப்பட்டனவென்பது அவர்களுக்கு விளங்கவில்லை.

கால மாறுதலுக்கேற்றவாறு சட்டங்களும், மத நம்பிக்கைகளும் கூட மாறுதலடைய வேண்டுமென்பதையும், மற்றபடி அபிவிருத்தி காணமுடியாதென்பதையும், அத்தகைய சீர்திருத்தமில்லாத நிலைமையில் வாழும் ஒரு கூட்டத்தார் மற்றவர்களுக்கு அடிமைப்பட வேண்டுமென்பதையும் அவர்கள் உணரவில்லை.

ஒரு பழைய பத்வாவிற்கும் கட்டுப்பட்டிருப்பது சலனத்தையும், அபிவிருத்தியையும் தடுக்கிறது.

அது அந்தப் புராதன கால சமூக, பொருளாதார, வைதீக, இராஜ்ய கொள்கைகளோடு கட்டுப்பட்டதாயிருக்கிறது. சலனமில்லாத எதுவும் பிற்போக்கடைதல் திண்ணம்.

இது வாழ்க்கையின் பொதுச்சட்டம். வாழ்க்கையே முக்கியமானது; பழக்க வழக்கங்கள் அலங்காரம் மட்டுந்தான்.

சில பழக்க வழக்கங்கள் கடவுட்தன்மை வாய்ந்தனவாயிருக்கலாம். ஆனால் அவைகளின் கடவுட்தன்மை அவைகளின் உபயோகத்தைப் பொறுத்திருக்கிறது.

பழைய மனப்பான்மையையும், பழைய பழக்க வழக்கங்களையும் வைத்துக் கொண்டு நாம் ஜீவித்து முன்னேற்றமடைந்து பலவான்களாயிருக்க முடியுமா?

நாம் ஐரோப்பியரது கலைகளை மட்டும் எடுத்துக்கொண்டு அவர்களது பகுத்தறியும் மார்க்கத்தை விட்டுவிட முடியுமா?

அவ்விரண்டும் ஒன்றினின்றொன்றைப் பிரிக்கமுடியாதவை.

கலப்பற்ற பகுத்தறிவின் மேல் கட்டப்பட்ட ஒரு சாஸ்திரீய படிப்பு முறையை அய்ரோப்பா இப்போது கையாண்டு வருகிறது.

இங்கு 1926ம் வருடத்தில் ஒரு பழம் புத்தகத்திலுள்ள பழைய ஸ்லோகத்தின்படி ஒரு குரு தீர்மானித்து நடத்துகிறார். இஸ்லாமிய தேசங்களில் இராஜியம், நாகரீகம், வாழ்க்கை, உடை, உணவும் கூட சமய சட்டங்களாளப்படுகின்றன.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னுள்ள இமாம்களது தீர்மானத்தில் நாம் மூழ்கிவிட்டோம். இஸ்லாமிய தேசங்களில் மத சம்பந்தமான பழக்க வழக்கங்களே முன்னேற்றத்துக்கு முக்கிய தடைகளாயிருந்து வந்திருக்கின்றன.

வர வர இராச்சிய, சமூக வாழ்க்கை மட்டுமின்றி ஆத்மார்த்த வாழ்க்கையும் தயங்கி விட்டது. எல்லா மதங்களின் இலட்சியமாகிய நன்னடைத்தையும் கூட க்ஷீணித்து விட்டது. உதாரணமாக சமூகக் கட்டுப்பாட்டில் பல மனைவியரை மணத்தலென்ற விஷயத்தை எடுத்துக்கொள்ளுங்கள். யூதர்களது மதமாகிய ஜூடேயிசமும், கிறிஸ்து மார்க்கமும் மதக் கோட்பாட்டுப்படி பல மனைவியரை மணத்தலைத் தடுக்கவில்லை. ஆயினும் கிறிஸ்தவர்கள் அய்ரோப்பாவின் சமூக அவசியத்திற்கொப்ப அதைச்சீர்திருத்திக்கொண்டு பலதார மணத்தைத் தடுத்து விட்டார்கள். ஆகவே கிறித்துவ மதத்தின் பழைய சட்டங்களுக்கு ஒப்ப நடக்காமல் அய்ரோப்பா தன்னுடைய புதிய கொள்கைகளுக்கொப்ப நடக்கும்படி கிறித்துவ மதத்தைச் செய்து விட்டது. அவ்வாறின்றி இஸ்லாமியர் நம்முடைய சட்டகர்த்தர்களின் மூடவைராக்கியத்தைத் தடுத்திருப்பதே கிடையாது. இஸ்லாமிய சரித்திரத்திலேயே மகமதியர்கள் காலதேச வர்த்தமானத்திற்கு தக்கபடி தம்மைச் சீர்திருத்திக்கொண்டு போனவர்களேயல்ல. பழைய பழக்க வழக்கங்கள் முகமதியரை ஸ்தம்பிக்கச் செய்துவிட்டன.'' என்று பேசி இருங்கிறார்கள்.

**இந்தியா**

நவீன துருக்கியரின் சீர்திருத்தக்காரரது வார்த்தைகளை இவ்வளவு விரிவாய் எடுத்தெழுதியது, அவை நம் சுயமரியாதை இயக்கத்தை எதிர்க்கும் போலித் தேசிய மதவாதிகட்குத் தகுந்த சரித்திர பூர்வமுமான பதிலாயிருப்பதனாலேதான். மேற்கண்டவைகளில் இஸ்லாம் என்பதை இந்து என்று மாற்றி விட்டால் மூடப்பழக்க வழக்கங்களை சுருதி ஸ்மிருதிகளிலிருந்து ஆதரிக்கும் நமது, படித்தும் பயனிலா ராஜா பகதூர், ஆச்சாரி, சத்தியமூர்த்தி போன்றவர்கட்கு அவை தகுந்த சவுக்கடியாகும். உலகிலுள்ள முக்கிய மதங்களுள் இறுதியாய்த் தோன்றிய மதக் கொள்கைகளையே அவர்களவ்வாறு கண்டிப்பார்களானால் முதன் முதலாகத் தோற்றுவிக்கப்பட்டதும், காலவரையறைக்குள் அடங்காததுமான கர்த்தாயாரென்று உணரமுடியாததுமான சாஸ்திரங்களிலுள்ள சுலோகங்களிலிருந்து சாரதா சட்டத்தை எதிர்த்தது எவ்வளவு அறிவீனம்! இத்தகையோர் மலிந்து இவர்களை தேசிய வாதிகளாய்க் கருதப்படும் நாடு எவ்வாறு முன்னேற்றமடைய முடியும்? இத்தகைய மக்களை ஈன்ற "இந்தியத்தாய்" பன்னூறாண்டுகளாய் அடிமை வாழ்விலிருந்தது ஒரு ஆச்சரியமேயல்ல. அறிவென்பது யாவரிடத்திலுமிருக்கப்பட்ட ஒன்று. அதனை உபயோகிக்காமல் ஒவ்வொருவரும் மற்றொருவர் கூறியதை பகுத்தறிவின்றி ஒப்புக்கொள்ளுதல் எவ்வாறு பொருந்தும்?

மேலே கூறியபடி தேச சரித்திரங்களை படிப்பது நேரப் போக்கிற்கன்று. அய்ரோப்பியரை முதலில் துருக்கியர் ஜயித்ததற்கு காரணமென்ன? பின்னர் அவ்வாறு ஜயிக்கப்பட்ட அய்ரோப்பியரால் அவர்கள் முறியடிக்கப்பட்டதற்குக் காரணமென்ன? என்பவற்றை நாமாராய்தல் வேண்டும். துருக்கியர் இஸ்லாம் மதத்திற் சேர்க்கப்பட்டபோது அம்மதமானது அக்காலத்திற்குத் தக்கதாயும், தனக்கு முன்னுள்ள மற்ற மதங்களின் குற்றங்குறைகளை நீக்கியதாயும், அக்காலத்தில் மிகுந்த முற்போக்குடையதாயுமிருந்தது. மகமது நபி கூறியபடி "யுத்தத்தில் உயிர் பிழைத்தால் கீர்த்தியோடு கூடிய ஜெயம். மடியின் சுவர்க்கம்'' என்பதையும், "எல்லா முஸ்லீம்களும் சகோதரரென்பதையும் அறியுங்கள்'' என்பதையும் அவர்கள் கடவுள் வாக்காய் நம்பியதால் வீரமும், ஒற்றுமையும் அதனாலேற்படும் தைரியமும் அவர்கட்கிருந்தன. பெண்கள் சொத்துரிமை முதலிய மற்ற மதஸ்தரி

டம் காணப்படாத முற்போக்குடைய சட்டங்களையும் அவர்களனுசரித்தார்கள். இச்சட்டமொன்றே மனிதனை எவ்வாறு வீரராக்குமென்று நாம் தெளிந்துகொள்ளலாம். இத்தியாதி காரணங்களாலேயே மகமதியர் அந்த நாட்களில் அவ்வாறு வெற்றி பெற்றனர். ஆனால் காலதேசவர்த்தமானத்திற்கு தக்கபடி தங்கள் மதக்கொள்கைகளையும், "சட்டங்களையும்திருத்தியமைத்துக்கொள்ளாது தங்கள் சாஸ்திரங்களில் ஒரு எழுத்தையாவது மாற்றக்கூடாது, உலகமுள்ளளவும் அவைகள் ஊர்ஜிதம். இ லாமைத் தழுவாத ஒவ்வொருவரும் காபீர்" என்ற மூட நம்பிக்கையையும் அந்நம்பிக்கையைப் பொறுத்த செய்கைகளுமே அவர்களை மதத்தையும், சட்டத்தையும், சகோதரத்துவத்தையும்,அறிவு வளர்ச்சி முறைகளையும் காலத்திற்கு தக்கபடி மாற்றி வந்த மேனாட்டார் ஜெயிக்கும்படியாயிற்று. இதனையே கமாலும் அவர் கூட்டாளிகளும் ஆராய்ந்து கண்டு தீயவைகளையகற்றி, நன்மை பயக்கக்கூடியவைகளைச் சேர்த்து மேனாட்டாரும் தம் நாட்டை இப்பொழுது கவுரவிக்கும் நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டனர். வெள்ளையருடையவும், கிரிகோயின் வருடக் கணக்கும், ஞாயிறு விடுமுறையும், லாட்டின் எழுத்தைக் கைக்கொண்டதும், கிறித்து மதத்தை அனுஷ்டிக்கப் போகும் மனப்பான்மையோடு கூடியவையல்ல; எந்தெந்த நாட்டினரது எந்தெந்த அனுஷ்டானம் நவீன நாகரீக முற்போக்கிற்குச் சாதகமாயிருக்கின்றதோ. அதனைக் கைக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடுதான், மேநாட்டிலெங்கும் ஞாயிறு விடுமுறை நாளாயிருக்கும்போது துருக்கி மட்டும்பழையபடி வெள்ளியையே அவ்வாறு கருதி வருமானால் வியாபார நடவடிக்கைகள் எத்தகைய இடைஞ்சல்கட்குட்படுமென்பதனை நாமே யூகித்துக் கொள்ளலாம். இக்கருத்துக் கொண்டே ஜப்பானியரும் ஞாயிறையே விடுமுறை நாளாய் மாற்றிவிட்டனர். இன்னும் ஆகாயக் கப்பலிலிருந்து போர் புரியும் பொழுது வைதீக இந்துவின் "பன்னிரண்டாவது பஞ்சகச்ச உடை" பொருத்தமுடையதாமா? என்பதை நாமே கவனித்துக் கொள்ளலாம். இந்தியாவில் இஸ்லாமியப் பிள்ளைகள் சீக்கிரம் படிக்க முடியாமைக்கு அராபி எழுத்துக்களே முக்கிய காரணமென்று இஸ்லாமியரே சொல்லுகின்றனர்.

ஆகவே நவீன துருக்கி நமது நாட்டினருக்கு எவ்வளவு பொருத்தமான எடுத்துக்காட்டாகுமென்பது நன்கு விளங்கும். முஸ்தபா கெமால் எவ்வாறு தன் தேசத்துக் குறைகளைக் கண்டு உணர்ந்தாரோ அவ்வாறே நமது மாபெரும் தலைவர் நமது குறைகளை நன்காராய்ந்து நமது சுயமரியாதை இயக்கத்தினைத் தோற்றுவித்து, அதற்குத் தனது உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்து வருகின்றார். அவரது சொற்பெருக்கிலோ, எழுத்திலோ, செய்கையிலோ எதுவும் மனிதனது இயற்கை அறிவுக்கு முரணானதாகக் கண்டுபிடிக்க முடியவே முடியாது. ஒவ்வொரு இந்தியனும் முக்கியமாய் தமிழ் மகனும் அவற்றை நன்கு ஆராய்ந்து தெளிந்து தேச சரித்திரங்களையும் படித்து எக்காரணத்தால் தோற்கடிக்கப்பட்ட இந்துக்கள் சந்திரகுப்தர், அசோகர், கனிஷ்கர் காலங்களில் ஆப்கானிஸ்தான் உட்பட இந்தியாவை ஒரு குடைக்கீழ் ஆண்டனரென்றும், பிறகு சங்கரர், சம்பந்தர் (சைவர்) முதலிய பார்ப்பனர் பவுத்த சமண சமயங்களை விரட்டிய பின்னர் மறுபடியும் தமிழகம் அடிமை வாழ்வெய்திற்றென்றும் கண்டு சுயமரியாதை இயக்கக் கொள்கைகளைத் தீவிரமாய் கைக்கொண்டாலொழிய தமிழ் நாட்டின் விடுதலை, சுயராஜ்யம் எல்லாம் பகற்கனவாகவே முடியும். நவீன துருக்கியர் கொள்கைகளையே நாமும் கைக்கொள்ளவேண்டும்.

———

## "காரணம் கேட்டு வாடி !"

எல்லா படைப்புகளுக்கும் ஒரு காரணம் வேண்டுமல்லவா? ஆதலால் கடவுள் ஒருவர் உண்டு என்று சொல்லுகிறேன்.


—ஆத்திகன்

அப்படியானால் கடவுள் ஏற்பட்டதற்கோ, அல்லது கடவுள் ஒருவர் இருப்பதற்கோ ஒருகாரணம் வேண்டுமல்லவா? தயவுசெய்து சொல்லுங்கள்.

—நாத்திகன்

தோற்றம்: 1934 வளர்க விவசாயம் தொலைபேசி: 48

# தந்தை பெரியார் அவர்களின் 92வது ஆண்டு பிறந்த நாள் விழாவில் எங்கள் வாழ்த்துக்கள்



35 வருடங்களாக எங்கள், பாமில், வீடுகட்டுமானங்களுக்கு தேவையான மரம், இரும்பு, வர்ணம், சிமிண்டு, சிமிண்டு தகடு, கொல்லம் ஓடுகள், மின்ஒளி சாதனங்கள் உத்திரவாதத்துடன் சகாயமான விலையில் சப்ளை செய்து வருகிறோம்.

"**பிரிமியர்**" எலக்ட்ரிக் மோட்டார், பம்பு, ஸ்டாட்டர், சுவிட்சுகளை உத்திரவாதத்துடன் விநியோகம் செய்கிறோம்.

தங்கள் மேலான ஆதரவை என்றும் விரும்பும்,

**K. C P. சிதம்பரம்,**

மானேஜிங் பார்ட்னர்

## K.C P. சங்கரலிங்க நாடார் & பிரதர்,

இரும்பு, மரம் வியாபாரம் அண் எலக்டிரிக் டீலர்ஸ், ஸ்ரீவில்லிபுத்தூர்.

# பெரியாரின் புலி வேட்டை!

கி. வீரமணி எம்.ஏ., பி.எல்



"...... நான் சொல்வதெல்லாம எங்களுக்கு; எங்களை கீழ் சாதி என்றும் நாங்கள் மேலே வருவது தங்களுக்கு ஆபத்து என்றும், தங்கள் மத தர்மத்துககுக் கேடு என்றும், தங்களை மேல் சாதி என்றும், இந்த சாதிப் பிரிவுகள் இப்படியே இருக்க வேண்டும் என்றும் கருதிக் கொண்டிருக்கின்ற மனுதர்ம இந்து பார்ப்பனர்கள், ஜட்ஜுகளாகவும் வேறு எந்த உத்தியோகஸ்தர்களாகவும் எங்கள் நாட்டில் எங்களுக்கு வேண்டாம். வேறு நாட்டில் அவர்களுக்கு எவ்வளவு பதவிஉயர்வு வேண்டுமானாலும் கொடுங்கள். அவற்றில் நாங்கள் குறுக்கிட வில்லை. அவர்கள் நீதிபதிகளாக இருப்பதில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை... **பார்ப்பான் நீதிபதியாய், ஆட்சியாளனாய் இருக்கும் நாடு கடும்புலி வாழும் காடேயாகும். ஆதலால் நாங்கள் புலி வேட்டை ஆடுகிறோம். புலி மேலே பாய்ந்தால் ஒருவர் இருவர் கடிபட வேண்டியது தான்.** எல்லா பார்ப்பனர்களும் அப்படித்தானா என்று கனம் ஜட்ஜுகள் சிந்தித்து நான் சொல்லுவதைத் தவறு என்று கருதலாம். நம்நாட்டில இன்றைய தினம் உள்ள பார்ப்பனர்களில் ஆச்சாரிய புருஷர்களாய் இருப்பவர்களைத் தள்ளிவிட்டு எல்லோரையும் ஒன்று போல் பாவித்து,பொதுஜன நன்மைக்காக பாடுபடுகின்ற பார்ப்பனர்கள் என்று எண்ணியிருக்கின்ற தன்மை –உயர்ந்த சீர்திருத்தக்காரர்—நாட்டின விடுதலைக்காக பெரிய தியாகங்களைச்செய்தவர்கள் என்கின்ற தன்மையில் இது வரையில் எந்த இந்தியனும் வகித்திராத உயர்ந்த பதவி வகித்தவர்கள் என்கிற தன்மையில், முதல் வரிசையில் முதல்வராக இருக்கும் மாஜி கவர்னர் ஜெனரல் உயர்திரு. சி. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் சொல்லுகிறார்கள்; 'நான் வேத, சாஸ்திர, புராண இதிகாச உபநிஷத் தர்மங்களில் முழு நம்பிக்கை உடையவன். ஜாதிப்பிரிவில் அதாவது வர்ணாசிரம தர்மத்தில் மிக்க நம்பிக்கையும் கவலையும் உடையவன்; அவைகளைப் பரப்பவும் நிலை நிறுத்தவும் நான் பாடுபடுகிறேன்; இனியும் அதற்காகவே பாடுபடுவேன்' என்று, சொல்லுகிறார்; எழுதுகிறார். அதற்கு வேண்டிய காரியங்களையும் செய்கிறார் என்றால், இனி யாரை மனதில் வைத்துக் கொண்டு "எல்லா பார்ப்பனர்களும் இப்படித்தான் இருப்பார்களா?" என்று நினைப்பது ?

வாயில்-நாக்கில்-குற்றமிருந்தால் ஒழிய வேம்பு இனிக்காது; தேன் கசக்காது, பிறவியில் மாறுதல் இருந்தாலொழிய புலி புல்லைத்தின்னாது. ஆடு மனிதனை தின்னாது. அதுபோலவாக்கும் நம் பார்ப்பனர்கள் தன்மை. இந்த ஒரு வழக்குக் காக அல்ல நான் சொல்லுவது!"

—மேலே காட்டிய உணர்ச்சி கொப்பளிக்கும், உத்வேகம் பொங்கும், பிரகடனங்

கள் தந்தை பெரியார் அவர்கள், 1957—ல் சென்னை உயர்நீதி மன்றத்தில், அவர்கள் மீது சாட்டப்பட்டிருந்த (Contempt of Court application No. 3 of 1957) அய்க் கோர்ட் அவதூறு வழக்கில் கோர்ட்டாருக்கு 23-4-1957-ல் அளித்த ஸ்டேட் மெண்டில் காணப்படுவனவாகும்.

தமது வாழ்நாள் முழுவதையும் தாழ்ந்து வீழ்ந்து கிடந்த தமிழர் சமுதாயத்தை, வீறு கொண்டு எழச் செய்து, உரிமை உணர்வு களை அவர்களுக்கு ஊட்டி, அவர்களை சாதி, மத, கடவுள் போதையிலிருந்து விடு தலை செய்ய தன்னையே அர்ப்பணித்து அதனை ஒரு நன்றி பாராட்டாத திருத் தொண்டாகச் (Thankless job) செய்து வருபவர் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒரே தலைவர் தந்தை பெரியார் அவர்கள் என்பது எதிரிகள்கூட தயங்காது ஒப்புக்கொள்ளும் ஒரு மாபெரும் உண்மையாகும்.

கால வெள்ளத்தால் அழிக்கமுடியாத வெற்றிகளை அவர்களது அப்பழுக்கற்ற அறுபதாண்டு பொது வாழ்க்கை சமூகத் தின் எல்லா இடங்களையும் இன்று தழுவி பரந்துகாட்சியளிக்கிறது! என்றாலும் அவர் ஓய்ந்தாரா? "ஓய்வு"என்பதை ஒப்புக் கொண்டவராகவாவது அவரை இந்த92-லும் பார்க்க முடிகிறதா?

அயர்வறியாத போர்ப்படைத் தளபதி யாக இன்னமும் அவர் களத்தில் நின்று கொண்டுதான் இருக்கிறார்!

வெற்றிகளைக் கண்டு மலைத்து மயங்கிவிடும் மனப்பாங்கு அவருக்கு உண்டா? இல்லை; 'கடந்த தூரம் அதிகம் தான்; ஆனால் கடக்க வேண்டிய தூரமோ மிக அதிகமாயிற்றே! என்னருமை சமுதாய மக்களே! இதைகவலையோடு சிந்தியுங்கள்' என்று அறிவூட்டுவதைத் தான் அவர் தனது அன்றாடப் பணியாக இன்னமும் கொண் டுள்ளார்.

அவர்களைப் பொறுத்தவரை வயதும் உழைப்பும் எதிர்மறை விகிதத்தில் செய லாற்றும் சக்திகளாக இருக்கின்றன! வயது கூடக்கூட அவருக்கு வேகம் அதிகரித்து— வெறும் விமான வேகத்தில் கூட அல்ல; ஜெட், போயிங், போன்ற விமான வேகத்தில்— அவரது சிந்தனையும், செய லும், நாளுக்குநாள், மாதத்திற்கு மாதம் ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து கொண்டே போகிறது!

அச்சு முறிந்த கட்டைவண்டி பயணத் தில் உள்ள தமிழ் மக்கள் பலருக்கு, அவர்க ளது சிந்தனையின் "போயிங்" வேகம் பிடி படாது இருப்பதில் அதிசயம் இல்லை! அதற்காக சலிப்போ, வெறுப்போ, விரக் தியோ அவரிடம் வேர் விடுகிறதா? இல்லையே!

அவரது பொது வாழ்க்கை இத்தகைய மகத்தான வெற்றிகளைக் கொடுத்துங்கூட இன்னமும் அவர் "புலிவேட்டை" ஆடுவ திலேயே இருக்கிறார்! அவரால் சுடப் பட்ட "புலிக"ளின் தோல்கள் மீது அமரு பவர்களாக அவரது இனத்துப் பெருமக்கள் பலர் இன்று ஒவ்வொரு துறையிலும் இருக் கின்றனர்!

அவரிடம் பயின்று, பொது வாழ்க்கை யில் அவரால் உருவாக்கப்பட்ட அவ ரது பிள்ளைகள் என்பதை உரிமையோடும், மிக்க நன்றி உணர்வோடும் பிரகடனப்படுத் திடும் அவரது சக உழைப்பாளர்கள் இன்று தமிழ்நாட்டு அரசு கட்டிலில் அமர்ந்து, அவர்களுக்குரிய அரசியல் வட்டத்துக்குள், அய்யாவின் ஆசைகளை, இலட்சியக் கனவுகளை அமுல்படுத்தி அவருக்கு அதனை அன்பு காணிக்கையாக அவரது திருவடிகளில் சமர்ப்பித்த வண்ணம் இருக் கின்றனர்.

நீண்ட நெடுங்காலமாக நீதித் துறை அசல் அக்கிரகாரமாகவே இருந்த நிலை மாறிவிட்டதற்குக் காரணம் அவரது புலி வேட்டையே என்றாலும் இன்றும் "புலிகள்" "ஆரிய சுயகாரியப்புலிகள்" மறைந்து நின்று பதுங்கிப் பாயத் தங்களை ஆயத்தம் செய்வதை கவனிப்பதிலேயே, கண் காணித்து தம் துப்பாக்கி முனையை அப் பக்கம் திருப்புவதிலேயே அவர் குறியாய் இருக்கிறார்! இப்போது அயர்ந்தால் நம் இனத்திற்கு ஆபத்து அதிகம் என்பதை பொறுப்புணர்ச்சி மிகுந்த காரணத்தால் அவர்கள் உணர்ந்து ஓய்வின்றி செயல்படு கிறார்கள்!

13 ஆண்டுகட்கு முன்பு தமிழ்நாடு உயர்நீதிமன்றத்தில் விரல் விட்டு எண்ணும் தமிழர்கள்தான். இன்றோ 18 நீதிபதிகள் என்றால் அதில் 2 பேர்தான் பார்ப்பனர்! '100 க்கு 3 பேர்களாக இருக்கும் பார்ப்பன

ருக்கு இந்த விகிதமே கூடுதல் அல்லவா? இதில் என்ன தரும நியாயம் இருக்கிறது?' இப்படிக் கேட்டு "புலிவேட்டை" யைத் தொடர்ந்துகொண்டிருக்கிறார் அவர்!

அந்தப் பொன்னார் மேனியன் தந்த புலித் தோல்மீது இன்று அங்கு நீதிமன்றத்தில் இதுவரை வாய்ப்புக் கதவுகள் அடைக்கப்பட்ட சமூகத்தின் பிரதிநிதிகள் அமர்ந்து, ஓர்ந்து, கண்ணோடாது, தேர்ந்து நீதிபரிபாலனம் செய்துகொண்டு வருகிறார்கள்!

நிர்வாகத்துறை-தமிழர்களுக்கு எட்டாக் கனி, கிட்டாப் பொருள் என்றிருக்கிற நிலையைத் தலைகீழாக்கிக் காட்டியது அவரது அரை நூற்றாண்டுக்கும் அப்பாற்பட்ட புலி வேட்டையின் பயன் அல்லவா?

பிரதம காரியதரிசி,(Chief Secretary) பதவி முதல் உத்தியோக மண்டலத்தின் அடித்தளம்வரை, பல துறைகளிலும் இன்று ஏராள வாய்ப்பு பெற்றவர்களாக திகழ முடிகிறது. அதனால்தான் நலம் பெற்றிருக்கிறோம்!

'படிப்பு வராத இனம்' என்ற பொய்மை புரட்டப்பட்டது, கல்வித்துறையில் அவர் நடத்திய "புலிவேட்டையால்!" 100க்கு 5 பேர் படித்த நாட்டில் இன்று 100க்கு 50 பேர் படித்தவர்களாகி இருப்பதுடன், பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் பலரும் தமிழ்ச் சமுதாயத்தவர்களாக இருக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

'தொடாதே, நெருங்காதே, எட்டி நில்' என்று எந்த சமுதாயத்தினை தங்கள் பசிக்கு ஆடுகளாக, ஆரியப்புலிகள் ஆக்கி வந்ததோ, அந்தச் சமுதாயத்திலிருந்து அய்.ஏ.எஸ். பதவி முதல் பல்வேறு பதவிகளிலும் இன்று அவர்கள் அடைந்து வரும் நிலை கண்கூடு. கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலாக ஒரு விந்தை.

தமிழ்நாட்டின் மிக முக்கிய பொறுப்பு வேலை வாய்ப்புத் தரும் சர்வீஸ் கமிஷன் தலைவர் என்ற பெரும் பதவியை தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் "வைரங்களாக" ஒளி வீசுபவர்கள் அலங்கரிக்கின்றனர்!

மனுதர்மம் பேசும் மமதையாளர்கள் கூட, அங்கே "மண்டியிட்டு"த்தான் ஆக வேண்டும் என்ற நிலையை விட சமுதாய மாற்றத்துக்கு வேறு எடுத்துக்காட்டு தேவையா?

தந்தை பெரியார் தம் 'புலிவேட்டை' இல்லாவிட்டால் இத்தகைய அதிசயச்சாதனைகள் சாத்தியமா? விவரம் தெரிந்தவர்கள், நன்றி உணர்வினை மறக்காதவர்கள் வெளிப்படையாக இல்லாவிட்டாலும் தம் நெஞ்சங்களில் இதனை கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள்!

வைக்கம் முதல், வகுப்பு உரிமைப் போர் வரை, அவரது வாழ்நாள் எல்லாம் இந்த புலிவேட்டைதான் தொடருகிறது!

எவ்வளவு ஏச்சுக்கள்!

எவ்வளவு கண்டனங்கள்!

எத்தகைய எதிர்ப்புக்கள்!

எத்தனை முறை சிறைவாசங்கள்!

இப்படி இந்த அவர்களது புலிவேட்டை வீர காவியம் பல்வேறு அம்சங்களைத் தன்னகத்தே அடக்கிக்கொண்டு மேலும் தொடர்ந்த வண்ணம் இருக்கிறது!

இவ்வாறு நெருப்பாறுகளை நீந்தி பயங்கரமான புலிவேட்டையில் ஈடுபட்டுள்ள அவர் ஒருநாளாவது புலித்தோல்மீது அமர்ந்து மகிழ்ந்திருக்கிறாரா? புலிப்பல் காட்டி தம் வீரத்தினை விளக்குவதில் பெருமையை அனுபவித்தாரா! இல்லை! இல்லவே இல்லை!! அவர்களது மூல பலமும் முக்கிய லட்சிய உணர்வின் ரகசியமும் இதில்தான் அடங்கியிருக்கிறது!

மறைந்த பேரறிஞர் அண்ணா தந்தை பெரியாரின் புலிவேட்டையின் தன்மையை மிக அழகாக படம்பிடித்துக் காட்டினார்; "அக்கிரமம் தென்படும்போது மிகப்பலருக்கு அது தன்னைத் தாக்காதபடி தடுத்துக் கொள்ளவேண்டும் என்ற எண்ணமும் ஒதுங்கிக்கொள்வோம் என்ற உணர்ச்சியுந்தான் தோன்றும். எதிர்த்து நிற்கவேண்டும் என்ற எண்ணம் எளிதில் எழுவதில்லை.

பெரியார், அக்கிரமம் எங்கு இருந்திடக் கண்டாலும், எந்த வடிவிலே காணப்படினும், எத்துணை பக்கபலத்துடன் வந்திடினும், அதனை எதிர்த்துப் போரிட தயங்குவ

தில்லை. அவர் கண்ட களம் பல; வெற்றிகள் பலப்பல! அவர் தொடுத்த போர் நடந்தபடி இருக்கிறது. இந்த வயதிலும் அவர் போர்க்களத்தில் நிற்கின்றார்!"

இதைவிட பெரியாரின் புலி வேட்டையை மிகத் தெளிவாக எவரால் வர்ணிக்க இயலும்?

"தமிழ் நாட்டிலும், மராட்டியத்திலும் பார்ப்பனர்கள் இப்போது தாழ்த்தப்பட்ட வகுப்பினராகவே கருதப்படுகிறார்கள். தமிழ் நாட்டில் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்ற காலத்தில் கூட மாநில அமைச்சரவையில் ஒரே ஒரு பார்ப்பனர் மட்டுமே இடம் பெற்றிருந்தார். இன்று தி.மு.க. ஆட்சியின்கீழ் யாருமே இல்லை. மராட்டியத்திலும் இதுவே தான் நிலை.

நிர்வாகத்திலும் கூட, பார்ப்பனர்கள் அதிக அளவில் அங்கிருந்து வெளியே தள்ளப்படுகிறார்கள். தமிழ் நாட்டுப்பார்ப்பனர்கள் இப்போது டில்லியிலும், பம்பாயிலும் ஓரளவு குறைவாக கல்கத்தாவிலும் புகலடைந்திருக்கிறார்கள்."

—இவ்வாறு திரு. ஜே. பி. கிருபளானி 30—7—70 அன்று 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏட்டில் எழுதியுள்ள கட்டுரையில் ஓலமிடுகிறார்!

தந்தை பெரியார் அவர்களின் 'புலி வேட்டை' இல்லாவிடின் இது தலைகீழாக வன்றோ இருக்கும்? முன்பு அது தானே நிலைமை?

இதே கருத்தை அதற்கு மூன்று வாரங்கள் கழித்து வெளியான 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஞாயிறு பதிப்பான 'தி சண்டே ஸ்டாண்டர்டு' ஏட்டிலும், திரு. சி. எஸ். பண்டிட் என்பார் எழுதிய அரசியல் ஆய்வுக் கட்டுரையில்,

"தென்னாட்டில் மட்டுமல்ல வடமாநிலங்களிலும் கூட மற்ற பிற்படுத்தப்பட்ட மக்கள் தயவினால் தான் (பார்ப்பன)மேல் சாதிக்காரர்கள் பதவி பெறமுடியுமே தவிர தனியே கால் ஊன்றி நிற்கவேமுடியாது" என்ற கருத்தினை, வட மாநிலங்களில் தங்கள் எண்ணிக்கையைவிட எவ்வளவோ அதிகவிகிதாசாரத்தில்பதவிகளை அனுபவித்து வந்த மேல்சாதிக்காரர்கள் இப்போது இந்த வகுப்பு மக்களுடன் ராஜி செய்துகொள்ள வேண்டும்; அல்லது அதிகாரத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும். தனது சாதியுடனான இணைப்பை விட்டுவிட்டு தனது அரசியல் அபிலாஷைகளை இந்த வகுப்பு மக்களின் சிரத்தையுடன் இணைந்து இனம்கண்டுகொண்டாலன்றி உயர்சாதி ஒன்றைச் சேர்ந்தவர்கள் இந்த மாநிலங்களில் ஏதாவது ஒன்றில் முதலமைச்சராவது இந்தப் பின்னணியில் முடியாததாகிவிட்டது"

—என எழுதியுள்ளார்.

இதற்குக் காரணம்—அடிப்படைக் காரணம் தந்தை பெரியார் மேற்கொண்டுள்ள "புலிவேட்டை" அல்லவா?

"இளைஞர்களே, எழுச்சிபெறும் இளம் வீரர்களே, உங்கள் கடமை என்ன?" புலித்தோல்மீது அமர்ந்து இன்பங்காணுவது தானா? அல்லது காலஞ்சென்ற கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் மிகுந்த நகைச்சுவையோடு ஒரு திரைப்படத்தில் பாடினாரே 'புலிக்குப் பயந்த பசங்கள் எல்லாம் வந்து விழுங்களடா' என்று; அந்த பாணியில் நடந்துகொள்ளுவதா?

அல்லது இவ்வளவு அபாயகரமான புலி வேட்டையில் நாம் ஏன் ஈடுபட வேண்டும்? வெறும் முயல் வேட்டையே போதுமானது என்று 'திருப்தி' அடைவதா?

அல்லது இந்த 92—ம் வயதில் 'புலி வேட்டை' ஆடுவதில் சளைக்காமல்—சலிக்காமல் உள்ள அவரால் உணர முடிந்த அபாயத்தை நாமும் உணர்ந்து அதனை அடியோடு சுட்டு வீழ்த்துவதா?

சிந்தியுங்கள்! புலிவேட்டை ஆடித் தீரவேண்டிய நேரம் இது! புலி வேட்டையாட அவரைத் தவிர வேறு எவராலாவது முடியுமா? இடையில் புலிவேட்டை நிறுத்தப்பட்டால் நம் மானத்தின் கதி என்னவாகும்?


ஆழமாகச் சிந்தித்து அவசரமாகச் செயல்படவேண்டிய தருணம் இது!

★

## பாரத பூமியில் பக்தியின் லட்சணம்!




கும்பமேளாவில் நிர்வாண சாதுக்கள் ஊர்வலம் (நன்றி: "**இல்லஸ்டிரேடட் வீக்லி**")



மாட்டைக் கும்பிடும் மனிதர்களைப் பாரீர் என்று படம் போட்டு பரிகசிக்கிறது 'அமெரிக்க ஏடு' ஒன்று (நன்றி: "**நாளைய உலகு**")

## தந்தை பெரியார் அவர்களின்
## 92-வது பிறந்த நாளன்று

தமிழக அரசின்
உறுதுணையாய்
இருக்கும்



எங்கள் மனங்கனிந்த
வணக்கத்தையும்,
வாழ்த்தையும்
காணிக்கையாகப்
படைக்கிறோம்.

# வாடிப்பட்டி ஸ்ரீ லாலா டாக்கீஸ்

உரிமையாளர்கள் .

P. பெருமாள், B.A., பொன். சுப்பையா, (மதுரை மாவட்டம்) P. திருமலைசாமி.

# SUBRAMANIAM AUTO WORKS

35, GARIAGE LLOYDS COLONY,
**Lloyds Road, Madras-14.**

PROP: **M. SUBRAMANIAM.**

வாழ்க பெரியார்! வளர்க பகுத்தறிவு!!

தமிழகத்தின் தன்மான தலைவராம் பெரியார் ஈ. வே ரா அவர்களின்
92-வது பிறந்ததின விழாவை மகிழ்வுடன் கொண்டாடுகிறோம்.

# மதுக்கூர் ஜவுளி ஸ்டோர்

மார்க்கெட் தெரு :: அரியலூர்
(திருச்சி மாவட்டம்)

எங்களிடம் வண்ணக் கலர்களில் வகை வகையான கைத்தறி அண்டு மில் ஜவுளி ரகங்கள், பின்னி அண்டு கர்ணாடிக், மேட்டூர் மல் அண்டு லாங்கிளாத், சுத்த பட்டு சேலைகள் மற்றும் எல்லா வகையான ஜவுளி ரகங்களும் விலை மலிவாகவும், நயமாகவும் கிடைக்கும்.

உரிமையாளர்: **V. சிதம்பரம் & சன்ஸ்.**

வாழ்க பெரியார்!

எமது வாடிக்கையாளர்களுக்கும் அன்பர்களுக்கும்
பெரியார் பிறந்ததின நல்வாழ்த்துக்கள்

தந்தி: KARTHIKAI

போன்: ஆபீஸ் - 162
வீடு - 483

# ஸ்ரீ கார்த்திகேயன் அண் கோ.,

இரும்பு ஹார்டுவேர், பெயிண்ட் அண்டு சானிடரிவேர்—வியாபாரம்

India Linoleum Floor Mats, H. & R. Johnson Glazed Tiles, Snowcem waterproof cement, Durocem waterproof Cement, Jenson & Nicholson Paints, Parry, Hindustan Twyfords Sanitary wares, Metro, S S.F., Devasar C. P. Pillar Cocks & Fittings.

"எவரெஸ்ட்" அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் ஷீட்,
பைப்பு பிட்டிங்ஸ், A. C. C. சிமெண்ட்.

ஹெட் ஆபீஸ்:
130, வளையக்காரத் தெரு,
ஈரோடு—1

பிராஞ்சு:
587, மெயின் ரோடு,
பவானி.

நிறுவனம்: 1927 தொலைபேசி: 308

தந்தை பெரியார் 92வது ஆண்டு பிறந்ததின
வாழ்த்துக்கள்

★

குழந்தைகளின் நண்பன்

# கிருஷ்ணா பிஸ்கட்ஸ்

மிகச் சிறந்த சத்துள்ள தின்பண்டம்

கிருஷ்ணா பிஸ்கட் பாக்டரி

மன்னார்குடி
(தஞ்சை மாவட்டம்)

---

# கிருஷ்ணா பிஸ்கட் பாக்டரி

2, காமராஜ் ரோடு, கும்பகோணம்.
[S. INDIA]

மேநாட்டு பிஸ்கட்களைப் போல் மிஷின் மூலம்
தயார் செய்யப்படும் சிறந்த பிஸ்கட்கள்.

## கிருட்டா & குளுகோஸ்

பிஸ்கட்கள்.

கவர்சிகரமான பலவித பாக்கெட்களிலும்,
5-கிலோ பெரியடின் பாக்கிங்களிலும்
சப்ளைசெய்யப்படுகிறது.

முக்கிய நகரங்களில் ஸ்டாக்கிஸ்ட்டுகள், ஏஜெண்டுகள் தேவை.

விவரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

# உலகெங்கும் நாத்திகம்

க. அ. நடராசன். எம். ஏ.

'நீ சைத்தானைப் பார்த்திருக்கிறாயா? இல்லையா? கவலைப்படாதே; நீதான் அது. நீ பாவியைப் பார்த்திருக்கிறாயா?—என்ன! அதுவும் இல்லையா? அதுவும் நீதானப்பா இப்போதாவது புரிந்துகொள்—நீ, பொய்—உன் உடம்பு பொய்—இந்தவாழ்க்கை பொய்—ஊர் பொய்—உற்றார் பொய்—உலகம் பொய்—எல்லாமே பொய்— உன்னுள்ளே இருக்கிற ஆன்மா மட்டும்தான் உண்மை—நான் சொல்லுவதைக்கேள்! அதன்படி நட, இல்லாவிட்டால் நீ,நாயாய், பன்றியாய், கழுதையாய்ப் பிறப்பாய்-நரகத்துக்குத்தான் போவாய்—நான் சொல்லுவதைக்கேட்டால் உன்னைப் படைத்த ஆண்டவனிடத்திலே—'சர்வ வல்லமை' பொருந்தி தூணிலும், துரும்பிலும் இருக்கும் அவனிடத்திலே—உன்னை சேர்ப்பிக்கிறேன்—அதுதான் மோட்சம் - மோட்ச உலகம் - சொர்க்க லோகம்'—என்று பட்டை தீட்டியவனெல்லாம், கொட்டை கட்டியவனெல்லாம்,நாமம் போட்டவனெல்லாம், வெள்ளுடை தரித்து சிலுவையேந்தியவனெல்லாம் முழங்கிவந்த பித்தலாட்டத்தை ஒழித்து — அவர்களையெல்லாம் ஒடுக்கி—ஒருவனாவது தேவனாவது—சிந்தி, சிந்தி—செயல்படு—இந்த விஞ்ஞான காலத்தில் நீதான் எல்லாம்—வாழ்க்கை வாழ்வதற்கே என்றுணர்—மகிழ்வாக இரு—என்றுணர்த்திய கொள்கைக்குப் பெயர்தான் நாத்திகம் — அதைப்பரப்பியவனே நாத்திகம் பேசி நாத்தழும்பேறினவன் என்றழைக்கப்பட்டவன். எனவே நாத்திகன் என்று சொல்லிக்கொள்வதற்கு வெட்கப்படவேண்டியதில்லை.

நேற்று இருந்ததைவிட இன்று உலகம் சற்று முன்னேறியிருக்கிறது— அதாவது நேற்று இன்றைவிட சற்றுப்பின் தங்கி இருந்தது — இதுதான் உண்மை நிலை. 'நாளை யோசித்துச் சொல்கிறேன்'—என்கிறோம். என்ன பொருள்? இப்போது என் புத்திக்கு எட்டவில்லை—நாளை புதிய சிந்தனை உருவாகலாம்; முடிவு கூறுகிறேன் என்றுதானே பொருள். காலம் செல்லச் செல்ல கருத்துக்கள் வளர்ச்சி பெறுகின்றன. ஆனால் இதனைப் புரியாததுகள் சில, இன்றைக்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால் எவனோ—முட்டாள்—பார்ப்பான்—எழுதி வைத்ததை இன்றைக்குச் சாதிப்பேன் என்கிறதுகள். கி. பி. 1040ல் உலக மொத்தத்தின் மக்கள் தொகை 54 கோடி. இன்றைக்கு இந்தியாவின் தொகைமட்டும் அவ்வளவை நெருங்கிக் கொண்டிருக்கிறது. அப்படியானால் கிறித்துத்தோன்றிய 1970—ஆண்டுகளுக்கு முன்னால் உலக மக்கட் தொகை எவ்வளவாக இருந்திருக்கும்? அந்தக்காலத்திலே உலக முன்னேற்றம் எந்த அளவிற்கு இருந்திருக்கும்—சிந்திக்க வேண்டாமா? இதையெல்லாம் எண்ணாமல் கடவுள் என்றும் பூதம் என்றும் பேசித்திரிகிறார்கள். எல்லாம் மதங்கள் செய்கிற வேலை. 'நீ இறந்த பின் இப்படி ஆகப்போகிறாய், எனவே இப்போது



# புத்தா பைன் சாரீஸ்

உயர்ந்த ரக கோடா்பாக்கம், ஸ்பன்சில்க்,

காஞ்சீபுரம் டிசைன், ஆரணி டிசைன்,

பட்டுச் சேலை தயாரிப்பாளர்கள் &

விற்பனையாளர்கள்

## K. R. G. நாகப்பன் & கம்பெனி

255, திருச்சி ரோடு,

குகை :: சேலம்-8

போன் : 4564 தந்தி : பைன்சாரீஸ்

---

அறிவுலக மேதை அய்யா அவர்களின் 92-வது பிறந்த நாளிலே
எங்களின் பொன்னான வாழ்த்துக்கள் !
வாழ்க பெரியார் !

தந்தி : "ரைஸ்"

சி. எஸ். டி. நெ. 20/1-7-57
M. P. & R. D. L. No. 2167/66-67
M. F. D. L. No. 2586
சர்க்கரை எல். நெ. 13
R. E. No. 43

போன் : (அலுவலகம்) 72
இல்லம் : 478
ஆலை : 909

## எம். ஜி. அங்கப்ப செட்டியார்

# ஸ்ரீ ஜெயலட்சுமி அரிசி ஆலை

தபால் பெட்டி எண் : 54

சத்தி ரோடு :: ஈரோடு-1. (S.Ry·)

கிளைகள் :

**அங்கப்பா அரிசி & ஆயில் மில்ஸ்,**
90, பெருந்துறை ரோடு,
ஈரோடு-2.

**M. G. அங்கப்ப செட்டியார்,**
நெல் மண்டி,
மன்னார்குடி, தஞ்சாவூர் ஜில்லா.

இப்படி செய்', என்கின்றனர். நாடக மேடையிலே தோன்றுகிறவன் கடைசி சீன்லே எல்லாவற்றையும் சேர்த்து நடித்துவிடலாம்; இப்போது இப்படி நடித்தால் போதும்என்று எண்ணி நடித்தால்—இந்த சீன்ல கல்லடிக் குத்தப்பினாலல்லவா அடுத்தசீன்லே நடிக்க முடியும். அடுத்த பிறவியைப் பற்றி எண்ணிக்கொண்டிருக்காமல், அடுத்த பிறவியில் நாயாய்ப் பிறப்பதைத் தடுப்பது எப்படி என்று சிந்தித்துக்கொண்டிருக்காமல் இதெல்லாம் எவனோ அயோக்கியன் சொல்லி வைத்த பொய் என்று உணர்ந்து வாழ்க்கை வாழ்வதற்கே என்ற தத்துவத்தின்படி வாழ்ந்தால் போதுமென்பதுதான் நாத்திகம்.

இத்தகைய நல்ல கொள்கை இன்னல் பல அடைந்தபின்னர் இன்றுதான் உலகிலே மதிப்பான இடத்தை அடைந்திருக்கிறது.

கி. மு. 3ம் நூற்றாண்டிலேயே—கன்பூசியசின் சீடரான மென்சியஸ்—'நாத்திகம், நாட்டின் பண்பாட்டிற்கு விடுக்கப்பட்ட சவால்' என அலறுகிறார். பழம் கிரேக்க நாகரீகத்திலேயே நாத்திகக் கொள்கை இடம்பெற்றிருந்தது. திராவிடர்கள் நாத்திகர்களே. அவர்களைப் பற்றி வேதத்தில் 'மறுபிறப்புப் பற்றி அறிந்து கொள்ளமுடியாத நாகரிகமற்றவர்கள்' எனக் கூறப்பட்டுள்ளது.

### அய்ரோப்பிய நாடுகள்

மேலை நாடுகளைப் பொறுத்தவரை மறுமலர்ச்சி (Renaissance) இங்கிலாந்தின் தொழிற்புரட்சி, பிரெஞ்சுப் புரட்சி ஆகிய இவற்றுக்குப்பின்னாலேதான் கத்தோலிக்க திருச்சபையின் அதிகார எல்லை கேள்விக் குறிக்குள்ளாக்கப்பட்டு-புதிய கண்டுபிடிப்புகள், விஞ்ஞான நுட்பங்கள் வளரத்தொடங்கின. அண்டகோளங்கள் பற்றியும் பூமி சூரியனைச் சுற்றுகிற இயல்பு பற்றியும் கி. பி. 15—ம் நூற்றாண்டில் கோபர்நிகஸ் வெளியிட்ட விஞ்ஞான உண்மைகள் கிறித்துவக் கோட்பாடுகளை செல்லாக் காசுகளாக்கின. 17—ம் நூற்றாண்டிலே தெளிவான கருத்துப்புரட்சி மலர்வதைக்காண்கிறோம். பேகன், காசெந்தி, ஹாப்ஸ் ஆகியோர்தம் எழுத்துக்களிலே நாத்திக மலர்ச்சியைக் காண்கிறோம். டெஸ்கார்த்தி பிரான்சில் நாத்திகத்தின் தலை சிறந்த தத்துவ அறிஞராகத் திகழ்ந்தார். பெரிமேர்சான் டெஸ்கார்த்தியின் நண்பர். அவர் அக்காலத்தில் பாரிஸ் மாநகரில் மட்டும் 50,000 நாத்திகர்கள் இருந்ததாகக் கூறுகின்றார். 1770-ல் ஹோல்பாக் என்பாரால் பிரஞ்சிலே எழுதப்பட்ட நூல் 1859—ல் ஆங்கிலத்திலே மொழி பெயர்க்கப்பட்ட நேரத்தில் அதற்குக் கொடுக்கப்பட்ட தலைப்பு—(The Atheist's Text Book)—நாத்திகர்களின் பாடநூல் — என்பதாகும். இன்னும் டைடராட், ஹெல்விட்ஸ், லலாந்தே போன்ற புகழ்பெற்ற நூலாசிரியர்கள் தோன்றி நாத்திகத்தை வளர்த்தனர். ஒருமுறை லாப்லேசின் நூலான Mecanique Celeste-அய்ப்படித்த நெப்போலியன் அதில் கடவுளைப்பற்றி ஒன்றுமில்லையே என்று அவரிடம் கேட்டபோது அது போன்ற கற்பனைகளுக்கு அவசியமில்லை என்று கூறிவிட்டார். ஒருமுறை டேவிட் ஹியூம் என்பார் ஹோல்பாக் கொடுத்த விருந்தொன்றில் கலந்துகொண்டார். அந்த விருந்தில் மொத்தம் 18 பேரே இருந்தனர். அப்போது டேவிட் எழுந்து—நாத்திகம் என்று பிதற்றிக்கொள்ளும் முட்டாள் யாரையும் உலகில் காணமுடியுமா என்றார். ஹோல்பாக் உடனே இடைமறித்து-'அய்யா தாங்கள் அதுபோன்ற 17 பேர்களுடன் அமர்ந்து இருக்கின்றீர்கள்' என்றார்.

பிரான்சிலே ஏற்பட்ட மாற்றங்கள் ஜெர்மனியிலும் பயனளித்தன. நாத்திகவாதிகள் பலர் தோன்றினர். பேராசிரியர் ஹெக்கல் இன்றளவும் போற்றப்படுகின்றார். மற்றும் லுட்விக், டேவிட் ஸ்ட்ராஸ், லுட்விக்புக்கனர் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். நாத்திக உலகுக்குப் புதிய வலுவினை டார்வினின் பரிணாமக் கொள்கை கொடுத்தது. அகஸ்ட் கோம்தேயின் கோட்பாடு தோன்றி—இயற்கையும் மனித சமுதாயமும் கடவுள் படைப்பு என்ற முட்டாள்தனமான வாதத்தை விரட்டியது.

19-ம் நூற்றாண்டில் மதச் சார்பின்மை என்ற புதியதோர் கருத்து தோன்றி வளர்ந்தது. ஜியார்ஜ் கோம்பே, தாமஸ் பெயின், இராபர்ட் ஓவன், பென்தாம், ஜேம்ஸ்மில் போன்ற சிறந்த பேராசிரியர்கள் தம் எழுத்துக்களால் இக்கருத்துக்கு வலுவூட்டினர். இதே நேரத்தில் ஹோலியோக், பிராட்லா என்ற தலைசிறந்த அறிஞர்கள் நாத்திகர்களாய் விளங்கினர். சார்லஸ் பிராட்லா National Reformer

வாழ்க பெரியார் ! வளர்க பகுத்தறிவு !!

"உயர்வு—தாழ்வு எனும் உணர்ச்சி, வளர்ந்து வரும் சாதிச்சண்டை எனும்
நெருப்புக்கு நெய்யாய் இருப்பதால் இவ் உணர்ச்சி ஒழிந்து
அனைத்துயிரும் ஒன்று என்று எண்ணும் அறிவு வளர
இதுநாள் வரை அயராது பாடுபட்டு வரும் அருந்
தமிழ்த் தலைவர் "தென்கிழக்கு ஆசியாவின்
சாக்ரடீஸ்" தந்தை பெரியார்
நீடூழி வாழ்க !

★

தொலைபேசி எண் : 24117

# அம்சவல்லி உணவு விடுதி

கீழவெளி வீதி :: மதுரை-1.

நிர்வாகி : **சாமி-கோபால் பிள்ளை அண் கோ.,**

**INDO-CEYLON HOTEL**
**MADURAI**

★

# இந்திய - இலங்கை ஹோட்டல்

**நெ. 6, டவுன்ஹால் ரோடு, மதுரை**

**சாப்பாடு, பிரியாணி வகைகளுக்குச்**
**சிறந்த இடம்.**

உரிமையாளர் : **K. சம்பந்தம்**

என்ற ஏட்டின் மூலமும் ஹோலியோக் Reason என்ற ஏட்டின் மூலமும் மக்களைக் கவர்ந்தனர்.

கார்ல்மார்க்ஸ் 1867-ல் வெளியிட்ட DasCapital உலகைப் பரபரப்பில் ஆழ்த்திற்று. அவர் கூறிய (Dialectic Materialism) 'பொருள் முதல்வாத சித்தாந்தம்' என்ற புதிய கொள்கையில் மதங்களுக்கு இடமில்லை. பிரடரிக் எங்கல்ஸ் இவருடன் இணைந்து இதற்காகச் செயல்பட்டார். இதே நேரத்தில் அமெரிக்காவிலே தலைசிறந்த பேச்சாளராம் இங்கர்சால் நாத்திகக் கொள்கையை புயலெனப் பரப்பி வந்தார். 1899-ல் இங்கிலாந்தில் பேரறிவாளர்களைக் கொண்டு துவக்கப்பட்ட RPA (Rationalist Press Association) பகுத்தறிவுப் புரட்சியை இன்றளவும் பல நூற்றுக்கணக்கான புத்தக வெளியீடுகள் மூலம் பரப்பி வருகின்றது. இன்று அதனுடைய உறுப்பினர்கள் அளவு 5000க்கும்மேல். பேராசிரியர் ஹெரால்டு.ஜே.லாஸ்கி,ஜூலியன் ஹக்ஸ்லி, சி. இ. எம். ஜோட், ஜோசப் மெக்காப், எப். ஜே. கோல்டு, ஜே. எம். இராபர்ட்சன், ஜே. பி. எஸ். ஹால்டேன், பெட்ரண்ட் ரஸ்ஸல் போன்ற உலகப் பெரும் புகழ் படைத்தவர்கள் எல்லாரும் இதனுடைய உறுப்பினர்கள்.

**அமெரிக்கா** (U.S A): அமெரிக்காவில் 50 லட்சம் பேருக்கு மேற்பட்ட நாத்திகர்கள் இருப்பதாக நாத்திக சங்கத்தின் (American Association for the Advancement of Atheism) தலைவரான ஹார்வி ஜான்சன் என்பார் எனக்கெழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்காவில் நாத்திக சங்கங்கள் பல இயங்கிவருகின்றன. ஆஸ்திரேலியாவிலும் இதுபோன்ற அமைப்புக்கள் உள்ளன. ஆனால் போதிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை

**சோவியத் ருஷ்யா:** "பெஸ்போடினிகி" என்ற பெயரில் கடவுளெதிர்ப்புச் சங்கம் ஒன்று இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் செயலாற்றி வந்தது. சோவியத் அரசியலமைப்புச் சட்டத்தில் மத வழிபாடும், மதத்திற்கெதிரான இயக்கங்களும் செயல்படவழி செய்யப்பட்டுள்ளன. சோவியத் ருஷ்யாவின் தந்தை என்றழைக்கப்படும் வி.அய்.லெனின் அவர்கள் - 'அரசைப் பொறுத்த வரையில் மத நம்பிக்கை அவரவர்களது சொந்த விவகாரம் என்று வலியுறுத்துகிறோம். ஆனால் நமது கட்சியைப் பொறுத்த வரையில் இவ்வாறு மதநம்பிக்கையை அவரவர்களது சொந்த விவகாரமாக எவ்வகையிலும் நாம் கருதமுடியாது'-என்றார். கம்யூனிஸ்டுகளின் மார்க்சிய பொருள் முதல்வாத சித்தாந்தமே, கருத்து முதல்வாத சித்தாந்தத்தையும் மத போதனையையும் அடிப்படையிலேயே எதிர்க்கிறது. மேலும் சோவியத்தில் ஒரே கட்சிதான் - கம்யூனிஸ்டுக் கட்சிதான்-ஆளுங்கட்சி என்பதறிவோம். இந்தக் கட்சியின் உறுப்பினர்-மார்க்சியதத்துவத்தின் படியும், லெனின் கருத்துப்படியும் மதம் அற்றவராக - நாத்திகராகத் தான் இருக்க முடியும். எனவே ஆட்சித்தலைவர்களும் நாத்திகர்களே. ஆத்திகமடையன் ஒருவனும் நாட்டை நடத்தும் பொறுப்பினை ஏற்க வழியில்லை. அரசு எவ்வழி-அவ்வழி மக்கள் எனவே சோவியத்ருஷியாவை நாத்திகர்களைக்கொண்ட நாத்திக நாடு எனலாம்.

**சீனா:** 75 கோடி மக்களைக்கொண்ட சீனாவில் நாத்திகம் தவிர்த்து மறுபேச்சு இல்லை. அது முழுமையான நாத்திகநாடே.

**அமெரிக்கா:-** பொதுவாக நாடு பெயர்ந்து செல்கிறவர்கள் துணிச்சல் மிக்கவர்களாகவும் (adventurists), மூடநம்பிக்கைகள் அற்றவர்களாகவும் இருப்பார்கள் அமெரிக்காவைப் பொறுத்தவரை அப்படித்தான் சொல்லலாம். கடந்த நான்கு நூற்றாண்டுகளில் உலகின் பல நாடுகளிலுமிருந்து சென றவர்கள் தங்கி வாழத்தொடங்கிய இடம் அது. எனவே தான் அது விஞ்ஞானத்தில் ஈடற்ற முன்னேற்றம் கண்டிருக்கின்றது.

1—7—1965-ல் அமெரிக்காவில் மக்கள் தொகை 19,45,83,000 இவர்களில் கிறித்து, புத்தம் போன்ற 253 மத அமைப்புக்களைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை 12,09,65,238. மிகுதியுள்ள 7,36,17,762 மக்கள் எந்த நம்பிக்கையுமற்றவர்கள். மதத்தைச் சார்ந்தவர்களாக இருப்போரிலும் இன்றும் 'வைதீக' மாக இருப்பவர்கள் எண்ணிக்கை இன்னும் குறைவாகும். முன்பு அமெரிக்க விண்வெளி வீரர்கள் சந்திரனில் இறங்கியபோது 'பைபிள்' படித்ததைக் கூறி அமெரிக்கர்கள் ஆத்திகர்களே என்று யாராவது கூறினால் அப்படிக் கூறியவரின் மூளையைத்தான் சந்தேகிக்கவேண்டும். ஏனென்றால் அமெரிக்காவில் குடியுரிமை அரசியலமைப்பு

# "பகுத்தறிவுக் களஞ்சியம்"

(நாத்திகக் கொள்கைப் பரப்பு வெளியீட்டகம்)

நிர்வாகி : **சி. பி. சர்வாதிகாரி**

தந்தை பெரியார் அவர்களின் தன்மான—பகுத்தறிவுக் கருத்துக்களை
'பகுத்தறிவுத் தோட்டாக்களாக' திங்கள்தோறும்
அச்சிட்டு வெளியிட்டு வரும்

**ஒரே நிறுவனம்**

## "பகுத்தறிவுக் களஞ்சியம்"

**இரும்புலிக்குறிச்சி**

வழி : **உடையார்பாளையம், திருச்சிமாவட்டம்.**

குறிப்பு : எமது களஞ்சியத்தின் துண்டு வெளியீடு தேவைப்படுவோர் 45 காசு அஞ்சல் முத்திரையுடன் நிர்வாகி முகவரிக்கு எழுதவும்.

With the
Best Compliments
From

Phones: Offi. : 28269
Res : 62661

# ALATHOOR DORASWAMI CHETTY & Co.

37, GODOWN STREET,
MADRAS-1.

உள்ளது. கட்சி அரசியல்தான் அங்கேயும். விண்வெளி ஆராய்ச்சிக்குப் பல ஆயிரம் கோடி டாலர்களை வீணாகச் செலவழிக்கா தீர்கள் என்று வாதிட அமெரிக்க செனட், சட்டசபை இரண்டிலுமே ஆட்கள் உள்ளார்கள். நிச்சயமாக எந்த நாத்திகனும் விஞ்ஞான ஆராய்ச்சி வீண் என்று சொல்ல மாட்டான். எனவேதான் இப்படி ஒரு 'பைபிள்' வர்ணம் கொடுத்து ஆத்திகர் களைத் திசை திருப்பவே இப்படிச் செய்தார்கள் என்பேன். மேலும் சந்திரக் கப்பலுக்கு 13-என்ற எண்ணினைக் கொடுத்தனுப்பிய நாத்திக விஞ்ஞானிகள் அவர்கள். அது சிக்கலுக்குள்ளானதும் இங்குள்ள சிட்டுக்குடுமி பார்ப்பான் சோசியம் சொல்லி மவுண்ட் ரோடு மகாவிஷ்ணுவில் கொட்டை கொட்டையாகப் போட்டு நம்மை மடையர்களாக்கப் பார்த்தார்களே தவிர அமெரிக்கர்கள் ஒன்றும் முட்டாள்களல்ல.

**இந்தியா**: 'இந்து மதம், என்ற ஒரு மதமே கிடையாது. எல்லாம் இந்த பார்ப்பான் கற்பித்தது. நாம் இந்துக்கள் அல்ல. நாம் திராவிடர்கள். நாம் நாத்திகர்கள்' என்று ஒரு தனி மனிதர் அரை நூற்றாண்டாக முழக்கமிட்டு—பேரியக்கமாக மாறி, சகாப்தமாக உருப்பெற்றிருக்கிறார் — அவரே, தந்தை பெரியார் அவர்களாவார். தன்னுடைய தளபதி தலைவர் அண்ணாவை அவர் இழந்து நின்றாலும் அவருக்குக் காணிக்கையாக்கப்பட்டத் தன்மான அமைச்சரவை அவர் கருத்துக்களைச் செயலாற்ற முனைந்து நிற்கிறது.

**இறுதியாக எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துக் கணக்கிட்டால் வியப்பாக இருக்கிறது. ஆம். இந்த உலகமெங்கும் நாத்திக மயமாயிருக்கிறது.** உலகின் மொத்த மக்கட் தொகை சுமார் 350 கோடியாகும். இதில் சீனா, சோவியத் ருஷ்யா போன்ற கம்யூனிஸ்ட் நாடுகளின் மக்கள் தொகைமட்டும் 120 கோடியாகும். இவர்களெல்லாம் நாத்திகர்களே என்பது ஏற்கெனவேபெறப்பட்டுவிட்டது. அதுபோலவே உலகின் 17 கோடி புத்தர்களும் நாத்திகர்களே. மற்றைய உலக நாடுகளில் உள்ள நாத்திகர்களையும் சேர்த்தால் **உலகின் 75 விழுக்காடு—அதாவது முக்கால் பங்கு நாத்திகர்களே என்ற உண்மை தெரியும்.** மேலும் ஆப்ரிக்கா போன்ற மிகவும் பின் தங்கிய நாடுகளைக் கணக்கில் சேர்த்துக் கொள்ளவில்லை. உலகில் பின் தங்கிய—பொருளாதாரத்தால், — கல்வி வளர்ச்சியின்மையால்-பின் தங்கிய நாடுகளிலேதான் புதிய மத அமைப்புகள், கோவில்கள், மடங்கள், "விவேகானந்தர் பாறைகள்" இவைகளெல்லாம் லட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் ரூபாய்கள் செலவிடப்பட்டு அமைக்கப் படுகின்றன! என் அப்பா அம்மாவிற்கு ஓட்டு உரிமை இருக்கிறது என்பதற்காகவே எனக்கு ஒருவரும் ஓட்டுரிமை கொடுத்துவிட மாட்டார்கள். எனக்கு 21 வயது முடிந்து விட்டதை மெய்ப்பித்துக் காட்டி உரிய முறையில் பதிவு செய்துகொண்டால்தான் எனக்கு ஓட்டுரிமை. ஆனால் என்னைக் கேட்காமலே என்னை 'இந்து' என்கிறார்கள். இந்துமதச் சட்டப்படிதான் நீதி கொடுக்கிறார்கள். இதையெல்லாம் நாத்திகர்கள் உணரவேண்டும். இந்த உலகம் நாத்திக உலகம். இதில் 75 சதவீதம் பேர் நாத்திகர்கள். 25 சதவீதம் பேர்களே மதவாதிகள். இந்த 25 சதவீதத்தினரைத் திருப்திபடுத்தினால்தான் நாம் நிலைக்க முடியும் என்ற கேவலமான எண்ணத்தை விட்டுவிட வேண்டும். மாறாக அவர்களை மூலையில் உட்கார்த்திவிட்டு இந்த உலகில் விஞ்ஞானத்தின் ஆட்சி—நாத்திகத்தின் ஆட்சி—நல்லவர்களின் ஆட்சி மலரச் செய்ய வேண்டும். ஏ! நாத்திக உலகமே ஒன்றுபடு! நாத்திகம்தான் மனிதனை உய்விக்கும் மாமருந்து.


**92-வது ஆண்டில் மதிப்பிற்குரிய பெரியார் அவர்கள்**
**உடல் நலத்துடன் பல்லாண்டு வாழ இறைவனை வேண்டுகிறோம்**

# செல்வராஜ் பப்ளிஷர்ஸ்

**கல்வி நூற்பதிப்பாளர்கள்**

**321-322, நேதாஜி ரோடு, ஈரோடு-1.**

*Future of Radiography in India*

*Closely Linked with*

## Indu Medical X-Ray Films

# THE X-RAY AND ALLIED PRODUCTS,

SOLE DISTRIBUTORS FOR

| | | |
|---|---|---|
| **MADRAS** | **PONDICHERRY** | **ANDAMAN &** |
| **MYSORE** | **KERALA,** | **NICOBAR** |
| | **ANDHRA PRADESH** | **ISLANDS** |

*Head Office :*

42, Whites Road,
MADRAS-14.
Phone: 86542
Grams: "FILMEXRAY"

*Branch Office :*

24, Viswanatha Rao Road,
Madhavanagar, BANGALORE-1
Phone: 73570
Grams: "FILMEXRAY"

In addition to INDU Medical X-ray Films in all standard sizes and packings, we are also distributors for:

KODAK X-ray Chemicals,
Barium Sulphate (X-ray Quality)
X-ray Accessories, &
Dark Room Equipments,
Contrast Media, etc.

Please mail your enquiries and orders to us for the above items.

தமிழகத்தின் பொற்காலம்

# கல்வி வளர்ச்சி

எஸ். வி. சிட்டிபாபு, M.A., L.T.,
(பள்ளிக் கல்வி இயக்குநர்)


கல்வியின் அளவும் தரமுமே ஒரு சமூகத்தை மதிப்பிட உதவும் முதன்மையான அளவுகோல்களாகும். இதை நன்கு உணர்ந்த நம் தமிழ்நாட்டு அரசு, மாநில வரவு செலவுத்திட்டத்தில் கல்விக்காகவே தற்போது 23 சதவிகிதம் வரை செலவிடுகிறது. இதில் சரிபாதியை ஆரம்பக்கல்விக்காகச் செலவழித்து வருகின்றது. கல்வியினத்திற்காக 1966-67ல் வரவு செலவு திட்டத்தில் செலவிடப்பட்டது, ரூ. 44·31, கோடியாக இருந்தது. இது 1970-71ல் ரூ. 66·83 கோடியாக உயர்ந்துள்ளது.

## ஆரம்பப் பள்ளிகள்

சில வருடங்களாகத் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள கல்வித் தாகத்தை தணிக்க நம் அரசு தொடக்கப்பள்ளிகளில் 6-11 வயது சிறுவர்கள் அனைவரையும் சேர்த்துக்கொள்ளவும், 300ம் அதற்கு மேற்பட்டும் மக்கள் தொகையுள்ள உள்ளூர் பகுதிகள் அனைத்திலும் குறைந்தது ஒரு தொடக்கப்பள்ளியாவது ஏற்படுத்தவும் திட்டமிட்டது. இதில் இரண்டாவது குறிக்கோளை எய்தி விட்டோம். 1969-70 இறுதியில் 6-11 வயதுச்சிறார்களில் 92·61 சதவிகிதம் பேர் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

1966-67ல் இருந்த தொடகக நடுப் பள்ளிகள் 31,157, 1969-70ல் 31,632 ஆக உயர்ந்துள்ளது. பள்ளி மாணவ-மாணவிகளின் சேர்க்கை 1966-67-லிருந்து 1969-70 வரை கீழ்கண்டபடி உயர்ந்துள்ளது.

| | 1966-67 | 1967-68 | 68-69 | 69-70 |
|---|---|---|---|---|
| மாணவர்கள் (லட்சத்தில்) | 34·66 | 35·87 | 36·12 | 37·06 |
| மாணவிகள் (லட்சத்தில்) | 23·00 | 24·53 | 25·19 | 25·95 |



தொடக்கக் கல்வியில், எண்ணிக்கை அளவுடன் தரத்தையும் உயர்த்த பல திட்டங்கள் தொடர்ந்து நிறைவேற்றப்படுகின்றன.

குழந்தைகள் பள்ளிகளில் சேரவும், தொடர்ந்து படிக்கவும் மதிய உணவுத் திட்டம், இலவச சீருடைத் திட்டம் ஆகியவை தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. இதுபற்றிய 1966-67, 1969-70-ல் ஆண்டுகளுக்கான புள்ளிவிவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

1966-77-ல் 29,115 உணவு மையங்களும், 1969-1970ல் 29,355 உணவு மையங்களும் இருந்தன.

தந்தை பெரியார் அவர்களின் 92வது பிறந்த நன்னாளில்
எங்களது இதயங்கனிந்த வாழ்த்துக்கள்

☆

# தமிழ் நாடு

மெத்தை, தலையணை பஞ்சு, சோபா கம்பெட்
தயாரிப்பாளர்

15, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை-3.

வைக்கம் வீரர் தந்தை பெரியார்
வாழிய வாழியவே!

போன்: 316

## K. P. அருணாசலம் அண்ட் சன்ஸ்

6, நஞ்சப்ப முதலியார் தெரு,
திருச்செங்கோடு (சேலம் மாவட்டம்)

கணபதி சாயத் தொழிற்சாலை, நூல் வியாபாரம்,
உணவு தானிய மொத்த வியாபாரம்.

| மதிய உணவுத் திட்டம் | | இலவச சீருடைத் திட்டம் | |
|---|---|---|---|
| | மாணவர்களின் எண்ணிக்கை | கொடையாகக் கிடைசதவை | பெற்றோர் களால் தரப்பட்டவை |
| 1966-67 | 17,30,010 | 9,64,612 | 2270162 |
| 1969-70 | 18,00, 335 | 11, 23, 781 | 2376276 |

ஒன்று முதல் மூன்று வகுப்பு வரையில் உள்ள வகுப்புகளில் மதிய உணவுபெறும் மாணவர்களுக்கு, அரசு பாட நூல்களை இலவசமாக வழங்கும் திட்டம் 1970—71ம் ஆண்டிலும் தொடர்ந்து நிறைவேற்றப்படு கிறது.

தமிழ்நாட்டில், புத்தக வங்கிகள் பல பள்ளிகளில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

**பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்**

1970 வரை பள்ளிச்சீரமைப்பு மாநாடு களின் எண்ணிக்கை 424 ஆக உயர்ந்துள் ளது. மதிப்பும் ரூ. 14·65 கோடியாக ஆகி யுள்ளது. இச்சீரமைப்புத்திட்டங்கள் மூலம் பள்ளிக் கட்டிடங்களும், ஆசிரியர்களுக் கான வீடுகளும் கூட கட்டப்பட்டுள்ளன.

கீழே கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்களிலிருந்து 1967-லிருந்து 1970 வரை இடை நிலைக்கல்வியில் தமிழ்நாடு கண் டுள்ள முன்னேற்றத்தை அறியலாம்.

| | 1966-67 | 67-68 | 68-69 | 69-70 |
|---|---|---|---|---|
| உயர்நிலைபபள்ளி களின் எண்ணிக்கை | 2372 | 2449 | 2509 | 2572 |
| மாணவமாணவிகளின் எண்ணிக்கை (லடசத்தில்) | 6·08 | 6·26 | 6·36 | 6·68 |

1969-70-ம் ஆண்டில் 14-17 வயதுத் தொகுதி மாணவர்களில் 34·21 சதவீத மாணவர்கள் உயர் நிலைப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். 1970-71ம் ஆண்டில் இவ்வயதுத் தொகுதியில் மேலும் 70,000 மாணவர்களைச் சேர்க்க ஆவன செய்யப் பட்டுள்ளது.

பள்ளிகளில் ஆங்கிலம் கற்பிக்கும் முறைகளின் தரத்தை உயர்த்துவதற்கு 1965ம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வரும் ஆங்கில மொழி கற்பித்தல் இயக்கம் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

ஒரே சீரும், தரமுள்ள புத்தகங்களாக வெளியிடும் நோக்கத்துடன் தொடக்கப் பள்ளிகளுக்கும் நடுநிலைப்பள்ளிகளுக்கும் உரிய பாடநூல்களை அரசு தயாரித்து வெளியிடும் திட்டம் தொடர்ந்து செயல் பட்டு வருவதுடன் இவ்வாண்டு விரிவுபடுத் தப்பட்டும் உள்ளது. 1968-69 வரை 4 முதல் 8 வரையுள்ள வகுப்புக்களுக்குரிய ஆங்கிலப்பாட நூல்களையும் 1 முதல் 8 வரையுள்ள வகுப்புக்களுக்குரிய தமிழ்ப்பாட நூல்களையும் அரசு தயாரித்து வெளியிட் டுள்ளது. பாடநூல் வெளியீட்டுச்சங்கம் 1970 ல் மூன்று முதல் 10 வரையுள்ள வகுப் புக்களுக்கு கணித நூல்களும், 9, 10 வகுப் புக்களுக்கு ஆங்கில, தமிழ்பாட நூல்களும் வெளியிட்டுள்ளது.

இம்மாநிலத்தில் முதியோர் கல்லாமை யைப் போக்குவதற்கான ஒரு ஏற்பாடாக 1969-70 ல் 500 முதியோர் கல்வி நிலையங் களைத் திறந்து நடத்த அரசு அனுமதித் துள்ளது. இதற்கான மறுபயிற்சி வகுப்புகள் ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்டன.

நாட்டின் கல்வி வளர்ச்சியின் முக்கிய அங்கமான ஆசிரியர்களின் பணிநிலை களை மேம்படுத்த வேண்டியதின் அவசி யத்தை தமிழ்நாடு அரசு நன்கு உணர்ந்து 1967-லிருந்து படிப்படியாகப் பல வசதிகள், நலன்கள் சலுகைகளைத் தர நடவடிக்கை கள் எடுத்துவருகிறது.

ஆக 1967 முதல் கல்வியின் வளர்ச்சி யும் ஆசிரியர் நலனும் அரசின் சிறப்பான கவனத்தில் இருக்கின்றன. மேலும் கல்வி வளர்ச்சியடையவும், அதன் தரம் உயரவும், ஆசிரியர்கள் நலன் தொடர்ந்து சீர்பெற வும், அரசு உன்னிப்புடன் கவனித்து வரு கிறது. அத்துடன் கல்வித்துறையினர், பத் திரிகையாளர், பொதுமக்கள், ஆசிரியர்கள், பள்ளி நிறுவனத்தினர் சட்டமன்ற உறுப்பி னர்கள் ஆகியோருடன் கலந்தாலோசித்து அவ்வப்போது அரசு வேண்டிட்வைகளைச் செய்து வருவதைப் பொதுமக்கள் அறிந்து தமிழகக் கல்வியின் பொற்காலம் இதுவே என்று உணர்ந்து மகிழ்வுறுகின்றனர்.

With the

Best Compliments

From

★

Educational filmstrips/ 16mm sound films sound and filmstrips projectors and audiovisual Equipments all approved by the Director of school Education, Madras.

available at :

Phone: 71504

# THE VISUAL EDUCATION CENTRE

69/A, Kutchery Road

MADARAS-4.

★

# பெரியாரும் கம்ப்யூட்டரும்

★

அறிவியலின் வியத்தகு சாதனைகளில் ஒன்று கம்ப்யூட்டர் (Computer) எனப்படும் 'இயந்திர மூளை. இந்த அதிசயக் கருவியை அறிவுலக மேதையான தந்தை பெரியார் அவர்கள் பார்வையிட்டது, அல்ல, சந்தித்தது இந்த ஆண்டின் சிறப்பான நிகழ்ச்சிகளில் ஒன்று என்பது மிகையாகாது.

இருவருக்குமிடையே உள்ள பொருத்தம் தான் எத்தனை பொருத்தம்! தயவு தாட்சண்யமின்றி உண்மையே பேசுவது தந்தை பெரியாரின் குணம்; கம்ப்யூட்டரும் இதே போன்றதே.

அறிவுலகின் வரலாறுகள், சாதனைகள் அனைத்தும் அய்யா அவர்களுக்கு மனப்பாடம்; இதே போலத்தான் கம்ப்யூட்டருக்கும் உலகத் தகவல்களையெல்லாம் ஒரு நொடிக்குள் கூறிவிடக்கூடிய திறனுண்டு.

மூடத்தனத்தின் முடைநாற்றம் போக்க வந்த கற்பூரப் பெட்டகம் நமது தந்தை; கம்ப்யூட்டரும் உலக மூடநம்பிக்கைகளுக்கு ஒரு முடிவு கட்ட வந்த விந்தைப் பொருள். இவர்கள் சந்தித்தால்.........

"பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுக்கு யானாயகி கிண்டி பொறியியல் கல்லூரியின் அய். பி. எம். 1620 கம்ப்யூட்டர் இதயங்கனிந்த வரவேற்பை நல்குகிறேன்.''

"அய்யா! தங்களது வருகையினால் எனக்குப் பெருமை பிடிபடவில்லை. எனது திறமைகள் சிலவற்றைத் தங்கள் முன்னால் செய்து காட்டுவதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைவேன்"

"நிற்க, நான் தங்களைப்பின்பற்றுகிறவன்; ஏனென்றால் நானும் தங்களைப்போல மெய்யே பேசுபவன்; மூடநம்பிக்கை அற்றவன்"

எத்தனை பணிவு; எத்தனை பாசம்! இந்தக் கம்ப்யூட்டர் கருவி, உயிரற்ற ஜடப் பொருள் தந்தை பெரியார் பால் காட்டும் பற்றிலும் பாசத்திலும் ஆயிரத்தில் ஒருபங்கு தமிழ மக்கள் அனைவராலும் காட்டப்படுமானால், அவர் கனவு காணும் லட்சிய உலகம் மறுகணமே தமிழ் நாட்டில் மலர்ந்து விடாதா!

கம்ப்யூட்டர் மீண்டும் தந்தை அவர்களிடம் தனது கதையைத் தொடர்கிறது:—

"நான் ஒரு ஜடப்பொருள். முற்றிலும் டிரான்சிஸ்டர் மயமாகிய அய் .பி. எம். 1620 எலெக்டிரானிக் கம்ப்யூட்டர் நிமிஷத்துக்கு 250 அட்டைகள் (வினாடிக்கு 333 எழுத்துக்கள்) என்ற வேகத்தில் 'பஞ்ச்' செய்யப்பட்ட அட்டைகளிலிருந்து இந்தத் தகவல்களை நான் படிக்கிறேன். வினாடிக்கு 10 எழுத்துக்கள் என்றவேகத்தில் 'டைப்' செய்கிறேன்.''


இவ்வாறு தனது 'ஜாதக'த்தைத்தந்தை பெரியார் அவர்களிடம் சொல்லி விளக்கியது அந்த விந்தைக் கருவி. பின்னர் தனது திறமையைக் காட்டியது. தந்தை பெரியார் கேட்டகேள்விகள் அனைத்துக்கும் 'டக்' 'டக்' என்று பதில் கூறி, கூடியிருந்த அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

கசப்பான உண்மைகளைக்கூட கூச்சமோ, அச்சமோ இன்றி பகிரங்கமாக, 'பட்' 'பட்' என்று போட்டு உடைக்கும் தந்தை பெரியார், தம்மைப் போன்ற 'உண்மை விளம்பி' ஒன்றைக்கண்டு அளவளாவிய திருப்தியுடன் கேள்விகளை அள்ளி விசினார்கள்; கம்ப்யூட்டரும் சளைக்காமல் பதில்களைக் கொட்டியவண்ணம் இருந்தது.

கிறிஸ்துவுக்குப் பின்னுள்ள எந்தத் தேதியைச் சொன்னாலும் இமை மூடித் திறப்பதற்குள் அன்று என்ன கிழமை என்பதைக் கூறியது கம்ப்யூட்டர்.

கேள்வி:—2—12—1933 என்ன கிழமை?
பதில்:— சனி
கேள்வி:— 17—9—1879 (அய்யா அவர்கள் பிறந்த தேதி) என்ன கிழமை?
பதில்:— புதன்
கேள்வி:—இன்று தேதி, கிழமை என்ன?
பதில்:— 16-ந் தேதி; வியாழக்கிழமை

இத்துடன் வரலாற்றின் இணக்கமான சந்திப்பு ஒன்று இனிமையாகமுடிவடைந்தது.



With the Best Compliments From:

**Thiru. R. NARAYANASWAMY**

CONTRACTOR,
Civil and Sanitary Works,

★

67 Madavapuram
East Street,
ALANDUR, MADRAS-16.

வாழ்க பெரியார்

## T .K. கோவிந்தசாமி

லீக்கோ அண்டு யூரியாவிற்கு மொத்த விற்பனையாளர்
கரி அண்டு தென்னங்கீற்று மொத்த, சில்லரை வியாபாரம்

**ஏசண்ட்: நட்சத்திர மார்க் ஷாவாலா உரங்கள்**
**6, பழனிசாமி முதலியார் தெரு,**
**திருப்பத்தூர் (வ ஆ.)**

## தந்தை பெரியார்

தமது வாழ்நாளில் பாதியை 45 ஆண்டு
சமுதாய வளர்ச்சிக்காகவே உழைத்ததுபோல்
அய்யா அவர்கள் நமக்குப் பகுத்தறிவை ஊட்டவும்
மாநில சுய ஆட்சித் தத்துவம் முழுமையாக மலரவும்
தந்தை அவர்கள் நம்மிடையே பல்லாண்டு வாழவேண்டுமென்றும்
அவரது அறிவுரையினால் நம் அறிவு பெருகியதுபோல்
விவசாயிகள் நெய்வேலி யூரியாவை உபயோகித்து
உணவு உற்பத்தியைப் பெருக்கி நாட்டை
வளமாக்க வேண்டுமென மனமார,
உளமார வேண்டுகிறேன்.

T. K. கோவிந்தசாமி

பெரியார் 92-ம் ஆண்டு விழாவிற்கு எமது வாழ்த்துக்கள்!

## திலகா இரும்புத் தொழிற்சாலை & ஸ்டீல் பர்னிச்சர்

**65, A. P. தங்கவேலு செட்டியார் வீதி. ஈரோடு-3.**
பிராஞ்சு:— **முருகன் மோட்டார் ஒர்க்ஸ், 104, பார்க்ரோடு**
எங்களிடம் ஸ்டீல் பீரோக்கள், டேபிள்கள், சேர்கள்,
சோபாசெட்டுகள், கட்டில்கள், குழந்தைகளுக்குத்
தொட்டில்கள், அலமாரிகள் இன்னும் ஸ்டீல்
சம்பந்தமான வேலைகளும் ஆர்டரின்
பேரில் செய்து தரப்படும்.
உரிமையாளர்கள்;—பி. சுப்பையா அண்டு பிரதர்ஸ், ஈரோடு.

நிறுவியது : 1965 வாழ்க பெரியார் ! போன் : 26558

தாழ்ந்த தமிழினத்தை தலைநிமிரச் செய்த தந்தை பெரியார் நீடூழி வாழ்க!
உழைப்பிற்கும், உறுதிக்கும், உத்திரவாதத்திற்கும் சிறந்தவை

## "SEKAR" ஸ்டாண்ட்ஸ்
## M. B. T. சேகர் இண்டஸ்ட்ரீஸ்

**34-எ, புதுக்குயவர்பாளையம் சந்து,**
**புதுமாகாளிபட்டி ரோடு :: மதுரை-1.**
சிறந்த சைக்கிள் ஸ்டாண்டு, கேரியர் மற்றும் சகலவிதமான சைக்கிள்
உறுப்புகள் தயாரிப்பவர்கள்.

# வணக்கத்திற்குரிய தந்தை பெரியார் அவர்களின் 92வது ஆண்டு பிறந்ததின விழாவில் நாம் மன உறுதியுடன் உடல் உறுதியும் பெற்று வாழ்வோம்!



"தண்டபாணி மருத்துவ நிலைய உரிமையாளர் தோழர். ச. ராசகோபால் அவர்களை நன்கு அறிவேன். 25 ஆண்டுகளுக்குமேல் மருத்துவ அனுபவம் பெற்றவர். மேலும் பகுத்தறிவு இயக்கத்தைச் சார்ந்தவர். இவரின் மருத்துவ நிலையத்தைப் பார்வையிட்டேன். சிறந்த மருந்துகளைத் தயாரித்துக் கொடிய நோய்களைச் சுகப்படுத்திய இவரின் அறிவு நுட்பத்தை மெச்சுகிறேன். இவரின் மருத்துவத்தால் பயன்பெற்ற அநேக தோழர்களின் புகைப்படங்களையும், நற்சான்றுகளையும் கண்டு மகிழ்ந்தேன். தோழர் ச: ராசகோபால் அவர்களுக்கு என் ஆசிகள்.

—**ஈ. வெ. ராமசாமி** (8-11-56)

மூலம், பவுந்திரம், இருமல், இளைப்பு, (ஆஸ்த்துமா) நீரழிவு, ஊரல், அரிப்பு, பத்துகள், இரத்தசோகை, உடல் மெலிவு, கணைச்சூடு போன்ற நோய்களுக்கு உயர்தரமான சித்த, ஆயுர்வேத மருந்துகள் கிடைக்கும்.

42 ஆண்டுகள் அனுபவம் பெற்ற தலைமை வைத்தியர் ச. ராசகோபால் அவர்களின் சிறந்த ஆலோசனை இலவசம்.

தமிழ்நாட்டின் சிறிய, பெரிய ஊர்களிலும், சிங்கப்பூர், பினாங்கு, இலங்கை ஆகிய நாடுகளிலும் ஏஜண்டுகள் மூலம் எமது மருந்துகள் விற்பனையாகி வருகின்றன.

**முழு விபர கேட்லாக் இலவசம்**

# தண்டபாணி வைத்தியசாலை

## இரயில்வே நிலைய ரோடு, பழனி

**(மதுரை மாவட்டம்)**

தபால் பெட்டி எண்: 1 தொலைபேசி எண்: 250

## கிளை: 2/63, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

தொலைபேசி எண்: 85843.

# மின்சார வளர்ச்சி

கே. ஆர். இராதாகிருஷ்ணன்
(தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம்)

தமிழகத்தின் பொற்காலம்

தமிழ்நாட்டில் 1929-ஆம் ஆண்டு பைக்காரா நீர்மின்சாரத் திட்டம் முதன் முதல் துவக்கப்பட்டது. இன்று தமிழ்நாட்டில் 13 நீர்மின் நிலையங்களும் நெய்வேலி உட்பட 4 அனல் மின் நிலையங்களும் இயங்கி வருகின்றன. இவைகளின் மொத்த உற்பத்தித் திறன் 1820 மெகா வாட்டுகளாகும்.

மின்சார உபயோகத்திலும் தமிழ்நாடு கணிசமான முன்னேற்றம் கண்டிருக்கின்றது. 1951-ம் ஆண்டு 69 கோடி யூனிட் மின்சாரம் தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்டது. இன்றோ இது ஏறத்தாழ 9 மடங்காகி, சென்ற ஆண்டில் 460 கோடி யூனிட்டுகளாக வளர்ந்துள்ளது.

மின்துறையில் ஏற்பட்ட இந்த குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினால் தமிழ்நாட்டில் தொழிற்துறையிலும் சிறப்பான வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இன்று 235 கோடி யூனிட்டுகள் தொழிலுக்காகப் பயன்படுத்தப்படுகிறது என்பதை பார்க்கும்போது தொழிற்துறையில நம் தமிழ்நாடு அடைந்துள்ள நல்ல முன்னேற்றத்தை உணர முடிகிறது.

தமிழகத்தில் உள்ள 3 கோடியே 93 லட்சம் மக்களில் 70 சத விகிதத்தினர் கிராமங்களில் வசிக்கின்றனர்- தமிழ்நாட்டிலே மொத்தமுள்ள 57,072 கிராமங்கள்சிற்றூர்களில் 35,677 கிராமங்கள் சிற்றூர்கள் 31—3—70 வரை மின்வசதி பெற்றுவிட்டன. வேறு எந்த மாநிலத்திலும் இந்த அளவிற்கு கிராமங்கள் மின் வசதி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். எஞ்சியுள்ள எல்லா கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் 1971—72-ம் ஆண்டிற்குள் மின்சார வசதி அளித்துவிடவேண்டும் என்ற இலட்சியத்தை முன்னிறுத்திப் பணிகள் நடைபெற்று வருகின்றன.



கிராம மின்வசதித் திட்டம் என்னும்போது, நமது கண் முன்னே நிற்பது அங்கு அயராது இயங்கும் வேளாண்மை மின் விசையேற்றங்கள்தான்.

தமிழ்நாட்டிலே உள்ள 9 லட்சம் நீர்பாசனக் கிணறுகளில் 4,70,903 கிணறுகளுக்கு 31-3-70 முடிய மின்சார விசையேற்றங்கள் பொருத்தப்பட்டுவிட்டன. இந்தியா முழுவதற்குமாக 31-3-70 முடிய 11,57,468 விசையேற்றங்களுக்கு மின்இணைப்புத் தரப்பட்டுள்ளது. அவைகளில் தமிழ்நாட்டில் மட்டும் 4,70,903 விசையேற்றங்கள் மின்சாரத்தில் இயங்கி வருகின்றது. இது நாட்

With the Best Compliments of:

# M. M. RUBBER CO. PRIVATE LIMITED

Manufacturers of

"M M FOAM"

mattresses, pillows, sofa cushions,
travel kits, bus seats etc

Sales and Show Room:
38, Whites Road,
MADRAS-14.

டின் மொத்தத்தில் 40 சதவிகிதத்திற்கும் மேலாகும். கிராமப் புறங்களில் அக்கறை காட்டி மின்சக்தியை ஊருக்கு ஊர் வழங்குவதிலும் நீர்ப்பாசன கிணறுகளுக்கு மின் இணைப்புத் தருவதிலும் தமிழ்நாடு தான், இந்தியாவிலேயே முதலிடம் பெற்று முன்னோடியாக நிற்கிறது.

31—3—70 முடிய 4,466 தாழ்த்தப்பட்ட இன மக்கள் குடியிருப்புக்கள் மின்ஒளியால் பயன்பெறுகின்றன.

முதல் அய்ந்தாண்டு திட்டத் துவக்கத்தில் மின்சாரத்துறையின் மூலம்கிடைத்த வருமானம் ஆண்டொன்றுக்கு 3 கோடி ரூபாயாகும். இது படிப்படியாக உயர்ந்து சென்ற ஆண்டில் சுமார் 55 கோடி ரூபாயாக உயர்ந்தது.

முதல் அய்ந்தாண்டுத்திட்டத்தின் ஆரம்பத்தில் தமிழ்நாட்டில் தனி மனிதனுக்குப் பயன்படுத்தப்பட்ட மின் அளவு 12 யூனிட்டுகள்தான். ஆனால் இன்றோ இது சுமார் 10 மடங்காகப் பெருகி 119 யூனிட்டுகளாக உயர்ந்து இருக்கிறது. தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு இதைவிட வேறு உதாரணம் தேவையில்லை. நான்காம் திட்ட இறுதியில், இது 200 ஆக உயர்ந்து நிற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வளர்ந்துவரும் தமிழகத்தின் எதிர்காலத் தேவையைப் பூர்த்தி செய்ய தற்சமயம் சென்னைக்கருகில் இருக்கும் எண்ணூரில் 340 மெகாவாட் திறனுள்ள அனல் மின் நிலையம் உருவாக்கப்பட்டு வருகின்றது.

இது தவிர தற்பொழுது பரம்பிக்குளம்-ஆளியாறு, கோதையாறு, நீர் மின் திட்டங்களும் விரைவாக முன்னேறி வருகின்றன.

நான்காம் திட்டத்தில் கிட்டத்தட்ட 170 கோடி ரூபாய் மின்சார வளர்ச்சிக்கு செலவிடப்படும். இத்திட்டத்தின்கீழ் நீலகிரியில் 100 மெகாவாட்திறனுள்ளபாண்டியார்—புன்னம்புழா (மோயார்) நீர் மின்நிலையமும், குந்தா திட்டத்தில் அதிகப்படியாக 110 மெகாவாட் இயந்திரங்கள் அமைப்பதற்கும் ஆன பூர்வாங்க திட்ட வேலைகள் துவக்கப்பட்டுவிட்டன. இதுதவிர, நீலகிரி மாவட்டத்தில் நடுவட்டம் நீர்திருப்பித் திட்டத்தையும் மேற்கொண்டுள்ளோம். இதனால் பைகாரா, மோயார்மின்நிலைகளில் ஆண்டு தோறும் ஏறக்குறைய 69 மில்லியன் யூனிட் அதிகப்படியாக உற்பத்தி செய்ய இயலும். இவைதவிர, கீழ்க்கண்ட மின்சாரத் திட்டங்கள் நான்காம் திட்டக்காலத்திலேயே துவக்கப்பட இருக்கின்றன:—

(1) நீலகிரி மாவட்டத்தில் 60 மெகாவாட் திறன்கொண்ட சோலையாட்டிப் புழா நீர் மின் திட்டம்.

(2) மதுரை மாவட்டத்தில் 35 மெகாவாட் திறன் கொண்ட குருளியாறு நீர் மின்திட்டம்.

(3) நெல்லை மாவட்டத்தில் மேல்தாம்பிரபரணி நீர்மின் திட்டத்தின் கீழ் 35 மெகாவாட் திறன் கொண்ட சேர்வலாறு நீர்மின்நிலையம்.

(4) கோவை மாவட்டத்தில் நெல்லித்துறை. 50 மெகாவாட் திறன் கொண்ட நெல்லித்துறை நீர் மின்திட்டம்.

(5) குமரி மாவட்டத்தில் 35 மெகாவாட் திறன் கொண்ட பரலையாறு நீர் மின்திட்டம்

(6) கோவை மாவட்டத்தில் 100 மெகாவாட் திறன் கொண்ட கடம்பாறை நீர் மின்திட்டம்-

மேற்சொன்ன மின்திட்டங்களின் மூலம் 525 மெகாவாட் மின் சக்தி தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும்

சென்னையை அடுத்த கல்பாக்கத்தில் இந்திய அணு ஆராய்ச்சி நிறுவனத்தினரால், 200 மெகாவாட் திறன் கொண்ட அணு மின்நிலையம் ஒன்று நிறுவப்பட்டுவருகிறது.

இதுவரை விளக்கிய சாதனைகள் பெரிய அளவில் இருந்தாலும் அபிவிருத்தி அடைந்த நாடுகளோடு ஒப்பிடும்போது நாம் இன்னும் துரிதமாகவே முன்னேற வேண்டியது மிகவும் அவசியம் என்பது தெளிவாகிறது. இந்த வளர்ச்சியை அடைவதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் அயராது உழைக்கும்

தொலைபேசி எண். 50. தந்தி: சென்ட்ரல்ஸ்.

# தென்னாற்காடு மாவட்ட
# கூட்டுறவு வினியோக விற்பனைச்சங்கம் லிமிடெட்,
# கடலூர்-1

**கிளைகள் :-** சிதம்பரம், விருத்தாசலம், விழுப்புரம், செஞ்சி, திண்டிவனம், திருக்கோவிலூர், கள்ளக்குறிச்சி, பண்ருட்டி, நெல்லிக்குப்பம், கடலூர் ஓ. டி.

| | | | |
|---|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட மூலதனம். | ... | ரூ. | 6,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம். | ... | ரூ. | 4,07,500 |
| ரிசர்வ் நிதி | ... | ரூ. | 7,90,084 |
| 1969-1970ம் ஆண்டின் விற்பனை | ... | ரூ. | 1,29,46,637 |

கோதுமை, கோதுமை பண்டங்கள், சர்க்கரை, காப்பிக்கொட்டை, மளிகை சாமான்கள், அழகு சாதன பொருள்கள், சைக்கிள் டயர், ட்யூப், துணி வகைகள் முதலியன எங்களால் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. எங்களால் தயாரிக்கப்படும் கைமார்க் கலப்பு உரம் விவசாயிகளுக்கு அதிக விளைச்சலை அடைய உதவி வருகிறது.

இச்சங்கத்தின் ஒரு அங்கமாக
இயங்கிவரும் சரவணபவ கூட்டுறவு
பேரங்காடியில் மக்கள்தேவைக்குகந்த
பலதரப்பட்ட துணி வகைகள் உணவுப்பொருள்கள்,
எவர்சில்வர், அலுமினிய பாத்திரங்கள், மருந்துகள்
அனைத்தும் சகாய விலையில் கிடைக்கின்றன.

ஒருமுறை வருகை தருக! சேவையே எங்கள் நோக்கம்!!

**வே. ஜெயராமன், பி.ஏ.**
துணைப்பதிவாளர் செயலாளர்

**டி.டீ. முத்துக்குமாரசாமி நாயுடு,**
தலைவர்

# சாலை வளர்ச்சி

ஓ. சிவசங்கரன்
(ஆலோசகப் பொறியாளர், தமிழ்நாடு அரசு)

தமிழகம் தன் மக்கள் தொகையில் 85 சதவிகிதத்தினரை, நாடு முழுவதும் சீராகப் பரவியுள்ள கிராமங்களில் கொண்டதாயுள்ளது. 29901 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள பகுதி நகரங்களும், மக்கள் தொகை குவிந்துள்ள பகுதிகளும் 80-இல் இருந்து 160 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளன.

நாடு முழுவதும் பரவியுள்ள பல வகையான சிறிய-பெரிய தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கு நல்ல போக்குவரத்து அமைப்பு இன்றியமையாததாகிறது.

உழவுத் துறையிலும், விதை, எரு, பூச்சிக் கொல்லி மருந்துகள் முதலியவற்றை நகரங்களிலிருந்து கிராமங்களுக்கு எடுத்துச் செல்லவும், உற்பத்தியான பொருட்களை சந்தைகளுக்கு எடுத்துச் செல்லவும் போக்குவரத்து வசதிகள் அமைவதைப்பொறுத்தே பெரும்பாலும் அத்துறையின வெற்றி அமைந்துள்ளது.


போக்குவரத்துக்குப் பயன் படும்படியான தண்ணீர் மார்க்கங்களும் தமிழகத்தில் அதிகம் இல்லை. பக்கிங்ஹாம் கால்வாய், வேதாரண்யம் கால்வாய் இரண்டுமே குறிப்பிடத் தக்கவை.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தை தமிழகத்தில்அமைத்தது நெடுஞ்சாலைப்பொறியியல் துறையில்மற்றுமோர் சாதனையாகும்.

தமிழகத்தில் உள்ள சாலைகளின் நீளம் 1946-இல் 34, 114 கிலோ மீட்டராக இருந்தது. 1969 ஏப்ரலில் முறையே 67, 592 கிலோ மீட்டராக அதிகமாகியுள்ளது. இவற்றில் 585 கிலோ மீட்டர் சிமெண்ட்; கான்கிரீட் பாதைகள். 18031 கிலோ மீட்டர் தார்ப் பரப்புள்ள பாதைகள், 26941 கிலோ மீட்டர் ஜல்லி பரப்பப்பட்ட பாதைகள். 22035 கிலோ மீட்டர் சாதாரணப் பாதைகள்.

தமிழகத்தில் மோட்டார் வாகனப் போக்குவரத்துக்கேற்ற பாதைகளை எடுத்துக்கொண்டால், வியாபார ரீதியாக இயங்கும் வாகனங்கள் மட்டும் 100 கிலோ மீட்டர் தொலைவுக்கு 36 வாகனங்கள் என்ற விகிதத்தில் உள்ளன. எல்லா வகையான வாகனங்களையும் எடுத்துக் கொண்டால் 100 கிலோ மீட்டருக்கு 122 வாகனங்கள் என்ற விகிதத்தில் உள்ளன. மக்கள் போக்குவரத்துக்கு உதவும் வாகனங்கள்-பதிவு செய்யப்பட்டவை மாநிலத்தில் 73456 உள்ளன. அவற்றில் முழுவதும் பயன்படுத்தப்படுபவை 67226 ஆகஉள்ளன. எனவே 100-க்கு 98 என்ற விகித்தில் வாகனங்கள் பயன் படுத்தப்பட்டு வரும் நிலையைக்காணலாம்.

பின்காணும் புள்ளி விவரங்கள் பயன் படுத்தப்படும் விகிதாசாரத்தை மாநில வாரியாகக் காட்டுகின்றன.



With the Best Compliments From:

**Srinivasa Construction Company**

19-B Sriram Nagar
North Street
Madras-18.

With the Best Compliments From:

# RAJAN & REDDY

Indian Oil Dealers

92 P. H. Road,
Madras-10.

| மாநிலப் பெயர் | கிடைக்கக் கூடிய மொத்தவரி (ரூபாய் இலட்சத்தில்) | கிடைத்த வரி (இலட்சத்தில்) | விகிதாசாரம் |
|---|---|---|---|
| ஆந்திரா | 570 45 | 231 53 | 40 |
| அஸ்ஸாம் | 97.12 | 56.15 | 58 |
| பீஹார் | 102.10 | 79 18 | 77.0 |
| குஜராத் | 398.93 | 221.96 | 55 6 |
| ஜம்மு காஷ்மீர் | 9.89 | 2.29 | 23 2 |
| கேரளா | 391.23 | 217 87 | 55.5 |
| மத்தியப் பிரதேசம் | 341·39 | 184 67 | 54.0 |
| தமிழ்நாடு | 537.14 | 527.35 | 98 |
| மஹாராஷ்டிரம் | 825.31 | 421.12 | 740 |
| மைசூர் | 576.26 | 449.12 | 74.0 |
| ஒரிஸ்ஸா | 120.44 | 92.53 | 77.0 |
| பஞ்சாப் | 117.66 | 64.44 | 54.7 |
| இராஜஸ்தான் | 213.77 | 91.57 | 43.0 |
| உத்திரப் பிரதேசம் | 390.17 | 309.19 | 79·2 |
| மேற்கு வங்காளம் | 458.40 | 203.36 | 45.0 |

மேற்காணும் புள்ளி விவரங்களிலிருந்து தமிழகத்தில் வாகனப் பயன்படுத்தல் விகிதாசாரம் 98 சதவிகிதமாக இருப்பதும், உத்தரப்பிரதேசமும், பீஹாரும் அடுத்த நிலைகளைப் பெறுவதும் தெளிவாகிறது.

நல்ல பரப்புள்ள பாதைகள் உலோகப் பாதைகள் நீங்கலாக, தமிழகத்தில் 27 சதவிகிதம் உள்ளன. உலோகப் பாதைகள் 39 சதவிகிதம் உள்ளன. இந்த விகிதாசாரம் மற்ற மாநிலங்களில் இருப்பதை விட மிகவும் அதிகமாகும்.

வேறு வேறு பரப்புக்களில், வாகனங்களுக்கு ஆகும் பாதுகாப்புச் செலவைக் கீழே உள்ள அட்டவணை காட்டுகிறது.

1 சிமெண்ட் கான்கிரீட்
கி.மீ. க்கு 10.75 பைசா

2 தார்ப்பரப்பு
கி.மி. க்கு 12.28 பைசா

3. ஜல்லி பரப்பு
கி.மி. க்கு 21.5 பைசா

4. கிராவல் கி.மி. க்கு 16.81 பைசா

கிராமியப் போக்குவரத்து வளர்ச்சியில் தமிழ்நாடு அரசு பெரும் ஆர்வம் காட்டி வருகிறது. போக்குவரத்துக்காகச் செலவிடும் தொகையில் ஏறத்தாழ 50 சதவிகிதம் தமிழ்நாடு அரசினரால், கிராமியச் சாலைகளுக்காகவே செலவிடப் படுகிறது. அப்படியிருந்தும், நாம் போக்குவரத்துத் துறையில் திருப்திகரமான நிலைமையை அடைந்து விட்டதாகக் கூறமுடியாது. தொடர்ந்து நமது முயற்சிகள் அந்நிலைக்கு நம்மை விரைவில் அழைத்துச் செல்லும் என்பது திண்ணம்

★


With the Best Compliments From :

**HALE & CO**

CHEMISTS & DRUGGISTS

1/288 Nethaji Bose Road, MADRAS-1.

# தமிழ்ப் பேரொளி

பேரறிஞர் டாக்டர் அண்ணாதுரை அவர்களின் தமிழ் வாழ்வு, எழுத்தாற்றல், சொல்லாற்றல்களின் எடுத்துக்காட்டுக்கள், அவர் தம் பொன் மொழிகள், அவர்கண்ட சுவையான நிகழ்ச்சிகள், அவருக்குப் பெருமக்கள் பலர் சூட்டிய புகழ் மாலைகள், அவர் மறைவு குறித்த இரங்கல் உரைகள் ஆகியவற்றின் தொகுப்பே இத் **தமிழ்ப் பேரொளி**

அண்ணா அவர்களின் மூவண்ண உருவப்படம் முகப்பினை அழகு செய்ய அவர்தம் வரலாறு கூறும் வண்ணப் படங்களுடன் ஏற்றமும்எழிலும் மிக்க நூலாகத் திகழ்கிறது.

பக்கங்கள் 320

அழகிய பதிப்பு விலை ரூ: 6-75

பதிப்பாளர் :

**திருநெல்வேலித் தென்னிந்திய**

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,**

**1/140, பிராட்வே, சென்னை-1.**

கிளைகள் :

**கோயமுத்தூர்-1 மதுரை-1 திருநெல்வேலி-6.**



வாழ்க பெரியார் ! வளர்க அவர்தம் தொண்டு !!

# பெரியார் இராமசாமி பிற்பட்டோர் மாணவர் இல்லம் தேனி

அரை நூற்றாண்டுக்கு மேலாக சலியாது உழைத்து தமிழ் சமுதாயத்தின் உயர்வுக்கு பாடுபட்டு மாபெரும் சமுதாய மாறுதல் கண்ட, 92ம் ஆண்டிலும் அயராது சமுதாய காவலராக தொண்டாற்றிடும் தந்தை பெரியார் அவர்களின் பெயரால் பிற்பட்ட வகுப்பை சேர்ந்த மாணவர்களின் நலனுக்காக இலவச மாணவரில்லம் துவக்கி நடத்துகிறோம். இம்முதலாண்டில் பதினைந்து மாணவர்கள் பயன் பெறுகின்றனர். மாணவர் சமுதாயம், பெரியார் தம் பகுத்தறிவுக் கொள்கைகளுக்கு ஏற்ப கல்வியறிவு பெற்று உருவாக வேண்டிய புதிய சமுதாயத்தின் வழிகாட்டிகளாக உருவாக வேண்டும் என்ற ஆசையோடு துவக்கியுள்ளோம். அய்யா அவர்களின் தொண்டு, அவர் தம் கொள்கைகள் வளர வெற்றி பெற இம்மாணவர் இல்லம் பயன்படும்-பாடுபடும் என்று உறுதி கூறி

**92வது ஆண்டு காணும் தந்தை பெரியார் வாழ்க பல்லாண்டு**
**வளர்க அவர்தம் கொள்கைகள் என்று உளமார**
**வாழ்த்துகிறோம்.**

இங்ஙனம்:

**நிர்வாகிகளும், மாணவர்களும்.**

# தொழில் வளர்ச்சி

**ஏ. பத்மநாபன், அய்.ஏ.எஸ்.**
(தொழில்துறை அடிஷனல் செக்ரடரி)

இந்தியத் தொழில் அரங்கில் தமிழ்நாடு மிக முக்கியமான இடத்தை இன்று வகிக்கிறது. பயிர்த் தொழிலையே பிரதானமாகக் கொண்டிருந்த ஒரு மாநிலம், பல தடைகளையும் மீறி இந்நிலையை அடைந்திருப்பது நமக்கெல்லாம் பெருமைதரும் விஷயம். நமது அரசின் ஆக்கபூர்வமான, நடைமுறைக் கிசைந்த தொழில் கொள்கையே இதற்குக் காரணம்.

1950-51-ல் ரூ. 98 கோடியாக இருந்த மாநில தொழிலுற்பத்தி வருவாய் 1968-69-ல் ரூ. 312 கோடியாக உயர்ந்துள்ளது.

புதிய தொழில்—பெரிய தொழில், வளர்ச்சி கார்ப்பரேஷனை அரசு நிறுவியுள்ளது. இந்நிறுவனம் தினசரி 1200 டன் உற்பத்தி செய்யும் சிமெண்டு ஆலையை ஆலங்குளத்தில் நிறுவியுள்ளது. அரக்கோணத்தில் உருக்கு உருட்டாலை ஒன்று நிறுவப்பட்டு வருகிறது.

கூட்டுத்துறையாக, அரசு - தனியார் ஒன்றுகூடி தூத்துக்குடியில் ரசாயன உர ஆலை ஒன்று அமைக்க **ரூ. 52 கோடியில்** திட்டமிடப்பட்டுள்ளது. மணலியில் **ரூ 80 கோடியில் நாப்தா தொழிற்சாலை, பஞ்சு** இரும்பு தொழிற்சாலை, சோடியம் ஹைட்ரோ சல்பைட் தொழிற்சாலை, நைலான் தொழிற்சாலை, டயர் தொழிற்சாலை போன்ற பல திட்டங்கள் செயல்படுத்தப்படவிருக்கின்றன.

நமது அரசின் மிகப்பெரிய சாதனை சேலம் உருக்காலைக்கு அனுமதி பெற்றது தான். நமது முதல்வர் நமது தொழிலமைச்சர் ஆகியோரின் சக்திவாய்ந்த தலைமையும் விடா முயற்சியுமே இதற்குக் காரணம். ரூ. 100 கோடி செலவில் உருவாகும் இத்திட்டம் 12 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும். பிரதமர் இந்திரா 16—9—70 அன்று இதற்கு அடிக்கல் நாட்டுகிறார்.

தமிழ்நாடு தொழிலியல் முதலீட்டுக் கார்ப்பரேஷன் தொழில் வளரத் தேவையான நிதிவசதிகளை தாராளமாகச்செய்து தருகிறது.

தமிழ் நாட்டில் 26 தொழிற் பேட்டைகள் உள்ளன. இவற்றில் 486 யூனிட்டுகள் செயல்படுகின்றன. கிண்டி, அம்பத்தூர் பேட்டைகள் புகழ்மிக்கவை. இவை தவிர 4 கூட்டுறவு தொழிற் பேட்டைகளும் 2 தனியார் தொழிற் பேட்டைகளும் உள்ளன.

அபிவிருத்தி செய்யப்பட்ட "பிளாட் எஸ்டேட் திட்டப்படி" எல்லா வசதியுமடங்கிய மனைகள் தொழில் துவங்க வருபவருக்கு வழங்கப்படுகின்றன.


தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கார்ப்பரேஷன் லிமிடெட் சிறுரகத் தொழில்களின் வளர்ச்சிக்காக அரசால் சமீபத்தில் நிறுவப்பட்டுள்ளது.

12 கூட்டுறவு நூற்பாலைகள், 6 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் விரைவில் துவங்கும்.

மூடப்பட்டுக்கிடந்த நூற்பாலைகளைத் திறந்து நடத்துவதற்கென்று நிறுவப்பட்ட நூற்பாலை கார்ப்பரேஷன் இதுவரை 4 ஆலைகளை ஏற்றுள்ளது.

வேலை வாய்ப்பைப் பெருமளவில் ஏற்படுத்த சிறிய, பெரிய தொழில்களில் அரசு முக்கியத்துவம்,காட்டுவதை இவற்றிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

பிற மாநிலங்களைவிட அரசியல் ஸ்திரத்தன்மை தமிழ் நாட்டில் நன்கு இருக்கிறது. நல்ல நிர்வாகம் உள்ளது; இவையனைத்தும் இங்கேதொழில் வளர சாதகமான சூழ்நிலையை உண்டாக்கியுள்ளன.



எனவே, இந்தியாவின் பிற பகுதிகளுக்கு கலங்கரை விளக்கம்போல தமிழ் நாடு வழிகாட்டுவதிலும் தொழிலதிபர்கள் தமிழ்நாட்டில் தொழில் துவக்க விரும்புவதிலும் என்ன வியப்பு இருக்கமுடியும்?

# சிறந்த இலக்கிய நூல்கள்

## மலிவுப் பதிப்புகள்

### புலியூர்கேசிகன் தெளிவுரைகள்

| | | |
|---|---|---|
| சிலப்பதிகாரம் | 3 | 50 |
| மணிமேகலை | 3 | 50 |
| கலிங்கத்துப்பரணி | 2 | 50 |
| நளவெண்பா | 2 | 00 |
| தொல்காப்பியம் | 3 | 50 |
| புறநானூறு (மூன்று பகுதிகள்) | 10 | 00 |
| நற்றிணை (முதற்பகுதி) | 3 | 50 |
| கலித்தொகை | 3 | 50 |
| அய்ங்குறு நூறு | 3 | 50 |
| புறப்பொருள் வெண்பாமாலை | 3 | 00 |

# பாரி நிலையம்

**59. பிராட்வே, சென்னை-1.**

---

With the Best Compliments
from

# V. MANICKAM & Co.,

Educational Publishers,

32, Iyappa Chetty Street,

MADRAS-1.

Phone: 25663

# குடும்பநலத் திட்டம்

**டாக்டர் கே. பி. சாரதி, M.B.B.S., M.Sc.,**
சுகாதாரம்—குடும்ப நலத்துறை இயக்குநர், சென்னை-6.

1830 ல் உலக மக்கள் தொகை 100 கோடி, 1930 ல் 200 கோடி, 1960 ல் 300 கோடி, 1970 ல்-இப்போது 350 கோடியையும் தாண்டிச்சென்று கொண்டிருக்கிறது.

இதே நிலைதான் நம்நாட்டிலும்! 1921 ல் 21 கோடி. 1971 ல் 55 கோடியாகிவிடும். இந்த அளவிலேயே மக்கள் தொகைப் பெருக்கம் அனுமதிக்கப்பட்டால் தனி மனித வாழ்க்கை குன்றும், சமுதாயம் பாழ்படும், வருங்கால சந்ததியினர் பாதிக்கப்படுவர், வளர்ச்சித்திட்டங்களாலே ஏற்பட்ட பலன் பரவலாகக்கிடைக்காது எதிர்காலம் இருள் மயமாகும், கற்காலத்தில் நிலவிய கட்டுப் பாடற்ற நிலை வந்துவிடும், நீதி வாழாது நேர்மை நிலைக்காது, எப்படியும் வாழலாம் என்ற நிலை தோன்றும்; காலங்காலமாக கடும் உழைப் பிற்குப்பின்நமக்குக்கிட்டியுள்ள விஞ்ஞானச் சாதனைகள் பயனற்றுப்போகும்; வாழும் வாய்ப்பு ஏற்பட்டால் சந்திர மண்டலமும் நிரம்பி வழியும். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வாக்குப்படி,

> "தொத்து நோய், ஏழ்மை, பணக்
> காரர் தொல்லை — தொடர்ந்
> தடிக்கும் சூறையிலே பிள்ளையோ
> பிள்ளை!"

என்ற நிலைதான் நீடிக்கும். எனவே மக்கள் தொகை கட்டுப்படுத்தப் பட வேண்டும் என்பதும், அதற்குக் குடும்ப நலத் திட்டம் சிறந்ததொரு சாதனம் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒன்று!

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக இத்திட்டம் இந்தியா முழுமையிலும் தேசீயத் திட்டமாகச் செயல்படுத்தப்படுகிறது. நான் காவது அய்ந்தாண்டுத் திட்டத்தில் இதற் கென மத்திய அரசு முந்நூறு கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பதில் தமிழகம் இரு பத்தி ஆறு கோடி ரூபாயைப்பெறுகிறது.

இப்போது 1000-க்கு 39 ஆக இருக்கும் பிறப்பு விகி தத்தை 25 ஆகக் குறைக்க வும், அதன் வழி மக்கள் தொகை வளர்ச்சியை 1·5 விகிதத்தில் நிலைநிறுத்தவும், தாயின் உடல் வளம் தொடர்ந்த பிள்ளைபேற்றால் கருகிச் சருகாகிவிடாமல் காக்கவும், சேய்நலம் பேணவும், திட்டங் களின் வாயிலாகக் கிடைக் கும் பயன் சமுதாயம் முழுமைக்கும் பரவலாகக் கிடைப்பதற்கும், குடும்ப நலத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில் இதுவரை ஏறத்தாழ 8,50,000 ஆண்களும், 68,700 பெண்களும் அறுவை சிகிச்சை செய்து கொண்டு நலமாக வாழ்கின்றனர் என்பதிலிருந்து இதனை உணரலாம். இந்த நிலைமை தமிழ கத்தில் இரண்டு சதவிகிதத்தினர் குடும்ப நலத்திட்ட அறுவை சிகிச்சை செய்து கொண்டதற்கு ஒப்பாகும்.

தமிழ் நாட்டில் இப்போது 565 அறுவை சிகிச்சை நிலையங்கள் செயல்படுகின்றன இங்கெல்லாம் ஆண்களுக்கான 'வாசக்டமி; என்ற அறுவை சிகிச்சையும் சில நிலையங் களில் பெண்களுக்கான 'டுபெக்டமி, என்ற அறுவை சிகிச்சையும் செய்யப்படுகிறது. இவை 212 மருத்துவமனைகளிலும், 292 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், தன் னிச்சையாக நடத்தப்படும் 38 தனிப் பட்டோர் நிறுவனங்களிலும், 9நிலையங்கள் தேயிலை தோட்டங்கள் போன்றவற் றிலும், 8நிலையங்கள் நகராட்சிகளின்கீழும், 7 நிலையங்கள் இந்திய இரயில்வே துறையிலும் செயல்படுகின்றன.



இப்போது இத்திட்டம் தமிழக மாவட்டங்களில் உள்ள 374 வட்டார வளர்ச்சிப்பகுதி களுக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது குழந்தை பெறுவதற் காக, மருத்துவ

தந்தை பெரியார் அவர்கள் 92வது பிறந்ததினத்தில்
மேலும் பல ஆண்டு அவர் வாழவிரும்புகிறோம்.

## R. சிங்காரவேலு & சன்ஸ்
## சவுத் இந்தியன் காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ்
**46, மல்லுகஜெட்டித் தெரு, கும்பகோணம்.**

தயாரிப்பாளர்கள் :

K. R. S. பிராண்டு எவர்சில்வர் பாத்திரங்கள், வீடு, ஓட்டல்களுக்கு தேவையான சகலவிதமான பாத்திரங்களும் மருத்துவகூட ரசாயன மருத்துவ உபகரணங்களும் நல்ல முறையில் தயார் செய்து தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் பல பாகங்களிலும் விற்பனையாகின்றன. தேவையான இதர சாமான்களும் ஆர்டரின் பேரில் தயார் செய்து கொடுக்கிறோம்:

★

எங்கள் கிளை ஸ்தாபனங்கள் :

## சில்வர் பிளாஸ்டிக் இண்டஸ்ட்ரீஸ்
**57, மல்லுகஜெட்டித் தெரு,**
**கும்பகோணம்.**

உங்கள் விற்பனை பொருள்களை தரம் கெடாமல் பாதுகாக்க பாலிதீன் (பிளாஸ்டிக்) பைகளில் பேக்கிங் செய்யுங்கள்.

★

## கஜா மார்க் சோப் பாக்டரி
**மல்லுகஜெட்டித் தெரு.**
**கும்பகோணம்**

சலவைக்கு சிறந்த உயர்ந்த முறையில் சோப் தயாரித்து விற்பனை செய்து வருகிறோம். ஏஜண்டுகள் நிபந்தனைக்கு எழுதுங்கள்.

மனைகளுக்கு வரும் தாய்மார்களிடையே இத்திட்டம் பற்றிய விவரங்களைக் கூறி-விளக்கம் தந்து, பயம், பீதி ஏதுமிருந்தால் அதனைப் போக்கி, தொடர்ந்த பிள்ளைப் பேறறால் விளையும் கேடுகளை விளக்கி தாய்-சேய் நலத்தின் அவசியம் குறித்து கூறி, மேலும் மேலும் குழந்தைகள் பிறந்தால் குடும்பத்தில் ஏற்படும் பொருளாதாரத் தொல்லைகள் போன்றனவாகிய அனைத்தையும எடுத்துக்கூறி, குடும்ப நலத்திட்டக் கல்வியளித்து, திட்டத்தை ஏற்றுச் செயல்படுத்துவதற்கான இணக்கத்தை அவர்களிடமிருந்து பெறப்படுகிறது.

சமுதாய-மதக் காரணங்களைக் காட்டியோ அல்லது வேறு வேண்டாத நெறி முறைகளைச் சொல்லியோ நாம் திட்டத்தை தட்டிக்கழித்தால் வீட்டிற்கும், நாட்டிற்கும் கேடு செய்தவர்களாவோம் தனி மனித ஒழுக்கம் சிதையாமல் இருக்க வேண்டுமானால் ஓரிரு குழந்தைகளோடு வாழ்க்கையினை அமைத்து வருவாய்க்கு ஏற்ப வாழ வகை செய்ய வேண்டும். அதற்கு இத்திட்டம் பெரிதும் உதவுகிறது.

எனவே ஏற்படுத்தித் தரப்பட்டுள்ள வசதிகள் அனைத்தையும் பயன்படுத்திக் கொண்டு, "அடுத்த குழந்தை இப்போது வேண்டாம், இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்"


என்பதற்கேற்ப வாழ்ந்து திட்டத்தை வெற்றியடையச் செய்ய வேண்டியது ஒவ்வொருவரின் கடமையாகும். இதிலிருந்து தவறினால் வீடு பாழ்படும்.

நாடு பாழ்படும்.

உலகம் பாழ்படும்!

★


பெரியார் 92-வது ஆண்டுக்கு எங்களது வாழ்த்துக்கள்




தி. திருப்பூர் கிளாத் பிரிண்டிங் மில்
திருவேங்கடசாமி செட்டி வீதி, ஈரோடு-1. போன்: 1059

“நமது மாணவர்கள் படிப்பில் அதிக அக்கறை செலுத்த வேண்டும்.
உலகத்தைத் திருத்துவது மாணவர் வேலை அல்ல. அதற்கு
நாங்கள் இருக்கிறோம். கட்டுப்பாடு, ஒழுக்கம், பகுத்
தறிவு இவையே மாணவர்கட்கு மிகவும்
அவசியம்”

—பெரியார்


தந்தை பெரியார் வாழ்க.

★

**தென்னாட்டுப் பதிப்பகம்,**

**16. பிராட் வே, :: சென்னை-1.**

---

**தந்தை பெரியார் 92-ம் ஆண்டு**

**பிறந்த தினவிழா நல்வாழ்த்துகள்**

**விசாலாட்சி பதிப்பகம்**


**7, ராமசாமி நாயுடு கார்டன் தெரு,**

**சென்னை-14.**

# தந்தை பெரியார் அவர்களின் 92வது பிறந்த நாளில்

# எங்களின் இதயங்கனிந்த வாழ்த்துக்கள் !!

**விஜிபி** யால் உருவாக்கப்பட்ட தவணைத் திட்டம் ஏராளமான மக்களுக்கு உதவுகிறது




## மேலும் மேலும் அதிகமான மக்கள்
## விஜிபியின் சுலபத் தவணைத் திட்டத்தால் பயனடைகிறார்கள்

எல்லோரும் சுலபமாகப் பொருள்கள் வாங்கும் வாய்ப்பு. தயாரிப்பாளர்களின் விலைக்கே தரும் தனிச்சிறப்பு. வசதிக்கேற்றபடி பணம் செலுத்தும் முறை. தேர்ந்தெடுத்து வாங்க ஏராளமான பொருள்கள். உத்திரவாதமுள்ள தரமான பொருள்கள். விற்பனைக்குப் பிறகும் திருப்தியளிக்கும் சேவை.

*இத்தனைக்கும் மேலாக வாடிக்கையாளர் பெறும் மன நிறைவு.*

**வி.ஜி. பன்னீர்தாஸ் & கோ.**

சைதாப்பேட்டை, சென்னை-15. போன் : 442333
கிளை : தி.நகர், சென்னை-17. போன் : 440246
புதிய ஷோ-ரூம் :
27, ரத்தன் பஜார், மதராஸ்-3 போன்: 35213

VGP

*இரண்டு லட்சத்துக்கு மேலான மக்களுக்கு சேவை புரியும் தனிச் சிறப்பு*

With the Best Compliments From:

# P. T. S. SANITARY WORKS

Civil & Sanitary Engineering Contractors

No. 174, M. T, H. Road,

Opp. to : Industrial Estate,

AMBATHUR-MADRAS-53

# மூன்றாண்டு சாதனைகள்

## ஒரு கண்ணோட்டம்

**வேளாண்மை**

| | 1966-67ல் | 1969-70ல் | 1970-71. |
|---|---|---|---|
| உணவு மொத்த தானிய உற்பத்தி | 57.9 லட்சம் டன் | 63 லட்சம் டன் | |
| நைட்ரஜன் உரங்கள் பயன்படுத்தும் அளவு | 85,000 டன் | 1,33,000 டன் | |
| விமானம் மூலம் பயிர்களுக்கு மருந்து தெளிப்பு | 28,000 ஏக்கர் | 2 லட்சம் ஏக்கர் | 10 லட்சம் ஏக்கர் |
| மிகுபயன்தரும் விதைகளைப் பயன்படுத்திய பரப்பு | 5.27 லட்சம் ஏக்கர் | 24 லட்சம் ஏக்கர் | |
| தஞ்சை மாவட்டத்தில் ஒரு போக நிலங்களில் இரு போகச் சாகுபடி | | 5 லட்சம் ஏக்கர் | 6 லட்சம் ஏக்கர் |
| வேளாண்மைக்கு கூட்டுறவு மூலம் கடன் உதவி | ரூ. 31.44 கோடி | ரூ 62.50 கோடி | |

நிலவள வங்கிகள் எண்ணிக்கை 105 லிருந்து 166 ஆக உயர்ந்தது

டிராக்டர்கள் வழங்கல்:— 1966-67-ல் 209 டிராக்டர்கள்
கடந்த மூன்று ஆண்டுகளில் வழங்கப்பட்டவை 1,136

- ரூபாய் 40 கோடி செலவில் காவிரி டெல்டா அபிவிருத்தித் திட்டம்.
- பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்துக்கு நீர்பெற கேரளத்துடன் ஒப்பந்தம்.
- தஞ்சை மாவட்டத்துக்கு ரூ. 50 கோடியில் ஊற்றுப் பாசனத் திட்டம்.
- கோவையில் விவசாயப் பல்கலைக் கழகம் அமைக்கும் ஏற்பாடு.

| | |
|---|---|
| வறட்சித் துயர் துடைப்பு வகையில் நிறைவேற்றப்பட்ட பணிகள் | 40,600 |
| இதில் வேலை வாய்ப்பு பெற்றவர்கள் | 8 லட்சம் பேர் |
| இதில் செலவிடப்பட்ட தொகை | சுமார் ரூ. 17 கோடி |
| மீனவத் திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் வழங்கப்பட்ட விசைப் படகுகள் | 382 |

| | முதல் திட்டத் தொடக்கத்தில் | 1968-69-ல் |
|---|---|---|
| மீன்பிடித் தொழில் மூலமான உற்பத்தி | 78,000 டன்கள் | 3,32,205 டன்கள் |

On Government & Railway List

Telegrams : BILDWARE

Telephone : 32718

## HUSSAIN ABBAS & Co.,

Dealers in : Iron, Hardware, Pipes, Pipe Fittings and Metal Etc.,

Branch : Phone : 167

18/42, Rasool Bazaar,
Kurnool. (A.P.)

1/43, Venkatachala Mudaly St.,
Madras-3.

Phone : 441331

# JAIN STORES

55, Lake View Road, West Mambalam, Madras-33.

★

For

Best Nellore Raw, Rice, Old and Pure
Arcot Kichili Raw and Boiled Rice,
Quality Provisions, Special Betalnut Powder,
Fresh Butter and Pure Ghee.

ஃ கடல் விபத்தில் பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பத்துக்கு ரூ. 1000 விதம் உதவி.

| | | |
|---|---|---|
| மாநிலத்தில் தொழிற்சாலைகள் எண்ணிக்கை | 6993 | 7394 |

**தொழில் வளர்ச்சி**

| | 1966ல் | 1968 இறுதியில் |
|---|---|---|
| குறிப்பிடத்தக்க புதிய சாதனைகள் | | சேலம் உருக்காலை; தூத்துக்குடியில் ரூ. 52 கோடி செலவில் உரத் தொழிற்சாலைத் திட்டம். ஆலங்குளம் சிமிட்டித் தொழிற்சாலை தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம். 1970-71-ல் 2000 விசைத் தறிகள் புகுத்தும் திட்டம் |

| மின்சாரம் | 1966-67 | 1967-68 | 1968-69 | 1969-70 |
|---|---|---|---|---|
| புதிதாக மின்வசதி பெற்ற ஊர்கள் | 2922 | 3253 | 3452 | 3950 |
| புதிதாக மின்வசதி பெற்ற பம்பு செட்டுகள் | 34993 | 44412 | 59724 | 60784 |
| மின்வசதி பெற்ற மொத்த ஊர்கள் | | 25,059 (31-3-67 நிலவரம்) | | 35,677 (31-3-70 நிலவரம்) |
| மின்வசதி பெற்றுள்ள மொத்த பம்பு செட்டுகள் | | 2,89,903 (31-3-67 நிலவரம்) | | 4,80,903 (31-3-70 நிலவரம்) |
| மின்விசை உற்பத்தி | 405 கோடி யூனிட் | | | 559 கோடி யூனிட் |
| தலா நபர் மின்சார உபயோகிப்பு அளவு | | 98 யூனிட் | | 116 யூனிட் |

**சாலைகள்**

| | 1966-67-ல் | 1970-71-ல் |
|---|---|---|
| மாநிலத்தில் சாலை பேணுதல் செலவு | 581 லட்சம் ரூபாய் | 719 லட்சம் ரூபாய் |
| சாலைகளுக்கான முதலீடு | 124 லட்சம் ரூபாய் | 161 லட்சம் ரூபாய் |

**வளரும் கல்வி**

| | 1966-67-ல் | 1970-71-ல் |
|---|---|---|
| கல்விக்கான செலவினம் | 44 கோடி ரூபாய் | 67 கோடி ரூபாய் |

ஃ ஆண்டுக்கு 2000 பள்ளிகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது

**நிலம் வழங்கல்**

| | 1967-68-ல் வழங்கப்பட்ட நிலங்கள் | 1968-69-ல் வழங்கப்பட்ட நிலங்கள் | 1969-70-ல் வழங்கப்பட்ட நிலங்கள் |
|---|---|---|---|
| ஏழையர்க்கு நிலப்பட்டா | 22847 ஏக்கர் | 51,852 ஏக்கர் | 1,55,813 ஏக்கர் |
| வழங்கப்பட்ட மனைப் பட்டாக்கள் எண்ணிக்கை | | 21,288 | 93,472 |
| சென்னை நகர ஏழை மக்களுக்கு முந்திய மூன்று திட்டங்களில் கட்டித்தரப்பட்ட குடியிருப்புகள் | | 2302 | |
| 1967 முதல் 1970 வரை கட்டித் தரப்பட்ட குடியிருப்புகள் | | 5828 | |
| தீப்பிடிக்காத வீடுகள் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகள் | | 3895 | |

# நூரியன்

[S] [41]

## சோப்


சலவைக்கு சிறந்தது

## குமரன் சோப் ஒர்க்ஸ், ஈரோடு.

தந்தி : SOAP. போன்: 118. P. B No. 44

Kumaran Soap Works, ERODE

சேல்ஸ் டிப்போ : கோவை & கரூர்.



வயதில் அறிவில் முதியார்—நாட்டின்
வாய்மைப் போருக்கு என்றும் இளையார்!
பெரியார் வாழியவே!

**அய்யா அவர்களின் 92-ம் பிறந்த நாளில்**
**தந்தைக்கும் தமிழகப் பெருமக்கட்கும் எங்கள் நல்வாழ்த்துக்கள்!**

## கி. எத்திராஜலு செட்டியார் சன்

ஜெனரல் மர்ச்சண்ட்ஸ்

**43-44, பெரியகடைத் தெரு, மாயூரம்**

சென்ற 60 ஆண்டுகளாக மாயூரத்தில் எல்லாவிதப் ஷாப் சாமான்கள், அலுமினியப் பாத்திரங்கள், கிளாஸ் வேர், எனாமல் வேர், குடைகள், பனியன்கள் பெட்ரோமாக்ஸ் லைட்டுகள், ஸ்டவ்கள், அதற்குரிய தனி பாகங்கள் மற்றும் டாய்லட் சாமான்கள், ஸ்டேஷனரி சாமான்கள் முதலியன மலிவான விலையில் மொத்தமாகவும், சில்லரையாகவும் விற்பனை செய்து வருகிறோம். மக்கள் திருப்தியே எங்கள் குறிக்கோள்!

**பின்தங்கிய வகுப்பினர் நலன்**

| | 1966-67 | 1969-70 | 1970-71 |
|---|---|---|---|
| பின்தங்கியோர் நலன் முதலீட்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை | ரூ. 184 லட்சம் | ரூ. 314 லட்சம் | |
| படிப்பு, உதவிச்சம்பளங்களுக்குச் செலவிடப்பட்ட தொகை | ரூ. 94 லட்சம் | ரூ. 246 லட்சம் | ரூ. 260 லட்சம் |
| அரிசன நலனுக்கான முதலிடு | ரூ. 405 லட்சம் | | ரூ. 519 லட்சம் |

ஃ அரிசன மக்கள் தொழில்வாணிபம் தொடங்க ரூ. 5000 வரை வட்டியில்லாக் கடன் உதவி

ஃ பின்தங்கியோர் நல ஆணைக் குழு நியமனம்

**சுகாதாரப் பணிகள்**

1967-70 கால அளவில் தொடங்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் 113

ஃ 1972க்குள் எல்லா கிராமங்களுக்கும் குடிநீர் வசதி-

ஃ 1972 துவக்கத்துக்குள் சென்னைக்கு காவிரி நீர்

| | 1966-67-ல் | 1969-70-ல் |
|---|---|---|
| நீர்வழங்கு திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட முதலீடு | ரூ. 214 லட்சம் | ரூ. 362 லட்சம் |

**தியாகிகளுக்கு உதவி**

| | |
|---|---|
| காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் உதவி பெற்று வந்தவர்கள் | 67 பேர் |
| புதிய ஆட்சி அமைந்த பின்பு உதவி பெறுவோர் | 4000 பேர் |

| வ எண். | திட்டத்தின் பெயர் | மொத்தம் | 67-68 | 68-69 | 69-70 | 70-71 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | குறைந்த வருமானமுள்ளோர் வீட்டு வசதி திட்டம் | | 204.05 | 25.85 | 15.02 | 34.04 | 74.91 |
| 2. | நடுத்தர வருமானமுள்ளோர் வீட்டு வசதி திட்டம் | | 245.92 | 27.30 | 18.79 | 39.74 | 85.83 |
| 3. | தாழ் குடியிருப்பு அகற்றுதல் மேம்பாட்டுத் திட்டம் | | 455.77 | 106.84 | 105.35 | 61.86 | 274.05 |
| 4. | தொழிலாளர் மலிவு வீட்டு வசதித் திட்டம் | | 32.28 | 1.42 | 0.45 | 0.41 | 2.28 |


# ஜான்சி மெடிக்கல்ஸ்

**லாலா பஜார், T. வாடிப்பட்டி**

(மதுரை மாவட்டம்)

எங்களிடம் எல்லாவிதமான இங்கிலீஸ் மருந்துகளும் கிடைக்கும்

இந்துஸ்தான் லிவர்ஸ் ஸ்டாக்கிஸ்ட்

ஏஜண்ட்ஸ் :

N.V.S. பட்டணம் பொடி - திண்டுக்கல் அங்கு விலாஸ் வாசனைப் புகையிலை-

குடியாத்தம் ராஜா பீடி

விற்பனையாளர்கள் :

பாரி கம்பெனி உரங்கள், டால்மியா சிமெண்ட்.

**K. நடராஜ நாடார் அண்டு சன்.**

தந்தை பெரியார் 92ம் ஆண்டு விழாவுக்கு
எங்களின் நல் வாழ்த்துக்கள்

# வி. ஆர். ஏ. மாணிக்கம் முதலியார் சன்ஸ்

நிர்வாக இயக்குநர்

## மாணிக்கம் தியேட்டர்ஸ்

No. 9. பால சுப்ராயலு நாயுடு வீதி, ஈரோடு

போன் : வீடு. நெ. 1
தியேட்டர் : 1002.

தந்தை பெரியாரின் 92-வது பிறந்த நாளில் எங்கள்
இதயங்கனிந்த நல் வாழ்த்துக்கள் !!

# கஸ்தூரி லித்தோ ஒர்க்ஸ்

2/142, மவுண்ட் சாலை, சென்னை-6.

# பெரியார் செய்த புரட்சி பற்றி

## உலகத் தமிழ் மாநாட்டில் ஆராய்ச்சி

1966 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 15—4—66முதல்22—4—66வரைகோலாலம் பூரில் நடைபெற்ற முதலாவது உலகத்தமிழ் மாநாட்டில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் விவாதிக்கப் பட்டன. அவைகளுள் திரு. எஸ். அரசரத்னம் என்பவர் 20—4—66ல் மூன்றாம் ரெசிடென்சியல் கல்லூரியில் பிற் பகல் மாநாட்டில் அரங்கேற்றிய **Social and Political Ferment in the Malayan Indian Community 1945-1955** என்ற ஆராய்ச்சிக் கட்டுரையும் ஒன்று.


பெரியார் அவர்களின் மலேயா சுற்றுப் பயணமும், சுயமரியாதை இயக்கமும் மலேயா வாழ் தமிழர்களிடையே தோற்று வித்த விழிப்புணர்ச்சியை இந்த ஆராய்ச்சி அறிஞர் வெளிப்படுத்தியுள்ளார்.

மலேசியா தபால்-தந்தித்துறை அமைச சர் திரு வி. டி. சம்பந்தம் அவர்களை வர வேற்புக் குழுத்தலைவராகக் கொண்ட இந்த மாநாட்டை மலேசியா பிரதம மந்திரி துங்குஅப்துல்ரஃமான் அவர்கள் தொடங்கி வைத்து உரை நிகழ்த்தினார் என்பதும் குறிப்பிடத்தக்க ஒன்று.

"மலேயா தமிழர்களிடையே பரவிக் கொண்டிருந்த திராவிட இன உணர்ச்சி அங்கு ஏற்கனவேநிலைபெற்றிருந்த இந்திய தேசீயத் தலைமையின் போக்குக்கும், கொள்கைகளுக்கும், மிகவும் தீவிரமான அறைகூவலாகக் காட்சி அளித்தது. 1920ல் தென்னிந்தியாவில் துவக்கப்பட்ட இந்தத் திராவிடர் இயக்கம் அதன் வளர்ச்சிப் பருவத்தில்பல்வேறு வடிவங்களை அடைந்தது. வரையறுக்கப்பட்ட ஒரு சில கொள்கை களை நிறைவேற்றிட நீதிக்கட்சியாக ஆரம் பிக்கப்பட்ட இது, ஈ.வெ. இராமசாமி அவர் களால் சுயமரியாதை இயக்கமாகவும் திரா விடர் கழகமாகவும் விரிவாக்கப்பெற்றுபார்ப் பன எதிர்ப்பு, கலாச்சார மறுமலர்ச்சி, சமு தாயச் சீர்திருத்தம் ஆகியவற்றைத் தீவிரப் படுத்தும் திட்டங்களைக் கொண்டு இது இயங்கி வந்தது. ஈ. வெ. ரா. அவர்களின் 1929 ஆம் ஆண்டு மலேய சுற்றுப் பயணத்திற்குப் பிறகு, மலேசியா முழுவதும் இந்த இயக்கத்திற்கு ஆதரவாளர்கள் குவிந் தனர். உலகப் பெரும் போருக்குப் பின்னர் சென்னை மாநிலத்தில் திராவிடர் கழகம் பொதுமக்கள் இயக்கமாக நிலைபெற்று, இந்தி எதிர்ப்புக்கிளர்ச்சி, இந்து மதச்சம்பிர தாய எதிர்ப்பு, தென்னாட்டுப் பொருளா தாரத்தை வட நாட்டார் சுரண்டு வதற்கு எதிராகக் கிளர்ச்சி, ஆகிய போராட்டங் களை மிகத்தீவிரமாக நடத்திற்று.

இந்த இயக்கத்தின் தந்தையாகவும், தலைவராகவும் திகழ்ந்த ஈ.வெரா. அவர் கள் மீது அவருடையதொண்டர்கள் அளவு கடந்த அன்பைப் பொழிந்து, போற்றிப் புகழ்ந்தனர்; வாழ்த்தி வணங்கினர்; ஆனால் அஞ்சி நடுங்கிய அவருடைய எதிரிகளோ வெறுத்துப் பேசித் தூற்றித்திரிந்தனர்".

### கலைஞரின் ஓவியம்!




காஞ்சி மணிமொழியாரின் பாராட்டுக் கூட்டத் தில் முதல்வர் ஒருதாளில்அய்யாவைப்பார்த்து வரைந்துகொண்டே இருந்த—ஓவியம்!! கலை ஞர் கவிஞராகி ஓவியக்காரருமாகிவிட்டார்.

Wishing many happy returns

From

**C. Coomaraswamy Naidu & Sons,**

Educational Publishers, Madras-1.

With the Best Compliments from :

Grams : Subaswagat

Phone : 82027 (8 Lines)

**HOTEL SWAGATH**

183/1 Royapettah High Road, Madras-14.

Remember : 'Swagath' A Household Name in Comfort.

# பெரியார் பிறவாதிருந்தால்?

## இராவணகாவியப் புலவர் குழந்தை

பேசுங் கிளிவாய் மொழியே நம்
  பெரியார் பிறவா திருந்திருந்தால்,
ஏசுங் கிளவிக் கெதிர்நாணா
  இரப்போ னும்முயர்பிறப்பென்று
தூசுங் கூட மதியாது
  சூத்திர னென்று சுடச்சொன்ன
மாசிங் கின்றித் தமிழ்மக்கள்
  மதிப்புட னின்று வாழுவரோ? 1

பேடைக் குயிலின் மொழியேநம்
  பெரியார் பிறவா திருந்திருந்தால்,
மூடப் பழக்க வழக்கமெனும்
  முரட்டுக் களிறு முதுலிட்டே
ஆடிக் காற்றின் அலர்பூனை
  யாமென் றோயத் தமிழ்மக்கள்
கூடிக் குலவிப் புதுவாழ்வு
  கூடி யுவத்தல் கூடுங்கொல்! 2

பேதை தனிக்கப் பெயர்ந்தோய்நம்
  பெரியார் பிறவா திருந்திருந்தால்,
சாதி சமயப் படுகுழியில்
  தள்ளப் பட்டுத் தமிழ்மக்கள்
யாது செய்கம் எனவெண்ணா
  அயர்ந்தாங் கிருந்த அந்நிலையில்
மீது போத வழிகண்டு
  வெளிப்போந் திருத்தல் கூடுங்கொல்!

பெற்றோர் பேணும் பெண்ணேநம்
  பெரியார் பிறவா திருந்திருந்தால்,
கற்றா விற்பால் கறவாமல்
  காளை மாட்டிற் கறக்கெண்ணும்
அற்றே மறுமை வாழ்வுக்கா
  அலைந்து திரிந்த தமிழமக்கள்
நற்றா மரைவாழ் அனம்போல
  நல்வாழ் வெய்தல் கூடுங்கொல்! 4

பிறைநேர் நுதல்மான் பிணையேநம்
  பெரியார் பிறவா திருந்திருந்தால்,
செறிசீ வடிய முடைநாறும்
  தீண்டா மையெனும்அக்கொடுநோய்
அறைவீ ழுருவிக் கறையேபோல்
  அலமந் தொழியத் தமிழ்மக்கள்
நறையா னகன்ற மரமேபோல்
  நலமுற் றிருத்தல் கூடுங்கொல்! 5

பெட்டைப் புறவின் நடையே நம்
  பெரியார் பிறவா திருந்திருந்தால்,
சட்டப் படியே தமிழ்மக்கள்
  தாழ்ந்த பிறப்பென் றாரியர்முன்
கட்டிப் புகுத்த பொய்க்கதையாம்
  கட்டை யவிழ்த்துச் சூத்திரப்பாழ்ம்
பட்டத் தினைவிட் டுலகேத்தப்
  பாடுற் றிருத்தல் கூடுங்கொல்! 6

பிடிமென் னடைமென் கொடியேநம்
  பெரியார் பிறவா திருந்திருந்தால்,
உடைமை யிழந்து நுகரின்ப
  உரிமை யிழந்து மீளாத
அடிமை யெனும்பாழ்ஞ் சிறைப்பட்டே
  அயரா நின்ற பொண்ணுலகக்
கொடுமை தவிர்ந்து புதுவாழ்வு
  கூடி யுவத்தல் கூடுங்கொல்! 7

பிந்தி நடவாப் பெண்ணேநம்
  பெரியார் பிறவா திருந்திருந்தால்,
நந்தமி ழன்னைக் கெதிராக
  நானே யரசி யெனக்கூறி
வந்து குலுங்கி வாலாட்டி
  வலிதிற் புகுந்த வடவிந்தி
உந்தி யெறியப் புறங்காட்டி
  ஓடி யிருத்தல் கூடுங்கொல்! 8

தந்தை பெரியாரின் 92ஆம் பிறந்த நாளில்
எங்கள் நல் வாழ்த்துக்கள் !!

திரு. என். அண்ணாமலை முதலியார் & சன்ஸ்

'கங்கா' பிராண்டு

P. B. 79 ஈரோடு.

தி சௌத் இண்டியன் மில் (டிப்போ)

ஈரோடு.

Tel : 122

ஜெயலட்சுமி சைசிங் அண்டு ராப்பிங் பாக்டரி

ஈரோடு.

With the best compliments from :

Phone : 33648 On Government List.

**Madras glass & Plywood Depot**

Distrs for Hunsur Plywood Works Pvt. Ltd:

Stockists - Hindustan Pilkington Glass Works.

The Indian Plywood Mfg. and Co Ltd.

Dealers in;

All types of Glasses, Mirrors, Plywood,

Okal Veneered Boards, Anchor Flush doors,

Anchor Shuttering Sheets, Nova-Teak, Sun Gloss Sheets

172/174, Devaraja Mudali Street, Madras-3.

பெண்ணா ரணங்குப் பிழம்பேநம்
பெரியார் பிறவா திருந்திருந்தால்,
மண்ணா மணியா ஒளிவீசி
வையம் புகழ வாழ்ந்திட்ட
அண்ணா வைப்பெற் றிருப்பேமோ!
அயலா ராட்சி அஃதொழிய
எண்ணா நின்ற தமிழாட்சி
எய்தி யிருத்தல் கூடுங்கொல்! 9

பிள்ளைக் குருகி னிறையேநம்
பெரியார் பிறவா திருந்திருந்தால்,
அள்ளிக் கொள்ளும் படியான்ற
அறிஞர் அண்ணா வழிநின்று
கள்ளக் குறும்பர் குலநாணக்
கலைஞர் கருணா நிதியின்று
தெள்ளத் தெளியத் தமிழ்நாட்டைச்
செங்கோ லோச்சல் கூடுங்கொல்! 10

வாளாண் மையினால் உலகோம்பும்
மறவன் போலத் தமிழ்மக்கள்
ஆளாண் மையினால் ஆரியத்துக்
கடிமைப் பட்ட அந்நிலையைத்
தோளாண் மையினால் தள்ளாஇத்
தொண்ணூற் றிரண்டி னுங்கடியும்
தாளாண் மைமிக் குடையநம்
தந்தை பெரியார் வாழியவே! 11

கண்ணூற் றிருந்து கால்பாயக்
கலுழுங் குழவிக் காய்போல
எண்ணூற் றிருந்து தன்மானம்
இயன்று வாழத் தமிழர்க்கித்
தொண்ணூற்றிரண்டாண்டினுமுள்ளஞ்
சோரா தியன்று தொண்டாற்றும்
தண்ணூற் றிரண்ட தமிழ்போல்நம்
தந்தை பெரியார் வாழியவே! 12


---

குறிப்பு: 3. பேதை தனிக்கப் பெயர்ந்தாள்—பெதும்பை. 4. பெற்றோன்—கணவன் 5. அறை—பாறை. 7. பெண்ணுலகு—அக்கொடுமை. 10. பிள்ளைக்குருகு—சிறுவளையல். இறை—முன்கை. குறும்பர்—எதிர்க்கட்சியினர். 11. ஆளாண்மையினால்-ஆதரித்ததால். கடிதல்-நீக்குதல் தாளாண்மை — மிகுமுயற்சி, விடாமுயற்சி. 12. எண்—எண்ணம்; எண்ணமாகிய ஊற்றிலிருந்து. தண் நூல் பிரண்ட தமிழ்.

★

★

6-9-70 மாலை சென்னை பகுத்தறிவாளர் கழகத் Rationalists' Forum துவக்க விழா நடைபெற்றது. கழகத்தைத் துவக்கி வைத்த தந்தை பெரியார், அமைச்சர் நாவலர், கழகத் தலைவர் திரு. சி. டி. நடராசன் ஆகியோர்.



★

OPENING SHORTLY

## SWAPNA'S

## Drive-in Restaurant

For the best vegetarian Dishes
4. Cathedral Road, Madras.


Prop. K. Rajagopala Rao.

With the Best Compliments


Phone : 87511

# KUGA PROCESS

Specialists : Tri-Colours, HalfTone
Line Blocks, Cartan Publicity Blocks.
2/17, Meeran Sahib St, Madras-2.




மதுரையில் பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவனத்தின் கட்டிடம்




அங்கு தந்தை அவர்களால் திறக்கப் பட்ட கடவுள் மறுப்புக் கல்வெட்டு

## ராகுகால திருமணத் தம்பதிகள்



1—2—70 ஞாயிறன்று **இராகு காலத்தில்** தந்தை பெரியார் அவர்கள் தலைமையில் விழுப்புரம். கழகப்பிரமுகர் திரு. ந. கண்ணன் (பெரியார் அலுமினியக் கடை) அவர்களின் செல்வி தமிழரசிக்கும், செல்வன் இராமலிங்கத்திற்கும் வாழ்க்கைத்துணை ஒப்பந்தம் நிறைவேறியது: விழாவில் புதுவை மாநில முதல்வர் திரு. பரூக் அவர்கள் வாழ்த்தினார்.

## ஸ்ரீவில்லிபுத்தூர் கோயிலில் உள்ள சூர்ப்பனகை மானபங்கம்



ராமாயணத்தில் சூர்ப்பனகையின் முலையை இலட்சுமணன் அறுக்கும் காட்சி. ஸ்ரீவில்லி புத்தூர் கோயிலில் உள்ள சிற்பம்—கூர்ந்து கவனியுங்கள்.

100 நெ. கைத்தறி ஆடைகளுக்குச் சிறந்த இடம்!
தாத்தையங்கார் பேட்டை

## கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி அண்டு விற்பனைக் கழகம்

வரையறுக்கப்பட்டது, பதிவு எண். ஆர். 633
தாத்தையங்கார்பேட்டை அஞ்சல்,
முசிரி வட்டம், திருச்சி மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.
பதிவு நாள் : 18—4—1940. : : நிறுவிய நாள் : 13—5—1940.
தொலைபேசி எண். 23.

எங்களிடம் கீழ்க்கண்ட ரகங்கள் கிடைக்கும். சாதா, நூல்பேட்டு, சரிகை பேட்டு கரைகளில்

100 நெ. : : 100 நெ. 50 அங். : : 4 கெசம் வேட்டிகள்
52 அங். : : 4, 4½ கெசம் வேட்டிகள் 36 அங். : : 86 அங் துப்பாக்கள்

**பொதுமக்கள் வருகைதந்து ஆதரவு அளிக்கக் கோருகிறோம்.**

தலைவர் : கு. இராமலிங்கம்

## சென்னை மீனவர் கூட்டுறவு பெடரேஷன் லிமிடெட்

தோற்றம்: 19-11-55 நெ 351 தொலைபேசி எண்: 53920

மெம்பர்கள் 91
பங்கு மூலதனம் ரூ. 17,150

மெம்பர்களுக்கு மீன் பிடிக்கும் சாதனங்களை குறைந்த விலையில் வினியோகம் செய்தல்.

(1) நைலான் நூல், (2) பருத்தி நூல், (3) மிதப்பு கட்டைகள்.

*பொதுமக்களுக்கு கீழ்கண்ட மீன் வகையறாக்களை குறைந்த விலையில் விற்பனை செய்தல்.*

*1 மீன், 2. இரால், 3, சார்டின் மீன் டின்கள், 4. இரால் மீன் டின்கள்.*

*நிர்வாகிகள் ;*

*தலைவர்: திரு. மு. வேதாசலம், எம்.எல்.ஏ.*

*உபதலைவர்: திரு. ஏ. குப்புசாமி*

*நிர்வாகஸ்தர்கள் :*

திரு. ஜெ. பாலன், திரு. பொ. உலகநாதன், திரு. சே. ராஜி, திரு. எ. ராஜி திரு. சே. கிருட்டினசாமி,

*உதவி இயக்குனர் சென்னை.*

*திரு. தியாகராஜன், டிபுடி டைரக்டர்*


*திரு. ஆர். அங்கேசன் (சென்னை கூட்டுறவு மத்திய பாங்கு)*

*திரு. தாண்டவராயன் (டிபுடி ரிஜிஸ்டிரார்)*

*காரியதரிசி,*
*செ. கு. கிரிராஜன்*

*பொது நிர்வாகி,*
*டி. எம். ஆறுமுகம்*

ரு1:39




கடவுள் இல்லை

கடவுள் இல்லை

கடவுள் இல்லவே இல்லை

கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்

கடவுளைப் பரப்பினவன்

அயோக்கியன்

கடவுளை வணங்குகிறவன்

காட்டுமிராண்டி




R.T.ARASU